மங்கையர் மலர்



MANGAYAR MALAR செப்டம்பர் 1997 விலை ரூ. 10





மங்கையர் மலர்

செப்டம்பர் '97 மலர்: 17 இதழ் : 8



கல்கி

7.9.97

இதழில்...



- **"ரஜினியின் விசிறி நான்!"**

  — *பத்மினி சிறப்பு பேட்டி*

- **எல்லோருமே அழகாய் இருக்கலாம்!**

  (உங்கள் கணவரும்தான்!)

  — *எளிமையான டிப்ஸ்!*

நீங்கள் விரும்பிப் படிக்கும்...

நா சுவைக்கு...

பரிசு பெற்ற கட்டுரைகள்...

மஞ்சுளா ரமேஷின்







...சில வார்த்தைகள்

'ருத்ரபூமி'யா வாழ்க்கை!

சமீபத்தில் பிரம்மகுமாரிகள் சங்கத்திற்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. உலகம் முழுவதும் நாலாயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு முழுக்க முழுக்க பெண்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. ஒரு சிறு பிரச்னை கூட இல்லாமல் பூரண நிலையில் இறைப்பணிக்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் அந்தச் சகோதரிகளின் தெய்வத்தொண்டினைப் பார்க்கும்போது மெய்சிலிர்க்க வைக்கிறது.

அச்சங்கத்தின் தலைவி சொன்னார், "நாம் நாழ்க்கையில் இரண்டு விஷயங்களைத் தவிர்த்து விட்டோமானால் நல்லது. கடந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளையே நினைத்து நினைத்துப் புலம்புவது; எதிர்காலத்தில் என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ என மண்டையை உடைத்துக் கொள்வது எனும் இரண்டுதான் அவை" என்றார்.

எவ்வளவு பொருள் செறிந்த வார்த்தைகள். நினைத்துப் பார்க்கிறோம். காலையில் எழுந்திருக்கும் போதே நம்முடன், ஏன் நமக்கு ஒரு நிமிஷத்துக்கு முன்னாலேயே மனம் எழுந்து கொள்கிறது. சும்மா இல்லை, நேற்று நமக்கு நேர்ந்த வருத்தங்கள், துரோகங்கள், அவமானங்கள், நமக்கு ஏற்படுத்திய கோபம் எல்லாமும் சேர்ந்து கொள்கிறது.


"அந்த மானேஜர் அப்படிச் சொல்லி இருக்கக் கூடாது. நாமளும் சும்மா இருந்திருக்கக் கூடாது. 'சர்தான் போடா'ன்னு பைலை விட்டெறிஞ்சிருக்கணும். என்ன பண்ணித் தொலைக்கிறது. முப்பதாந் தேதியானா சம்பளம் வாங்கணுமே."

என்பதில் ஆரம்பித்து மாமியாரின் முகம் தூக்கல், மருமகளின் அவமதிப்பு என சந்திரனைக் கண்ட கடல் போல எண்ண அலைகள் நாலடி உயரத்திற்கு எழும்ப ஆரம்பித்துவிடும். மனம் கொதிக்கக் கொதிக்க தலை 'விண்' விண்ணென்று தெறிக்கும். சூடாகக் காப்பி. அந்தச் சனியன் பிடித்த பில்டரில் டிகாக்ஷன் இறங்கினால்தானே. கோபத்தில் மனம் முறுக்கேறும்.

'எனக்குன்னா எதுவுமே சரியா அமையாது!'

என மனம் தன்னிரக்கத்தில் மூழ்கும். அதுக்கப்புறம் காப்பி. ...ட்டத்தில் இருப்பதால் ...ற்றில் கவனக் ...வு. அதனால் ...றுகள். அதைப் பிறர் ...டிக் காட்டும்போது ...கோபம் சண்டை ஆக வீடு ருத்ரபூமிதான்.

அதே போலத்தான் எதிர்காலத்திய பற்றிய பயமும். நிலையான உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீடு



வாங்க லோன் போட்டதில் இருந்து, ஷேரில் போட்ட காசிலிருந்து, நண்பனுக்குக் கொடுத்த கடனில் இருந்து சரியாக வருமா வராதா என ஏகப்பட்ட சந்தேகங்கள், குழப்பங்கள்.

வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கோ தன்னுடைய வியாபாரம் என்ன ஆகும், மார்க்கெட் விலை உயருமா சரியுமா... போட்ட முதலீடு என்ன ஆகும் என திகில்...

குடும்பத்தைப் பொறுத்தவரை குழந்தைகளைப் பற்றிய எதிர்கால பயங்கள். அறுபது வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் பலரும் இன்று தங்களின் பேரன், பேத்திகளைப் பற்றி மிகவும் டென்ஷனாக இருப்பதைப் பார்க்க முடிகிறது.

இப்படியாக நாட்கள் கடந்தகால கசப்பான அனுபவங்களுக்கும், எதிர்கால பயங்களுக்கும் நடுவே பெண்டுலமாக ஆடிக் கொண்டே இருக்கிறது. சஞ்சலங்கள் அலைகளை எழுப்பிக் கொண்டே இருக்கின்றன. காலம் ஓடிக் கொண்டே இருக்கிறது.

ஆக 'இன்று', நாம் வாழும் ஒவ்வொரு 'இன்றைய' நாளை பெண்டுலத்தின் ஆட்டத்திலேயேதான் இழந்து கொண்டு இருக்கிறோமே தவிர 'வாழ்கிறோமா' என்றால் இல்லையென்றுதானே சொல்ல வேண்டும்? ஏனிந்த பரிதாப நிலை நமக்கு?

எப்போது 'இன்று' வாழப் போகிறோம்? பைத்தியம் பிடித்த குதிரை மாதிரி ஓடிக் கொண்டிருக்கும் அந்த மனதை முழுக்கப் புறக்கணித்து விட்டு கண்களைத் திறந்து நம்மைச் சுற்றிப் பாருங்கள். சாப்பிட சுவையான உணவு இருந்தாலும் கோபம் ஆத்திரம் காரணமாக அதன் சுவையும் மறந்து போய் சாப்பிட நேரமில்லாமல் ஓடும் அவலம் ஏன்? நல்ல புடைவை இருந்தும் அதைப் பாந்தமாகக் கட்டிக் கொண்டு அதனால் ஏற்படும் மனத் தெம்போடு தேவதையாக உலா வர முடியாமல் போவது ஏன்?

காரணம் நம் மனம்தான். மற்றவர்களை அடக்கத் தெரிந்த நமக்கு நம் மனதை அடக்கத் தெரிந்து கொண்டு விட்டோமானால் சகலமும் நம் கைவசப்படும். உலகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்பும் நாம்,

நமக்குள் என்ன இருக்கிறது, என்ன நடக்கிறது என்பதை உள்முகப் பார்வையாகப் பார்த்தால் எத்தனையோ விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். பயிற்சியின் மூலமாக விலங்குகளையே வித்தை காட்டச் செய்யும் போது, நம் மனதைப் பயிற்சியின் மூலம் சரிபண்ண முடியாதா என்ன? கண்டிப்பாக முடியும்.

கடந்த காலம் என்பது நமக்குக் கற்றுக் கொள்வதற்காக. தீயென்றால் சுடும் எனும் உண்மையைச் சொல்வது.

எதிர்காலம் வாழ்வதற்காக. அதற்குக் குழப்பமில்லாமல் திட்டமிடுதல் அவசியம்.

ஆனால் இன்று நமக்காக வாழ்வதற்காக முன்னேயும் பின்னேயும் பார்த்துக் கொண்டு நம் காலடியில் இருக்கும் ரத்தினத்தையோ, முள்ளையோ பார்க்காமல் போய் விடுவதல்ல. 'இன்றைய' வாழ்க்கை என்பது அப்படிப்பட்டதுதான்.

காலையில் எழுந்திருக்கும் போதே நிச்சலனமாக எழுந்திருப்பது என்பதைப் பயிற்சியாகக் கொண்டு வாருங்கள். சில நாட்களில் அமைதியான மனதைப் பெற முடியும். அதிலிருந்து ஆரம்பித்தால் நிறைய விஷயங்களை நம்மால் சாதிக்க முடியும். குழப்பங்களையும் பயங்களையும் தவிர்க்க முடியும். 'இன்றைய' தினத்தில் அழுத்தமாகக் கால் ஊன்றிப் பெருமிதத்தோடு நிமிர்ந்து நின்றால் நிறைய சாதிக்க முடியும். இதைப் பயிற்சியாகக் கொண்டு வர கொண்டு வர வாழ்வது என்பதே இன்பமாகவும், வாழ்க்கையே ஒரு சுவாரஸ்யமான விளையாட்டாகவுமே கொண்டு வந்துவிட முடியும்.

கடந்த கால அனுபவங்கள் நாம் மீண்டும் அந்தத் தவறுகளில் அகப்பட்டுக் கொண்டு விடாமல் இருக்கவும், எதிர்காலத் திட்டங்கள் சரியான முறையில் சாலை போடுவது போலவும்தான். இரண்டுமே நம் இன்றைய ஓட்டம் சுகமாக இருக்கத்தான். ஆனால் அதனை நாம் தலையில் சுமையாக சுமந்து கொண்டு இருக்கிறோம். இந்த நிமிஷத்தில் இருந்து அதை இறக்கி விடுவோம்.

நிம்மதியாக வாழ்வோம். நலமாக, வெற்றிகரமாக வாழ்வோம். சந்தோஷம்தான் வாழ்வின் பயன்.



புடவை அணிந்து கம்ப்யூட்டரில் பார்க்கலாம்!

நீங்கள் சேலை எடுக்கக் கடைக்குச் செல்கிறீர்கள். கடைக்காரர் உங்கள் முன் பல சேலைகளை விரித்துப் போடுகிறார். எல்லா சேலைகளுமே உங்களுக்குப் பிடித்திருக்கிறது. அதனால் எதைத் தேர்ந் தெடுப்பது என்று தெரியாமல் குழம்புவீர்கள். இனி இந்த நிலை இருக்காது. இப்போது உங்களுக்கு உதவ கம்ப்யூட்டர் சாஃப்ட் வேர்கள் வந்து விட்டன.

இதன்படி முதலில் வீடியோ கேமராவில் உங்களைப் படம் பிடித்து, கம்ப்யூட்டரில் உங்களைத் தோன்றச் செய்வார்கள். பிறகு உங்கள் நிறத்திற்கும், தோற்றத்திற்கும் ஏற்றாற் போல் பல வண்ண சேலைகளை அதில் மாற்றி மாற்றி அணிவித்துக் காண்பிப்பார்கள். ஒரே சேலைக்குக்கூட எந்தெந்த கலர் ஜாக்கெட்டில் நீங்கள் எப்படித் தோற்றமளிப்பீர்கள் என்பதையும் கம்ப்யூட்டரிலேயே பார்த்து விடலாம். இந்த ஃபேஷன் டெக்னாலஜி (Fashion Technology) துறை, இந்த அளவு நவீனமடைந்திருப்பதற்கு 'கேட்' (Computer Aided Designing - CAD) எனப்படும் கம்ப்யூட்டர் சாஃப்ட் வேரே காரணம்.

இதே சாஃப்ட்வேர் 'இன்டீரியர் டிசைனிங்' (Interior Designing) துறையிலும் பெருமளவு பயன்படுத்தப்படுகிறது. வீட்டை எப்படி மாற்றி அமைக்கலாம். எந்தெந்த இடத்தில் பொருள்களை வைக்கலாம்? எந்தச் சுவற்றுக்கு எந்தக் கலர் பெயிண்ட் அடிக்கலாம்? எந்த மாதிரியான இயற்கைக் காட்சியை சுவற்றில் ஒட்டினால் நன்றாக இருக்கும்? என்பன போன்ற கேள்விகளுக்கும் விடை காண 'கேட்' சாஃப்ட்வேர் துணை புரிகிறது.

இந்த சாஃப்ட்வேர் வந்தபிறகு, ஃபேஷன் டெக்னாலஜி, இன்டீரியர் டெக்கரேஷன் ஆகிய இரு துறைகளிலும் பெண்களுக்கான தொழில் வாய்ப்புகளும் பெருகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. வீட்டில் இருந்தபடியே சுயமாக டிசைன்களை உருவாக்க சாஃப்ட்வேர் பெரிதும் பயன்படுகிறது.

இதனைப் பயன்படுத்த பயிற்சிகள் தந்துதவி, பெண் தொழில் முனை 'வோர்களை உரு



வாக்கும் பணியில் 'வின்சா கேட்' (Vinzaa Cad) நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. சென்னை அண்ணாநகர் டவர் கிளப் அருகில் அமைந்துள்ள இந் நிறுவனத்தை திருமதி வைஜெயந்தி சிவா என்னும் ஒரு பெண் தொழில்முனைவரே கடந்த ஏழாண்டுகளாக நடத்தி வருகிறார்.

"நான் ஒரு பொறியியல் பட்டதாரி. மதுரை தியாகராயர் பொறியியல் கல்லூரியில் எலக்ட்ரானிக்ஸ் பிரிவில் பொறியியல் பட்டம் பெற்றேன்.

திருமணத்திற்குப் பிறகு எனக்கும், என் கணவருக்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் பல வந்தன. இருப்பினும் குடும்பச் சூழ்நிலை காரணமாக நாங்கள் அவற்றை ஏற்க முடியாமல் போனது.

என் கணவர் திரு. சிவா பி. ஆர்க், (B.Arch.,) பட்டம் பெற்றவர். சென்னையிலுள்ள சில முன்னணி ஆர்க்கிடெக்ட்டுகளுள் அவரும் ஒருவர்.

அவர் தனது ஆர்க்கிடெக்ட் பணிகளுக்காக 'கேட் சாஃப்ட்வேரை'ப் பயன்படுத்தி தொழில் புரிந்து வந்தார்.

நானும் அவருக்காக உதவியாக இருந்து 'கேட்' சாஃப்ட்வேரைக் கற்றுக் கொண்டேன். பிறகு அவரின் வழிகாட்டுதலோடு நான் இந்த நிறுவனத்தைத் தொடங்கினேன்.

அப்போதெல்லாம் 'கேட் சாஃப்ட்வேரானது பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களாலும் உற்பத்தி நிறுவனங்களாலும் மட்டுமே அதிகம் பயன் படுத்தப்பட்டு வந்தது. பிற துறைகளில் உள்ளவர்களுக்கெல்லாம் இதன் பயன்பாடு அதிகமாக தெரியவில்லை.

என்னுடைய அணுகுமுறை எப்போதும் வித்தியாசமானதாகவே இருக்க வேண்டும் என நினைப்பவன் நான். இந்த வித்தியாசம் என் நிறுவனத்தின் பெயரில்கூட எதிரொலிக்க வேண்டும் என்று எண்ணி, இதற்கு 'வின்சா கேட்' எனப் பெயரிட்டேன். என்னுடைய இஷ்ட தெய்வமான விநாயகரில் உள்ள முதல் பாதியையும், அன்றைக்குக் கம்ப்யூட்டர் துறையில் பரபரப்பாகப் பேசப்பட்ட 'ஈசா' (EZA) டெக்னாலஜியில் ஒரு பகுதியையும் இணைத்து 'வின்சா' எனப் பெயர் சூட்டினேன்.



இந்த நிறுவனம் தொடங்கி தற்போது ஏழு வருடங்கள் ஆகி விட்டன. இங்கு மொத்தம் 17 வகையான பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறோம். இவற்றைப் பகுதி நேரமாகவும், முழு நேரமாகவும் மாணவ, மாணவியர்கள் படிக்கிறார்கள். பயிற்சிகளின் கால அளவு சுமார் 3 வாரம் முதல் 9 மாதங்கள் வரை, பயிற்சிகளைப் பொறுத்து மாறுபடும்.

நாங்கள் 'கேட்' தொடர்பான பயிற்சிகளை 'ஆட்டோகேட்' (Auto CAD) சாஃப்ட்வேர் கொண்டு சொல்லித் தருகிறோம். அமெரிக்காவின் பிரபலமான 'ஆட்டோடெஸ்க்' (Autodesk) நிறுவனம் இந்த 'கேட்' சாஃப்ட்வேரைத் தயாரித்துள்ளது. உலகத்தில் சுமார் 70 சதவீதத்திற்கும் மேற்பட்ட 'கேட்' சாஃப்ட்வேர் உபயோகிப்பாளர்கள் இந்த சாஃப்ட்வேரையே பயன்படுத்துகின்றனர்.

பொதுவாகவே மாணவர்கள் மத்தியில், என்ஜினியரிங் அல்லது பாலிடெக்னிக் முடித்தவர்களே 'கேட் சாஃப்ட்வேரைக் கற்றுக் கொள்ள முடியும் என்ற ஒரு மாயை நிலவி வருகிறது. இது முற்றிலும் தவறான கருத்தாகும். எதையும் கிரியேட்டிவாக புதிய கோணத்தில் சிந்திக்கக் கூடிய தன்மை கொண்ட எவரும் இதனைக் கற்கலாம். இதற்கு அடிப்படைக் கல்வியாக ஐ.டி.ஐ.யோ, பன்னிரண்டாம் வகுப்போகூட படித்திருந்தால் போதும்.

பென்சில், பேப்பர் கொண்டு வரையக் கூடிய எந்த வரைபடத்தையும் 'கேட்' சாஃப்ட்வேர் கொண்டு கம்ப்யூட்டரில் வரைந்து பார்க்கும்போது கூடுதல் வசதி என்னவென்றால், இதில் படத்தை எத்தனை முறை வேண்டுமானாலும் மாற்றிப் பார்த்துக் கொள்ளலாம். என்ன நிறங்களை வேண்டு மானாலும் கொடுத்துக் கொள்ளலாம். 360. டிகிரியும் (360°) சுழற்றிப் பார்த்துக் கொள்ளலாம். பகுதி பகுதியாகப் பிரித்து, சுழற்றி, மாற்றி.... இப்படி எத்தனையோவற்றை இந்த சாஃப்ட்வேர் கொண்டு செய்து பார்க்கலாம்.

மெக்கானிக்கல், எலக்ட்ரிக்கல், எலக்ட்

தமிழ் வாசகர்களுக்கு பரிச்சயமான திரு. பொன். அருணாசலத்தின் சிறுகதைகள்!



அனைத்துத் தமிழ்ப் பத்திரிகைகளிலும் தொடர்ந்து ஏராளமான சிறுகதைகளை எழுதி நிறையப் பரிசுகளையும் பெற்று, தனக்கென ஒரு தனி இடத்தைத் தக்கவைத்துக் கொண்டிருக்கும் இந்த இனிய எழுத்தாளரின் சிறுகதைத் தொகுப்புகளைத் தொடர்ந்து வெளியிட இருப்பதில் மணிமேகலைப் பிரசுரம் மகிழ்ச்சி கொள்கிறது. தற்போது வந்துள்ள நூல்கள்: கவரில் ஒரு முகம் சிரிக்கிறது 40.00; ஒரு மலரின் ஏக்கம் 50.00; வீட்டுப் பறவைக்கு விடுதலை உண்டா? 30.00; இனி வரவிருக்கும் நூல்கள் : ஒரு குயில் தனியாகப் பாடுகிறது; விடிந்தால் வித்யாவிற்குக் கல்யாணம்; இவை போக இவர் எழுதி இன்னும் இருபது நூல்கள் வெளிவர இருக்கின்றன; மற்ற எழுத்தாளர்களின் இதர நூல்கள் : சரோஜா பாண்டியன் எழுதியுள்ள ஒரு தொடர்கதை முற்றுப் பெறுகிறது 35.00; சி. ஞானமணி எழுதியுள்ள கவிதைத் தொகுப்பு - கண்ணாடி 19.00.

மணிமேகலைப் பிரசுரத்தின் பதிமூன்று நூல்களுக்கு இதுவரை பரிசுகள் கிடைத்திருக்கின்றன!

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக பரிசு: லேனா தமிழ்வாணனின் ஒரு பத்திரிகையாளனின் மேலைநாட்டுப் பயண அனுபவங்கள் ரூ. 50.00; தமிழக அரசின் பரிசு: நாட்யாச்சார்யாவின் புல்லாங்குழல் வாசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள் 45.00; கே.எஸ். சுப்ரமணியின் உலகத் திருமண முறைகளும் பழக்க வழக்கங்களும் 42.00; பாரத ஸ்டேட் வங்கியின் பரிசு: லேனா தமிழ்வாணனின் ஒரு பக்கக் கட்டுரைகள் பாகம் - 12 ரூ. 21.00; கவிதாயினி சஞ்சீதா எழுதியுள்ள உயிரின் முன்னுரை - புதுக் கவிதை 31.00; ப்ரியா கல்யாணராமன் எழுதிய எனக்குப் பின் எவன்? 23.00; பால நம்பூதிரியின் மாயக்கோல் மந்திரவாதி 24.00; புருனே திரு கலைமணியின் என் வாழ்க்கைப் பாதையிலே 45.00; திரு ராம சுப்ரமணியனின் தவம் 40.00; அனந்தாச்சாரி அறக்கட்டளைப் பரிசு: பால நம்பூதிரியின் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் சிறுகதைகள் 37.00; சுமங்கலி அழுதிய அம்மா 35.00; ராமசுப்ரமணியன் எழுதிய மணிபர்ஸில் ஒரு போட்டோ 32.00; டாக்டர் இரா. இரவிச்சந்திரன் எழுதிய ஆங்கில மருத்துவச் சொல் அகராதி (444 பக்கங்கள்) 83.00.

வர்மக்கலை பற்றிய சுவையான கேள்வி - பதில்கள் ரூ. 24.00



இந்தியன் சினிமாவில் திரு. கமல்ஹாசன் பயன்படுத்திய வர்மக்கலை உத்தியைப் பற்றிய பயனுள்ள தகவல்கள். வர்மக்கலை வல்லுநர் ஆசிரியர், டாக்டர் டி.எஸ். நாகராஜன், பி.எஸ்.எம். எஸ்ஸின் விரிவான பதில்கள் நிறையப் படங்கள். இதர நூல்கள் : வர்மக் கலையைக் கற்றுக் கொள்ளுங்கள் 27.00; வர்மக்கலை பற்றிய சந்தேகங்களும் விளக்கங்களும் 27.00; கராத்தே கற்றுக் கொள்ளுங்கள் பாகம் - 1 ரூ. 25.00; பாகம் - 2 ரூ. 36.00; ஜூடோ 21.00; குங்ஃபூ 18.50; குத்துச்சண்டை 18.00; சிலம்பம் 25.00; செஸ் 16.00; நீச்சல் 10.00; கைப்பந்து விளையாடக் கற்றுக் கொள்ளுங்கள் 11.50; ஹாக்கி 15.00; தமிழக விளையாட்டுகள் 10.50; விளையாட்டு விநாடி வினா விடை 33.00; கிரிக்கெட் விளையாடுவது எப்படி? 23.00; உடம்பு உறுதியாக இருக்க வேண்டுமா? 13.00; உடல் உறுதிபெற உடற்பயிற்சி முறைகள் பாகம் - 1 ரூ. 15.00; பாகம் - 2 ரூ. 32.00.

75 வருடங்களுக்கான பஞ்சாங்க நூல்கள்!

தமிழில் மட்டுமல்ல, ஆங்கிலத்திலும் இப்படிப்பட்ட தொகுப்பு நூல்கள் இல்லை! 1926 ஆம் ஆண்டு முதல் 1945 ஆம் ஆண்டு வரை மணிமேகலைத் தூய திருக்கணிதப் பஞ்சாங்கம் ரூ. 110.00; 1946 முதல் 1965 வரை ரூ. 110.00; 1966 முதல் 1985 வரை ரூ. 110.00; 1986 முதல் 1990 வரை 45.00; 1991 முதல் 1995 வரை 40.00; 1996 முதல் 2000 வரை 45.00; மணிமேகலை வாக்கியப் பஞ்சாங்கம் 1926 முதல் 1945 வரை ரூ. 110.00; 1946 முதல் 1965 வரை ரூ. 110.00; 1966 முதல் 1985 வரை ரூ. 110.00; 1986 முதல் 1990 வரை ரூ. 45.00; 1991 முதல் 1995 வரை 40.00; 1996 முதல் 2000 வரை 45.00.

மேற்கண்ட புத்தகங்களுள் தேவையானவற்றை வி.பி.பி.யில் பெறக் கடிதம் எழுதுங்கள். பாதுகாப்பாக அனுப்பி வைக்கிறோம். தபால்காரர் புத்தகங்களை உங்களிடம் தரும்போது பணம் செலுத்தினால் போதும். (தபால் செலவு தனி). சென்னையில் இருப்பவர்கள் நேரில் வந்து வாங்கிக்கொள்வது சிக்கனம். ஷோரூம் விற்பனை நேரம் : காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை. ஞாயிறு விடுமுறை. கடிதம் எழுதவேண்டிய முகவரி :

மணிமேகலைப் பிரசுரம்

தபால் பெட்டி எண் : 1447, 4, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 4342926 தொலைநகல் : 044-4346082



சப்பாத்தி இட்டபின் -அதன் மேல் பரவலாக சிறிது என், அல்லது காரட் துருவல் தூவி, உதிராமல் இருக்க, குழவியால் ஒருமுறை அழுத்தி இட்டு, பிறகு சுடவும்.

சப்பாத்தி பார்க்க அழகாக இருப்பதோடு, சுவையும் சத்தும் அதிகம். ஒரு பக்கம் தூவினாலே போதும். மேலும் காரட் தவிர பீட்ரூட், வேக வைத்த துருவிய உருளைக்கிழங்கு, சிதறத் தட்டிய பச்சை பட்டாணி, தேங்காய் பூ, நறுக்கிய கீரை, காலி பிளவர்கூட இம்முறையில் தூவி தயாரிக்கலாம். காய்கறி சாப்பிட அடம் பிடிக்கும் குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவார்கள். மாவில் இவைகளை கலந்து பிசைந்தால் இடுவது சிரமம். தூவிய பக்கம் மேல்புறம் வருமாறு வைத்துப் பரிமாறவும்.

— எஸ். பட்டம்மா

ரானிக்ஸ், கன்ஸ்ட்ரக்ஷன், அட்வர்டைசிங், டெக்ஸ்டைல்ஸ் இப்படி எல்லாத் துறை களிலும் 'கேட்' சாஃப்ட்வேர் பயன்படுத் தப்பட்டு வருகிறது.

ஒரு சோடா பாட்டில் தயாரிக்க வேண்டுமானால்கூட அது எந்தத் தடிமனில் இருக்க வேண்டும்? எந்த வடிவத்தில் தேவைப்படும்? எந்த நிறத்துடன் வேண்டும்? கீழ்ப்புறத்தில் அதன் கொள்ளளவு என்ன? மேல்புறத்தின் கொள்ளளவு என்ன? போன் றவற்றையும் வரைந்து காண்பிக்க 'கேட்' சாஃப்ட்வேர் அவசியம் தேவை.

இதை நம்மால் கற்றுக் கொள்ள முடியுமா என்கிற தயக்கம் பல பெண்களிடம் இருக்கிறது. அழகாக கோலம் போடத் தெரிகின்ற அந்தக் கையால் ஏன் கம்ப்யூட்டரில் வரைபடங்களை வரைய முடியாது? ஆர்வம் இருந்தால் போதும். எளிதாக இதனைக் கற்றுக் கொண்டுவிட முடியும்.

நாங்கள் இங்கு 'கேட்' தொடர்பான பயிற்சியைத் தவிர 'மல்ட்டி மீடியா' பற்றியும் கற்றுத் தருகிறோம். இந்த இரண்டு வகையான பயிற்சிகளுமே வேலை வாய்ப்பு மிகுந்த பயிற்சிகள் என்பதுடன் இதனைக் கற்றால் குறைந்த முதலீட்டில் தொழில் தொடங்கி சுயமாக முன்னேறவும் முடியும் என்பது இதன் இன்னொரு சிறப்பம்சம்.

இன்றைக்கு மிகக் குறைந்த விலையில் கம்ப்யூட்டர்கள் கிடைக்கின்றன. இதனோடு ஒரு பிளாட்டரையும் வாங்கி வைத்துக் கொண்டால் போதும். பல துறை சார்ந் தோருக்கும் 'கேட்' வரை படங்களை வரைந்து கொடுத்து பணம் சம்பாதிக்கலாம்.

பி.சி.பி (P.C.B) எனப்படும் எலக்ட் ரானிக் சர்க்யூட் போர்டை இன்றைக்கு டிசைன் செய்து தர தமிழ்நாட்டில் ஆட் களே கிடையாது. கற்பனைத்திறன் கொண்ட பெண்கள் 'கேட் சாஃப்ட்வேர்' படித்துவிட்டு இதனைச் சுயதொழிலாகச் செய்யலாம்.

'கேட்' சாஃப்ட்வேரின் பயன்பாடு பெருகி வருவதால், நாங்கள் விரைவில் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் ஃபிரான்சைஸ் (Franchise) கிளைகளைத் தொடங்க இருக்கிறோம்.

இந்த ஃபிரான்சைஸ் கிளைகள் தொடங்க பெண் தொழில் முனைவோர்கள் முன் வருவார்களேயானால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கத் தயாராகவும் இருக்கிறோம்.

எங்கள் நிறுவனத்தில் இந்தப் பயிற்சிகள் தவிர 'கேட்' தொடர்பான சாஃப்ட்வேர் கன்சல்டன்சி, சாஃப்ட்வேர் கஸ்டமைசேஷன் (Customization) ஜாப் ஒர்க் ஆகியவற்றையும் செய்து தருகிறோம். மேலும் ஆட்டோடெஸ்க், சாஃப்ட்டெஸ்க் போன்ற அயல்நாட்டு நிறு வனங்களின் சாஃப்ட் வேர்களையும், ஹெச்.சி.எல். ஃபிரண்ட் லைன் நிறுவனத்தின் பிளாட்டரையும் நாங்கள் விற்று வருகிறோம்.


இப்படி ஒரே நிறுவனத்தில் ஐந்து பிரிவுகளையும் கவனித்துக் கொண்டு எப்படி குடும்பத்தையும் என்னால் நிர்வகிக்க முடிகிறது என்று நீங்கள் கேட்கக் கூடும். மாமனார், மாமியார், கணவர், நான் ஆகிய நால்வரும் குடும்பப் பொறுப்பு களைப் பகிர்ந்து கொள்வதாலும், மேலும் என் கணவர் எனக்கு அலுவலக நிர்வாகத்தில் உடனிருந்து உதவிகள் புரிவதாலும் என்னால் என் பணிகளை சிறப்பாகச் செய்ய முடிகிறது" என்றார் திருமதி வைஜெயந்தி சிவா.

— கேட்டலிஸ்ட்

ஆட்டுவிக்கும் அருளாளன்

ஆதியந்தமும் இல்லாத ஜோதி வடிவினன், உருவம் அருவம் இரண்டும் கொண்ட உருத்திரன், லிங்க வடிவினன் - அநாதியாக சுற்றுப்புறத்தில் யாருமில்லாமல் பிரம்மாண்டமாக அங்கு குடி கொண்டு இருந்தார். அங்கு அந்த மாபெரும் லிங்கத்தை ஸ்தாபித்தது யாரென்று தெரியாது. வெயிலில் பட்டு மரகதப் பச்சை வண்ணத்தில் மின்னும்; மழையிலே நனைந்து பளபளக்கும் இப்படியாகத்தான் திறந்த வெளியில் இன்றைக்கு (சென்னைக்கு அருகில்) மாதவரம் என்றும் கி.பி. 676ல் மாதவபுரம் என்றும் அழைக்கப்பட்ட இடத்தில் காணப்பட்டது.

அது இரண்டாம் நந்திவர்மனின் காலம். காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட தொண்டை மண்டலத்தில் நல்லாட்சி செய்து கொண்டிருந்தான். அவர்களின் வடபுலமாகிய செங்கையில் வடுகர்கள் எனும் கொள்ளைக்காரர்கள் அட்டகாசம் செய்வதை அறிந்து அவர்களை அடக்குவதற்காகத் தானே படையெடுத்து வந்தான். அப்போது மாலை நேரம் ஆகிவிட்டதால் தான் பயணப்பட்டுக் கொண்டிருந்த இடத்திலேயே படை வீடு அமைத்துத் தங்க ஆணை பிறப்பித்தான்.



பிறகு நிதானமாக அந்த இடத்தைப் பார்க்கும் போதுதான் அந்தப் பெரிய லிங்கத்தைக் கண்டான். நிலவின் ஒளியில் பளபளக்கும் திருமேனியுடன் தன்னை 'வா'வென ஆகர்ஷிக்கும் அந்தப் பெம்மானின் அருகில் சென்றான். அதன் அழகிலும், ஈர்ப்புத் தன்மையிலும் மயங்கி வணங்கினான். சுற்றிலும் ஒரே பொட்டல் காடு. சுடுகாட்டுச் சாம்பல் பூசிய மயான ருத்திரனாக அங்கு அந்த லிங்கம் இருப்பதைக் கண்டு 'இதுவும் இறைவனின் லீலை போலும்' என வியந்துத் துதித்தான். தான் மேற்கொண்டு செல்லும் காரியத்தில் தனக்கு ஜெயம் அளிக்கும்படி பிரார்த்தித்தான்.

மறுநாள் காலையிலும் தூயவனாக 'அப்பொன்னார் மேனியனை' வணங்கித் தன் கடமையைச் செய்யப் புறப்பட்டான் வடுகர்களை வென்று அடக்கிக் கொள்ளையர்களை ஒழித்தவன் மீண்டும் வந்து தனக்கு விஜயம் அளித்தவனுக்குக் கற்றளி எழுப்பித்தான். அப்படி எழுந்ததே ஸ்ரீகைலாசநாதர் ஆலயம். காஞ்சியிலே கைலாய நாதரும், வரத ராஜபெருமாளும் இருப்பது போலவே மாதவபுரத்திலும் இரண்டு கோயில்களும் எழுப்பப்பட்டன. கைலாயநாதருக்கு உடனுறைய கற்பகாம்பாள் தோன்றினாள். அக்காலத்தில் இக்கோயில் பெரும் சிறப்புடன் இருந்திருக்க வேண்டும் என்பதற்கு பல்லவ அடையாளமாக சிங்கமுகத் தூண்கள் இருப்பதைக் காணலாம்.

காலம் உருண்டது. அங்கு பல குடியிருப்புகள் தோன்றின. ஆந்திராவிலிருந்து இங்கு வந்த குடும்பத்தைச் சேர்ந்த சுப்பராமையா 1940ல் சிதலமாகிக் கிடந்த இக்கோயிலைக் கண்டு மனமுருகினார். இதனைச் சீர்படுத்த வேண்டும் என்பதற்காகப் பல முயற்சிகளை எடுத்துக் கொண்டார். தன்னுடைய சொத்துக்களையெல்லாமும் இக்கோயில் திருப்பணிக்கே செலவு செய்தார்.

அப்படி எழுந்ததுதான் இன்றைய நிலையில் இருக்கும்



மேற்குப்புறம். அமைந்துள்ள துவாதச லிங்கங்கள், ஆலய முகப்புக் கட்டிடங்கள், அற்புதமாகப் பொலியும் உற்சவ மூர்த்திகள். 1965 வரை தன் வாழ்நாளில் முதிய வயதில் சுப்பராஸ்மயா அரும்பாடுபட்டு இக்கோயில் திருப்பணியில் ஈடுபட்டு இருந்தார். கோயில் திருப்பணி சமயங்களில் அவருடைய வாழ்க்கையில் ஈஸ்வர லீலைகள் பல இருந்தன. கடுமையாகத் தோன்ற ஆரம் பித்த உடல் உபாதைகள், மருத்துவர்களே வியந்து போகும் வண்ணம் மறைந்து போன விதம், நீண்டநாள் குழந்தையில்லாமல் இருந்த இவருடைய ஒரே மகள் ஆண் மகனைப் பெற்றெடுத்தது என நிறைய.

காலம் மீண்டும் உருண்டது. இறைவன் மீண்டும் தனியனானான். 1989 வாக்கில் மாதவபுரத்தில் குடியிருந்த சில பக்தர்கள் இறைப்பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டி 'ஸ்ரீகைலாசநாதர் சேவார்த்திகள் சங்கம்' எனும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தினை ஆரம்பித்தனர். நித்திய பூஜை நடக்கவும், ஆலயப்பணிகள் உற்சவம் எனப் பலவும் நடக்க அவர்களுடைய இடை விடாத முயற்சி தான் காரணம்.



இக்கோயிலுக்கு நான் வர வேண்டும் என அந்த முதிய வயதிலும் இரண்டு மாதமாக விடாது முயற்சித்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள். இறைவன் அழைப்பு இல்லாமல் தாமாக ஒரு தூசையும் எடுத்துப் போட முடியுமா? அதற்குரிய நேரம் வந்தது. சென்றோம். இக்கோயில் கமிட்டியைச் சார்ந்த எஸ்.கே. சங்கரன், திருவேங்கடம். இராம இருமால், மாசிலாநாயகர். வி. கருணாகரன், சங்கரானந்தா. ராம சுப்ரமண்யம், கே.எம். ஜெயகர் என அனைவரும் நம்மை வரவேற்றார்கள்.

ரிடையர் ஆகி மாதவபுரத்தில் வாழும் இவர்களின் சிரிய முயற்சியில் அந்தக் கோயில் அற்புதமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. கைலாய நாதருக்குக் கோபுரத் திருப்பணி செய்து கோயிலை செம்மை செய்ய வேண்டும் என்பது இவர்களின் ஆவல். அதற்குத் தான் இவ் விடத்தைச் சார்ந்த பாண்டியன் என்பவர் நம்மைக் கை காட்டி இருக்கிறார். 'மங்கையர் மலரில் புராதான கோயில்கள் பற்றி வருகிறது. நீங்களும் சென்று இவர்களைப் பாருங்கள்' என்று சொல்லியிருக்கிறார். 'பாண்டியன் இல்லையென்றால் எங்களுக்கு என்ன செய்வது என்று தெரிந்திருக்காது' என்கிறார்கள் இவர்கள்.



கோயிலுக்குள் நுழைந்து உள்ளே சென்று அம்மையப்பனாம் கைலாய நாதரைப் பார்க்கிறோம். தேஜோமயமாகக் காட்சி தரும் அந்த லிங்கத்தின் ஈர்ப்பை என்னவென்று சொல்ல? மனமும், உடலும் சிலிர்க்கிறது. 'மரகதலிங்கமாக இருக்கலாம்' என அவர்கள் சொல்கிறார்கள். அதனுடைய சாத்யங்களைப் பற்றித் தெரியவில்லை. என்னவாக இருந்தால் என்ன? இந்த நேரம் ஆங்கோர் ஈர்ப்புச் சக்தி நம்மை சிலிர்க்க வைப்பது உண்மை. ஆத்மார்த்தமாக செய்யப்பட்ட பூஜையில் மனம் உருகி வணங்கி,

"அப்பா, இது உன் காரியம். நீயே மனசு வைத்தால் தான் உண்டு. இந்த அன்பர்கள் உனக்குக் கோபுரம் கட்டிப் பார்த்து மகிழ நினைக்கிறார்கள். அதற்கு நீயல்லவோ ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்!"

என வேண்டிக் கொள்கிறோம். அழகு பொலியும் உற்சவ மூர்த்திகளை வணங்கி சிற்றிடையும் சிறுபுன்னகையுமாக சிறிய வடிவத்தில் காட்சி தரும் கற்பகாம்பாளையும் வணங்குகிறோம்.

"இந்த ஈஸ்வரனோட மகிமை அவரை வந்து வணங்கியவர்கள் அனுபவ பூர்வமாக உணர்வார்கள். ஒரு அம்மா பிரதோஷம் தப்பாம வந்திருவாங்க. இந்தக் கோயிலுக்கு மொதல்ல வந்து பிரகாரம் சுத்திக்கிட்டு வந்தப்போ, 'பிரதோஷம் செய், பிரதோஷம் செய்'னு சொன்ன மாதிரி காதுல கேட்டதாம். அவர்களுக்குப்

புரியவில்லை. இரண்டாவது தடவை சுத்தினப்பவும் அதே மாதிரி கேட்டிருக்கு. அவங்கதான் மொதல்ல பிரதோஷ வழிபாடுக்கு ஏற்பாடு பண்ணாங்க. இப்பவும் பிரதோஷம் தவறாம வந்துடுவாங்க.''

என்கிறார்கள். அதேபோல பலரும் தங்களின் பல அனுபவங்களைச் சொல்கிறார்கள். வாழ்வில் தாங்கள் பெற்ற நிம்மதியையும், அனுகூலத்தையும் சொல்கிறார்கள். இக்கமிட்டி உறுப்பினரின் மனைவி,

''நாங்க ரிடையராகி வந்த பிறகு இங்க செட்டில் ஆனோம். எப்போ இந்தக் கோயில் பணியிலே இறங்கினாரோ அப்போலேர்ந்து அவருக்கு சதாசர்வகாலமும் கோயில் சிந்தனைதான். கோபுரம் கட்டணும் கோபுரம் கட்டணும்னு இதே தியானம்தான்'' என்கிறார்.

எந்த வித மாறுபட்ட சிந்தனையும் இல்





லாமல் அந்த முதியவர்கள் இணைந்து இந்தத் திருப்பணியில் ஈடுபட்டு இருப்பதைப் பார்க்கும் போது ஆச்சர்யமாக இருக்கிறது. இந்தக் காலத்திலும் இப்படிப்பட்ட மனிதர்களா என்றுதான் தோன்றுகிறது.

சமீபத்தில் சக்தி சங்கம் என வைத்து செவ்வாய், வெள்ளி ராகுகால பூஜை, குத்து விளக்குப் பூஜை எனவும் ஜமாய்க்கிறார்கள். நாம் போயிருந்தபோது அவர்களும் ஆவலோடு பேசினார்கள். 'மறுநாள் ஆடிப்பூரம். அம்மனுக்கு விசேஷமான நாளாயிற்றே, ஏதாவது செய்கிறீர்களா' எனக் கேட்டபோது, ''அப்படியா, கண்டிப்பாக நாங்கள் செய்கிறோம். நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லுங்கள்'' என ஆவலோடு கேட்டுக் கொண்டார்கள்.

'ஸ்ரீ கைலாசநாதர் சேவார்த்திகள் சங்கம்' மகாசிவ ராத்திரி ஆறுகால அபிஷேகம், அன்னாபிஷேகம், பங்குனி உத்திரப் பெருவிழா எனப் பல உற்சவங்களையும் செய்கிறார்கள். ஒவ்வொரு மாதமும் பிரதோஷ வழிபாடு வெகு விமரிசையாக நடந்து கொண்டு வருகிறது.

நித்யபூஜைகள் எல்லாம் சிறப்பாக நடந்து கொண்டிருந்தாலும் இவர்களின் நோக்கம், ஸ்ரீ கயிலாயநாதர், ஸ்ரீ கற்பகாம்பாள், விநாயகர், முருகன் ஆகியோருக்கு விமானம் அமைத்தல், தற்போது பழுதடைந்து நிற்கும் துவஜஸ்தம்பத்தைப் புதுப்பித்தல், திருக்கோயிலின் கிழப்புற வாயிலில் இராஜகோபுரம் அமைத்தல்.

அன்பர் மனம்தனை கூட்டு வித்து அவர்களின் உள்ளே இருந்து கொண்டு ஆட்டுவித்துக் கொண்டு இருக்கிறான் அந்த 'அடிமுடி காணா' அற்புத நாயகன். முடித்து வைக்க வேண்டியதும் அவனுடைய பொறுப்பு தானே. பார்க்கலாமே அவனுடைய திருவிளையாடலை.


— மஞ்சுளா ரமேஷ்

படங்கள் : **ஜி. சுரேஷ்**

பி.கு.: இக்கோயிலை தரிசிக்க விரும்புபவர்கள் மாதவபுரம் பஸ் நிலையத்திலிருந்து நடைதூரத்தில் இருக்கிறது, செல்லலாம். இராம திருமால் (தொ. 5375735), அல்லது எஸ்.கே. சங்கரன் (தொ. 5376555) இவர்களையும் தொடர்பு கொள்ளலாம்.

பூம்புகார்

புதுமைக்கு பழமையின் வெகுமதி



பரிசாக அளியுங்கள்

வெற்றிகண்ட கலைப் பொருட்கள். சேர, சோழ, பாண்டியரின் காலத்தை நினைவுபடுத்தும் கலைப் படைப்புகள்.

கைவினைஞர்களின் கலைத்திறம் மிக்க கைகளால் வெண்கலத்தில் மிக்க கைகளால் வெண்கலத்தால் உருவாக்கப்பட்ட கடவுள் சிலைகள், நுட்பமான மரவேலைப்பாட்டுப் பொருட்கள், மங்களகரமான நாட்களுக்குப் பொருந்தும் பித்தளை விளக்குகள், கலைநயம் மிக்க தஞ்சாவூர் தட்டுக்கள், கோவில் மணிகள், கண்ணைக் கவரும் ஆபரணங்கள், வியத்தகு கற்சிலைகள், அழகிய காகிதக் கூழ் பொம்மைகள், கருத்தைக் கவரும் தஞ்சாவூர் கலை ஓவியங்கள் மற்றும் பலப்பல பரிசுப் பொருட்கள்.

தென்னக கலாச்சாரத்தின் களஞ்சியம் பூம்புகார் அதன் கலைப் பொருட்களை விரும்புவோர்க்காக நாடு முழுவதும் தன் கிளைகளை திறந்துள்ளது.

DIPR/5846/DIS/97

பூம்புகார்

தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் மேம்பாட்டுக் கழகம்

(இது ஓர் தமிழக அரசு நிறுவனம்)

759, அண்ணா சாலை, சென்னை–2.

பொருள் : குழந்தைக்கு...



முதல் பரிசு ரூ. 300/-

பால் இட்லி

தேவையான பொருட்கள் :

பால் - ¼ லிட்டர்,
ஜவ்வரிசி, புழுங்கலரிசி, ராகி, பொட்டுக்கடலை, பாசிப் பருப்பு, மக்காச் சோளம், சோளம் எல்லாம் சேர்ந்து அரைத்து வைத்திருக் கும்,
கஞ்சி மாவு - 2 டேபிள் ஸ்பூன்,
அஸ்கா- 2 ஸ்பூன்.

செய்முறை :

பாலை நன்றாகக் காய்ச்சிய பிறகு கஞ்சி மாவை அதில் போட்டுக் கரைத்து வைக்கவும். இரண்டு மணி நேரம் ஊறிய பிறகு குட்டி குட்டி இட்லிகள் செய்யும் குழியில் சிறிது நெய் தடவிய பிறகு பாலில் ஊறிய மாவை ஊற்றி வேகவைக்கவும். 'மில்க் இட்லி' தயார். இட்லியின் மீது அஸ்காவைத் தூவி குழந்தைக்குக் கொடுக்க, குழந்தை விரும்பிச் சாப்பிடும்.

(மோரில் ஊறவைத்தும் இட்லி செய்து கொடுக்கலாம். மோரில் சிறிது உப்பு, காயப் பொடி சேர்க்கவும்.)

– தாரா, கோவை - 6.



• தாரா



• உமா மகேஸ்வரி



• ராஜி



• கீதா



இரண்டாம் பரிசு ரூ. 200/-

காலை உணவை சத்தான உணவாக குழந்தைகளுக்கு அளிப்பது நல்லது. பிரெட், நூடுல்ஸ் என்ற மேல்நாட்டு நாகரீகம் நம் நாட்டிலும் வந்து விட்டது. செய்வது எளிதுதான். அதிலும் காய்கறி, பயறு வகைகளை சேர்ந்து அளித்தால் நல்லது.

ரெடி மிக்ஸ்

பிரெட், நூடுல்ஸ், சாதம், இட்லி, தோசை, சப்பாத்தி, பூரி, சேவை எல்லாவற்றிற்கும் ஏற்றது. எரிபொருள் மிச்சமாகும்.

வேலைக்குச் செல்லும் சகோதரிகள் பயறு வகைகளை ஞாயிறு அன்று ஊறவைத்து குளிர்சாதன பெட்டியில் பிளாஸ்டிக் பைகளில் வைத்துக் கொள்ளலாம். முளை விட்டும் பயன்படுத்தலாம்.

பச்சைப் பயறு, காராமணி, சென்னா, பட்டாணி, ராஜ்மா போன்ற பயறு வகைகள் ¼ கிலோ பாக்கெட் சிக்கனமானவை. இருமுறை பயன் படுத்தலாம். காரட்டைத் தோல் சீவி கழுவி முதல் நாளே துருவி வைத்துக் கொள்ளவும்.

கடுகு - 1 ஸ்பூன்,
காரட் - 2,
வெங்காயம் - 2,
பயறு வகை - 1 கப் (வேகவைத்த)
எண்ணெய் - 4 டீஸ்பூன்,
தேவையான அளவு உப்பு, காரம்.

வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு போட்டு வெடித்ததும் பொடியாக நறுக்கிய வெங்காயத்தைப் போட்டு வதக்கி, வேகவைத்த பயறு, காரட் இவற்றையும் சேர்த்துத் தேவையான உப்பு, காரம் போட்டு வதக்கவும். கறிவேப்பிலை கொத்துமல்லி சேர்க்கலாம். (பிரெட்டிற்கு

'ஸ்டஃப்' செய்ய தண்ணீர் சேர்க்க வேண்டாம்).

இக்கலவையைத் தயார் செய்து ப்ரெட்டில் வைத்து டோஸ்ட் செய்யலாம். சாதத்தில் கலந்தால் கலவை சாதம் ரெடி.

இட்லி, தோசை, சப்பாத்தி, பூரிக்கு :

இந்தக் கலவையில் சிறிது நீர், மசாலாப் பொடி, தக்காளி சாஸ் சேர்த்தால் 'சத்தான சப்ஜி' ரெடி.

நூடுல்ஸ் : நூடுல்ஸிற்குத் தேவையான நீரை இக்கலவையில் சேர்த்து, பிறகு நூடுல்ஸ், செய்தால் ஒரு பாக்கெட் நூடுல்ஸ் பறந்துவிடும்.

இந்த ரெடிமிக்ஸ் காலை உணவு மட்டுமின்றி மாலையில் சுண்டல் போல் மாறு வேடம் போடும்.

புளி, காரம், உப்பு இவற்றைக் குறைத்தால் பல வயிறு சம்பந்தமான நோய்கள் வராது. மேலும் காய்கறி பயறு வகைகளை சேர்ப்பதால் அரிசி அளவு குறையும். வெயிட் குறைக்க விரும்புபவர்கள் இந்த மிக்ஸுடன் சிறிது சாதம் சேர்த்துக் கொண்டால் வயிறு நிரம்பி விடும். கலோரியும் குறையும்.

இறுதியாக ஒரு கோரிக்கை. அரிசியைக் குறைத்து காய்கறி, பழம், பயறு வகைகளை குழந்தைகளுக்குக் கொடுத்துப் பழக்குங்கள்.

– *விஜிஸ்வாமி.*

மூன்றாம் பரிசு ரூ. 100

ஸ்வீட் ஸ்டிக்

தேவையான பொருட்கள் :

புழுங்கலரிசி – 2 கப்,
பொட்டுக் கடலை – 1 கப்,
வெல்லம் – ½ கிலோ,
ஓமம் – 1 ஸ்பூன்,
ஏலம் – 4 (அ) 5.

செய்முறை :

புழுங்கல் அரிசியை

கடலை மாவு கலவைகளை ஒரு அகன்ற பாத்திரத்தில் இட்டு வெல்லப்பாகை இத்துடன் கலந்து விரல் நீளத்திற்கு குச்சிகள் போல் செய்யவும். இது நன்றாக உலர்ந்த பின் டப்பாவில் போட்டு வைத்து குழந்தைகள் கேட்கும் பொழுது கொடுக்கலாம்.

– *ஏ. உமாமகேஸ்வரி, ஒசூர்-9.*

ஆறுதல் பரிசு ரூ. 50/-

எனது அண்ணா குழந்தை ஏழாம் மாதமே பிறந்து விட்டாள். அப்போது 'இன்குபேட்டரி'ல் உள்ள குழந்தையைப் பார்த்து எப்படித் தேறி வரப் போகிறாளோ என்று பயமாக இருந்தது. ஒவ்வொருவரும் ஒரு வகையான உணவைத் தரச் சொல்லி மன்னிக்கு சிபாரிசு செய்தனர். ஆனால் என் மன்னியோ, கவலையே படாமல் (ஆறு மாதத்திற்குப் பிறகு) நேந்திரங்காயில் செய்த புஷ்டி மாவுக் கூழையே இரு வேளையும் ஊட்டினார். சில சமயம் பாலாகக் கலந்து பாட்டிலில் ஊற்றிப் புகட்டினார். குழந்தை மிகவும் நன்றாக வளர்ந்தாள்.


புஷ்டி

தேவையான பொருட்கள் :

நேந்திரங்காய் நன்கு விளைந்தது – 25,
பால் – ½ டம்ளர்,
நெய் - 1 ஸ்பூன்,
தயிர் – ½ கப்,
சர்க்கரை – 1 ஸ்பூன்.

செய்முறை :

நேந்திரங்காய்களை நன்கு தோலை சீவி



உடல்
மனம்
ஆத்மா
பரிசுத்தம்



விடியலின் தங்க கிரணங்களில் வெட்கி
வெள்ளை பனித்துளியின் தழுவலில் சிலிர்த்து
அன்னை பூமியின் அன்பு மடியில் வளர்ந்து
ஆதிபகவனின்ஆசியும் அருளும் பெற்ற விசேஷமான துளசி.
இப்போது அதை அனுபவியுங்கள் 20 ஆயுர்வேத மூலிகைகள் கலந்து
கைத்திறனில் வடிவமைத்த மெடிமிக்ஸ் விருந்தா
வெறும் ஆயுர்வேத குளியல் மட்டுமல்ல பரிபூரண பரிசுத்தம்.





தமிழ்நாடு மற்றும்
கர்நாடகாவில்
மட்டும் கிடைக்கிறது.

விருந்தா. ஆயுர்வேதிக் பாத் சோப். பரிபூரண பரிசுத்தத்திற்கு.

விட்டு, வட்ட வட்டமாக நறுக்கவும். ஒரு பிளாஸ்டிக் ஷீட்டில் போட்டு நன்கு வெயிலில் காயவைக்கவும். சுக்கு போல காயவேண்டும்.

பின்னர் மாவு அரைக்கும் மிஷினில் கொடுத்து நன்றாக மாவு போல அரைத்துக் கொள்ளவும். கஞ்சி மாவு தயாராகி விட்டது. இந்த மாவு ஒரு மாதத்திற்கு வரும்.

செய்முறை 2 :

தேவையானபோது (காலை, மாலை) 2 ஸ்பூன் கஞ்சி மாவை ஒரு கிண்ணத்தில் ¾ டம்ளர் தண்ணீர் விட்டு கரைத்துக் கொண்டு அடுப்பில் வைத்து கூழாகக் காய்ச்ச வேண்டும். பின்னர் ஆறவிடவும்.

இந்தக் கூழில் ஒரு ஸ்பூன் சர்க்கரை கலந்து குழந்தைக்கு சாப்பிடக் கொடுக்கலாம். அல்லது, கூழில் ½ கப் தயிர் விட்டுக் கலந்து ஊட்டலாம். அல்லது ½ டம்ளர் பால், ஒரு ஸ்பூன் சர்க்கரை விட்டுக் கலந்து பெரிய துளை உள்ள ரப்பர் போட்டு பாட்டிலில் கொடுக்கலாம்.

அல்லது கெட்டியாகக் கூழில் 1 ஸ்பூன் நெய்விட்டு, 1 ஸ்பூன் சர்க்கரை போட்டுக் கலந்து ஊட்டலாம். நன்கு ஜீரணம் ஆகும்.

மிகவும் சத்தான இந்த 'புஷ்டி' மாவு, குழந்தைகளின் வளர்ச்சிக்கு உதவும். காலை, மாலை இருவேளையும் ஊட்டலாம். கேரளா பக்கம் இதைத்தான் குழந்தைக்கு ஊட்டுவார்கள்.

மற்ற நேரங்களில் ஆப்பிளைத் தோல் சீவி குக்கரில் வேகவைத்து மசித்து ஊட்டலாம்.

ஆரஞ்சு ஜூஸை வெதுவெதுப்பான வெந்நீரில் கலந்து கொடுக்கலாம்.

பின்குறிப்பு : எங்கள் வீட்டுக் குழந்தை இதைச் சாப்பிட்டு புஷ்டியாக வளர்ந்ததால் நாங்கள் 'புஷ்டி' என்றே இந்த மாவுக்குப் பெயர் சூட்டினோம். மற்ற கஞ்சி மாவை விட மிகவும் ருசியாக இருக்கும்.

– ராஜிகணேசன், சென்னை – 40.



ஒரு சிறுமி புதுவிதமான காது கம்மல் போட்டு வந்தாள். சில்வர் கலர் சமிக்கியை கிராம்பில் நுழைத்து, காதில் போட்டிருந்தாள். பார்க்க அழகாக இருந்ததுடன், இந்த மாறுதலான காதணிக்கு திருகாணி கூடத் தேவையில்லை என்றாள்.

– ஆர். பாலா

ஆறுதல் பரிசு ரூ. 50/-

ஜூஸ் வகைகள்

45 நாள் ஆன குழந்தை முதல் 3 வயது அடைந்த குழந்தை வரை கொடுக்கக்கூடிய பொருள் ஜூஸ். திட உணவுகள் நிறைய செய்யலாம். சுத்தமான ஜூஸ் எப்படிச் செய்வது?

தேவையான பொருட்கள் :

ஆரஞ்சு (அ) சாத்துக்குடி ஜூஸ் – 1 டம்ளர்,
சுத்தமான நீர் – 1¼ டம்ளர்,
சர்க்கரை – 1¾ விருந்து 2 டம்ளர்,
எலுமிச்சம் பழம் – 1 மூடி.

செய்முறை :

நல்ல சுத்தமான பாத்திரத்தில் 1¼ டம்ளர் நீர் ஊற்றி, கொதிக்க ஆரம்பித்ததும் தீயைக் குறைத்து, சர்க்கரையைப் போடவும். சர்க்கரை கரைந்து 2 நிமிடங்கள் சேர்த்துக் கொதித்ததும், இறக்கி, சிரப் சூடாக இருக்கும்போதே வடிகட்டியால் வடிகட்டி, நன்கு ஆற வைக்கவும். வெதுவெதுப்பாக இருக்கும்போது எலுமிச்சம் பழம் பிழியவும்.

ஆரஞ்சு (அ) சாத்துக்குடியை ஜூஸரில் பிழிந்து, வடிகட்டி வைத்துக் கொள்ளவும். நன்கு ஆறிய சிரப்புடன் நன்கு கலந்து பாட்டிலில் ஊற்றி வைத்துக் கொள்ளவும்.

குழந்தைக்கு முதல் நாள் ஒரு டீஸ்பூன் ஜூஸுடன் 3 டீஸ்பூன் நீர் சேர்த்துத் தரவும். பிறகு சிறிது சிறிதாக ஜூஸ் அளவை அதிகரிக்கவும். ஒரு பங்கு ஜூஸுடன் 3 பங்கு நீர் சேர்த்துத் தரவும். எந்த நேரத்திலும் தரலாம். வெளியே போகும் போது எடுத்துச் செல்ல, சுலபமாய் ஜீரணமாகும்.


கலப்படமில்லாத விட்டமின் நிறைந்தது.

1 பாட்டில் ஜூஸ், பிரிட்ஜில் வைக்காமல் ஒரு மாதம் வரை கெடாது இருக்கும்.

இந்த செய்முறை அளவு ஆரஞ்சு, சாத்துக்குடி, அன்னாசி பழங்களுக்கு உரியது. எந்தவித எசென்ஸும், கலர்ப் பொடியும் பிரிஸர்வேடிவும் தேவையில்லை. ரெகுலராகக் கொடுத்து வந்தால் மலச்சிக்கல் ஏற்படாது.

– கீதா கல்யாணம், கோயம்புத்தூர் – 41.

என் கணவருக்கு வாயெல்லாம் சிரிப்பு!



"தேங்க்யூ பெண்டகன்"

"பிஸினெஸ் பார்ட்டிக்கு கணவரோட போகணும்னாலே முன்னெல்லாம் எனக்கு பயம்தான். Yes, Yes... No, No.... OK......ன்னுதான் சமாளிப்பேன். பெண்டகன் இங்கிலீஷ் கோர்சஸ் புத்தகங்களைப் படிச்சேன். இப்போ நான் தான் எங்கேயும் சென்டர் ஆஃப் அட்ராக்ஷன்.

ஒண்ணு சொல்றேன்! இங்கிலீஷ் சூப்பரா பேசணும்னா பெண்டகன் சூப்பர் இங்கிலீஷ் கோர்ஸ்தான்... மத்ததுக்கெல்லாம் தயவு செய்து டைம் வேஸ்ட் பண்ணாதீங்க!"

இங்கிலீஷில் மிக விரைவாகவும், சுலபமாகவும் சிறந்த தேர்ச்சி பெற பெண்டகன் புத்தக வடிவில் வழங்குகிறது மூன்று கோர்ஸ்கள்.

1. பெண்டகன் ஈஸி இங்கிலிஷ் கோர்ஸ் ABCD யிலிருந்து துவங்கி ஆங்கிலத்தில் எழுத, படிக்க பிழையின்றி பேச உதவுகிறது. விலை ரூ.60 மட்டுமே.
2. பெண்டகன் சூப்பர் இங்கிலிஷ் லேர்னிங் கோர்ஸ் இலக்கணப் பிழையின்றி ஆங்கிலத்தில் பேச கடிதங்கள் மற்றும் கட்டுரைகள் எழுத நல்ல பயிற்சி பெறலாம் **ஆடியோ கேசட் இலவசம்** விலை ரூ.126 மட்டுமே.
3. பெண்டகன் சூப்பர் இங்கிலிஷ் ஃப்ளூயன்ஸி கோர்ஸ் சரளமாக ஆங்கிலத்தில் உரையாட, பார்ட்டி மற்றும் பொது இடங்களில் பலரோடும் பயமின்றி ஆங்கிலத்தில் பேசி, பழக இது உங்களுக்கு உதவுகிறது. **ஆடியோ கேசட் இலவசம்** விலை ரூ.126 மட்டுமே.

அனைத்து புத்தக கடைகளிலும் கிடைக்கும் அல்லது கீழ்காணும் கூப்பனை பூர்த்தி செய்து எங்களுக்கு அனுப்பி V.P.P. யில் பெற்றுக்கொள்ளுங்கள்.

PENTAGON
EDUCATION LIMITED
(Formerly SABHARI)

1974 முதல் கல்வித்துறையில் முன்னோடி நிறுவனம்

1B, வெல்டர்ஸ் தெரு,
அண்ணாசாலை, சென்னை - 2.

நான் பெண்டகன் சூப்பர் இங்கிலிஷ் கோர்ஸில் சேர விரும்புகிறேன் கீழே ✓ குறியிட்டிருக்கும் புத்தகத்தை V.P.P. யில் அனுப்பவும்.

1 ☐ ரூ. 60/- 2 ☐ ரூ. 126/- 3 ☐ ரூ. 126/-

பெயர் : ....

முகவரி : ....

....

....

.... பின்கோடு : ☐☐☐☐☐☐

நேர்முக பயிற்சி மையங்கள் தமிழகமெங்கும்

அடிவயிற்றில் தோன்றும் அல்லல் தரும் பிரச்சினை!

ஒவ்வொரு பெண்ணின் உடலும் இயற்கையினால் வெகு நேர்த்தியாக கவனித்து கட்டப்பட்ட ஒரு கட்டிடம். இந்த உடற்கட்டு நாளடைவில் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் போதும், வயதான பிறகு வரும் சில பிரச்னைகளாலும் தளர்ந்து போய்விடுகிறது. இன்னும் சிலருக்கு பிரசவத்தின் போது அறுவை சிகிச்சை, கருப்பை நீக்கப்படும்போது செய்யும் அறுவை சிகிச்சை ஆகியவற்றிற்குப் பிறகு வயிறு முன்புறம் சதை தள்ளி கட்டு குலைந்து போன நிலை ஏற்படுகிறது. இந்த நிலையையே, 'இன்சிஷனல் ஹெர்னியா' என்கின்றனர் மருத்துவர்கள். இந்த நிலை உருவாக காரணமென்ன, அதன் தீவிரம், அதற்கான சிகிச்சை ஆகியவற்றைப் பற்றி மலர் மருத்துவமனையிலும் ராஜரத்தினம் இன்ஸ்டிட்யூட்டிலும் பணியாற்றும் அறுவை சிகிச்சை நிபுணரான டாக்டர். ஜே.எஸ். ராஜ்குமார் விளக்குகிறார். இவரது சிறப்பு – இரைப்பை, குடல், ஈரல் தொடர்பான சிகிச்சைகளில் நிபுணரான இவர், நான்கு முறை எப்.ஆர்.சி.எஸ். (F.R.C.S.) பட்டம் பெற்ற ஒரே இந்திய மருத்துவர் என்பதாகும்!



• டாக்டர். ராஜ்குமார்

கேள்வி : அறுவை சிகிச்சைக்குப் பிறகு ஏற்படும் இன்சிஷனல் ஹெர்னியா (Incisional Hernia) பெரும்பாலும் பெண்களுக்கே ஏற்படுவது ஏன்?

டாக்டர். ராஜ்குமார் : முதற்காரணமாக பெண்களுக்கு பிரசவம், கருப்பையை நீக்குதல் போன்ற சில அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் அதிகம் ஏற்படுகிறது. ஆண்கள் அதிகம் அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதில்லை. பெண்களுக்கு அடிவயிற்றில் சதையும் கொழுப்பும் சேரும் வாய்ப்பு அதிகம். மேலும் இந்த அறுவை சிகிச்சைகளுக்குப் பிறகு இவர்கள் சற்று கடினமான வேலைகளை மேற்கொள்ளத் துவங்கிய உடன் வயிற்றின் முன்புறப்பகுதி வீக்கமடைந்து விடுகிறது. அதோடு இந்த அறுவை சிகிச்சைகளில் உடலில் கரைந்து போய் விடக்கூடிய தையல்கள் போடப்படும் போது, அந்தப் பகுதி வீங்கத் தொடங்கி நகர்ந்து வயிற்றின் மிக நெகிழ்ந்த பகுதியான தொப்புள் அருகே வந்து வெளியே தள்ளத் தொடங்குகிறது. உடலில் கனம் ஏறத் தொடங்கியதும் வெளியே வந்து ஹெர்னியா நிலை ஏற்பட்டு விடுகிறது.

கேள்வி : 'இன்சிஷனல் ஹெர்னியா' நிலை எத்தனை தீவிரமானது?

டாக்டர் : இந்நிலை இரு வகையாக ஏற்படக்கூடும். அடிவயிற்றில் உள்ள சதையும் கொழுப்பும் மட்டும் நகர்ந்து வெளியே தள்ளப்படும் போது வலியும், அசௌகரியமும் மட்டும் ஏற்படுமே தவிர உடலிலுள்ள உயிருக்கு பாதிப்பேற்படாது. ஆனால் இதே நிலை சிறுகுடல் வெளியே தள்ளப்படுகின்ற போது ஏற்பட்டால் மிகவும் அபாயகரமாகிறது. நாம் உண்ணும் உணவு, உணவுக் குழாய் மூலம் சென்று சிறுகுடல், பெருங்குடல் ஆகிய பகுதிகளுக்குச் செல்கிறது. இதில் சிறுகுடல் மட்டுமே நகரக்கூடிய பகுதியாகும். அந்தப் பகுதி நகர்ந்து வெளியே வரத் தொடங்கினால், உணவு செல்ல முடியாமல் தடை ஏற்படும். மலமோ, உடலில் உள்ள வாயுக் காற்றோ வெளியே செல்ல முடியாது. வாந்தியும், அடிவயிற்றில் கடுமையான வலியும் ஏற்படும். வாந்தி எடுக்கும்போது, வெளியே வலியும் ஏற்படும். வாந்தி எடுக்கும்போது, வெளியே தள்ளப்படும் உணவு மூச்சுக் குழாய்க்கு சென்றால் உயிருக்கு ஆபத்து ஏற்படும். இதைத் தவிர சிறுகுடலுக்கு இரத்தம் செல்லாததால், கருநீலமாகி அழுகத் தொடங்கி விடும். இந்நிலையில் சிகிச்சை

அளிக்கப்படாவிடில் நூறு சதவிகிதம் உயிர் இழக்க நேரிடும்.

கேள்வி : ஹெர்னியா அறுவை சிகிச்சையை திட்டமிட்டு ஆரம்ப நிலையிலேயே செய்யக் காரணமென்ன?

டாக்டர் : மேற்கூறியபடி சரியான சமயத்தில் அறுவை சிகிச்சை செய்யாவிடில் சிறுகுடல் அழுகத் தொடங்கும். அத்தகைய அவசர நிலையில் அறுவை சிகிச்சை செய்யும்போது நோயாளியின் இரத்த அழுத்தம், இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு போன்றவற்றைப் பற்றிச் சிந்திக்க நேரமிருப்பதில்லை. உயிர் பிழைக்க வைக்க வேண்டிய தீவிர நிலைக் காரணமாக அவசரமாக அறுவை சிகிச்சை நடத்தும் போது, பக்கவிளைவாக மாரடைப்பு, பக்கவாதம் போன்ற நிலைகள் ஏற்படலாம். இந்தியாவில், குறிப்பாக தமிழ் நாட்டில் நோயாளிகள் அறுவை சிகிச்சை என்ற நிலையை நோய் முற்றிய பிறகே மேற்கொள்ள முனைகின்றனர். அதற்கு முன் நிலை சிராக, தொலைக்காட்சியிலும், பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்தும் மற்ற வைத்திய முறைகளையும் மருந்துகளையும் மேற்கொண்டு பலனில்லாமல் போன பிறகே, நோய் முற்றிய நிலையில் அறுவை நிபுணரை நாடுகின்றனர். மேலும் ஒருவர் அறுவை சிகிச்சை செய்து கொள்ள வேண்டும் என்று மருத்துவர் கூறும் போது, மற்றும் ஒரு டாக்டரின் கருத்தையும் கேட்டு உறுதிசெய்து கொண்ட பிறகு செய்து கொள்ளலாம். இதனால் அநாவசியமாக அறுவை சிகிச்சை நடக்காமல் தடுக்கலாம். ஆனால் அதற்காக பத்து டாக்டர்களை பார்த்தால், நிலைமை மோசமடையுமே தவிர குணமடையாது. இரண்டாவது மருத்துவரின் ஆலோசனையை கேட்பதால், நோய் பற்றிய விவரம் அறியாமல் அநாவசியமாக அறுவை சிகிச்சை நடத்துபவர்களை தடுக்கலாம்.

கேள்வி : இன்சிஷனல் ஹெர்னியா பொதுவாக எந்த வயதில் ஏற்படக்கூடும்?

டாக்டர் : இந்நிலை இரண்டு வகை பெண்களுக்கு ஏற்படும். ஒன்று அல்லது இரண்டு பிரசவங்களுக்காக சிசேரியன் அறுவை சிகிச்சை மேற்கொண்ட இளம் தாய்மார்கள் (25 – 30 வயது வரை) ஒரு வகை. கர்ப்பப் பையில் கோளாறு உண்டாகி அதை எடுக்க அறுவை சிகிச்சை மேற்கொண்ட பெண்மணிகள் (45 வயதிற்கு மேற்பட்டோர்) மற்றொரு வகை. இவர்களைத் தவிர அப்பெண்டிசிடிஸ், குழந்தை பிறக்காமலிருக்க செய்து கொள்ளும் கர்ப்பத் தடை அறுவை சிகிச்சை போன்றவற்றிற்குப் பிறகும் 'இன்சிஷனல் ஹெர்னியா' ஏற்படலாம். ஒரு குழந்தை பிறந்த பிறகு ஏற்பட்டால், அடுத்த குழந்தை பிறக்கும் வரை பொறுத்திருந்து ஹெர்னியா அறுவை சிகிச்சை, கர்ப்பத் தடை சிகிச்சை ஆகியவற்றை இணைத்து செய்வது நல்லது. இல்லாவிடில் ஹெர்னியா சிகிச்சை செய்து கொண்ட பிறகு கர்ப்பம் தரித்தால், திரும்ப பழைய நிலை ஏற்பட்டு விடும்.

கேள்வி : இத்தகைய நிலையை எவ்வாறு சீர்செய்கிறீர்கள்?

டாக்டர் : 'இன்சிஷனல் ஹெர்னியாவை' மூன்று வகைகளில் சீர்செய்யலாம் –

1. முதல் வகையாக வயிற்றில் அறுவை சிகிச்சை செய்து, திறந்து சிறுகுடலை உட்புறம் தள்ளி, வயிற்றின் உள்ளே அமைந்துள்ள முன்புற சுவர் போன்ற தோலை ஒன்றன் மேல் ஒன்றை வைத்து இணைத்து தைத்து விடுவோம். இதனால் உள்ளிருந்து அழுத்தம் அளிக்கப்பட்டாலும், இரண்டு சுவர்கள் போல் இருப்பதால் வெளியே வர இயலாது. அதற்கு மீறி வெளியே வரும் போல் இருந்தால் இன்னும் அடுத்த முயற்சியாக, மீன் வலை போன்ற ஒருவித வலையை வைத்து தைத்து விடுவோம். பிறகு அந்தப் பகுதியில் உள்ள நார் போன்ற டிஷ்யூக்கள் இந்த வலையோடு பின்னிக் கொண்டு ஒரு கெட்டியான சுவராக உருவாகி விடுகின்றது. இதில் உள்ள ஒரே பிரச்னை என்னவெனில், வலையானது ஒரு வெளி சாதனமானதால் உடலோடு ஒத்துப் போகாவிடில் சீழ் பிடித்து தொந்திரவுகளை ஏற்படுத்தும்.

2. இரண்டாவது வகையில் இரண்டு பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கிறது. சிறுகுடல் உள்ளே பொருத்தப்படுவது ஒன்று. தொங்கும் நிலையில் உள்ள சதை நீக்கப்பட்டு வயிறு ஒட்டியது போன்ற அமைப்பிற்கு சீர்செய்யப்படுகிறது. இதற்கு வயிற்றின் கீழ்ப்பகுதியில் திறந்து தோலுக்கும் சதைக்கும் கீழ் சென்று சிறுகுடலை உள்ளே தள்ளி, அநாவசிய தோலும் சதையும் நீக்கப்பட்டு இழுத்து தைக்கப்படுகிறது.

3. மூன்றாவது வகையில் 'லாப்ரோஸ்கோபி' முறையில் சிறு துவாரங்கள் செய்து, மிக எளிய முறையில் சிறுகுடல் உள்ளே தள்ளப்பட்டு, வலை வைக்கப்படுகிறது. இதில் உள்ள பெரிய நன்மை என்னவெனில் மருத்துவமனையில் அதிக நாள் தங்க வேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. அடுத்த நாளே வீட்டிற்குச் செல்லலாம். வேலைகளில் வழக்கம் போல் ஈடுபடலாம். லாப்ரோஸ்கோபி மூலம் வலை வைத்து சிகிச்சை செய்வதை ஒரு பகுதியாகவும், தேவையில்லாத தோலையும் சதையையும் எடுத்து விடுவதை இரண்டாவது பகுதியாகவும்

இடம்	விலை
பலன்	கட்டுவதற்கு தயார்

அக்ஷயா நகர், செங்கல்பட்டு டவுன்

(அண்ணா நகருக்கு அருகில்)

- ★ சுற்றிலும் வீடுகள்
- ★ சுத்தமான பத்திரங்கள்
- ★ தட்டுப்பாடற்ற - சுவையான குடிநீர் வசதி
- ★ குறுகிய காலத்தில் உயர்ந்த பலன்
- ★ DTCP அங்கீகாரம் பெற்ற வீட்டு மனைகள் (No.379/97)
- ★ நம்பகமான நிறுவனம்
- ★ சென்னை - செங்கல்பட்டு போக்குவரத்து வசதிகள்
- ★ மனையைப் பார்வையிட ஒவ்வொரு நாளும் காலை 6 மணி, 11 மணி மற்றும் மாலை 3 மணி- இலவச வாகன ஏற்பாடு.

மேலும் விபரங்களுக்கு இன்றே அணுகுங்கள்


டிஎல்வி எஸ்டேட்ஸ்

Quality is Our Strength

54, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு (புவனேஸ்வரி தியேட்டருக்கு எதிரில்)
புரசைவாக்கம், சென்னை - 7 போன்: 5325311/12/13. ∴பேக்ஸ்: 5325363

20 வருடங்களுக்கு மேலாக நன்மதிப்பை கட்டிக்காப்பவர்கள்.

புகழ்பெற்ற ஜோதிஷர், மந்திர சாஸ்திர நிபுணர் பண்டித காழியூர் ம. பத்மநாபன்.



எமது தந்தையார் அடியேனுக்கு மந்திரோபதேசம் செய்யும் காட்சி.

பிரபல ஜோதிஷர் (**பண்டித காழியூர் பத்மநாபன்**) காழியூர் ஸ்ரீனிவாசாச்சாரியாரின் மூத்த புதல்வரும், ஜோதிஷ மந்திர சாஸ்திரங்களில் 45 வருட காலம் நன்கு தேர்ச்சியும், ஆசீர்வாதமும் பெற்றவரால், மகத்தான சக்தி வாய்ந்த யந்திரங்கள், சக்கரங்கள் வெள்ளியில் தயாரிக்கப்படுகின்றன. மகா லெக்ஷ்மி கவசம் ரூ. 250/-, மகா சுதர்சன யந்திரம் ரூ. 250/-, லக்ஷ்மி நரசிம்ம கவசம் ரூ. 350/-, தனாகர்ஷண யந்திரம் ரூ. 350/-, மகா சுதர்சன சக்கரம் ரூ. 550/- மஹாலக்ஷ்மி சக்ரம் ரூ. 550/-. இவை தவிர அநேக விதமான யந்திரங்களும், கவசங்களும், (விசேஷ பூஜா க்ரமப்படிக்கு) தயாரித்து அனுப்பப்படும்.

வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை DD மூலம் அனுப்ப வேண்டும். தபால் செலவு ரூ. 50/-

கம்ப்யூட்டர் ஜாதகம் தமிழ் / ஆங்கிலம் ரூ. 50/- ஜாதகத்தின் பொதுப்பலன்களை நேரில் சொல்வதற்கு ரூ. 50/- ஆயுள் பலன் (வருஷம், மாதம் தேதி, நேரம், ஊர்) ரூ. 250/-.

மூன்று கேள்விகளுக்கு ரூ. 50/-. வேண்டுவோர் கடிதத் தொடர்பு கொண்டு விவரம் அறிந்து பணம் அனுப்பி சகல நன்மைகளும் அடைவீர்களாக. நேரில் - காலை 8 to 12 noon

பிரபல ஜோதிஷர் பண்டித காழியூர் பத்மநாபன்,
"தபோநிதி"
நெ. 5, வித்யோதயா முதல் மெயின் தெரு,
தபெ எண் : 1411, தி.நகர்,
மதராஸ் 600 017. Ph. 826 3814
தென் இந்தியா (கிளைகள் ஏதும் கிடையாது)

முக்கிய கவனிப்பு : முன் பதிவு செய்து கொள்வது அவசியம். தபால் மூலம் வரும் எல்லா கடிதங்களும் வெகு கண்டிப்பாக பரம இரகசியமாக வைக்கப் படுகின்றன. வீட்டில் கிரகதோஷம் மற்றும் எந்த விதமான தோஷங்களும் பாதிக்காமலிருப்பதற்கு, சுதர்சன ஹோமம், மகா சுதர்சன சக்ரம் பிரதிஷ்டை செய்து தரப்படும். உள்ளூர் வாசிகளுக்கு மட்டுமே செய்யப்படும். நேரிலோ தபால் மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

பிரித்து இரு சிகிச்சைகளையும் செய்யலாம். முதல் பகுதி சிகிச்சையில் கருவிளை வயிற்றின் உள்சுவர் வரை செலுத்தி வலையைப் பொருத்தி விடுவோம். இரண்டாவது பகுதி சிகிச்சையில் உள் வரை செல்லாமல் மேல்புறத்தில் உள்ள தோலையும் சதையையும் எடுத்துவிட்டு தைத்து விடுவோம். இதனால் வலையை திரும்பத் தொட வேண்டியதில்லை. அதனால் சிழ்பிடிக்க அதிகம் வாய்ப்பில்லை. இந்த சிகிச்சை முறையில் நான்கு அல்லது ஐந்து நாட்களில் வீட்டிற்குத் திரும்பி விடலாம். இதே போல் 'லாப்ரோஸ்கோபி' முறையில் தேவை ஏற்படும்போது பித்தப் பை கற்களை நீக்குவது, ஹெர்னியாவை சீர்செய்வது, கர்ப்பத் தடை சிகிச்சை, ஹெர்னியா சிகிச்சை போன்ற இரு சிகிச்சைகளையும் சேர்த்து செய்யலாம். அதிலும் குறிப்பாக பெண்களுக்கு லாப்ரோஸ்கோபி முறையில் சிகிச்சை அளிப்பதால் பிரச்னைகள் அதிகம் எழாது தடுக்கலாம்.

கேள்வி : இத்தனை சௌகரியங்கள் இருந்தும் ஹெர்னியாவை 'லாப்ரோஸ்கோபி' முறையில் சரிசெய்யும் சிகிச்சை அத்தனை பிரபலமாகவில்லையே? ஏன்?

டாக்டர் : இன்றும் கோயம்புத்தூர், ஹைதராபாத் போன்ற நகரங்களில் ஹெர்னியாவை 'லாப்ரோஸ்கோபி' முறையில் சீர்செய்வதையே விரும்பி செயலாற்றுகின்றனர். ஆனால் சென்னையில் பிரபலமாக உள்ள பல டாக்டர்கள் பழைய முறையையே விரும்புகின்றனர். அவர்களும் லாப்ரோஸ்கோபி' முறையை பின்பற்றும் நாள் வெகு தூரத்தில் இல்லை. புதிய நவீன முறைகளின் எளிமையையும், திறமையையும் மக்கள் பயன் படுத்திக் கொண்டால் உடல் உபாதையின்றி, கட்டான உடற்கட்டுடன் சீராக வாழலாம்.

ஆண், பெண் இருவருக்கும் ஹெர்னியா ஏற்படாமல் இருக்க சில குறிப்புகள் :

1. உடல் பருமனாகாமல் கவனமாயிருங்கள்.
2. தீவிரமாக உள்ள இருமலுக்கு உடனடி சிகிச்சை பெறவும்.
3. மலச்சிக்கல் இல்லாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.
4. சிறுநீர் கழிக்க சிரமப்படாமல் சிகிச்சை பெறுங்கள்.
5. அதிக எடையுள்ள பொருட்களை தூக்காதீர்கள்.
6. புகை பிடிப்பதை நிறுத்துங்கள்.
7. இறுதியாக... அதிக முறை கருத்தரிக்காதீர்கள்.

பேட்டி : **ராஜ்யஸ்ரீ சந்திரசேகர்**

இயற்கை அழகு செய்ய...

மனிதனிடத்திலுள்ள பொருள்கள் எல்லாவற்றிலும் உயிரே மிகச் சிறந்தது. உயிருக்கு அடுத்தபடியாக ஆரோக்கியத்தைக் கூறலாம். ஆரோக்கியம் இல்லாமல் போனால் ஒருவருடைய வாழ்க்கையில் யாதொரு பயனுமில்லை. ஆரோக்கியம் இல்லாதவர்க்கு மகிழ்ச்சி கிடைக்காது. ஆரோக்கியமாக இருந்தால்தான் எந்தக் காரியத்தையும் செவ்வனே செய்ய முடியும். மனம், வாக்கு செயல் எல்லாவற்றிலும் நேர்மையுடனும், அன்புடனும் செயல்பட வேண்டும்.

நம் முன்னோர்கள் இந்திய மருத்துவ முறைகளைத் தம் தெய்வீக சக்தியால் தூண்டப்பட்ட சூட்சும தரிசனத்தால் கண்டெழுதினார்கள். ஆண்டவனது அரிய படைப்பில் அற்புதமான பச்சிலைகள் உண்டு. மனிதவர்க்கத்திற்குச் சஞ்சீவிகளாக இவை விளங்கி வருகின்றன. நம் உடலுக்குத்தக்கபடி மூலிகைகளின் உதவியோடு என்றும் இளமையையும் உடலுக்குத் தேவையான ஆரோக்கியத்தையும் பெறலாம்.

இன்று நாம் நாகரிகத்திற்கு அடிமையாகி விட்டோம். தலைவலி வந்து விட்டது என்றால் உடனே கடைக்குப் போய் மாத்திரை வாங்கி விழுங்கி விட்டு, வேறு வேலை பார்க்கிறோம். தலைவலி ஏன் வந்தது எனப் பார்த்துப் போதிய ஓய்வு எடுத்துக் கொண்டு அதனை நீக்க முயற்சி செய்வதில்லை. இயற்கையை விட்டு விடுகிறோம். நேரமின்மை காரணம் என்கிறோம். தலைவலி வந்து விட்டால் சுக்கு, கஸ்தூரி மஞ்சள், சாம்பிராணி இந்த மூன்றையும் அரைத்துப் பொங்க வைத்துப் பற்றாகப் போட்டுக் கொண்டால் சிறிது நேரத்தில் தூக்கம் வரும். தலைவலியும் மாயமாய் பறந்து போகும். வேலைக்குச் செல்லுபவர்கள் இவ்வாறு செய்ய முடியாது என்றாலும், வீட்டில் இருப்பவர்களும் இவ்வாறு செய்வதில்லை. இயற்கையாய் செய்யும் எந்தச் செயலுமே பக்கவிளைவுகள் இல்லாதவை.

[illegible]ம் சேர்த்த உணவுகளைக் [illegible]த்துக் கொண்டு சத்தான உணவு வகைகளை உண்ண வேண்டும். ஒவ்வொரு நாளும் உணவில் ஏதேனும் ஒரு கீரை அவசியம். என்னுடைய வாடிக்கையாளர்களுக்கு நான் சொல்லுவது நாம் என்ன சாப்பிடுகிறோமோ அதைத்தான் நம் உடம்பு பிரதிபலிக்கும். ஃபேஷியல் பண்ணியவுடன் உடனே முகம் பளிச்சென்று ஆகிவிடுகிறது. அது போல் உடம்பு. தலை முதல் பாதம் வரை இருக்க சத்துணவு அவசியம்.

உணவு உட்கொள்வதிலும் சில [illegible]கள் உண்டு. வேலைக்கும், தொழிலுக்கும் உணவுக்கும் சம்பந்தம் உண்டு. உழைப்பாளிகள் அதிகம்



உண்ண வேண்டும். ஏனெனில் அவர்களுக்கு எரிசக்தி (கலோரி) அதிகம் செலவாகிற படியால் அதைச் சரிக்கட்ட அதிக கலோரி அதாவது அதிக உணவு வேண்டும். சரீர வேலையற்று இருப்பவர்கள் குறைவாக உண்ண வேண்டும். தண்ணீர் நிறைய குடிக்க வேண்டும். குளிக்கும்போது உடலின் மேல் புறத்து அழுக்கெல்லாம் போய் விடுவது போலவே தண்ணீரைக் குடிப்பதால் சாரீரத் தின் உட்புறத்து அழுக்கெல்லாம் போய் விடு கிறது.

சிலருக்கு சருமம் நல்ல நிறத்துடன் இருந்தா லும் பொலிவில்லாமல் இருக்கும். சருமத்திற்கு புத்துணர்வு ஊட்ட வேண்டியது அவசியம். நமது உடலுக்கு கால்சியம், அயர்ன், பாஸ் பரஸ், பொட்டாசியம், தாதுப் பொருட்கள், வைட்டமின்கள் ஆகியவை இன்றியமை யாதவை. பழங்களில் இவை அதிகமாக இருக் கின்றன. சருமம் நல்ல நிறத்துடன் இருக்க, ஆரோ ஆயில் மசாஜ் அவசியம் தேவை.

சம்பங்கி நறுமலர்களில் உன்னத இடத்தை வகிக்கிறது. சம்பங்கி மலர் அணிவதால் தேஜஸ் கூடும் என்று சொல்லுவதுண்டு. சம்பங்கி எண்ணெயுடன் சந்தன எண்ணெய் மற்றும் தாமரை எண்ணெய் கலந்து செய்யும் ஆயில் மசாஜ் நல்ல பலன் அளிக்கிறது. நாமே வியக்கும் வண்ணம் வியக்கத்தகு மாறுதலை உடன் காணலாம். அதே போலவே சம்பங்கிப் பட்டையை நன்றாக உலர்த்திப் பின் வஸ்திர காயம் செய்து நாம் போடும் ஃபேஷியல் பேக்குடன் சேர்த்து மசாஜ் செய்யும் போது முகத்திற்குத் தனி மெருகு ஏற்படும். அவரவர் சருமத்திற்குத் தக்கவாறு டயட் தருகிறேன். அழகு, ஆரோக்கியம் இரண்டும் சேர்ந்தால் தான் நான் செய்யும் சிகிச்சைகள் பலன் அளிக்க முடியும். நிறைய பேர் பப்பாளிப் பழத்தை ஒதுக்குகிறோம். காலையில் நாம் சாப் பிடும் காலை உணவு பழங்களாக இருக்க வேண்டும்.

திருமண நாள் என்பது ஓர் பெண்ணின் வாழ்க்கையில் ஏற்படும் மிக மகத்தான நாள் ஆகும். கல்யாணத்தின் போது அந்தப் பெண் எவ்வளவு அழகாக இருந்தாள் என்று சொல்லு வதைக் கேட்கிறோம். Bridal Care மூலம் ஒரு மாதம் முன்பே அழகு சிகிச்சை மற்றும் அவரவர் சருமத்திற்கு தக்கவாறு சத்துள்ள ஆகாரங்களையும் கொடுத்து சிகிச்சை ஆரம்பிக்கிறேன். அரோமா ஆயில் மசாஜ் செய்து Ozone Steam கொடுக்கிறேன். பிறகு உயர்தர மூலிகைகளைக் கொண்டு நான் தயாரிக்கும் ஹெர்பெல் பேக் உபயோகப் படுத்துகிறேன். அரோமோ தெரபியில் 50 க்கும் மேற்பட்ட எண்ணெய் இருந்தாலும் முக்கிய மான essential oil கொண்டு செய்யும் சிகிச்சை வாடிக்கையாளர்களால் வரவேற்கப்படுகிறது. (என் தொலைபேசி எண் - 4817157)

ஊட்டச் சத்துக்களின் குறைவினால் வரும் இன்னொரு பிரச்னை நுனி முடியில் பிளவு மற்றும் சொட்டை, இளநரை ஆயில் மசாஜ் செய்யும் போது முடிக்கு வேண்டிய போஷாக்கு கிடைப்பதால் முடி நன்றாக வளர ஏதுவாகிறது. முடிக்கு வேண்டிய போஷாக்கு அத்திப் பழத்திலிருந்து அதிகம் கிடைக்கும். அழகுத் துறைக்கு மேலும் மெருகு ஊட்டுவது நம் மூலிகைகள்தான். மூலிகைகளின் தன்மை நன்கு அறிந்து அதைப் பயன்படுத்தினால், மேனி பளபளப்பு கூடும்.

- ஹேமா லக்ஷ்மண்
அழகு மற்றும் கூந்தல் அலங்கார நிபுணர்



சாம்பார் பொடி, ரசப்பொடி அரைக்கும் போது ஒரு கட்டிப் பெருங்காயத்தையும் போட்டு மிஷினில் அரைத்து விட்டால், அவ்வப்போது உடைத்துப் போடும் சிரமம் இல்லை.

– ஆர். பார்வதி

தினசரி செய்திப் பத்திரிகை, வாரப் பத்திரிகை, மாதப் பத்திரிகைகள், பெண்கள் பத்திரிகைகள் எதை எடுத்தாலும் மனம் தளர்ந்த பெண்கள் சாவின் விளிம்பிற்குச் செல்வதையும், மனச் சிதைவு அடைவதையும், தற்கொலையே செய்து கொள்வதையும் பத்தி பத்தியாக வெளியிடுகின்றன.

இதற்கெல்லாம் காரணம் வரதட்சிணை கொடுமையா? மாமியார் கணவன் முதலியோரின் கொடுமைகளா? வறுமை படுத்தும் பாடா? படிப்பறிவின்மையா? இவை அனைத்தும் காரணமாக இருப்பினும், அடிப்படைக் காரணம் பெண்களின் மனத்திண்மைக் குறைவே ஆகும். மன தைரியம் இருந்தால் அனைத்துத் தடைகளிலிருந்தும் விடுபட்டு சுதந்திரமாக, வெற்றிகரமாக, வசதியோடு பெண்கள் வாழலாம்.

ஒரு காலத்தில் பெண்கள் வெளியே வருவதே தடை செய்யப்பட்டது. அன்று வேண்டுமானால் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு மற்றவர்களைச் சுட்டிக் காட்ட முடிந்தது. ஆனால் இன்று ஒரு பெண் நன்றாக வாழ முடியாமற் போனால் அதற்குக் காரணம் அவளேதான். மற்றவர்கள் யாரும் (பெற்றோர் உட்பட) காரணம் கிடையாது.

ஒரு கால கட்டத்தில் வாழ்ந்த புலவர்கள் பெண்கள் மெல்லியல் கொண்டவர்கள், நளினம் கொண்டவர்கள், கொடி போன்றவர்கள் என்றெல் லாம் வர்ணித்தார்கள். ஆனால் உண்மையில் பெண்கள் ஆண்களைவிட மனதளவில் மட்டுமல்ல உடலால்கூட வலிமை பெற்றவர்கள்தான். இல்லாவிட்டால் பத்து மாதம் குழந்தைகளைச் சுமந்து பிறகு பிரசவ வேதனைப்பட்டு, அவர்களை இரவு பகல் கண் விழித்துக் காப்பாற்றி, மாமியார் மாமனார், கணவர் இவர்களையும் கவனித்து, ஆண்களுக்கு நிகராக அலுவலகப் பணிகளையும் செவ்வனே செய்ய முடியுமா?”

வாழ்க்கையில் சிக்கல்களையே சந்தித்த பெண்கள் சிறிது நேரம் யோசிக்க வேண்டும். காலையே இழந்த சுதா சந்திரன் செயற்கைக் காலைப் பொருத்திக் கொண்டு வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டு வெற்றி பெறவில்லையா. இந்த நிலையை அடைய அவர் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்? சென்ற விம்பிள்




உடலாலும் வலிமையானவர்கள்



டன் பெண்கள் இறுதிச் சுற்றில் 16 வயதே நிரம்பிய மார்ட்டினா ஹிஞ்ஜிஸ், பலமுறை பல பந்தயங்களை வென்ற 28 வயது ஜானா நவோட்னா என்பவரை அமைதியாக, தன்னம்பிக்கையோடு, திறமையைக் காட்டி வென்றதை உலகமெங்கும் Sports loving people வாயைப் பிளந்து கொண்டு பார்த்





துக் கொண்டிருந்தனர்.

நமக்கு 'ஸ்போர்ட்ஸ்' பிடிக்கிறதோ இல்லையோ வாழ்க்கைக்கு மிக மிகத் தேவையான உழைப்பு, தன்னம்பிக்கை, தடைகளைத் தாண்டும் ஆற்றல், பொறுமை, சகிப்புத் தன்மை ஆகியவைகளைப் பெற இத்தகைய பந்தயங்களைப் பார்ப்பது அவசியம். அதிலிருந்து படிப்பினைகளைப் பெறுவதுமே பெண்களுக்கு மிகத் தேவை.

இதே போன்று பீப் ஸாம்ப்ராஸ் ஆண்கள் ஒற்றையர் பந்தயத்தை வென்றார். அவரைப் பற்றி ஹிந்து பத்திரிகை எழுதியது - உழைப்பு, சிந்தனையை ஒருமுகப் படுத்தும் தன்மை, ஆற்றலைப் பெருக்கிக் கொண்டு எட்டாத உயரத்தில் போய் நின்றும், மேலும் மேலும் இலக்கை உயர்த்திக் கொண்டே போகும் அவரது தனித்தன்மை பற்றி உயர்வாக எழுதியது.

ரமேஷ் கிருஷ்ணன் டென்னிஸில் பல வெற்றிகள் பெற்ற பொழுது பலர் அவரது புகழிற்குக் காரணம் அவரது தகப்பனார் ராம்நாதன் கிருஷ்ணன் தான் என்று எழுதினார்கள். உடனே அவர் எழுதினார், There is no short - cut to success என்று. உழைக்காமல் உயரவே முடியாது. அப்படியே ஓரிருவர் உழைக்காமல் உயர்ந்தாலும், அந்த இடத்தில் நிற்காமல், நிற்க முடியாமல் சரிவது நிச்சயம்.

பெண்கள் தங்களுக்கு வழிகாட்டியாக இந்திரா காந்தியைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். தன்னைவிட வயதில், அனுபவத்திலே சிறந்த பல தலைவர்கள் போட்டி விட்டும் நாடு தழுவிய மக்களின் பேராதரவுடன் அரசு அமைத்து, அவர் மேல் குற்றச்சாட்டுகளை அடுக்கிக் கைது செய்துவிட்ட போதும் மனம் தளராமல்

Success is never final

Failure never fatal என்று முழக்கமிட்டு திரும்பப் பதவிக்கு வந்து அனைவரையும் அசர, அலற வைத்தார்.

சிறு வயதில் என் வகுப்பறையில் இன்னொரு பெண் எழுதி வைத்த "இன்று ஒரு தகவல்" மறக்க முடியாத ஒன்று -

'ஒரு மலைத் தொடரை மிகத் தொலைவில் இருந்து பார்த்தால், அது கடந்து போக முடியாத அளவு ஒரே பெரிய மலையாக இருக்கும். ஆனால் அருகே சென்றால் அதைத் தாண்டிப் போக நிறைய வழிகள் இருக்கும்.'


நாம் நம் கண் எதிரே பல நிகழ்ச்சிகளைக் காண்கிறோம். கணவனை இழந்த ஒரு பெண் தன் குழந்தைகளை எப்பாடுபட்டாவது காப்பாற்றுகிறாள். ஆனால் மனைவியை இழந்த கணவர்களால் இந்த மாதிரிச் செய்ய முடிவதில்லை.

இன்றைய பெண்கள் மனத்திண்மையைப் பெற வேண்டும்.

— மல்லிகா கோபால்


50 வது ஆண்டு
சுதந்திரதினக் கொண்டாட்டம்
365 நாட்களும்
20% தள்ளுபடி
வாங்கி மகிழ்ந்திடுவீர்!

மாறுதல்கள்



"உங்களுக்கு யார் வேண்டும்?'' வேலைக்காரி போலும். கேட்டாள்.

"எனக்கு... எனக்கு சுபத்ராவைப் பார்க்க வேண்டும்".

"வாங்க... உள்ள வாங்க. இப்படி உட்காருங்க." சோபாவைக் காட்டி விட்டு உள்ளே போனாள். ரவீந்திரன் உட்கார்ந்தான். சுற்றுமுற்றும் நோட்டமிட்டான். நேர்த்தியாக இருந்தது. புத்தக அலமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களைப் பார்த்தான். ஒன்றிரண்டை எடுத்துப் பார்க்கலாமா என்று நினைத்தான். சென்ற முறைப் பார்த்ததைக் காட்டிலும் இந்த முறை புத்தகங்கள் கூடுதலாகியிருந்தன. புன்னகைத்துக் கொண்டான். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு விஷயத்திலும் பைத்தியம். தான் மட்டும் கம்ப்யூட்டரின் முன்னால் மணிக்கணக்கில் அமர்ந்திருக்கவில்லையா என்ன. அவன் மனதுக்குள் கோர்த்துக் கொண்டிருந்த நினைவுச் சங்கிலி அறுபட்டது. ஹாலில் உள்புறத்தில் இருந்து சுபத்ரா வந்தாள்.

எளிமையான கைத்தறி ஆடை. ஆனால், அழுத்தமான, தன்னம்பிக்கை மிக்க ஒரு நடை. ஒரு நிமிடம் இவனைப் பார்த்ததும் திகைத்தாற் போலிருந்தது. கெட்டிக்காரி. சமாளித்துக் கொண்டாள்.

"வாங்க" - என்றாள். அமர்ந்தான். மேற்கொண்டு என்ன பேசுவது என்று தெரியவில்லை. நிலைமையைச் சமாளிக்க "தாயம்மா" என்று உள்புறம் நோக்கிக் குரல் கொடுத்தாள். காஃபியோ, ஜூஸோ ஏதோ ஒன்று கொண்டு வர, அது ஒரு சமிக்ஞை என்று அவன் புரிந்து கொண்டு, "ப்ளீஸ், அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்'' என்றான்.

"இல்ல, பரவால்ல. இருக்கட்டும்" என்ற

வள் அவன் முகத்தைப் பார்த்தான். 'அப்புறம்?' 'என்ன விஷயம்' என்று எப்படி வேண்டுமானாலும் அர்த்தம் எடுக்கலாம் அதற்கு.

"நல்லா இருக்கீங்களா?" ரவீந்திரன் ஒரு துவக்கம் இருக்கட்டும் என்பதற்காகக் கேட்டான்.



"இருக்கேன். அம்மா எப்படி இருக்காங்க? தேறிட்டாங்களா?"

ஒரு நிமிடம் அவன் முகத்தில் வருத்த ரேகை ஓடியது. இரு மாதங்களுக்கு முன்பு தான் அவன் தந்தை இறந்திருந்தார். அந்த அடிதான் அம்மாவை எப்படித் தாக்கி விட்டது என்ற எண்ணம் மனத்தில் தோன்றியதும் பெருமூச்சு விட்டான். சினிமாவில் வருகிற மாமியாரைப் போல் எப்போதும் ஆர்ப்பாட்டமாக ஒரு வாழ்க்கை வாழ்ந்த அம்மா, தனக்கே உரிய ஏதோ ஒரு விதத்தில் அப்பாவை நேசிக்கத்தான் செய்திருக்கிறாள். இல்லாவிட்டால் இப்படி விழுந்திருப்பாளா என்ன? மீண்டும் ஒருமுறை பெருமூச்சை இழுத்து விட்டு விட்டு ரவீந்திரன் சொன்னான்.

"ரொம்ப விழுந்துட்டாங்க. உங்களுக்கே தெரியும். அவங் களோட ஆளுமை என்னன்னு, ஆனா, இப்ப நீங்க பார்த்தீங் கன்னா தெரியும்... அம்மா... உங்களைப் பார்க்கணும்னு விரும்பறாங்க"

"எதுக்காம்?" அவள் கேள்வி கண்டிப்பானதாய் இருந்தாலும் கொஞ்சம் புன்னகையைக் கலந்து கொண்டாள்.

அவன் லேசாக தயங்கிக் கொண்டே சொன்னான். "எதுக்குன்னா?"... பிறகு சட்டென்று சிரித்து விட்டான். அவளும் எழுந்த புன்னகையை மறைத்துக் கொண்டாள்.

"இல்லைங்க ரவீந்திரன். போனது போனதாகவே இருக்கட்டுமே. அதை ஏன் கிளறிக்கிட்டு!"

"இல்ல. சுபத்ரா. நாம எதுக்காக மூடி மறைச்சுப் பேசிக்கணும். நான் வந்து பெண் பார்த் துட்டுப் போனப்புறம் நீங்க வேற யாரையும் வந்து உங்களைப் பெண் பார்க்க அனு மதிக்கலைன்னு எனக்குத் தெரியும். எனக்கு அதுக்கப்புறம் வேற ஒரு பெண்ணோட திருமணம் என்கிற எண்ணமே வேப்பங்காயா ஆயிடுச்சு. நாம சினிமாவில வர்ற கதாநாயகர்கள் போல இல்லைன்னாலும், நமக்குள்ள ஒரு ஈர்ப்பு இருந்துச்சு" - என்று ஒரு நிமிடம் நிறுத்தி அவள் முகத்தைப் பார்த்தான். அவள் தலை குனிந்து கேட்டுக் கொண்டிருந்தாள். தொடர்ந்தான் "இருக்குன்னு நா நெனைக்கறேன். அம்மாவை வருத்தப்படுத்த வேண்டாம்னு நா பார்த்தனே தவிர, கொஞ்சம் டைம் ஆனாலும் விஷயங்களை சரிப்படுத்திட முடியும்னு எனக்கு நம்பிக்கை இருந்தது சுபத்ரா..."

ஆர்மதி. சேகரன்

அவன் பேசிக் கொண்டே போனான். அவள் தடுக்கவில்லை. ஆனாலும் 'ஈர்ப்பு' என்ற வார்த்தையை அவன் பிரயோகிக்கையில் மட்டும் அவள் முகத்தில் லேசான ஒரு மாற்றம் தெரிந்தது. கேட்டுக் கொண்டிருக்கையிலேயே அவனும் அவன் தாயாரும் பெண் பார்க்கிற ரீதியில் வந்து தன்னைப் பார்த்த அந்த நாள் நினைவுக்கு வந்தது. அப்பா, அம்மா மனது வருத்தப்படக்கூடாதே என்பதற்காகத்தான் அப்படியொரு பெண் பார்க்கும் படலத்துக்கே அவள் ஒத்துக் கொண்டாள். ரவீந்திரனை அதற்கு முன் ஒருமுறை அவள் சந்தித்திருக்கிறாள். அவள் வேலை செய்து கொண்டிருந்த பத்திரிக்கை சார்பான கூட்டங்களில் ஒரு சிறுதொழில் நிறுவனத்தை நடத்துகிற தொழிலதிபர் என்கிற முறையில் பேட்டி கண்டிருக்கிறாள். அவன் இலக்கியவாதியோ, லட்சியவாதியோ இல்லையென்றாலும் வாழ்க்கையில் யதார்த்தம் புரிந்தவன். விவேகமானவன் என்று அவளுக்குத் தெரியும். அவளுக்கும் அவனைப் பிடித்துத்தான் இருந்தது.

திலகவதியம்மாள், ரவீந்திரனின் தாயார், அன்று பெண் பார்க்க வந்திருந்த விதமே சுபத்ராவுக்குள் சிரிப்பை எழுப்பியது. விலை உயர்ந்த பட்டுச்சேலை அணிந்து கொண்டு, நிறைய நகைகளைப் பூட்டிக் கொண்டு வந்திருந்தாள்.

சுபத்ராவை அருகில் அமர்த்திக் கொண்டாள். மேலும் கீழும் பார்த்தாள்.

''லெக்சரர் வேலை வேணான்டுப் பத்திரிகையில வேலை பார்க்கிறாயாமே. ஏன் அப்படி?''

"இந்த வேலை எனக்கு பிடிச்சதாயிருக்கு"

"ம். ரவிக்காக இந்த வேலையை விடுன்னா விட்டுடுவியா?"

அவள் திகைப்புடன் அப்பாவைப் பார்த்தாள். நல்லவேளையாக ரவீந்திரன் இடையில் புகுந்து.

"அதை அப்புறமாப் பாத்துக்கலாம்மா!" என்றான்.

"நாங்க இன்னிக்கு வரோம்னு தெரியுமா?" 'தெரிந்தும்கூட இவ்வளவு சிம்பிளா இருக்கியே' என்ற கேள்வி அதில் மறைந்திருந்தது.

"நாந்தாம்மா.... ஃபார்மாலிட்டீஸ் எதுவும் வேண்டாம்னு சொல்லியனுப்பினேன்'' - மீண்டும் ரவீந்திரன்.

இப்படியாக ஒரு பத்து நிமிடம் இண்டர்வ்யூ நடத்தி விட்டு சொஜ்ஜி, பஜ்ஜி சாப்பிட்டு விட்டுப் போய்ச் சேர்ந்தாள்.

அடுத்தநாள் காலை ரவீந்திரனிடமிருந்து அவளுக்குப் போன் வந்தது.

"சுபத்ரா. வணக்கம். ரொம்ப சாரி"

"வணக்கம். சாரியா... எதுக்கு?" என்றாள். அந்தப்பக்கம் அவன் சிரித்தான்.

"நா எதுக்குச் சொல்றேன்னு உங்களுக்குத் தெரியும். அவங்க என் அம்மா அவங்களுக்கு என்மேலே உள்ள உரிமையை நிலை நாட்டிக்கறதா நெனச்சுட்டு அந்த விதமா வெளிப்படுத்தறாங்க. நீங்க புரிஞ்சுக்குவீங்கன்னு நெனைக்கிறேன். ஆனா, நாம ரெண்டு பேரும் பேசித் தெளிவு பண்ணிக்கலாம்ன்னு நெனைக்கறேன். சுபத்ரா, நா ஸ்ட்ரெயிட்டா வர்றேன். நீங்க எதைப் பத்தியும் உங்களுக்குன்னு ஒரு முடிவு வெச்சுக்கறவங்க. எல்லா நிலையிலயும் ஒரு பெண் தனித்தன்மையோட இருக்கணுங்கற எண்ணம் உள்ளவங்களா இருக்கீங்கன்னு எனக்குத் தெரியும். யு கேன் ஆல்வேஸ் பிவாட் யு ஆர். உங்க இலக்கியம், சிந்தனை இந்த லைன்ல எனக்கு ஆர்வமில்ல. நா ஒரு தொழில் வர்க்கத்துக்காரன். ஆனா, உங்கள் சிந்தனைகளில், தொழில்ல எல்லாத்துலயும் உங்களுக்கு முழு உரிமை இருக்குன்னு நா புரிஞ்சுப்பேன். நாம தனியாட்களாக இருந்துட்டே இணைஞ்சு ஒரு வாழ்க்கை வாழலாம்ன்னு நெனைக்கறேன். பட், எனக்குக் கொஞ்சம் டைம் குடுங்க. எல்லாத்தையும் சரி பண்ணிடறேன்'' என்றான்.

சுபத்ரா முதல் நாளிரவு முழுவதையும் இந்த விஷயம் குறித்து யோசிப்பதற்குத்தான் செலவழித்திருந்தாள். இருந்தாலும் அவன் எப்படியென்று தெரிந்து கொள்ள விரும்பினாள். அவன் பேசியதும் அவளுக்கும் ஒரு தெளிவு ஏற்பட்டது. தன் சம்மதத்தை வெளிப்படுத்தினாள். ஆனால், அதற்குப் பிறகு அவர்கள் பக்கமிருந்து எந்த அசைவும் இல்லை.



விருந்துகளின் போது தலைவாழை இலையில் பரிமாறுவது என்பது நமது பண்பாட்டின் தனிச்சிறப்பு. இலையை எப்படிப் போடுவது என்பது பல பேருக்குத் தெரியவில்லை. தலை வாழை இலையின் வெட்டப்பட்ட பகுதி வலது பக்கம் இருக்குமாறு இலையைப் போட வேண்டும்.

– பூங்கோதை கிருஷ்ணராஜ்



வடைக்கு வேண்டியவற்றை பத்து நிமிடம் நீரில் ஊறவிட்டு பின் வடித்து, அரைத்துத் தட்டினால் நல்ல ருசியாக கரகரப்பாக இருக்கும். எண்ணெயும் அதிகம் குடிக்காது.

– ஜெயா

இடையில் ரவீந்திரனின் அப்பா இறந்து போனார். அப்பா, அம்மாவுடன் அவளும் கூட ஒரு நாள் போய் விசாரித்து விட்டு வந்தாள். கிணற்றில் போட்ட கல் போல இருந்து விட்டு இப்போது வந்து இவன் விஷயங்களைக் கிளறுகிறான். அவள் யோசனையில் இருந்து மீண்டாள்.

"படபடப்பா எல்லாத்தையும் பண்றதுக்கு நான் பிருதிவிராஜோ, நீங்கள் சம்யுக்தையோ அல்லவே" என்று ரவீந்திரன் சொல்லிக்கொண்டிருந்தான். ஒருநிமிடம் லேசான நாணம் அவள் முகத்தில் தோன்றி மறைந்தது. பத்து நிமிடங்களில் அவனோடு புறப்பட்டாள்.

"தெரியும். நீ வருவேன்னு" என்றாள் திலகவதியம்மாள்.

இளைத்திருந்தாள். முகத்திலும், பேச்சிலும் ஆழ்ந்த சோகம் நிழலாடியது. கணவர் இறப்பால் இவ்வளவு தூரம் பாதிக்கப்படக் கூடியவளா இவள்? என்று சுபத்ராவுக்கு வியப்பாய் இருந்தது.

சுபத்ராவின் இரண்டு கைகளையும்.

வந்தாள். கிணற்றில் போட்ட கல் போல

இருந்து விட்டு இப்போது வந்து இவன் விஷயங்களைக் கிளறுகிறான். அவள் யோசனையில் இருந்து மீண்டாள்.

"படபடப்பா எல்லாத்தையும் பண்றதுக்கு நான் பிருதிவிராஜோ, நீங்கள் சம்யுக்தையோ அல்லவே" என்று ரவீந்திரன் சொல்லிக்கொண்டிருந்தான். ஒருநிமிடம் லேசான நாணம் அவள் முகத்தில் தோன்றி மறைந்தது. பத்து நிமிடங்களில் அவனோடு புறப்பட்டாள்.

"தெரியும். நீ வருவேன்னு" என்றாள் திலகவதியம்மாள்.

தொலைச்சுட்டேன்.

நகைகள்.... பட்டுப்புடவை... கல்யாணங்கள்... விழாக்கள்.. ஹோ! எல்லாத்துலயும் என்னை ஆர்ப்பாட்டம் பண்ண விட்டுட்டு அவர் அமைதியா இருப்பார். என்னை ஒரு குழந்தையா நினைச்சு வேடிக்கை பார்த்துட்டிருந்தார்னு இப்பப் புரியுது. ஆனா, எல்லாம் எவ்வளவு அபத்தம்னு இப்ப புரியுது. ஏன், வாழ்க்கையே ஒரு அபத்தம் சுபத்ரா. அவர் சாகும்போது... உயிரை விடும்போது என்னைப் பார்த்துட்டே உயிரை விட்டார். ஒரு வினாடி.... ஒரே வினாடி... எல்லாம் ஆயிடுச்சு... மனுஷ வாழ்க்கை ரொம்ப அநித்தியமானது... அபத்தமானது... சுபத்ரா... ஆடிப் போயிட்டேன். ரொம்ப.... ரொம்ப ஆடிப் போயிட்டேன்.... அதுக்கப்புறம் ரொம்ப யோசிச்சேன். நா என்னை இழந்தது போதும். அந்த ஆடம்பரம் சடங்குகள்ங்கற பொய்மைகள்ல நா என்னை ஏமாத்திக்கிட்டது போதும். இழப்பும், துக்கமும் எத்தனையோ விஷயங்களைப் புரிய வச்சுது. ரவி நல்ல பிள்ளை. ஆனா, சைலண்டா என்னை எதிர்த்துக்கிட்டிருந்தான். அழுத்தமாக. நீயும், அவனும் சந்தோஷமா இருப்பீங்க. அவன் உன்மீது ஆதிக்கம் செலுத்த மாட்டான். நீயும் அப்படித்தான். ஆமாம்..."

ஒருவினாடி நிறுத்திவிட்டு, தலையை ஆட்டிக் கொண்டு, தன்னைத் தானே அங்கீகரித்துக் கொண்டாள்.

"நீங்க ஃப்ரெண்ட்லா இருப்பீங்க. நீ என் மகளைப் போல இங்க சுதந்திரமா இரு. என்ன நான் சொல்றது? பாரு சுபத்ரா... அவரு இறந்த அதிர்ச்சியில ஏற்பட்ட கணநேர முடிவில்லை இது. என் மகன் என்னோட அங்கீகாரத்துக்கு ஒரு மதிப்புக் கொடுத்தான் பாரு. அது போதும். என் மகனை இந்தக் கணத்துல நா உங்கிட்ட ஒப்படைக்கிறேன். இனிக் கல்யாணம், பத்திரிகை, சடங்கு, லொட்டு, லொசுக்கு எப்பவோ, எப்படி வேணா இருக்கட்டும். சரிதானேம்மா?" என்றாள்.

சுபத்ரா நெகிழ்ந்து போனாள்.

சுபத்ராவுக்கு அப்பா அன்றொரு நாள்

...எதிர்த்துக்கிட்டிருந்தான். அழுத்தமா...

அவனும் சந்தோஷமா இருப்பீங்க. அவன் உன்மீது ஆதிக்கம் செலுத்த மாட்டான். நீயும் அப்படித்தான். ஆமாம்..."


ஒருவினாடி நிறுத்திவிட்டு, தலையை ஆட்டிக் கொண்டு, தன்னைத் தானே அங்கீகரித்துக் கொண்டாள்.

"நீங்க ஃப்ரெண்ட்லா இருப்பீங்க. நீ என் மகளைப் போல இங்க சுதந்திரமா இரு. என்ன நான் சொல்றது? பாரு சுபத்ரா... அவரு இறந்த அதிர்ச்சியில ஏற்பட்ட கணநேர முடிவில்லை இது. என் மகன் என்னோட அங்கீகாரத்துக்கு ஒரு மதிப்புக் கொடுத்தான் பாரு. அது போதும். என் மகனை இந்தக் கணத்துல நா

குழந்தைகளை பண்படுத்தும் ஸ்போர்ட்ஸ்!



பள்ளிகள் நடக்கத் தொடங்கி இருக்கும் இந்த நேரத் தில் குழந்தைகளை 'படிபடி' என்று சொல் வதில் தவறில்லை. அதே சமயம் அவர்களை விளையாடச் சொல்ல வேண்டும். அதனால் ஏற்படும் பலன்கள் ஏராளம். பெரிய விளை யாட்டு வீரனாக உருவெடுப்பவன் லட்சக் கணக்கில் சம்பாதிக்க முடியும் என் பதை பார்க்கிறோம். எல்லோருமே அப்படி ஆக முடியாதுதான். ஆனால் சிறு வயதிலிருந்தே முறையான விளையாட்டுப் பயிற்சியில் ஈடு படும் குழந்தைகள் மிகப் பெரிய பலன்களை அடைகிறார்கள்.



ஸ்போர்ட்ஸ் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கும், உடல் மற்றும் மன வளர்ச்சிக்கும் நல் ஒழுக் கத்தோடு வாழவும் வழி வகுக் கிறது. மேலும் போட்டிகள் நிறைந்த இச் சமுதாயத்தில் வெற்றிகரமான மனிதனாக உயர ஸ்போர்ட்ஸுக்கு முக்கிய பங்கு உண்டு என்பது மறுக்க முடியாததாகும்.

விளையாட்டுத் துறையில் தொடர்ந்து விளையாடும் குழந்தைகள் மற்ற சாதாரண குழந்தைகளை விடவும் நிதானமாக, பொறுமை யாக, உறுதியான மனதுடன் எல்லாவித குண நலன்களில் சிறப்பாக மாறுபட்டு இருப்பார்கள். பொதுவாக விளையாட்டு வீரர்கள் எப் பொழுதும் மகிழ்ச்சியாகவும், வெற்றிகரமான சிந்தனைகள் (Positive thinking) உள்ளவரா கவும் இருப்பார்கள்.

இக்குழந்தைகளின் உடல் வளர்ச்சி மிக ஆரோக்கியமான தாகவும், வளர்ந்து பெரியவர்கள் ஆகும்போது பக்குவப்பட்ட மனநிலையுடன் சிறந்த மனிதர் களாகவும் இருப்பார்கள். பல குழப்பமான, நெருக்கடியான சூழ்நிலைகளில், இவர்கள் முற்றிலும் பக்குவமாக சிந்தித்து உறுதியான முடிவு எடுப்பார்கள். பதட்டமான எந்த ஒரு முடிவையும் எடுப்பது என்பது மிக அரிது. மற்ற குழந்தைகளை விட விளையாட்டுத் துறையில் உள்ள எல்லா வயது குழந்தைகளும், படிப் படியாக வெவ்வேறு முயற்சிகளில் மன உறுதி யுடன் முன்னேறுகிறார்கள். சிறு வயது முதலே மன உறுதியான சூழ்நிலையில் வளர்ந்து வருவதால் அவர்களை வெற்றி தேடி வந்து, மேலும் சிறந்த மனிதனாக, உருமாற உதவுகிறது. விளையாட்டுத் துறை மட்டுமே குழந்தைகளுக்கு அனைத்து விதமான வளர்ச்சிகளுக்கான பயிற்சிகளையும் கொடுக்க முடியும்.



குழந்தைகளை சிறந்த இளம் வீரர், வீராங்கனைகளாக மட்டுமல்லாது, படிப் பில் சிறந்து விளங்க தெளிவான மனதையும், எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களின் காலம் முழுவதும் தங்களின் உடல்நிலையை மிக ஆரோக்கியமாக, உணவு பழக்க வழக்கங்களை சிறப்பான முறையில் கடைப்பிடிக்க ஸ்போர்ட்ஸ் உதவுகிறது. இக் குழந்தைகள் எப் பொழுதும் தங்களது கண்








களையும், காதுகளையும் கூர்மையாக வைத்திருப்பதால் இவர்களால் மற்றவர்களை விட அதிகமான செய்திகளை பெற முடிகிறது. சமூகத்தில் கூச்ச சுபாவம் இல்லாமல் எல்லோரிடமும் கலந்து பழகி மொழி, மதம், இனம் என எந்த விதமான வேறுபாடும் பார்க்காமல் எந்த விதமான மனிதர்களோடும், நட்புடனும் உதவிமனப்பான்மையோடும் பழகுவார்கள்.

ஸ்போர்ட்ஸில் திட்டமிடுதல் (Planning) என்பது மிகஅத்தியாவசியமானதாகும். ஸ்போர்ட்ஸ் திட்டமிடுதலை சிறுவயதிலிருந்தே கற்றுத் தருவதால், அவர்கள் வாழ்க்கையில் அது ஒரு அங்கமாகி விடுகிறது. இதனால் பின்னாளில் இவர்கள் வளர்ந்து வரும் போது, இவர்களின் வாழ்க்கை அமைதியாக நகர்கின்றது.



நேரம் தவறாமை இங்கு கண்டிப்பாக கடைப்பிடிப்பதால் குழந்தைகளின் வளர்ச்சியுடன், இந்த நேரம் தவறாமை என்பதும் வளர்ந்து அவர்களின் எல்லாவிதமான செயல்களிலும் எப்பொழுதும் எதிரொலிக்கும்.

ஸ்போர்ட்ஸ் குழந்தைகளுக்கு, திட்டமிடுதல், விளையாட்டு மற்றும் இதர போட்டிகளில் பங்கு கொள்ள, எந்தவிதமான பயிற்சியையும் சிறப்பாகச் செய்ய, பயணம் செய்து வெளி உலகை அறிந்து கொள்ள, நண்பர்கள் கிடைக்க என பல வகையிலும் உதவுகிறது. இதனால் பரந்தமனப்பான்மை வளர்கின்றது. ஜாதிக் கலவரங்கள் தலைவிரித்தாடும் இக்கால கட்டத்தில் அந்நினைவே வராமல் ஸ்போர்ட்ஸ் அவர்களை வளர்க்கிறது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.



சமூகத்தில் அனைவருக்கும் ஏற்றவராக, அடுத்தவர் நலனிலும் அக்கறை உடையவராக இவர்கள் இருப்பார்கள்.


விளையாட்டு வீரர்/வீராங்கனைகள் எப்பொழுதும் மிக



* உமா நாகராஜன்

நேர்மையான சிந்தனைகள் உடையவர்கள். மற்ற குழந்தைகளைப் போல சிந்தனைகளை பல வழிகளில் சிதற விடாமல், அதை சாதிக்க வேண்டும், உலக சாதனை புரிய வேண்டும் என கனவு கண்டு, அந்தக் கனவை நினைவாக்கும் முயற்சியில் முழு மூச்சுடன், அதிக கவனத்துடன் பயிற்சிகளில் தேர்வு பெற்று முன்னேறுகிறார்கள். இந்த உறுதி மற்ற குழந்தைகளிடம் சற்று குறைவாகவே உள்ளது என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

குழந்தைகளின் மனநிலை (Kids Psychology) என்னவென்றால், கட்டாயப்படுத்தி செய்யும் எதையும் அவர்கள் விரும்புவதில்லை. அவர்கள் போக்கில் விட்டு காரியங்களை சாதிக்கும் பெற்றோர்களே வெற்றியடைகின்றார்கள். பலமணி நேரம் பள்ளியில் படித்து விட்டு வரும் குழந்தைகளுக்கு ஸ்போர்ட்ஸ் மிக அத்தியாவசியமாகிறது. அவர்களின்



மூளைக்கு சுறுசுறுப்பைத் தருகின்றது. விளையாட்டு என்றாலே சுறுசுறுப்புத்தான். அப்படி நம் குழந்தைகள் எப்பொழுதும் இருக்கவே நாம் விரும்புகிறோம். ஸ்போர்ட்ஸில் மனப்பாடம் செய்ய வேண்டும், மதிப்பெண்கள் வாங்க வேண்டும் என்ற மனப் பாரம் (Mental stress) இல்லை. இதன் காரணமாகத்தான் குழந்தைகள் விளையாடுவதை மிகவும் விரும்புகிறார்கள். தாங்கள் எதையோ சாதித்து விட்டதாகக் கூட நினைக்கிறார்கள்.



நீங்க நெனச்சா முடியாதா? (8)

"ஏய் சீனு.........காலங்கார்த்தால எங்கே கிளம்பிட்டே. அது என்ன புக்? கொஞ்சம் குடு பாத்துட்டுத் தர்றேன்"

"இங்கிலீஷ் நாவல், இந்தா பொம்மை பார்த்துட்டுக் குடு"

"ஏய்... இந்த கிண்டல்தானே வேணாங்கறது.. எனக்கு. இங்கிலீஷ் தெரியாதா? இதுபோல நாவல் நான் எத்தனையோ படிச்சிருக்கேன் தெரியுமா?"

"ஆமாம் படிச்சு கிழிச்சே"

"ஏய் சீனு, உன்னை நான் லைப்ரரிக்குத் தானே போகச் சொன்னேன். அனாவசியமா ஏன் ரேணுகிட்டே தகராறு பண்ணிக்கிட்டிருக்கே".

"பாருங்க சித்தப்பா எனக்கு இங்கிலீஷ் தெரியாதாம்சீனு கிண்டல் பண்றான்". ஏய் சீனு **'I am know English'.**

"பாத்தீங்களா சித்தப்பா ரேணு இங்கிலீஷ் பேசற அழகை"

"ரேணு ஒரு நபரை அல்லது ஒரு விஷயத்தைப் பத்தி எனக்குத் தெரியும்னு



சொல்லணும்னா **'I know'** 'ஐ நோ'னு சொல்லணும். **'I am know'**னு சொல்றது தப்பு.

> "நோ"
> "நோ"
> "ஐ நோ"

I know him. அவரை எனக்குத் தெரியும்.

I know his address. அவரது விலாசம் எனக்குத் தெரியும்.

I know English. எனக்கு இங்கிலீஷ் தெரியும்.

ஒரு **subject** நல்லாத் தெரியும்னு சொல்லும் போது **'know'** என்பதுக்குப் பதிலாக **'good at'** ங்கற வார்த்தையை யூஸ் பண்ணலாம்.

He is <u>good at English</u>. அவனுக்கு இங்கிலீஷ் நன்றாகத் தெரியும்.

She is <u>good at</u> Maths. அவள் கணிதப் பாடத்தில் சிறந்து விளங்குகிறாள்.

Tendulkar is <u>good at</u> batting. டெண்டுல்கர் பாட்டிங் செய்வதில் வல்லவர். (திறமை யானவர்)

You are good at what? *(நீ எதில் தேர்ச்சி பெற்றவள்?*

சித்தப்பா, **Renu is good at gossiping.** *(காஸிபிங்).*

"ஏய் சீனு நீ இன்னுமா லைப்ரரிக்குக் கிளம்பல".

"இதோ கிளம்பிட்டேன் சித்தப்பா".

"நல்ல வேளை சீனு வெளில போயிட்டான். இப்போ சீனு **'gossiping'**னு சொன்னானே அப்படீன்னா என்ன சித்தப்பா?"

"Gossiping *(காஸிபிங்)*னா வம்பளப்ப துன்னு அர்த்தம்.

"சித்தப்பா எனக்கு இங்கிலீஷ் தெரியாத தனால தானே என்னை எல்லோரும் இப்படி கிண்டல் பண்றாங்க"

"கவலைப்படாதே. நீ ஈஸியா இங்கிலீஷ் கத்துக்க ஒரு வழியிருக்கு. உங்க அப்பாகிட்டே சொல்லி நான் உன்னை **விவேகானந்தால** சேர்த்துவிடறேன். வீட்ல இருந்துண்டே நீ இங்கிலீஷ் கத்துக்கலாம்.

Thank you very much சித்தப்பா.

பயிற்சி விவரம் >>>

இதனால் மனஉறுதி வலுக்கின்றது.

விளையாட்டுக் களத்தில் தானாகவே சிந்தித்து முடிவெடுக்கும் மனநிலை பெற்று தன்னைத்தானே அதிகம் நம்பத் தொடங்குகிறார்கள். இதனால் மற்றவர்களைச் சார்ந்திராமல் எந்த ஒரு முடிவையும் தாங்களாகவே சிந்தித்து செயல்பட்டு உயர ஸ்போர்ட்ஸ் அவர்களை பயிற்றுவிக்கின்றது. இதனால் தன்னம்பிக்கை கூடுகின்றது. விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகள் அவர்களின் இளம் கால கட்டத்தில் வெற்றி, தோல்வி, நல்ல கடினப் பயிற்சிக்குப் பிறகு போட்டிகளில் கலந்து கொள்ள இயலாத சூழ்நிலை, ஏமாற்றம், மன மற்றும் உடல் காயங்கள் என பலதரப்பட்ட சமயங்களில் வேறுபட்ட மனநிலைகளை கடந்து விடுவதால், பின்னாளில் சாதாரண பிரச்னைகள், குடும்பச் சச்சரவு, வாழ்க்கையில் ஏற்படும் ஏற்றத் தாழ்வு, வெற்றி தோல்விகள் அவர்களை அதிகம் பாதிப்பதில்லை.

இன்றைய ஆராய்ச்சியாளர்கள் கூறுவது :

ஸ்போர்ட்ஸில் ஈடுபடும் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகி, நடுத்தர வயதினராகும் போது மற்ற சாதாரண நடுத்தர வயதினரின் உடல்நிலையைவிட இவர்களின் உடல்நிலை மிக ஆரோக்கியமானதாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்கும். எந்த ஒரு கடினமான வேலையையும் சுலபமாகவும், வேகமாகவும் செய் கிறார்கள். அன்றாட பிரச்னைகளை சுலபமாக தீர்த்து கவலையில்லாமல், நிம்மதியாக இருக் கிறார்கள். இவர்கள் எந்த வயதிலும் எந்த ஓர் பொறுப்பையும் தலைமையேற்று நடத்தத் தயங்குவதேயில்லை. ஸ்போர்ட்ஸில் பங்கு கொள்ளும் ஒவ்வொருவரும் தங்கள் மன உணர்வுகளை மற்றவர்களோடு பகிர்ந்து கொள் கின்றார்கள். சந்தேகங்களை போக்கிக் கொள்ள அடுத்தவர் உதவி நாடுவது, சச்சரவுகளை விவா திப்பது என்பதற்கு இவர்கள் ஐயப்படுவதே யில்லை. ஐம்புலன்களையும் அடக்கி ஆள்கின் றார்கள். எல்லோரிடமும் கலகலப்பாக பழகு கிறார்கள். குடும்ப வாழ்க்கையில் நுழையும் போது, தங்களின் கணவன்/மனைவியுடன் எல்லா விஷயங்களையும் கூடி ஆலோசித்து சேர்ந்தே முடிவெடுக்கிறார்கள்.

இறுதியாக.....

எல்லா விளையாட்டு வீரர்/வீராங்கனைகளையும் சேம்பியன்களாக ஆக்க முடியாது. ஆனால் ஸ்போர்ட்ஸில் ஈடுபடும் ஒவ்வொரு குழந்தையும் பின்னாளில் சிறந்த குண நலனுடன், ஒழுக்கத்துடன், தன்னம்பிக்கையுடன் மிக முக்கியமாக நல்ல ஆரோக்கியமான உடல்நிலையுடன் பண்பட்டவர்களாக உருவாக்க முடியும். குறிப்பாக நம் நாட்டுப் பெண் குழந்தைகளின் கூச்ச சுபாவம் அறவே நீங்கி, தன்னம்பிக்கையும் தைரியமும் பெற்று அவர்கள் சமுதாயத்தில் எந்தவிதமான பிரச்னைகளையும் எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தை பெற ஸ்போர்ட்ஸ் மிகவும் உதவும் என்பதில் எந்தவித ஐயப்பாடுமில்லை.

— உமா நாகராஜன்

பப்பாளிக்காய் கூட்டுக்கும், பச்சடிக்கும் தான் லாயக்கு என்பது பெரும் பாலோரின் எண்ணம். ஆனால் அது சாம்பாருக்கும் நன்றாக இருக்கும். அதை கேரட் துருவியில் இழைத்து கடலை மாவுடன் கலந்து, உப்பு, காரம் சேர்த்து வடையாக செய்தும் சாப்பிடலாம். உடம் புக்கும் நல்லது.

— பூர்ணிமா பாலன்





பல வருடங்களுக்கு பிறகு கட்டில், டைனிங் டேபிள்களிலிருந்து பிய்ந்து வரும் மெல்லிய பிளைவுட்டை (எடுத்துத் தூர எறிந்து விடாமல்) கிரீட்டிங் கார்டு அளவில் வெட்டி, பலவித வண்ணச் சித்திரம், கார்ட்டூன் தீட்டி வாழ்த்துக்களாக அனுப்பலாம்.

— லட்சுமி சுந்தரம்



• உமா, ஜெயராமன், சிவதாணு, சதாசிவம், வித்யா குடும்பத்தினர்

மங்கையர் மலர் ஜெய்மாஹி மேரேஜ் சர்வீஸஸ் இணைந்து வழங்கும்...

மறக்க முடியாத திருமணம்

ஒரு சவரன் தங்கக்காசு பரிசு பெற்ற கட்டுரை

எங்களுடன் படித்த எங்கள் தோழி உமாவின் திருமணத்திற்காக நாங்கள் திருச்சி சென்றோம்.

கொட்டு மேளமும், நாதசுர ஒலியும் மங்கள இசையை எங்கும் பரப்பிக் கொண்டிருந்தது.

மணப்பெண்ணை அலங்கரித்து மேடையில் உட்கார வைத்து விட்டு நாங்கள் மூன்று தோழிகளும் எங்கள் இருக்கையில் அமர்ந்திருந்தோம். அப்போது எங்கள் இருக்கையின் பக்கத்து இருக்கையிலுள்ள ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணி திடீரென்று தலை சாய்ந்து எங்கள் மீது விழுந்தார்கள். தொட்டுப் பார்த்தோம். உடல் சில்லிட்டிருந்தது. மூச்சு நின்றிருப்பது தெரிந்தது. செய்தியை வெளியில் சொன்னால் திருமணம் தடை பட்டு விடும். இறந்தவரோ மணமகனின் நெருங்கிய உறவினர். தாலி கட்டும் நிகழ்ச்சி நடைபெறுவது வரை அவரை இறந்தவராக மற்றவர்கள் கருதாதபடி அவர் உடலை அழுத்திப் பிடித்து வைத்துக் கொண்டோம்.

இளம் வயதினராக நாங்கள் இருந்ததால் பிணத்தைக் கண்டு ஒரு பக்கம் பயம். எப்படி உடலை பிறர் அறியாவண்ணம்

சென்னையில் மங்கையர்மலர் ஏஜெண்ட் திரு. சிதம்பரதாணு வந்திருந்தபோது அவருடைய ஊரில் ஒருவருக்குப் பரிசு கிடைத்திருக்கிறது என்று சொன்னவுடன் அவருக்கு ஒரே சந்தோஷம். முகவரியை வாங்கிக் கொண்டவர் 'நாளைக்கே அவர்களிடம் போய் சொல்லி விடுகிறேன்' என்றார். நாகர்கோவிலுக்கு ஜெய்மாஹி ஜெயராமன், அவருடைய துணைவியார் உமா ஜெயராமனுடன் திருநெல்வேலி ஏஜெண்ட் சதாசிவம் மற்றும் நாமும் சென்றோம். ஏஜெண்ட், நம்மை பரிசு பெற்ற வித்யா வீட்டிற்கு அழைத்துச் சென்றார். பள்ளியில் பணி புரியும் வித்யாவின் தாயாரும் நிறைய போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெற்றிருக்கிறாராம். மகளும், மனைவியும் எழுத்தாளர்கள் என்பதில் வித்யாவின் தந்தைக்கு ஏக சந்தோஷம். ஒரு சவரன் காசினை வெற்றிலை பூ பழத்துடன் வைத்துக் கொடுத்து விட்டுக் கிளம்பினோம்...

ரயில் பயணங்களில் கவனிக்க வேண்டியவை என ஒரு சகோதரி பயனுள்ள குறிப்புகளை எழுதியிருந்தார். அந்த வரிசையில் மறக்காமல் ஒரு பாட்டிலில் லெமன் ஜூஸ் கலந்து எடுத்துச் செல்லுங்கள். இதனால் பித்தம் வாந்தி மற்றும் தலைவலி வரும் என்ற பயமே இல்லை. ஜூஸ் சாப்பிடு வதால், டானிக் சாப்பிட்டது போல் தெம்பாக இருப்பதை உணர்வீர்கள்.

— ஆர். பாலா

வெளியில் கொண்டு செல்வது என்ற படபடப்பு. திருமணம் முடிந்து வந்தவர்கள் சாப்பிடச் செல்லத் தொடங்கினர். எங்களில் ஒருவர் சென்று மணப்பெண்ணின் அண்ணனிடம் செய்தியைக் கூறி ஒரு டாக்ஸி கொண்டு வரச் சொல்லி திருமண மண்டபத்தின் பின்புறம் வழியாக உடலை எடுத்துச் சென்று டாக்ஸியில் கிடத்தினோம். யாரிடமும் செய்தியைக் கூறி பரபரப்பு ஏற்படுத்தாமல் இறந்தவரது நெருங்கிய உறவினரை வரச் சொல்லுங்கள் என்று கூறிவிட்டு இறந்தவரது வீட்டிற்கு பயணப்பட்டோம்.

உடலை பாதுகாப்பாகக் கொண்டு சென்றதோடு மணநிகழ்ச்சியையும் மங்கலமாக நடைபெற நாங்கள் உதவியதை எல்லோரும் பாராட்டினார்கள்.

ஆனால் நாங்கள் பட்டபாடு, பதைபதைப்பு, பயம் அப்பப்பா, இப்ப நினைத்தாலும் நெஞ்சு நடுங்குகிறது. ஒரு பிணத்தை உயிருடன் இருப்பதுபோல் காட்ட நாங்கள் எடுத்த முயற்சியை என்றும் மறக்க முடியுமா? பல மணிக்கூர் நேரம் பிணத்தின் உடலோடு உரசியதை பிறகு என் தோழியிடம் கூறி மெய்சிலிர்த்ததை மறக்க முடியுமா?

எம்.எஸ். வித்யா,
நாகர்கோவில்.

NATIONAL COUNCIL FOR LABOUR MANAGEMENT

NOTIFICATION No. 13/96

Offers the following Diploma Courses by Correspondence.

BUSINESS MANAGEMENT	(1 Year)
FINANCIAL MANAGEMENT	(1 Year)
MARKETING MANAGEMENT	(1 Year)
HUMAN RESOURCES DEVELOPMENT	(1 Year)
ADVERTISING & PUBLIC RELATIONS	(1 Year)
TOTAL QUALITY MANAGEMENT & ISO 9000	(1 Year)
PORTFOLIO ANALYSIS & INVESTMENT MANAGEMENT	(1 Year)
BUSINESS ADMINISTRATION	(6 Months)
OFFICE ADMINISTRATION	(6 Months)
SALES & MARKETING	(6 Months)
INDUSTRIAL RELATIONS & PERSONNEL MGMT.	(6 Months)
LABOUR LAWS	(6 Months)
QUALITY ASSURANCE & ISO 9000	(6 Months)
PRODUCTION MANAGEMENT	(6 Months)
INDUSTRIAL SAFETY	(6 Months)
ENVIRONMENTAL MANAGEMENT	(6 Months)
QUALITY CONTROL & ISO 9000	(6 Months)

No formal qualifications is required. Course Fee Rs. 1200/- (1 Year) & Rs. 600/- (6 Months). Examination centre at all major cities. For registration form and prospectus, kindly send Rs. 3/- postal stamp to **NATIONAL COUNCIL FOR LABOUR MANAGEMENT** 23/13, Rameswaram Road, Narayana Apartments, Second Floor, T. Nagar, Madras - 600 017. Phone : 044-4851854 Fax : 044-4933259.

போரடிக்காமல் பொருளாதாரம் படிக்கலாமா?



உலகப் பொருளாதாரத்தில் பணப்புழக்கத்தோடு இணைந்து/பிணைந்து இருக்கிறது. 'கிரெடிட் சிஸ்டம்' எனப்படும் நிதி அமைப்பு.

'Credit' என்பது என்ன?

இவ்வார்த்தைக்கு ஆங்கில அகராதியில் 'Sale in trust' அதாவது "நம்பிக்கையின் அடிப்படையில்" "தாமதமாக பணம் செலுத்துவதற்கு சலுகை" என்று அர்த்தம் கொள்ளலாம். தவணை முறை கடன் முதலியன credit என்கிற வார்த்தையின் அங்கமாகும்.

உதாரணத்திற்கு 5 ஆட்களிடம் தலா ரூ. 1000/- இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். 4 நபர்களுக்கு உடனடியாகப் பணம் தேவையில்லை. 5-வது நபருக்கு ரூ.5000/- தேவைப்படுகிறது. அந்த ஐந்தாமவர் உடனடி தேவைக்கு ரூ.5000/- வாங்கிக் கொண்டு சிறிது காலம் கழித்து அனைவருக்கும் சிறு வட்டியுடன் அந்தத் தொகையைத் திருப்பிக் கொடுக்கலாம். அவசரத் தேவைக்கு ரூ.5000/- கிடைத்தால் அந்த 5-வது நபர் ரூ.5000/- த்தை பெரிய அளவில் பெருக்கி ஒரு பகுதியை கடன் உதவியவர்களுக்கு வட்டியாக அளித்திருக்கலாம்.

மேலே விளக்கியிருப்பது தான் பெரிய அளவில்/உலக அளவில் நடந்து வருகிறது. கிரெடிட் வசதியை வர்த்தகத்திலிருந்து பிரிக்க முடியாது. ஆனால் யாரிடம் பணம் இருக்கிறது, யார் பணம் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள் எந்த அளவு வட்டி என்றெல்லாம் நாம் ஒரு தனி நபரை தேடி அலைய முடியாது. அதற்கென்றே உருவாக்கப்பட்டது தான் வங்கிகள்; தற்போது நிதி நிறுவனங்கள்.

இவை அனைத்துமே 'மத்தியஸ்தர்'- ஆக இருந்து வருகின்றன. அதாவது அதிக பட்சம் பணம் இருக்கும் தனி நபர், நிறுவனங்களிடமிருந்து சேமிப்பைப் பெற்றுக் கொண்டு தேவைப்படும் வேறு தனிநபர், நிறுவனங்களுக்கு நிதி உதவி செய்து வருகின்றன.

இவைகள் ஒப்புக் கொள்ளும் பணத்தின் மேல் வட்டி அளித்து ஊக்குவிக்கின்றன. மாறாக நிதி உதவி அளிக்கும் தொகையில் வட்டி வசூலித்து தனக்கென்று ஒரு லாபம் ஈட்டிக் கொள்கிறது.

இப்படியாக ஒரே பணம் பல நபர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்வதல்லாமல் தன்னையே வளர்த்து விருத்தி செய்து கொள்ளவும் செய்கிறது. இது பொருளாதார முன்னேற்றத்தின் அற்புதத் தூண்டுகோலாகும்.

இந்த 'credit' ஐ நாம் பல வகையில் காணலாம். நாட்டின் பலதர மக்கள் இந்த வசதியை அனுபவிக்கின்றனர்.

தனி நபர்கள் பெரிய கடைகளில் தவணை முறையில் வாங்குகிறார்கள். அது ஒரு வகை creditவாங்கியவுடனே பொருளை அனுபவிக்கலாம். பிற்பாடு குறிப்பிட்ட தவணையில் வட்டியுடன் பணம் செலுத்தலாம். இது ஒரு வகை.

வங்கிகளில் நடப்புக் கணக்கு வைத்திருப்பவர்களுக்குத் தருவது ஒரு வகையான over draft, Cash Credit எனப்படும், பணவைப்புக்கு மேலே (குறிப்பிட்ட) தொகை வரைக்கும் பணம் எடுக்கலாம் என்கிற சலுகை உண்டு. இதற்கும் வட்டி உண்டு.

தேசியமயமாக்கப் பட்ட வங்கிகளின் பண இருப்பு கடந்த ஆண்டு 1996 மார்ச மாதத்தில் ரூ. 4,32,34 கோடியாக இருந்தது. அதே காலகட்டத்தில் வணிகத் துறைக்கு வங்கிகளின் கடன் ரூ.3,38,308 கோடியாக இருந்தது.

இவையில்லாமல், வங்கிகள் அல்லாத

பாப்கார்ன் நாமும் செய்யலாம்

அடி கனமான வாணலியில் 2 ஸ்பூன் எண்ணெய் விட்டு அதில் துளி உப்பு, துளி மஞ்சள் தூள் போட்டு எண்ணெய் காய்ந்ததும் சிறிய கைப்பிடி அளவு சோளத்தைப் போட்டு ஜல்லிக்கரண்டியால் வறுக்க வேண்டும். ஒன்று வெடிக்க ஆரம்பித்த உடன் மூடியால் மூடிவிட வேண்டும். (இடது கையில் ரெடியாக மூடியை வைத்துக் கொண்டிருக்க வேண்டும். இல்லை என்றால் வெளியில் வந்து விழுந்து விடும்.) வெடிக்கும் சத்தம் அடங்கியதும் முதலில் அடுப்பை சிம்மில் வைத்துவிட்டு மூடியைத் திறந்து பார்த்தால் அழகிய மலர்ந்த பாப்கான் கிடைக்கும். சற்று நமுத்தலாக இருக்கும். இளம் தீயில் 5 நிமிடம் வறுத்தால் மொறு மொறுப்பாகிவிடும்.

– அரவிந்த லோச்சனி



நிதி நிறுவனங்களிடம் 94-95 ஆம் ஆண்டில் ரூ.2,23,388 கோடி இருப்பு என்று கணக்கெடுக்கப்பட்டது.

இந்த credi என்கிற பண வசதி உள்நாட்டு நிறுவனங்களுக்கு மட்டுமில்லாமல் வெளிநாட்டு அரசாங்கத்திற்கும், தனியார்/அரசாங்க நிதி நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகிறது. 1996ஆம் ஆண்டு மார்ச் கடைசியில் வெளிநாடுகளிடமிருந்து நாம் வாங்கிய கடன் 91,161 மில்லியன் டாலர்களாகும். நம் அரசாங்கமும் முன்னேறிக் கொண்டிருக்கும் சிறு நாடுகளுக்குக் கடன் அளித்திருக்கிறது/அளித்துக் கொண்டிருக்கிறது.

உள்நாட்டிலேயே creditவசதி பலதரப்பட்ட துறைக்கு வழங்கப்பட்டு வருகிறது. உதாரணமாக விவசாயத்திற்கே நேர்முகமாகவும் மறைமுகமாகவும், கடன் வசதி அளிக்கப்படுகிறது. அதெல்லாமல் சிறு, குறு தொழில்களுக்கு பெரிய தொழில்களுக்கு சுயவேலை ஆரம்பிக்க எண்ணுபவர்களுக்கு, வீட்டு வசதிக்கு நுகர்வோருக்கு என்று பலதரப்பட்ட மக்களுக்கு, அமைப்பிற்குக் கடன் உதவி வழங்குகிறது.

பெரிய, சிறிய நிறுவனங்களுக்கிடையே பொருட்கள் வாங்கும் பேரத்தில் creditஇன் பங்கு நிறைய உண்டு. அதாவது பொருட்களை இப்பொழுது 'சப்ளை' செய்து விட்டு பிற்பாடு பணம் வசூலிப்பது ஒரு வகை credit. பணம் சரியாக திருப்பித் தராமல் நஷ்டமும் இந்த credi அமைப்பில் உண்டு.

கம்பெனிகளுக்கிடையே அவசரத்திற்குப் பணம் கொடுக்கல்/வாங்கல் என்று கூட உண்டு. இதைத் தான் Inter corporate deposits (ICD) என்று கூறுவர். அதாவது நிறுவனங்களுக்குள் டெபாசிட் செய்தல், வாங்குதல்.

இவையெல்லாமில்லாமல் இந்தக் கால மக்கள் ஒரு புதுவகை credit வசதி பற்றி கேள்விப் பட்டிருப்பார்கள். **Credit Card!** இதைப் பற்றியும் பார்க்கலாம்.

Credit Card (கடன் அட்டை என்று தமிழில் மொழி பெயர்த்தால் நன்றாக இல்லை) ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் வருமானம் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பித்து இந்த வசதி பெறலாம். நிறைய வங்கிகள் இந்த மாதிரி கார்டு-களை வழங்குகின்றன. உதாரணத்திற்கு, Central Card (Central Bank of India வினுடையது) Can Card (Canara Bankல் வழங்கப்படுவது) இவையல்லாமல் வெளிநாட்டு வங்கிகளும் இந்த மாதிரி Credit Card வழங்குகின்றன. City card American Express card.

இந்தக் கார்டை வைத்திருப்பவர்கள் இதனை ஒப்புக் கொள்ளும் பல கடைகளில் கார்டு மூலமாக சாமான் வாங்கலாம். இந்த மாதிரிக் கடைகள் வங்கிகளோடு ஏற்பட்டிருக்கும் உடன் பாட்டின் பேரில் பிற்பாடு அவர்களிடமிருந்து வசூல் செய்யும். பெரிய பெரிய நகரங்களில் பல கடைகளில் எல்லா வங்கிகளின் கார்டையும் அல்லது ஒரு சில வங்கிகளின் கார்டையாவது ஒப்புக் கொள்ளும் வசதி உண்டு. சிறு ஊர்களில் இன்னும் இந்த வசதிகள் வரவில்லை. இதன் அடிப்படை

கொள்கை "இப்பொழுது வாங்குதல், பிற்பாடு பணம் செலுத்துதல்" இந்தக் கார்டு வசதி பெற/நீடிக்கும் பொருட்டு வருடா வருடம் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கட்ட வேண்டும். மேலும் இந்த பிற்பாடு பணம் செலுத்தும் வசதி சுமார் 30-40 நாட்கள் வரைக்கும் தான். அவர்கள் குறிப்பிட்ட தேதிக்குள் பணம் செலுத்தாவிட்டால் வட்டித் தொகை கட்ட வேண்டும். இந்த வட்டி விகிதம் ஆண்டிற்கு 22% முதல் 30% வரை இருக்கும். அதில் தான் இவர்களது வருமானமே அடங்கியுள்ளது. ஏனென்றால் இந்த கார்ட் வைத்திருக்கும் அனைவருமே ஓரளவாவது தன் தகுதி, தேவைக்கு மேல் செலவு செய்வதால், மாதாந்திரப் பட்டியலில் குறிப்பிட்டிருக்கும் மொத்த பணத்தைச் செலுத்த முடிவதில்லை. விளைவு! செலுத்தாத பணத்தின் மேல் வட்டி.

இதனை ஒரு கட்டுப்பாடோடு உபயோகித்தால் தான் இதனால் நன்மை. இல்லையென்றால் இது கடன் படுவதற்கான ஒரு வகையான 'தீய ஈர்ப்பு' என்று கூடச் சொல்லலாம். போகிற

சமையலறையில் சாமான்களை கச்சிதமாக அடுக்கி வையுங்கள். பெயர் ஒட்டும் போது கொஞ்சம் ரசனையோடு ஒட்டுங்கள். எங்கள் வீட்டு டீ டப்பாவில் ஒரு கார்ட்டூன் பொம்மை I'm Tea *என்று சிரிக்கும். துவரம் பருப்பு டப்பாவில் 'வெள்ளி, செவ்வாய் என்னை உபயோகியுங்கள்' என்றும்*

இடத்திற்கெல்லாம் பெருந் தொகை பணம் எடுத்துக் கொண்டு செல்லாமல் இருக்கவும், மேலும் ஒரு பொருளை கட்டாயமாக வாங்கவேண்டும்- என்கிற விஷயத்தில் 'கார்டை' அளவோடு உபயோகித்தால் உண்மையிலேயே 'க்ரெடிட் கார்டு' ஒரு 'இடைக்கால பணம் தரும் ஒரு நிதி சாதனமாக அமையும். இந்தியாவைப் பொறுத்த மட்டில் கடந்த பத்து ஆண்டுகளாகத் தான் இந்த 'கிரெடிட் கார்ட்' புழக்கத்திற்கு வந்துள்ளது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பல ஆண்டுகளாக இந்த வகை நிதிப் பரிமாற்றம் இருந்து வருகிறது. அமெரிக்கா மொத்தமே இந்த Creditல் (அதாவது கடனில்) இயங்குகிறது என்கிற கூற்றும் கேள்விப்பட்டிருக்கலாம்.

நாம் சேமிக்கும் பணத்தைத் சும்மா வைத்துக் கொள்வதால், வங்கிகளின் பணி முடிந்து விடாது. அதே போல் நிதி நிறுவனங்கள் பொது மக்களிடம் வாங்கிய டெபாசிட்டுகளை 'சும்மா' வைத்திருப்பதால் பயன் ஒன்றுமில்லை. அந்தப் பணத்தைத் தேவைப்படும், சிறு/ பெரு தொழில்களுக்குக் கடன் வழங்கி அதில் வரும் வட்டியில் தன் லாபத்தை நிர்ணயிக்கிறது. இப்படி பணம் பரவி புழங்கிப் பெருகினால்தான் பயனுண்டு. இந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால் இந்த ரக நிதி நிறுவனங்களும்/வங்கிகளும் கடன் கொடுத்தால் தான் இவைகளின் நடப்பிற்கு நல்லது.

இவையெல்லாம் குறிப்பிடும் போது

ஸ்ரீ துர்க்கை அம்மன் துணை

போன் : 8281327

தனலக்ஷ்மி  சாரீஸ்

தேவேந்திரா சுங்குடி தயாரிப்பாளர்

20 வருடமாக தரமான தேவேந்திர சேலைகள் தயாரித்து புகழ் பெற்ற நாங்கள், இப்பொழுது 8 வருடமாக மதுரை சுங்குடி சேலைகள் சொந்தமாக தயாரித்து வருகிறோம்.

எங்களிடம் 100's special (100x100 combed Cotton) quality, 120 superior quality (100x120 Combed Cotton) அதிக கெட்டி சாயத்துடன் தயார் செய்கிறோம். இதனால் புடவை நீடித்து உழைப்பதற்கு உத்தரவாதம் தருகிறோம்.

எங்களிடம் 9¾ கெஜம் (8.70 m), 10¾ கெஜம் (9.70 m) மற்றும் 6 கெஜம் (5.50 m) கிடைக்கும். இப்பொழுது 9 கெஜத்திலும் Bathic prints, Banthini prints மற்றும் Gold prints, Latest Screen printing designs தயார் செய்கிறோம்.

மற்றும் பட்டுப்புடவை போன்று Grand look கொண்ட உயர்தர காட்டன் புடவைகள் கிடைக்கும். உயர்ரக காட்டன் நூலால் நெய்யப்படுவதால் அதிக Maintanance தேவையில்லை. சேலைகள் அதிக நாள் நீடித்து உழைக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் தயார் செய்கிறோம். மற்றும் எங்கள் கம்பெனியில் தயார் செய்யும்போது கோளாறு ஏற்படும் சேலைகள் மிகவும் குறைந்த விலைக்கு கிடைக்கும். மற்றும் old stock sarees, எப்போழுதும் 10% Discount-ல் கிடைக்கும்.

நாங்கள் மொத்தமாகவும் சில்லறை விலையிலும் விற்பனை செய்து வருகிறோம். மற்றும் எங்களிடம் நெகமம், பெங்கால் காட்டன் (120 Counts Nice quality) பாலி காட்டன், ஆந்திரா காட்டன் (பலவித ரகங்கள்), பாலியெஸ்டர், சின்னாளப்பட்டி, கரிஷ்மா காட்டன், சிந்தெடிக் பூனம் சேலைகள் மற்றும் பலவகை ஃபேன்ஸி பிரிண்டட் சில்க் சேலைகள், சேலம் வேஷ்டிகள், டவல்கள், மேட்சிங் ப்ளவுஸ்கள், உயர்ரக ஈரோடு காட்டன் கிடைக்கும். தரமான காட்டன் சேலைகள் வாங்க சிறந்த இடம்.

We accept all credit cards.

எங்கள் கடை விலாசம்:


14.11.96 முதல் எமது இந்த தனலஷ்மி சாரீஸ் நிறுவனம் இடம் மாற்றப்பட்டுள்ளது. புதிய முகவரி

நெ. 1, கோபாலகிருஷ்ண ரோடு (டாக்டர் நாயர் ரோடு, Second left from Pondy Bazzar turning) தி.நகர், சென்னை -17.

எங்கள் தயாரிப்பு சேலைகள் அனைத்தும் கோயம்புத்தூரில் கீழ்கண்ட விலாசத்தில் கிடைக்கும்.

B.R. Shanthi, No.15, Siva Sakthi Colony, Vadavalli, Coimbatore 641 041.

மங்கையர் மலர்



மங்கையர்மலர் வாசகிகள் அனைவரும் சேர்ந்து கோலாகலமாகக் கொண்டாடும் நவராத்திரி சிறப்பிதழ் தயாராகிக் கொண்டு வருகிறது. உங்களைக் கவரும் அனைத்துச் சிறப்பம்சங்களும் உண்டு.

சாம்பிளுக்கு....

மங்கையர்மலர் & பி.கே. மணியம்மாள் டெக்ஸ்டைல்ஸ்

மங்கையர்மலரும் பி.கே. மணியம்மாள் டெக்ஸ்டைல்ஸும் இணைந்து நவராத்திரியையொட்டி நம் வாசகிகளுக்கு நூறு சேலைகள் பரிசாகத் தரப் போகிறோம். அந்தச் சேலைகளில் ஒரு விசேஷம், செய்தி உண்டு. அது என்ன...? அடுத்த மாதம் வரை அது சஸ்பென்ஸ்!

நவராத்திரி என்பது ---------------------- அம்சம்.

கோடிட்ட இடத்தில் பொருத்தமான வார்த்தையை நிரப்பி அனுப்புங்கள். சரியாக எழுதி அனுப்பியவர்களில் நூறு பேரைத் தேர்ந்தெடுத்து அவர்கள் ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு புடவை பரிசாக அளிக்கப்படும்.

☆ விடைகளை எழுதி கவரின் மேல் 'புடவைகள் பரிசுப் போட்டி' எனத் தவறாமல் குறிப்பிட்டு



மங்கையர் மலர் நவம்பர்

சென்ற இதழில் நவராத்திரி சிறப்பிதழ் அறிவித்தவுடன் சகோதரிகளுக்கு ஒரே சந்தோஷம். 'இப்போதே நவராத்திரி மூடு வந்து விட்டது' எனக்

தீபாவளி

நவம்பரில் வருகிறது, உங்கள் அனைவரின் ஒத்துழைப்புடன்தான்.



நவராத்திரி சிறப்பிதழ்

அக்டோபர் '97

- அனுராதா ரமணன் எழுதும் குறுநாவல்
- நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி!
- விஜயதுர்க்கை!

இன்னும்.... அதிக பக்கங்கள், அதே விலையுடன்!

.... அடுத்த மாதம் வரை பொறுத்திருங்கள்!!

இணைந்து வழங்கும் புடவைகள் பரிசுப் போட்டி(!)



மங்கையர்மலர் முகவரிக்கு அனுப்பலாம்.

அல்லது

✡ பி.கே. மணியம்மாள் டெக்ஸ்டைல்ஸ் இப்போட்டிக்காகவே அவர்களுடைய 222. ஆர்.கே. மடம் ரோடு, மைலாப்பூர், சென்னை-4 முகவரியில் அமைந்துள்ள கடையில் ஒரு பெட்டியினை வைத்திருப்பார்கள். அதிலும் போடலாம்.

✡ ஒரு தாளில் ஒரு விடைதான் எழுத வேண்டும். ஒரே தாளில் நிறைய விடைகளை எழுதி அனுப்ப வேண்டாம்.

✡ இப்போட்டிக்கான விதிகளை தளர்த்தவோ, மாற்றவோ ஆசிரியருக்கு உரிமை உண்டு.


✡ கடிதங்கள் மங்கையர்மலர் அலுவலகத்திற்கோ அல்லது பி.கே. மணியம்மாள் டெக்ஸ்டைல்ஸிற்கோ வந்து சேர வேண்டிய கடைசி தேதி - 13.9. '97. அதற்குப் பிறகு வரும் கடிதங்கள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

இதழ் தீபாவளி சிறப்பிதழ்

குஷியாக எழுதியிருந்தார்கள். அடுத்த மூடும் வந்து விடலாமே! பட்டாடையும், பட்டாசுச் சரங்களும். பலகாரங்களுமாக,

சிறப்பிதழ்

அதிக பக்கங்கள், அதே விலை!





* மாகாண காங்கிரஸ் தலைவர் வி.வி. கிரி, ஒ.வி. அழகேசன், தேவநாகய்யாவுடன்.

வீரசுதந்திரம் வேண்டி நின்றார்!

திருமதி. மனோன்மணி தனது எம்.ஃபில் ஆய்வுக்காக ஒரு சுதந்திரப் போராட்ட வீராங்கனையின் தியாக வாழ்க்கையினை எடுத்துக் கொண்டார். சென்ற ஆண்டு அவருடைய கணவரை பேட்டி கண்டு மேலும் பல தகவல்களையும் பெற்றார். சரித்திர ஏடுகளில் இடம்பெற்று, இன்று அதிகம் தெரியாமல் போய்விட்ட அந்த வீராங்கனை - நீலாவதி சுப்ரமண்யம்...

அது 1930. ஜனவரி மாதம். செட்டிநாட்டில் அப்போது பிரபல்யமான வார இதழாக இருந்தது குமரன் பத்திரிகையாகும். அதில் "பெண் மக்களும் சுயமரியாதைக் கொள்கைகளும்" என்ற தலைப்பில் ஓர் கட்டுரை வெளிவந்து ஒரு கலக்கு கலக்கியது. அதை எவரோ மிஸ் நீலாவதி என்ற புனைப்பெயரில் எழுதியிருந்தார்கள். தொடர்ந்து அவரது கட்டுரைகள் திராவிடன் பத்திரிகையிலும் வெளிவர ஆரம்பித்தது. ஒருமுறை மிஸ். நீலாவதியின் கட்டுரை குமரன் இதழில் வெளிவராமல் போகவே வாசகர்கள் கடிதங்கள் அந்தப் பத்திரிகை அலுவலகத்துக்குக் காரணம் கேட்டு வர ஆரம்பித்தது.

பத்திரிகையின் துணை ஆசிரியர் இராம சுப்ரமணியம் ஆசிரியர் முருகப்பாவிடம் சென்று அதுபற்றி தெரிவித்தார். ஆசிரியருக்கும் துணை ஆசிரியருக்குமே மிஸ். நீலாவதி யார் என்பது தெரியாது. ஆனால் கட்டுரையின் தீவிரம் அதை எழுதியவர் ஓர் ஆணாகத்தான் இருக்கக்கூடும் என்பதை பறைசாற்ற அவர்களும் யார் என்பதைத் தெரிந்து கொள்ளாமலேயே பிரசுரம் செய்து கொண்டிருந்தனர். கடிதங்கள் வர ஆரம்பித்ததும் அவர்கள் இருவரும் திருச்சிக்கு நேரே சென்று பார்த்து வருவது என்று முடிவு செய்து திருச்சிக்கு வந்தனர். இருவரும் திரு இ.ஆ.பெ. விசுவநாதம் அவர்களிடம் சென்று செய்தியைத் தெரிவித்தனர். அவர் இவர்களிடம் தனக்கு அந்த நபரை மிக நன்றாகத் தெரியும் என்று கூறி திருச்சியில் வணிகராக இருந்த திரு எஸ்.ஏ. கலியபெருமாள் என்பவரது இல்லத்திற்கு இவர்களை அழைத்துச் சென்றார். தாங்கள் மிஸ் நீலாவதி என்ற புனைபெயரில் தங்களது வார இதழுக்கு எழுதும் நபரைப் பார்க்க வந்ததாகக் கூறினர். சிறிது நேரத்தில் 15 வயது நிரம்பிய அழகிய சிறுமி மோர் கொண்டு வந்து தந்தாள். அவளைத் தனது மகள் என்று அறிமுகப்படுத்தினார். பள்ளி இறுதி வகுப்பு வரை படித்திருப்பதாகவும் பெண்களை வெளியே அனுப்பும் பழக்கம் இல்லாததால் வீட்டிலேயே வைத்திருப்பதாகவும் கூறினார்.

பல நிமி



* டி.கே.சி.

பி. மனோன்மணி

டங்களாகியும் புனைப்பெயர் நபர் வராததால் முருகப்பா மெது வாக பேச்சை ஆரம்பித்தார். கலியபெருமானோ சிரிக்க ஆரம்பித்து விட்டார். அவரது மகளோ வெட்கத்துடன் தான் தான் மிஸ் நீலாவதி என்பதைக் கூறியவுடன் முருகப்பா அவர்களும் இராமசுப்ரமணியமும் மிகவும் அதிர்ச்சி அடைந்தனர். அவர்கள் நம்பவில்லை என்பது தெரிந்தவுடன் திரு கி.ஆ.பெ. விசுவநாதம்பிள்ளை அவர்கள் எதில் வேண்டுமானாலும் கேள்வி கேளுங்கள் என்று கூற பத்திரிகை ஆசிரியரும் துணை ஆசிரியரும் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அப்பெண் எல்லாத் துறைகளிலும் சிறப்பாக பதில் சொல்லவே திகைத்துப் போய் தொடர்ந்து எழுதும்படி கேட்டுக் கொண்டு விடை பெற்றனர்.

வழியெல்லாம் விவாதித்துக் கொண்டு வந்த முருகப்பா துணையாசிரியரிடம் ஒரு யோசனை யைக் கூறினார். இராமசுப்ரமணியம் நாட்டுநலனில், முற்போக்கு எண்ணத்தில், பெண்கள் முன்னேற்றத்தில் பற்றுகொண்டவர். அதனால் நீலாவதியைத் திருமணம் செய்து கொண்டால் நல்லதோர் சீர்திருத்தவாதிகளான தம்பதியை நாடு பெறும் என்று யோசனை கூறினார். ஆனால் அது நடப்பதில் பெரிய சிக்கல் ஏற்படும். இராமசுப்ரமணியமோ பணபலமிக்க செட்டியார் வகுப்பைச் சேர்ந்தவர். பெண்ணோ நாயுடு வகுப்பைச் சேர்ந்தவள். குமரப்பாவின் தூண்டுதல் இராமசுப்ரமணியத்தை சிந்திக்கத் தூண்டியது. அவரும் ஒரு முடிவுக்கு வந்தவராக தனது சமூகப்பணிக்கு ஏற்ற பெண் நீலாவதியாகத்தான் இருக்க முடியும் என்ற உறுதியோடு இருவரும் மீண்டும் கி.ஆ.பெ. அவர்களைச் சந்தித்து தங்கள் கருத்தைத் தெரிவித்தனர்.



• ராமசுப்ரமணியம், நீலாவதி தம்பதிகள்



• நீலாவதி


கி.ஆ.பெ. இந்தக் காரியம் தன்னால் மட்டுமே ஆகாதென்று கூறி திரு ஈ.வே. ராமசாமிப் பெரியாரை அணுக ஆலோசனை கூறி அவரிடம் சென்றனர். ஜஸ்டிஸ் கட்சியின் தலைவரான அவரும் கலியபெருமான் அவர்களும் நெருங்கிய நண்பர்கள். கலியபெருமான் அவர்கள் இல்லத்தில் அடிக்கடி இவர்களோடு திருச்சி இராஜன் போன்ற பிரமுகர்களும் சந்தித்துக் கலந்துரையாடுவது வழக்கம். பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளைத் தனது சிரமேற் கொண்ட கலியபெருமாள் அவர்கள் தனது புதல்வியையும் அந்த எண்ணங்களோடு வளர்த்ததில் ஆச்சரியமில்லை.



• காந்திஜியைச் சந்தித்தபின் கதராடையுடன்....

இவர்கள் அனைவரும் கூடி இந்தத் திருமணத்தை முடித்தே தீர்வதென்று முடிவுக்கு வந்தனர். செட்டியார் சமூகத்தின் கடும் எதிர்ப்புக்கு இராமசுப்ரமணியம் ஆளாக நேரிடும் என்பதை எதிர்பார்த்த ஈ.வி.ஆர். அவர்கள் திருமணம் முடிந்த உடனே பெண்ணையும் மாப்பிள்ளையையும் தனது பாதுகாப்பில் ஈரோட்டில் ஒரு மாத காலம் வைத்திருந்தார். இவர்களது திருமணப் பத்திரிகை 'குடியரசு' 'திராவிடன்' ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்து நாட்டையே ஒரு கலக்கு கலக்கியது. கலப்புத் திருமணம் என்பது மிக மிக அரிதான அந்தக் காலத்தில் திருமண அழைப்பு பத்திரிகைகளில் வந்தது இதுவே முதல் முறை என அப்போது அதிசயமாக பேசிக் கொண்டிருந்தார்

• கலப்புத் திருமண பத்திரிகை



கள்...

அதன் பிறகு பேச்சாற்றலும் எழுத்தாற்றலுமிக்க நீலாவதியை இயக்கும் இயந்திரமாக பின்னாலிருந்து பெரும்பணி ஆற்றிய பணி கணவரையே சாரும். மனைவி செய்த போராட்டங்கள், சமூக சேவைகள் அனைத்திற்கும் உறுதுணையாக அவர் இருந்திருக்கிறார்.


நீலாவதி ராமசுப்ரமணியம் விடுதலை

டிசம்பர் 2-ம் தேதி சென்னை தியாகராய நகரில் சத்தியாக்கிரகம் செய்து 3 மாத வெறுங்காவலும் ரூ. 200 அபராதமும் விதிக்கப்பட்ட ஸ்ரீமதி நீலாவதி ராமசுப்ரமணியம் சென்னை சர்க்கார் உத்தரவுப்படி தமது தண்டனைக் காலம் தீருமுன் டிசம்பர் 11-ம் தேதி மாலை வேலூர் சிறையிலிருந்தும் விடுதலை செய்யப்பட்டார். இவருடன் இன்னும் பல வகுப்பினரைச் சேர்ந்த 9 பேர்களும் விடுதலை செய்யப்பட்டனர். ஸ்ரீமதி ஜகதாம்பாள் என்ற ஒருவர்தான் சிறையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் மற்ற அரசியல்கைதிகளெல்லாரும் வேலூர் சிறையிலிருந்து விடுதலை அடைந்து விட்டதாகவும் தெரிகிறது.

• பத்திரிகைச் செய்தி


தேவதாசி முறையைச் சாடி குடியரசு இதழில் நீலாவதி கடுமையாக எழுதினார். அது பெண்களை எவ்வளவு இழிவு படுத்துகிறது என்பதை விளக்கினார். விதவை மறுமணத்துக்கு ஆதரவு கோரியும் குழந்தைகள் திருமணத்தை எதிர்த்தும் எழுதினார்.

வ.உ. சிதம்பரனார் தலைமையில் தூத்துக்குடியில் நடைபெற்ற கூட்டத்தில்தான் நீலாவதி முதன் முதலில் தனது மேடைப் பேச்சைத் துவங்கினார். அந்தக் கூட்டம் அப்போது திருச்செந்தூர் ஆலயத்தின் குருக்களாயிருந்த கிருஷ்ண சர்மா என்பவரால் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் பிராமண சமுதாயத்தில் நடைபெறும் பெண் குழந்தைகள் மணத்தைப் பற்றியும் அக்குலத்தில் விதவைப் பெண்களுக்கு அளிக்கப்படும் அநீதி பற்றியும் அவற்றை நீக்கக் கோரியும் குரல்கொடுத்தார்.

திருச்சியில் "சோஷியல் ஹோம்" என்ற அமைப்பை ஏற்படுத்தி கலப்புத் திருமணங்களை செலவின்றி செய்து வைத்தனர். அந்த நிறுவனத்தில் விதவைகள் திருமணத்தையும் செய்து வைத்தனர். சுயமரியாதை முறைப்படி சடங்குகள் ஏதுமின்றி நூற்றுக்கும் மேற்பட்ட திருமணங்கள் இவர்களால் அக்காலத்தில் ரூ. 15 செலவில் செய்யப்பட்டிருக்கின்றது.

1932-ம் ஆண்டு ஜனவரி 23-ம் தேதி லால்குடியில் தாலுக்கா போர்டு கட்டிடத்தில் ஒரு மாநாட்டை இவர் துவக்கி வைத்தார். இது ஜாதி சமய உயர்வு தாழ்வைக் கண்டிக்கும் மாநாடாக இருந்தது. அது கிறிஸ்தவர்களால் ஏற்படுத்தப்பட்ட மாநாடு. அதில் அவர் பேசும்போது கூறியவை : "தீண்டாமை என்பது பைபிளில் கூறப்படவில்லை. நெருப்பு, மின்சாரம், பாம்பு, தேன் ஆகியவைதான் தீண்டத்தகாதவை. காரணம் அவை உயிருக்கு சேதம் விளைவிப்பவை. தொட்டால் உயிருக்கு சேதம் விளைவிக்கும் மனிதன் இருக்கிறானா சொல்லுங்கள்" என்று கூறி சிந்திக்க வைத்தார்.

• பெரியாரின் கடிதம்


"குடி அரசு"

3-11-35

1933-ம் ஆண்டு அவரது வாழ்வில் ஓர் திருப்பு முனை ஏற்பட்டது. மகாத்மா காந்தியடிகளை நீலாவதி சந்திக்க வாய்ப்பு ஏற்பட்டது. அவருடன் உரையாடிய பிறகு பழைய சமூக சீர்திருத்த இயக்கங்களில் உள்ள குறைகளை அறிந்து கொண்டு அவற்றைக் களைந்து புதிய முறையில் சீர்திருத்தங்கள் செய்ய ஆவல் கொண்டு அதற்குத் தக்கவாறு திட்டங்கள் தீட்டினார். குழந்தைத் தொழிலாளர்கள் மீது அக்கறை கொண்டார். டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்கள் முதல் பெண் சட்டசபை உறுப்பினரானதற்கு தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். டாக்டர் அவர்களின் ஔவை இல்லத்தில் பணிபுரிந்ததோடு பணஉதவியும் செய்துள்ளார். சென்னையில் உள்ள ராம கிருஷ்ண மடத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு சமூக சேவையில் ஈடுபட்டார். சகோதரி சுப்புலெட்சுமியுடன் சிறைக்கைதிகளை சந்திக்கும் திட்டத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

திருச்சியில் பலமுறை சமபந்தி போஜன ஏற்பாடுகள் செய்ததை காந்தியடிகளே பாராட்டியுள்ளார். நேரு, சத்தியமூர்த்தி, காமராஜருடன் சமபந்தி ஏற்பாடு செய்திருக்கிறார்.

காந்தியடிகளின் சந்திப்பு மனத்தில் ஆழ்ந்த சிந்தனையை விதைத்திருந்தது. அதுவரை ஆடம்பரமாக உடுத்தி நகையணிந்திருந்த நீலாவதி ஆடம்பர வாழ்வை ஒதுக்கி இறக்கும் வரை கதராடையே அணிய ஆரம்பித்தார். டி.எஸ்.எஸ். ராஜன் அவர்களின் இல்லத்தில் திருச்சியில் ஒரு மணி நேர சந்திப்பில் காந்தியடிகள்பால் அவர் பெரிதும் ஈர்க்கப்பட்டார். அதுமுதல் காங்கிரசில் ஒரு உறுப்பினரானார். 1940ஆம் ஆண்டு சென்னை இராசதானியின் பெண்கள் காங்கிரசின்

GURUDEV

சுராணா

ஃபைனான்ஷியல் கார்ப்பரேஷன் (இந்தியா) லிமிடெட்

(முந்தைய பெயர் S.U.S. ஃபைனான்ஷியர்ஸ் (இந்தியா) லிமிடெட்)

Group of Surana

1971 முதல்

இரும்பு போன்ற உறுதி, தங்கம் போன்ற நாணயம் கொண்ட குழுமத்தின் ஒரு அங்கம்.

சுராணா அளிக்கும் முதலீடு திட்டங்கள்

ஆண்டுக்கு வட்டி விகிதம் 15%

CARE
மதிப்பீட்டாளர்களால்
"போதுமான பாதுகாப்பு"
சான்றிதழ் பெற்றது.
(B B B +)

சுராணா நிறுவனங்கள் 1971 முதல் இயங்கி வருபவை. 25 ஆண்டு அனுபவம் பெற்றவை.

சுராணா நிறுவனங்கள் இரும்பு உற்பத்தி, இரும்பு வியாபாரம் முதலிய தொழில்களில் ஈடுபட்டுள்ளன. இக்குழுமம் தென்னகத்தில் இரும்பு வியாபாரத்தில் முதலிடம் வகிக்கிறது.

குழுமத்தின் மொத்த விற்பனை அளவு 1996-97-ல் ரூ.175 கோடி.

சுராணா ஃபைனான்ஷியல் கார்ப்பரேஷன் (இந்தியா) லிமிடெட் (SFCIL), ஹையர் பர்ச்சேஸ், லீசிங், பில் டிஸ்கௌண்டிங், ஃபாரின் எக்ஸ்சேஞ், பப்ளிக் டிபாசிட் போன்ற பல வகைப்பட்ட நிதி நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ளது.

SCHEME 1 - FIXED DEPOSITS

Period (Months)	Rate of Interest per annum
12 24 36 48 60	15.00% (Monthly) 15.19% (Quarterly)* 15.48% (Half-yearly)*

1. Minimum Amount of Deposit is Rs.3,000/-
2. Minimum Amount of Deposit for Monthly Interest is Rs.10,000/-
* Interest at 15% Compounded at Monthly rests.

SCHEME 2 - GURUDEV CERTIFICATE

(Cumulative Deposit)

Period (Months)	Minimum Amount (Rs.)	Maturity Value (Rs.)	Maturity Value for Rs. 1,000/-	Annual Yield% (Simple Interest)
12	3,000	3,482	1,161	16.06
24	3,000	4,042	1,347	17.36
36	3,000	4,692	1,564	18.80
48	3,000	5,446	1,815	20.38
60	3,000	6,321	2,107	22.14

1. Minimum Amount of Deposit is Rs.3,000/-
2. Addition in Multiples of Rs.1,000/-
3. Interest at 15% Compounded at Monthly rests.

SCHEME 3 - SURYODAY CERTIFICATE

(Cumulative Deposit)

Period (Months)	Principal (Rs.)	Maturity Value (Rs.)	Annual Yield% (Simple Interest)
12	862	1,000	16.01
24	742	1,000	17.38
36	639	1,000	18.83
48	551	1,000	20.37
60	474	1,000	22.19

Interest at 15% Compounded at Monthly rests.

சுராணா ஃபைனான்ஷியல் கார்ப்பரேஷன் (இந்தியா) லிமிடெட்

குரூப் ஆப் சுராணா

நெ. 16, ஒயிட்ஸ் சாலை, இரண்டாவது மாடி,
சென்னை - 600 014.
போன் : 8522595 / 8526581 / 8522753 / 8522684 / 8525396 / 8525694 / 8525596
ஃபாக்ஸ் : (044) - 8520587.

கிளைகள் : திருச்சி: 'TAB காம்ப்ளெக்ஸ்', முதல் தளம், 32-B, வில்லியம்ஸ் ரோடு, கன்டோன்மென்ட், திருச்சி-620 001. போன்: 46182?; **கொள்ளிடம்:** 7/157, மெயின் ரோடு, கொள்ளிடம்-609 102. போன்: 77454; **சங்கரன்பந்தல்:** 3/10-A, மெயின் ரோடு, சங்கரன்பந்தல்-609 308. போன்:-85423, 85536; **பெங்களூர்:** 302, 3-வது தளம், ஸ்விஸ் காம்ப்ளெக்ஸ், 33, ரேஸ்கோர்ஸ் ரோடு, பெங்களூர்-560 001. போன்: 2281143; **எர்ணாகுளம்:** 2-வது தளம், பெப்பர்மின்ட் சதன், நெ-39/4232 எம்.ஜி. ரோடு, ரவிபுரம், எர்ணாகுளம், கொச்சின்-682 016. போன்: 374617; **கோயம்புத்தூர்:** முதல் தளம், பெட்ரோல் டவர்ஸ், 424-A, டி.பி. ரோடு, ஆர்.எஸ். புரம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ளன.

29.9.96 தேதியிட்ட மக்கள் குரல், Trinity Mirror நாளிதழ்களில் வெளியான சட்டபூர்வமான விளம்பரத்தின் தொடர்ச்சி

ADWAVE/SFC/5420

தலைவியானார்.


அப்போது பெரியார் காங்கிரசிலிருந்து விலகிய காலம். நீலாவதியின் மாற்றமறிந்த அவர் தனது கைப்பட தோழர் நீலாவதிக்கு மனமாற்றத்தைக் குறிப்பிட்டு அவர் மீண்டும் தன்னுடன் இணைவதை எதிர்பார்ப்பதாகக் கடிதம் எழுதினார்.

நீலாவதியும் ராமசுப்ரமணியமும் பர்மா வரை விஜயம் செய்தனர். செல்லுமிடமெல் லாம் ஆங்கிலேயருக்கு எதிராக பிரச்சாரம் செய்தனர். அப்போது பர்மா இந்தியாவுடன் ஆங்கில ஆட்சியில் இணைக்கப்பட்டிருந்தது. தனது உரைகளில் பாரதி பாடல்களைப் பாடி னார். திருச்சி நேஷனல் கல்லூரியில் தேச பக்திப் பாடல்களுக்காக வகுப்புகள் நடத்தி னார்.

கிரிப்ஸ் தூதுக்குழுவின் தோல்விக்குப் பிறகு காந்திஜியின் இறுதி அழைப்பான வெள் ளையனே வெளியேறு இயக்கம் ஆரம்பிக்கப் பட்டது. "செய் அல்லது செத்துமடி" என்ற வாசகம் நீலாவதியின் காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டே இருந்தது. டிசம்பர் 2, 1941 காலை 9 மணிக்கு தி.நகர் காதி வஸ்திராலயா எதிரில் ஆங்கில அரசுக்கு எதிரான தனது சத்தியாகிரகப் போராட்டத்தை தனியாகத் துவங்கினார். மழை பெய்து கொண்டிருந்த போதும் அவர்களது உரையை பெருந்திரளான மக்கள் கேட்டுக் கொண்டிருந்தனர். அப்போது பிரதேச காங்கிரஸ் செகரட்டரியான சிவ ஞானகிராமணியார் அவர்கள் முன்னிலையில்

மைதா மாவை வெறும் வாணலியில் போட்டு கை பொறுக்குமளவு வறுத்து விட்டு, மாவு ஆறியபின் சல்லடையில் சலித்துவிட்டு அரிசி மாவு சேர்க்காமலே (எந்த மாவும் மைதா மாவுடன் சேர்க்க வேண்டாம்) சீடை, தட்டை, வெல்லச் சீடை, தேங்குழல் முதலியவைகள் அரிசி மாவில் செய்வது போலவே செய்தால் ருசியாகவும் கரகரப்பாகவும் இருக்கும்.

— லலிதா சுப்ரமண்யம்



இந்த சொற்பொழிவு நடைபெற்றது. மிக ஆவேசமாக ஆங்கில அரசைத் தாக்கிய நீலாவதியை கைதுசெய்தனர்.

நீலாவதி அவர்கள் அப்போதைய எக்மோர் மாஜிஸ்ட்டிரேட் வெங்கடேஸ்வரன் முன்பு நிறுத்தப்பட்டார். அப்போது அவர் பேசிய ஆவேச பேச்சினால் எல்லோரும் அசந்து போய் நின்று விட்டனர். ஆறு மாத கடுங்காவலும் ரூ. 200 அபராதமும் கட்டும்படி உத்தரவிடப்பட்டது. கட்டத் தவறினால மீண் டும் ஆறு வார தண்டனை என்று தீர்ப்பிடப் பட்டது.

நீலாவதி அம்மையாருடன் கைது செய்யப் பட்ட மற்ற இவரும் ஆண்கள். அதனால் அவ ரைத் தனியே ஒரு அறையில் அடைத்தனர். அதில் மழைநீர் முழங்கால் வரை நின்றது. உட்கார முடியாத நிலையில் அவரைக் கண்ட இராமசுப்ரமணியன் அப்போதிருந்த புகழ் பெற்ற வக்கீலான செங்கல்வராயன் மூலம் அவர்களை வேறு சிறைக்கு மாற்ற அனுமதி கேட்கவே அவர்கள் அவரை வேலூர் சிறைக்கு மாற்றினர். ஆனால் ஒருநாள் முழு வதும் உட்காராமலும் வசதியே இல்லாத தனியறையில் எந்தவித முணுமுணுப்பும் இன்றியும் இருந்திருக்கிறார். சிறைவாசத்தின் போது தனது மூன்று வயதுக் குழந்தையைப் பார்க்கவும் புத்தகங்கள் படிக்கவும் அனுமதிக் கப்படவில்லை.

1943-ம் ஆண்டு பட்டேல் அவர்கள் சென்னை வந்து சிறையிலிருந்து விடுதலை யான நீலாவதியை நேரில் சந்தித்துப் பாராட் டிச் சென்றார். இரண்டாம் உலகப் போரில் குண்டுகள் வீசப்பட்டு சென்னை விமான நிலையம் பாதிக்கப்பட்டபோது இவர்கள் தனது சென்னை இல்லத்திலிருந்து கொத்த மங்கலம் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட் டது. அந்தச் சமயத்தில் அவர்களது வீடு பறி முதல் செய்யப்பட்டு ஆங்கில அரசால் கோர்ட்டாக மாற்றப்பட்டது.

சுதந்திரமடைந்த பிறகு சிறைசென்றவர் களுக்கு அரசு ஐந்து ஏக்கர் நிலம் வழங்கியது. திண்டிவனம் தாலுக்காவில் அன்பாக்கம் கிராமத்தில் நீலாவதிக்கு வழங்கப்பட்ட ஐந்து ஏக்கர் நிலத்தையும் வாங்கிக் கொள்ள மறுத்து விட்டார். அதனை நிலமற்ற அரிஜனங்களுக்கு வழங்குமாறு அரசை அவர் கேட்டுக் கொண் டார்.

திரு. காமராஜ் அவர்கள் மந்திரி சபை அமைத்தபோது பேச்சுத்திறன் மிக்க ஒரு பெண் அமைச்சர் தேவை என்று உணர்ந்து நீலாவதி அவர்களை நேரில் வந்து அழைத்த போது அப்பதவியையும் அவர் நிராகரித்தார்.

இவரது எழுத்துக்களில் சிறந்தவை திராவி

ஆத்ரேயா

ரெடிமேட் ரவிக்கைகள்



வஸந்தா

வஸந்தா ராஜகோபாலன் : என்ன வாசகர்களே!! உங்களுக்கு ஒரு சந்தோஷமான செய்தியை கீழே தருகின்றேன்.

"நீங்கள் விரும்பி அணியத் துடிக்கும் "ஆத்ரேயா ரெடிமேட் ரவிக்கைகள்" தபால் மூலமாக உங்கள் வீடு தேடி வந்து சேரும்."

1. உங்கள் ரவிக்கையின் அளவு அல்லது 'ப்ரா' சைஸ்.
2. உங்களுக்கு தேவையான கலர்களின் துணி கட்டிங்.
3. எவ்வளவு ரவிக்கையானாலும் போஸ்டல் சார்ஜ் ரூ. 20/-
4. அத்துடன் நீங்கள் வாங்கப் போகும் ரவிக்கையின் மொத்த விலை ஆகியவற்றை 'ஆத்ரேயா கார்மென்ட்ஸ்' என்ற பெயரில் DD அல்லது M.O. எடுத்து அனுப்பி வைக்கவும்.

மிகவும் உயர்தரமான 2X2 துணியில் - வெளிநாட்டு மிஷினில் தைக்கப்பட்ட எங்களது 'ஆர்டினெரி' ரெடிமேட் ரவிக்கைகளின் விலை பட்டியல் -

30"-32" அளவு ரூ. 83/-	38"-40" அளவு ரூ. 98/-	44" அளவு ரூ. 113/-
34"-36" அளவு ரூ. 93/-	42" அளவு ரூ. 103/-	44XL அளவு ரூ. 123/-

சில குறிப்பிட்ட கலர்களில் எங்களிடம் தரமான 'சில்க்' ரெடிமேட் ரவிக்கைகள் கிடைக்கும்.

30"-32" அளவு ரூ. 220/-	38"-40" அளவு ரூ. 260/-	44" அளவு ரூ. 280/-
34"-36" அளவு ரூ. 240/-	42" அளவு ரூ. 270/-	44XL அளவு ரூ. 290/-

எங்களது 'ஆத்ரேயா ரெடிமேட் ரவிக்கைகள்' கிடைக்கும் மற்ற இடங்கள் :

1. நல்லிஸ் சில்க்ஸ் சாரீஸ் டிரேடர்ஸ்
41, லெபோ அம்பாங் 50100
கோலாலம்பூர், மலேசியா.
போன் : 2385468

2. கணேச லக்ஷ்மி டெக்ஸ்டைல்ஸ்,
146, லாங் பஸார்,
வேலூர் - 632 004

3. ஸ்ரீ லக்ஷ்மி டெக்ஸ்டைல்ஸ்,
62, நாகேஸ்வரன் வடக்கு வீதி,
கும்பகோணம் - 612 001.

4. முகமத் முஸ்தாபா & சம்ஷீதின் கம்பெனி
Pvt. Ltd. சிரங்கன் ப்ளாஸா, 320 சிரங்கன்
ரோடு, சிங்கப்பூர் - 218108.
போன் : 2955855

5. கல்பனா டெக்ஸ்டோரியம்
(ஆஞ்சநேயர் கோவில் பஸ் நிலையம் அருகில்)
நங்கநல்லூர், சென்னை - 600 061.
போன் : 2331311

5. மாடிக் கடை காரைக்கால் டெக்ஸ்டைல்ஸ்
198, திருநள்ளார் ரோடு, காரைக்கால்.

ATHREYA GARMENTS

வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை (ஹோட்டல் சுப்ரபாத் எதிரில்)
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 Ph: 8226586 Fax : 8276031, 560076

வேலை நேரம் : 10.00 முதல் இரவு 8.00 வரை. ஞாயிறு விடுமுறை

Credits Cards Accepted

டன் பத்திரிகையில் வெளிவந்த "மாதர்களின் அடிமை வாழ்வு" குமரன் பத்திரிகையில் வந்த "விதவைகளாவது தலைவிதியா?" "தாய்மைக் கல்வி" "இந்துமதம் அழிவதற்கு தீண்டாமை காரணமா?", "விடுதலைப் போரில் வீராங் கனைகள்" ஆகியவைகளாகும். தாய்மைக் கல்வியில் பெண்கள் மருத்துவமனைகளில் தாதியராக கல்வியளிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

தியாகராய நகரில் உள்ள தனது வீட்டிற்கு "இலக்கியப் பண்ணை" என்ற பெயரைச் சூட்டினார். அதில் ஒவ்வொரு சனிக்கிழமை யன்றும் தமிழ் இலக்கிய சொற்பொழிவுகள் நடக்க ஏற்பாடு செய்திருந்தார். அக்கூட்டங் களில் ராஜாஜி, கல்கி, டி.கே.சி., திரு.வி.க. ஆர்.பி. சேதுப்பிள்ளை, கி.வா. ஜெகன்னாதன், டாக்டர் மு.வ. போன்றோர் கலந்து கொள் வார்கள்.

டி.கே.சி. மறைந்த நினைவு நாளன்று ராஜாஜியால் தலைமைதாங்கப்பட்டு நடத்தப் பட்ட கூட்டத்தில் உரையாற்றினார். அப் போது ராஜாஜி அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தார். டி.கே.சி. நீலாவதியை தனது மகளாகவே பாவித்து வந்திருக்கிறார்.

1947-ல் சிவகாசியில் நடைபெற்ற சைவர்கள் மகாநாட்டிற்குத் தலைமைதாங்கி உரையாற்றி னார்.

அவரது தனி வாழ்வைப் பொறுத்தவரை யில் அவரது வெற்றிகளுக்குப் பின்னால் அவரது கணவர் இ[illegible]ார். அவர்களது மணவாழ்வில் கணவ[illegible] மனைவியரிடையே ஒரு சிறு மனத்தாங்கலும் இருந்ததே இல்லை என்று அவர் தன் நாட்குறிப்பில் எழுதியுள் ளார். இத்தம்பதியருக்கு இரண்டு பெண்களும் நான்கு ஆண் குழந்தைகளும் வாரிசாவார்கள்.

மூத்த பெண் சுதந்திரா குற்றாலத்தில் 1942ல் இறந்தபோது நீலாவதி சுதந்திரப் போராட் டத்தில் ஈடுபட்டிருந்தார். மருத்துவப் பட்டம் பெற்ற இரண்டாவது மகள் மணிக்குமாரி அமெரிக்காவிலுள்ள இண்டியானா போலீஸ் மருத்துவமனையில் பணிபுரிந்தபோது எதிர் பாராதவிதமாக இறந்தார். இந்த இரு இழப்பு களும் அவரைப் பெரிதும் பாதிக்க உடல்நலம் பாதிக்கப்பட்டு 11 ஜனவரி, 1982ல் இறந்தார். திரு. இராமசுப்ரமணியம் அவர்கள் இயற்கை எய்தி ஓராண்டாகிறது.

தமிழ் மண்ணில் தோன்றிய ஓர் நங்கை தன்னை சுதந்திரப் போரில் ஈடுபடுத்திக் கொண்டதோடு சமூக சேவகியாகவும் சிறந்த எழுத்தாளராகவும் இருந்திருக்கிறாரென்றால் அது நீலாவதி ராமசுப்ரமணியமாகத்தான் இருக்கும்.

இறுதியாக அவருடைய கணவர் இராம சுப்ரமணியம் என்னிடம் கூறியது நினைவுக்கு வருகிறது.

"அந்தக் காலத்தில் எதையும் எதிர்பாராது எங்களது சொந்த சொத்துக்களையெல்லாம் கூட விற்று நாட்டுக்குச் செய்திருக்கிறோம். பல மைல்கள் உணவின்றி ஓய்வின்றி நடந்திருக் கிறோம். எங்களுக்கு பர்மாவில் இருந்து 40 ஏக்கர் நிலத்தையும் விற்று இந்த நாட்டுக்காக செலவிட்டோம். ஆனால் இப்போது காசு சம்பாதிப்பதற்காக அரசியலுக்கு வருகிறார்கள். அரசியல்வாதிகளை நினைத்தால் வெறுப்பாக வும் கோபமாகவும் வருகிறது."

"சாலையில் சாதாரணமாக நடந்து எப்போது அரசியல்வாதிகள் வருவார்கள்?"



பிள்ளையாருக்கு என்றுமே தேங்காய் பூரண கொழுக்கட்டை போரடிக்காது. ஆனால் பிள்ளைகளுக்கு...? ஒரு மாற்றம் வேண் டாமா? தேங்காய்த் துருவலுக்குப் பதிலாக காரட் துருவல் தேவையான வெல்லத்துடன் ஏலப் பொடி சேர்த்துப் பூரணம் செய்து கொழுக்கட்டை செய்ய குழந்தைகள் விரும்பி உண் பர்.

உளுத்தம் கொழுக்கட்டை பூரணத்துடன் ஒரு கைப்பிடி துருவிய கேரட் சேர்த்து ஆவி யில் இடுங்களேன். கலர்புல்லாக இருக்கும் கொழுக்கட்டை.

– லக்ஷ்மி ஸ்ரீனிவாசன்.

அப்படினா... ஓ.கே.!...


இப்போ எல்லாம் Finance Company-ல Investment செய்ய நிறைய யோசிக்க வேண்டியிருக்கு!...

கரெக்ட்... உங்க பயம் புரியுது. ஆனா... உங்க Investment Motor Finance-க்கு மட்டும் தான் பயன்படுதுன்னா ? ...

ஓ... அப்படினா.. ஓ.கே.!!

ரோடுல ஓடற வாகனங்களில் ஏதேனும் நீங்கள் Prudential Motor Finance-ல் செய்த முதலீட்டால் இருக்கலாம் இல்லையா...

புத்திசாலிகளின் தேர்வு !



ஓ.கே. ஓ.கே! அப்படினா ஓ.கே.!

PMF

PRUDENTIAL

MOTOR FINANCE LIMITED

Flat 2A, II Floor, Devkar Appartments, No. 147 Luz Church Road,
Mylapore, Chennai - 4. ✆ 4971404, 4983051, 4983052

DEPOSITS ★ HIRE PURCHASE ★ LEASING

ஸ்ரீ அய்யப்பா டிராவல் ஏஜன்சி

.., வெள்ளாளத் தெரு, புரசைவாக்கம், சென்னை - 600 084.

Pager No. : 9628 - 467920 Phone : 6421305 p.p.



சோழ மண்டல வைஷ்ணவ திவ்யதேசங்கள் 40

6.10.97 முதல் 11.10.97 வரை 6 நாட்கள் வீடியோ "பஸ் பயணம்"

1. திருவரங்கம் 2. அரிமேய விண்ணகரம் 3. திரு அன்பில் 4. திரு ஆதனூர் 5. இந்தளூர் 6. கண்டியூர் 7. திருக்கண்ணங்குடி 8. திருக்கண்ணபுரம் 9. திருக்கண்ண மங்கை 10. கரம்பனூர் 11. கபிஸ்த்தலம் 12. காவளம்பாடி 13. சீர்காழி விண்ணகரம் 14. திருக்குடந்தை 15. கூடலூர் 16. திருக்கோழி 17. திருசித்ரகூடம் 18. செம்பொன் செய்கோவில் 19. தலைச்சங்காடு 20. திருச்சேறை 21. தஞ்சை, மாமணிக்கோவில் 22 திருச்சிறுபுலியூர் 23. தெற்றியம்பலம் 24. தேவனார் தொகை 25 நந்திபுர விண்ணகரம் 26. திருநறையூர் 27. திருநாகை 28. பார்த்தன்பள்ளி 29. புள்ளம்பூதங்குடி 30. திருப்பேர் நகர் 31. திருமணிக்கூடம் 32. மணிமாடக் கோவில் 33. திருவண்புருடோத்தமம் 34. திருவழுந்தூர் 35. திருவிண்ணகரம் 36. திருவாலியும் திருநகரியும் 37. வெள்ளக்குளம் 38. வெள்ளறை 39. வெள்ளியங்குடி 40. வைகுந்த விண்ணகரம்.

தீபாவளி கங்காஸ்நானம், தங்க அன்னபூரணிலட்டுத் தேர்

20.10.97 முதல் 17 நாட்கள் : சென்னை பூரி ஜகன்நாத், புவனேஸ்வரம், கோனார்க், கயா, புத்தகயா, வாரணாசி, அயோத்யா, அலஹாபாத், டில்லி, ஹரித்வார், ரிஷிகேஷ், ஆக்ரா, மதுரா, சென்னை. ரயில், பஸ், உணவு தங்கும் வசதி உட்பட கட்டணம்.

20.10.97 முதல் 12 நாட்கள் : பூரி, புவனேஸ்வர், கோனார்க், கயா, புத்தகயா, வாரணாசி, அயோத்யா, அலஹாபாத். ரயில், பஸ், உணவு, தங்கும் வசதி உட்பட கட்டணம்.

இங்கேயும் பதிவு செய்யலாம் :

பாரதி டிராவல்ஸ், 10, ஈவினிங் பஜார், பார்க் டவுன், சென்னை-600 003.

✆ : 5353493

நவரத்தினங்கள், எவை தெரியுமா? "முத்து, வைரம், கோமேதகம்...." என்று உற்சாகமாகப் பட்டியலிடத் தொடங்கி விடாதீர்கள். நாம் குறிப்பிடுவது சமீபகாலமாக இந்திய அரசின் மணிமுடியில் பதிக்கப்பட்டிருக்கும் நவரத்தினங்கள் என்று கருதப்படும் பொதுத்துறை நிறுவனங்களைப் பற்றி. அவை 1. பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ், 2. பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன், 3. இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன், 4. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், 5. இந்தியன் பெட்ரோ கெமிகல்ஸ் கார்ப்பரேஷன், 6. விதேஷ் சஞ்சார் நிகம், 7. ஆயில் அண்ட் நேச்சுரல் கேஸ் கார்ப்பரேஷன், 8. நேஷனல் பவர் கார்ப்பரேஷன், 9. ஸ்டீல் அதாரிட்டி ஆஃப் இந்தியா.

இந்த நவரத்தினங்களுக்கும் அதிக சுயாட்சி உரிமை கொடுக்கலாம் என்ற எண்ணம் தொழில் துறையில் வளர்ந்து வருகிறது. அதாவது ஒவ்வொரு கட்டத்துக்கும் இவர்கள் அரசு ஆணைக்காகக் காத்திருக்காமல் தாங்களாகவே ஆலோசனை செய்து முடிவை செயல்படுத்த வழி செய்யப்படுகிறது.

"இந்தியாவின் சுதந்திரப் பொன்விழா ஆண்டில் ஒரு பெண்மணி மாநில முதலமைச்சராக இருப்பது பெருமைப்படத்தக்க விஷயம்" இப்படிக் கூறியிருப்பவர் லாலு பிரசாத் யாதவ். ஆனால் இந்தியர்களோ - ஏன் இந்தியப் பெண்மணிகளோ கூட - இந்த விஷயத்தில் பெருமைப்பட எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஊழல் வழக்கில் சிக்கிக் கொண்டு ராஜினாமா செய்ய வேண்டிய நிலை வந்ததும், தன் மனைவியை முதலமைச்சராக்கி சந்தோஷப்படுகிறார் லாலு.

ஒரு பெண்மணி முதல்வராகக் கூடாதா என்ன? ஆகலாம். ஆனால் நேற்றுவரை அவர் "திருமதி லாலு. ஒன்பது குழந்தைகளின் தாய்" என்பதைத் தவிர மக்களுக்கு எந்த விதத்திலும் அறிமுகமாகாதவர். இவரைப் பற்றி "இந்தியப் பெண்மைக்கு ஓர் உதாரணம்" என்று அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இதற்குச் சான்றாக அவர்கள் கட்டிக் காட்டுவது எதைத் தெரியுமா? "முதல்வரானாலும் கூட திருமதி, ராப்ரி தேவி தன் கணவருக்கு எப்போதுமே சமைத்துப் போடுவார்" என்பதைத்

• வீரப்பனுடன் 'நக்கீரன்' கோபால்



oound from the neighbouring
'ow. On seeing us, he started
along the wall towards the
Although the bungalow
't live there, he had a
aker and a female [illegible]
dog. I also [illegible]
ly 'stra[illegible]

the exact place or place
had seen the panther. W
he was able to explain h
ther had strayed wher
[illegible]
[illegible]ee, the Bori
[illegible]he Ciba Park
[illegible]uman settl
[illegible]y which
[illegible]y Mil
[illegible]s only a
[illegible]monsoons i
[illegible]torrent. The p
[illegible]e followed that
jumped into the [illegible]
'ow fence that [illegible]
[illegible] sure [illegible]

நியூஸ் சாலட்

தான்!

சமீபத்தில் புதுக்கோட்டை மாவட்ட செசன்ஸ் நீதிமன்றத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. துறவி என்ற பெயரில் ஏமாற்றி கொலை, கற்பழிப்பில் ஈடுபட்டிருந்த பிரேமானந்தாவிற்கு இரண்டு ஆயுள் தண்டனையும் (14+14=28 ஆண்டுகள்), 66 லட்ச ரூபாய் அபராதத் தொகையும், அதைக் கட்டத் தவறினால் மேலும் 32 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. பிரேமானந்தா போன்ற மனித குலத்திற்கே களங்கமாக இருப்பவர்களுக்கு ஒரு பாடமாக அமைந்துள்ள இத்தீர்ப்பினை பெண் நீதிபதி பானுமதி வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



• பிரேமானந்தா

ஸ்டெர்லைட் என்ற நிறுவனத்தின் பெயர் அடிக்கடி செய்திகளில் அடிபடுகிறது. தூத்துக்குடியில் பிரம்மாண்டமான அளவில் காப்பர் உலோகத்தை உருக்கி பல்வேறு வடிவங்களாக்கும்

தொழிற்சாலை இது. "இதைச் செயல்பட அனுமதித்தால், இதன் கழிவுகள் காரணமாக சுற்றுப் புறச் சூழல் பாதிக்கப்படும்." என்று பசுமை இயக்கங்கள் ஆர்பாட்டம் செய்ததால், முதலில் லைசன்ஸ் வழங்க ஒத்துக் கொண்ட மகாராஷ்டிர மாநில அரசு பிறகு அதை வாபஸ் பெற்றுக் கொண்டது. தமிழக அரசு தூத்துக்குடியில் இந்தத் தொழிற்சாலை இயங்க அனுமதி அளித்தது. "எங்கள் தொழிற்சாலை கழிவுகளை ரீசைக்ளிங் முறையில் பயன்படுத்துவோம். சுற்றுப்புறச் சூழல் எங்களால் கெடாது. எங்களால் உள்ளூரில் பலருக்கும் வேலை வாய்ப்பு" என்றெல்லாம் உறுதி மொழி அளித்து உற்பத்தியைத் தொடங்கியது நிறுவனம். ஆனால் அந்தப் பகுதியில் லேசான விஷவாயு கசிந்து பாதிப்பு ஏற்பட, அதற்கு இந்த நிறுவனம்தான் காரணம் என்ற சந்தேகத்தில் தமிழக அரசு இதைத் தற்காலிகமாக மூடி வைத்திருக்கிறது. நிறுவனமும் "எங்களால் இந்த பாதிப்பு ஏற்படவில்லை" என்று அடித்துச் சொல்கிறது. நடுவர் குழுவும் இதை ஒத்துக் கொண்டிருக்கிறது. ஒருபுறம் சுற்றுப் புற சூழல் கெட்டுவிடக் கூடாதே என்ற அச்சம், மறுபுறம் வெளிநாட்டு முதலீடுகள் வருவது தடைபடுமோ என்ற சந்தேகம் - ஸ்டெர்லைட் விஷயத்தில் மாநில அரசு ஊசலாடுகிறது.

• பூலான்தேவி





• ரப்ரி தேவி

சந்தன வீரப்பன் இப்போது மிகப் பிரபலம். காட்டில் உள்ள சந்தன மரங்களைக் கடத்தி வாழ்க்கை நடத்தத் தொடங்கிய இவன் தனக்கு இடையூறாக வந்தவர்களை (காவல் துறையினர் மற்றும் அரசு அதிகாரிகள் உட்பட) தீர்த்துக்கட்டத் தயங்கியதில்லை. இப்படி சுமார் 120 பேர்களை கொலை செய்த அவன் இப் போது கேட்பது பொது மன்னிப்பு. "பொது மன்னிப்பு வழங்கப் பட்டால் ஒரு திருந்திய வாழ்க்கை வாழலாம்" என்று அவன் நினைக்கிறான். கொள்ளைக்காரி பூலான் தேவி இப்போது பாராளுமன்ற உறுப்பினராகவே விளங்குவது அவனுக்கு ஒரு தூண்டுதலாக இருக்கிறது" என்கிறார் அரசின் தூதராக செயல் பட்டு வீரப்பனிடம் சென்று வந்த "நக்கீரன்" கோபால். போலீஸின் பழி வாங்கல், சிறையிலிருந்த தன் தம்பியின் இறப்பு, தன் மனைவியைப் போலீஸார் சித்ரவதை செய்ததாக எண்ணுவது இவற்றின் காரணமாக தன் செயலை நியாயப்படுத்த முயற்சிக்கிறான் வீரப்பன். தமிழ்நாடு - கர்நாடகா எல்லைப் பகுதியில் உள்ள வனத்தில் வசிக்கிறான். தன் மீதுள்ள வழக்குகள் எல்லாம் தமிழக நீதிமன்றங்களில் மட்டுமே விசாரிக்கப்பட வேண்டும் என்ற இவன் கோரிக்கையை இரு மாநில அரசுகளும் சாதகமாக பரிசீலிக்க ஒத்துக் கொண்டிருக்கின்றன. இப்பகுதி அச்சாகும் நேரத்தில் பணயக் கைதிகளை விடுவிக்கவும், நான் சரணடையவும் ஒத்துக் கொண்டு இருக்கிறான் வீரப்பன்.

உத்திரப்பிரதேச முதல்வர் மாயாவதி தன் மீது முன்பு அரசு தொடுத்த வழக்குகளை புதுப்பிக்கப் போகிறார் என்ற தகவல் எட்டியவுடன் "இப்படி ஒரு முயற்சி நடந்தால் நான் தற்கொலை செய்து கொள்வேன்" என்று பாராளுமன்றத்திலேயே கூறியிருக்கிறார் பூலான் தேவி. 1983 ல் தன் குற்றங்களுக்காக அரசிடம் சரணடைந்த பூலான் தேவி வழக்குகள் நடைபெற்ற பதினோரு வருடங்கள் சிறையிலிருந்தது குறிப்பிடத்தக்கது. மாயாவதிதான் அப்படி ஒரு முயற்சியை மேற்கொள்ளவில்லை என்று மறுத்திருக்கிறார்.

உலக அளவிலேயே தங்கத்தின் விலை எதிர்பாராத விதமாக வேகமாக இறங்கி விட்டது. இந்தியாவிலேயே கூட கடந்த ஐந்து வருடங்களில் மிகக் குறைவான விலையை (பத்து கிராம் தங்கம் 4330 ரூபாய்) தங்கம் ஜூலை மாத முதல் பாதியில் எட்டியது. இப்போது கொஞ்சம் தங்க மார்க்கெட் சுதாரித்துக் கொண்டுள்ளது. என்றாலும் அடுத்த கண்டம் விரைவிலேயே காத்திருக்கிறது.

ஆஸ்திரேலியாவின் மைய வங்கி தன்னிடமுள்ள முன்னூறு டன் தங்கத்தை விற்கப் போகிறதாம். எப்போதுமே தேவை அதே அளவு இருந்து, சப்ளை அதிகமானால் ஒரு பொருளின் விலை சரியும் என்பது தான் பொருளாதார விதி.

இதன்படி பார்த்தால், மக்கள் மிக அதிக அளவில் வரும் மாதங் களில் தங்கத்தை வாங்கினால்தான், விலை இப்போதிருக்கும் அளவுக்காவது தொடரும். இல்லை என்றால் மேலும் குறைந்துவிடும். இந்தியாவைப் பொருத்தவரை பல்வேறு பண்டிகைகள் வரவிருப்பதால், விற்பனை அதிகமாகி விலை இப்படியே தொடரும் என்பது வியாபாரிகளின் நம்பிக்கை.


தொகுப்பு : **ஜி.எஸ்.எஸ்.**

T.S.S.NIDHI LTD.

ESTD 1973

THIRUMYLAI SASWATHA SAHAYA NIDHI LIMITED

REGD.OFF & MYLAPORE BRANCH : 230, R.K.MUTT ROAD, MYLAPORE, CHENNAI - 600 004.
PH : 4942303/4942304



1973 - 1998

ESTD. 12th Sep. '73

தேசத்தின் பெருமைமிகு
பொன்விழா ஆண்டில்

T.S.S. NIDHI LTD.,

வெள்ளி விழாவினை, நோக்கி
வீறுநடை போடுகிறது.
வெள்ளி விழா ஆண்டு
தொடக்க நாள் : 12 – 09 – 1997
நிதியின் மதிப்பிற்குரிய பங்குதாரர்களுக்கு
உளம் கனிந்த நன்றி உரித்தாகுக.

BRANCHES

MANDAIVELI MAIN : 45, VENKATAKRISHNA ROAD, R.A.PURAM, CHENNAI - 600 028. TEL : 4954068, 4954069
THIRUVANMIYUR : 112, THIRUVALLUVAR SALAI, KAMARAJ NAGAR, CHENNAI - 600 041. TEL : 410058
TONDIARPET : 667, T.H.ROAD, CHENNAI - 600 081. TEL : 5950472
SAIDAPET : 11, JONES ROAD, CHENNAI - 600 015. TEL : 4851468

BUSINESS HOURS

	Week Days		Sunday	Holiday
Regd. Office & Mylapore Branch	9.00am to 12.30pm	2.00pm to 4.30pm	9.00am to 12.30pm	Friday
Branch Offices	9.00am to 12.30pm	2.00pm to 4.30pm	9.00am to 12.30pm	Tuesday

K.R.V.RAMANI
President

G. KUMARAVELU
Vice-President

P.S.SAMBASIVAM
Secretary

ஐ.நா. அலுவலகத்தில் நான்

சென்னையிலுள்ள தலைமை கணக்காயர் அலுவலகத்தில் ஒரு உதவி கணக்கு அதிகாரியாக பணிபுரியும் நான், இந்திய தலைமை கணக்காயரின் (CAG of India) பிரதிநிதியாக ஐக்கிய நாடுகள் சபையின் கணக்குகளை தணிக்கை செய்வதற்காக, நியூயார்க் நகரில் அமைந்துள்ள ஐ.நா. தலைமை செயலகத்தில் ஆறு வாரம் பணிபுரிவதற்காகச் சென்றிருந்தேன். ஐ.நா. சபையின் கணக்குகளை தணிக்கை செய்யும் பொறுப்பு கடந்த 3, 4 வருடங்களாக சுழற்சி முறையில் இந்திய தலைமை கணக்காயருக்கு வந்துள்ளது. பல நிலைகளில் எழுத்து மற்றும் நேர்முகத் தேர்வுகள் நடத்தி இந்தியா முழுவதிலிருந்து தணிக்கையாளர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவார்கள். இம்முறை அனைத்து இந்தியாவிலிருந்தும் மொத்தம் ஏழு பேர் சென்றிருந்தோம்.



பிப்ரவரி, மார்ச் மாதங்களில் அதிகக் குளிரோ, அதிகப் பனியோ, வெப்பமோ இல்லாமல் நியூயார்க் நகரம் மிகவும் ரம்யமாக இருந்தது. ஐ.நா. சபை தலைமை செயலகத்தின் அருகிலேயே அமைந்த 'மன்ஹாட்டன்' என்னும் நகரின் மையப் பகுதியில் உள்ள ஒரு ஹோட்டலில் நாங்கள் தங்குவதற்கு ஏற்பாடாகி இருந்தது. அங்கு உள்ள ஹோட்டல்களின் சிறப்பு அம்சம், சமையல் செய்வதற்கான வசதியுடன் கூடிய அறைகளாகும். நானும் சிம்லாவிலிருந்து வந்திருந்த மற்றொரு பெண் உயர் அதிகாரியும் ஒரே அறையில தங்கியிருந்தோம். நாங்கள் தங்கியிருந்த இடத்திலிருந்து ஐ.நா. சபை அலுவலகம் நடந்து செல்லும் தொலைவில் தான் இருக்கிறது. ஒருநாள் பனி, ஒருநாள் வெயில், மறுநாள் மழை என்று அங்கு சீதோஷ்ண நிலை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக, 'as unpredictable as English Weather' என்ற பழமொழிக்கு ஏற்பவே இருந்தது.

முப்பத்தேழு மாடிகள் கொண்ட கம்பீரமான ஐ.நா. சபையின் செயலகத்தில் பாதுகாப்புக் கருதி நுழைவதற்கு நிறைய கெடுபிடிகள் உண்டு. எங்களுக்கு எங்கள் உருவம் பொறித்த அடையாள அட்டை கொடுத்திருந்தார்கள். அதை ஒரு சங்கிலியில் கோர்த்து எல்லா நேரமும் அணிந்திருக்க வேண்டும். உலகின் எல்லா நாடுகளிலிருந்தும் வந்தவர்கள் அங்கு ஊழியர்களாகப் பணிபுரிவதால் அங்கு உள்ள நவீனமான லிஃப்டிலோ அல்லது ஒரே சமயத்தில் ஆயிரம் பேர் உணவருந்தக் கூடிய ஐ.நாவின் சிற்றுண்டிச் சாலையிலோ, நாம் உலகின்



குழந்தை இல்லையா?

மாதவிடாய் கோளாறா?

வரவும் - நிறுத்தவும் தொடர்ந்து மாத்திரைகளா?

திருமணம் ஆகி குழந்தை இல்லாத பல பெண்களும், 13-14 வயதில் பருவம் அடைந்ததிலிருந்தே பல இளம்பெண்களும் மாதவிடாய் வரவும், நிறுத்தவும் கூட தொடர்ந்து 5 நாள்/21 நாள் ஹார்மோன் மாத்திரைகளை சாப்பிட்டுக் கொண்டே வருகிறார்கள். இதன் விளைவுகளை அறியாமலும் திருமணம் ஆனால் சரியாகிவிடும்- குழந்தை பிறந்தால் சரியாகிவிடும் என்று கூறுவதை நம்பியும் பின்னர் வாழ்க்கையே வெறுமையாய் போனவர்கள் பலர்! இன்னும் கருக்கோளக் கட்டிகள் (Ovarian Cysts- PCOD), கருக்குழாயில் நீரடைப்பு சதையடைப்பு (F. Tube Block), முட்டையே (Follicle) தானாக உருவாகாத பெருஞ்சிக்கல், கருப்பை பலவீனம், வீக்கம், தொடர்ந்து கருச்சிதைவு (Missed Abortion), கருப்பை புண்கள்/ வெள்ளைபடுதல் கடுமையான வயிற்று வலி (Endometriosis, Cervicitis, Hyperplacia) மற்றும் கட்டிகளை, கறுப்பான தாறுமாறான ரத்தப் போக்கு போன்ற பல காரணங்கள் குழந்தைபேறுக்கு தடையாக உள்ளன.

இம்மாதிரியான குறைபாடுகள் நோய்களுக்கு வேறு மருத்துவமே இல்லை என்று தவறாக எண்ணி ஒரே விதமான ஹார்மோன் மருந்துகளையே பெரும்பாலும் வருடக் கணக்கில் பலன் இல்லாமலும் சாப்பிட்டு வருகிறார்கள். சிலருக்கு இப்படியே கருத்தரிக்கும் இளம் வயது வீணாகி விடுகிறது.

உயிரணு இல்லாத ஆண்கள்: (Azoospermia) திரு. கணேஷ் (34), சென்னை-4. உயிரணு உற்பத்தி இல்லாத இவருக்கு வேறு எந்த சிகிச்சையும் பலனில்லா நிலையில் எமது குரு மருந்து சிகிச்சை ஒரு சில மாதங்களுக்குப் பின் 20 மில்லியன் உயிரணு உற்பத்தியாகி உள்ளது சோதனையின் (Test) மூலம் உறுதியாகி உள்ளது. இதுபோல பலனடைந்து வருபவர்கள் பலர். ஆண்களின் குறைபாடுகளில் மிகவும் சிக்கலானதும் பிறரிடம் உயிரணு பெறுதல் அல்லது தத்து எடுத்தல் இரண்டு மட்டுமே தீர்வு என்று கருதப்படும் இந்த கோளாறுக்கு வெற்றிகரமான சிகிச்சை எம்மிடம் உண்டு. 5-6 மில்லியன் உள்ளவர்கள் பலர் பல மாத்திரை, ஊசி மருந்து எடுத்தும் தற்காலிகமாக அதிகமாகி 3 மாதம் கழித்து சோதித்தால் முன் உள்ளதும் இல்லாமல் போனவர்களும் பலர் உண்டு.

இக்குறைகளை எமது 180 ஆண்டு பரம்பரை அனுபவம் பெற்ற குரு மருந்துகளால் தீர்த்து குழந்தைபேறு அடைய உதவுகிறோம்.

40 வயதில் 15-20 நாள் நிற்காத இரத்தப் போக்கா? கருப்பை ஆபரேசன் வேண்டாம்!

40 வயது நெருங்கும் ஆயிரக்கணக்கான பெண்கள் 15-20 நாள் நிற்காத அதிகமான இரத்தப்போக்கு, இடுப்பு முறிவு போன்ற வலி, கால்கள் உளைச்சல், இரத்த சோகையினால் அவதிப்படுகிறார்கள். இவர்களுக்கு கருப்பை வீங்கி இருப்பதும் உண்டு. ஆபரேசன் ஒன்றுதான் தீர்வு என்று கூறுவதுண்டு. ஆனால் எமது சிகிச்சையின் மூலம் இது பூரணமாக குணம் பெறலாம். ஆபரேசனையும் தவிர்க்க முடியும். அதன்பின் விளைவான உடம்பு, வயிறு உப்புதல், Incision ஹெரணியா, மார்பு படபடப்பு, இடுப்பு-மூட்டு வலி, குடைச்சல், தூக்கமின்மையையும் தவிர்க்கலாம்.

செப்டம்பர் 17-ந் தேதி, டாக்டரை திருச்சி-1, ஜங்ஷன் ரோடு, திருவள்ளுவர் பஸ் நிலையம் அருகில், ஹோட்டல் அஜந்தாவில் சந்திக்கலாம். போன்: 460501.

கணையத்தில் கட்டி குணமாகியது

14 வயதுள்ள போலீஸ் அதிகாரி மகனுக்கு திடீரென்று எவ்வளவு சாப்பிட்டாலும் தீராத பசி, அடிக்கடி இனிப்பு சாப்பிட்டுக் கொண்டே இருக்க வேண்டிய நிலை. இல்லாவிட்டால் மிகுந்த சோர்வுடன் மயக்கம் கூட ஏற்பட்டு விடும். C.T. Scan மற்றும் ரத்த பரிசோதனை செய்ததில் அவனுடைய கணையத்தில் (Pancreas) கட்டி (insulinoma) உள்ளது உறுதியானது. இது மிகவும் அபூர்வமான ஒரு நோய். இதை குணப்படுத்தும் சிகிச்சையோ, ஆபரேஷன் செய்யும் வாய்ப்போ இல்லை என்றும் கூறப்பட்டது.

எமது குரு மருந்து சிகிச்சை தொடங்கி 15 நாளில் கடும் பசி, சோர்வு, மயக்கம் நின்றது. 4 மாத சிகிச்சைக்கு பின் முழு குணம் அடைந்தான். இது போன்ற கணைய அழற்சி நோய் என்கிற Pancreatitis நோய் உள்ளவர்களும் ஆண்டு கணக்கில் தீராத நோய் என்று துன்பப்படுவது உண்டு. எமது சிகிச்சையில் முழு குணம் பெறலாம்.

கருப்பை புற்று

Mrs. சீரங்கம்மாள் (வயது 56) காமனாம்பட்டி, திருச்சி-13. இவருக்கு கருப்பையில் புற்று நோய் ஏற்பட்டு இரத்தம், சீழ் ஒழுக்குடன் மிகவும் துன்பப்பட்டு வந்தார். எமது குரு மருந்து சிகிச்சையில் குணமடைந்து 5 மாதமாக நலமுடன் இருக்கிறார். எந்த வயதிலும் நீடித்த வெள்ளைபோக்கு, கருப்பை புண்கள் (Cervical Erosion, Cervicities) பலருக்கு புற்று நோயாக மாறி விடுகிறது. இதில் பெண்கள் அலட்சியம் கூடாது. கருப்பை மார்பக புற்று, மூளை கட்டிகள் இரத்தப் புற்று (Leukemia), தொண்டை, கன்னம், கல்லீரல், இரைப்பை, தைராய்டு & அக்குள் சுரப்பி, மலக்குடல் புற்று உள்பட எல்லா புற்று நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கிறோம். 20-40 நாளில் குத்தல்-வலி நின்று கட்டிகள் சுருங்கி முன்னேற்றம் தெரிவதை உணரலாம்!

பெண்கள் மார்பக கட்டி

பெண்கள் மார்பகத்தில் குத்தல், வலியுடனோ வலி இல்லாமலோ ஒருவித கட்டி (Fibro Adenoma) வருவதுண்டு. இதற்கு நவீன மருத்துவத்தில் இதுவரை மருந்து இல்லை. பலமுறை ஆபரேஷன் செய்த பின்பும் கட்டி வளர்ந்ததால் பலர் எம்மிடம் சிகிச்சை பெறுகிறார்கள். பலர் ஆண்டுக் கணக்கில் வேறு மருந்து சாப்பிட்டும் குணமில்லை என்று வருகிறார்கள். எமது 4 மாத குரு மருந்து சிகிச்சையில் இது குணம் தெரிவதை காணலாம். பயத்துடன் நாட்களை கடத்த வேண்டாம்.

சன் T.V.-ல்

2-8-97 கருப்பை நோய்கள், புற்று நோய்; 9-8-97 ஆண்மை, உயிரணு குறைவு; 16-8-97 எய்ட்ஸ் மற்றும் குருமருந்து பற்றிய பேட்டி வெளியானது.



Dr. S. JEYARAM,
M.D. (A.M.), RMP, M.A., M.A.,

நவோதயா சித்தர் மருத்துவமனை

20, ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம், சென்னை - 24.
(லிபர்டி பஸ் ஸ்டாப் / சேகர் எம்போரியம் அருகில்)
போன் : 044-4810752 / 044-4982258 (வீடு)

ஆலோசனை நேரம் : காலை 10 முதல் 2 மணி வரை, மாலை 4 முதல் 8.30 மணி வரை, ஞாயிறு விடுமுறை
முன்பதிவு பெற்று வரவும்.

ஜூலை 1997 மங்கையர்மலர் இதழில் 142, 143ம் பக்கங்களில் வெளியான நவோதயா விளம்பரத்தில் திரு. M.K. மூர்த்தி என்பவரது புகைப்படத்திற்கு பதிலாக வேறொருவரின் புகைப்படம் தவறுதலாக வெளியிடப்பட்டு விட்டது - விளம்பர நிர்வாகி


அனைத்து நாட்டு மக்களையும் பார்த்து விடலாம், எல்லா மொழிகளையும் கேட்டு விடலாம். அது ஒரு விநோதமான அனுபவமாக இருந்தது. அங்கிருந்த நிறைய பெண் ஊழியர்கள் நான் கட்டியிருந்த புடவையையும், வைத்திருந்த பொட்டையும் மிகவும் விருப்பத்துடன் தொட்டுத் தொட்டு பார்த்தார்கள். தினமும் நான் அணிந்து செல்லும் புடவையைப் பார்க்கவென்றே சில பெண்கள் என்னைத் தேடி வந்து என்னிடம் அன்பாகப் பழகியது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது.

திங்கள் காலை முதல் வெள்ளி மாலை வரை ஐ.நா. அலுவலகத்தில் பணிபுரிபவர்கள் மட்டுமல்ல, அமெரிக்காவில் உள்ள அனைவருமே கவனம் சிதறாமல் தங்கள் வேலையில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். அவசியமில்லாத அரட்டை அல்லது வேலை நேரத்தில் வீண்பொழுது போக்குவது போன்ற பழக்கவழக்கங்களை அங்கு மருந்துக்கும் காண முடியவில்லை. ஆனால் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிவாக்கிலேயே அவர்களுக்கு ஒரு விடுமுறை உணர்வு வந்து விடுகிறது. அன்று சிறிது சீக்கிரமே கிளம்பி வீட்டிற்குச் சென்று, அநேகமாக எல்லோரும் குடும்பத்தினருடன் வாரத்தின் இறுதி இரண்டு நாட்களை அருகில் உள்ள அவர்களது பண்ணை வீட்டிலோ, அல்லது ஏதாவது ஒரு விடுமுறை ஸ்தலத்திலோ செலவிடுகிறார்கள்.

ஞாயிறு இரவு வீடு திரும்பி, அடுத்த வார வேலைக்குத் தயாராகி விடுகிறார்கள். இவ்வாறு விடுமுறையை உல்லாசமாகக் கழிப்பது, வாரத்தின் மற்ற 5 நாட்களும் மிகவும் உற்சாகத்துடனும், ஈடுபாட்டுடனும் வேலை செய்வதற்கு வேண்டிய உத்வேகத்தை அவர்களுக்கு அளிக்கிறது எனலாம். மறைந்த நம் பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி நம் இந்தியர்களும் இவ்வாறு பின்பற்ற வேண்டும் என்றுதான் மிகவும் விரும்

வேகவைத்த சேப்பங்கிழங்கை தோல் உரித்து பஜ்ஜி மாவில் தோய்த்து, எண்ணெயில் போட்டேன். மொறுமொறுவென்று வித்தியாசமான சேப்பங்கிழங்கு பஜ்ஜி ரெடி.

- சித்ரா ஸ்ரீதர்.



பினார்.

அதிகம் பரிச்சயம் இல்லாதவர்களைக் கூட வழியில் கண்டால் முகமலர்ச்சியுடன் காலை வணக்கம் கூறும் பண்பு, மற்றவர்களின் விவகாரங்களில் தலையிடாத நாகரீகம், வயதானவர்களிடம் கூடக் காணப்படும் சுறுசுறுப்பு முதலிய குணநலன்கள் இவற்றை நாம் அவர்களிடமிருந்து பின்பற்றலாம். சாலை, மற்றும் போக்குவரத்து விதிகளை அவர்கள் அனுசரிக்கும் பாங்கும், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைக்க அவர்கள் காட்டும் தீவிரமும் என்னை வெகுவாகக் கவர்ந்தது. தங்கள் வளர்ப்பு நாயை வெளியில் அழைத்துச் செல்லும் ஒவ்வொரு வரும் கையில் டிஷ்யூ பேப்பர் வைத்திருப்பார்கள் - அந்த நாய் தெருவில் ஏதேனும் அசிங்கம் செய்து விட்டால் அதைத் தூய்மைப்படுத்துவதற்காக. அந்த அப்பழுக்கற்ற சுத்தமான நெரிசலே இல்லாத சாலைகளும், ஒழுங்குமயமான சீரான போக்குவரத்தும்!

அமெரிக்கா போகும் வழியில் லண்டனில் ஒருநாளும் திரும்பி வரும் வழியில் ரோம் நகரத்தில் ஒருநாளும் தங்கி சுற்றிப்பார்க்கும் வாய்ப்பும் கிட்டியது. லண்டனுக்கு நாங்கள் சென்றது பிப். 14 – காதலர்கள் தினம். லண்டன் வீதிகளிலும், ரயிலிலும், மாடி பஸ்ஸிலும் அவர்களின் அட்டகாசத்தை அன்று பார்க்க வேண்டுமே. நம் பண்பாட்டிற்குச் சிறிதும் ஒத்துவராத காட்சிகள் எங்கு நோக்கினாலும் கண்ணில் பட்டது. அதே போன்று எல்லா மேலைநாடுகளிலும் ஆண்களை விட அதிகமாக பெண்கள் புகைபிடிக்கும் காட்சியும் கொஞ்சம் உறுத்தலாகத்தான் இருக்கிறது. அப்பொழுதெல்லாம் நம் இந்தியா எவ்வளவோ மேல் என்று தோன்றியது.

திரும்பி வரும்போது புனித ஈஸ்டர் திருநாளன்று வாடிகன் நகரில் உள்ள தேவாலயத்திற்குச் சென்று அந்த கம்பீரமான, கலைநயம் வாய்ந்த புனித ஸ்தலத்தைக் கண்டு பிரமித்து விட்டோம்.

ஆறு வார காலம் நியூயார்க் நகரில் தங்கி ஐநா. அலுவலகத்தில் பணிபுரிந்து அங்கு உள்ள பெண்களிடம் மிகவும் நட்பு முறையில் பழகி வந்தது ஏதோ ஒரு கனவில் நடந்தது போன்ற பிரமிப்பை இப்பொழுது நினைத்தாலும் ஏற்படுத்துகிறது. சிறிது நாட்களிலேயே அவர்கள் மிகவும் அன்புடன் பழகிவிட்டார்கள். ஐநா. அலுவலகத்தில் பணிபுரியும் விஜயா என்ற நம் தமிழ்நாட்டுப் பெண், தமிழ்நாட்டிலிருந்து நான் வந்திருப்பது அறிந்து ஓடோடி வந்து பேசி, வீட்டிலிருந்து பலகாரங்கள் எல்லாம் கொண்டு வந்து எங்களை உபசரித்தார். அவரும் ஒரு மங்கையர் மலர் வாசகி என்று கூறினார். அப்பப்பா - அது ஒரு இனிய, மறக்க முடியாத அனுபவம்.

— டி.பி. அனுராதா

வெல்லக் கொழுக்கட்டை

தேவையானவை :
தேங்காய்த் துருவல் – 4 கப்,
பயத்தம் பருப்பு – 1 கப்,
அரிசி மாவு – 4 கப்,
தண்ணீர் – 1½ கப்,
உப்பு – 1 ஸ்பூன்,
சர்க்கரை – ¾ கிலோ,
நெய் – ஒரு கரண்டி,
ஏலப்பொடி – ¼ ஸ்பூன்.

செய்முறை :
பயத்தம் பருப்பை வறுத்து அதிகம் குழையாமல் வேகவைக்கவும்.
அரிசி மாவினை உப்புப் போட்டு தண்ணீர் விட்டு சரியானபடி பிசைந்து வைத்துக் கொள்ளவும்.
சர்க்கரைப் பாகு வைத்து அதில் வெந்த பருப்பு, துருவின தேங்காய், ஏலப்பொடி போட்டு நெய் விட்டுப் பூர்ணம் ரெடியாக்கிக் கொள்ளவும்.
பிசைந்து வைத்திருக்கும் அரிசி மாவில் கொஞ்சம் பெரிய எலுமிச்சம் பழ அளவில் எடுத்து அதைப் பரத்தி அதில் கொஞ்சம் பூர்ணத்தை உருட்டி வைத்து அதை மாவினால் மூடி 15 நிமிடம் ஆவியில் வைத்து எடுக்கவும்.

கடலைப் பருப்பு கொழுக்கட்டை :

தேவையானவை :
கடலைப் பருப்பு – ½ கிலோ,
சர்க்கரை – 750 கிராம்,
தேங்காய் - 4 கப்,
அரிசி மாவு – 4 கப்,
தண்ணீர், உப்பு – தேவைக்கேற்றபடி.
ஏலக்காய் – ¼ டீஸ்பூன்.

செய்முறை :
கடலைப் பருப்பு முக்கால் வெந்ததும் தண்ணீரை வடித்துவிட்டு மசித்து வைத்துக் கொள்ளவும்.
சர்க்கரைப் பாகு வைத்து அதில் தேங்காய், ஏலக்காய், கடலைப் பருப்பு மசித்தது கலந்து வைத்துக் கொள்ளவும்.
அரிசி மாவு தண்ணீர் உப்புடன் பிசைந்து வைத்துக் கொள்ளவும்.
முதலில் சொல்லியிருக்கும் வெல்லக் கொழுக்கட்டைக்குச் செய்வது போல் அரிசி மாவை கையில் வைத்து பரத்தி அதில் பூர்ணம் வைத்து மூடி ஆவியில் 15 நிமிடம் வேகவைத்து எடுக்கவும்.

எள்ளுக் கொழுக்கட்டை

தேவையானவை :
எள்ளு – ¼ கிலோ, (250 கிராம்)
தேங்காய்த் துருவல் - 2 கப்,
சர்க்கரை - 400 கிராம்,
நெய் - 2 டீஸ்பூன்,
ஏலக்காய்ப் பொடி – ¼ டீஸ்பூன்.

அரிசிமாவு, தண்ணீர், உப்பு பிசைந்தது ரெடி பண்ணிக் கொள்ளவும்.

செய்முறை :
எள்ளு வறுத்துப் பொடிக்கவும்.
சர்க்கரைப் பாகு வைத்து, அதில் தேங்காய், எள்ளுப் பொடி, ஏலக்காய், நெய் போட்டுக் கிளறி வைத்துக் கொள்ளவும்.
அரிசி மாவில் பூர்ணம் வைத்து 15 நிமிடம் ஆவியில் வைத்து எடுக்கவும்.

அம்மிணி கொழுக்கட்டை

தேவையானவை :
சர்க்கரை - 400 கிராம்,
அரிசி மாவு – 500 கிராம்,
ப. பருப்பு வறுத்துப் பொடித்தது – ½ கப்,
பெரும்பயறு - 150 கிராம்,
தேங்காய்த் துருவல் – 3 கப்,
நெய் – 4 டீஸ்பூன்,
முந்திரிப் பருப்பு – 50 கிராம்,
தண்ணீர் ஒரு கப்
அரிசி மாவு 1½ கப்.
உப்பு – தேவையானவை.
ஏலப்பொடி – ¼ டீஸ்பூன்.

செய்முறை :
தண்ணீர் சூடானதும் தேங்காய், சர்க்கரை, ஏலப்பொடி போட்டுக் கொதிக்க ஆரம்பித்ததும் அரிசி மாவு போட்டு, வெந்த பெரும் பயறைக் கொட்டி ஏலக்காய், உப்புப் போட்டு கலக்கவும். நெய்யில் முந்திரி வறுத்துப் போடவும். பாக்கி நெய்யும் கலந்து உருட்டி ஆவியில் வைக்கவும். 15, 20 நிமிடம் ஆவியில் வைத்து எடுக்கவும்.

– பி. பார்வதி அம்மாள்.

விதவிதமாகக் கொழுக்கட்டை

"உடல் நலம் சீர் பெற, உடல் ஆரோக்யம் பெற ஒரு யாகம்"


ஒவ்வொரு தாயும் தன் குடும்ப ஆரோக்யத்தைப் பேணிக் காப்பதே தன் தலையாயக் கடமை என நினைக்கின்றாள். உடல் நலம் குலைந்து எந்த ஒரு துன்பமுறு வியாதி வந்திடினும் அதற்குப் பரிகாரமாக மணி, மந்த்ரம், ஔஷதம் (இரத்தினக் கற்கள், மந்த்ரத்தினால் யாகம் போன்றவை செய்வது, மருந்து) என மூன்று வகையாக சாத்திரங்களில் கூறப்பட்டுள்ளது. கண்ணிற்குப் புலப்படாத மந்த்ரங்களில் ஒலி அலைகள், எல்லா வகை வியாதியின் மூலத்திற்கே சென்று அவற்றை நாசம் செய்து உடல் ஆரோக்யத்தை மீட்டுத் தரும் என்று சான்றோர் கூறுவர். அதை இன்று உண்மையென மெய்ப்பிக்கும் வண்ணம் குருஜி **விஸ்வநாத்** (பெங்களூர்) அவர்களின் மேற்பார்வையில் மற்றும் அருளாசியுடன் **மகா இந்திராக்ஷி யாகம்** எத்தனையோ இடங்களில் நடத்தப்பட்டு, யாகத்தில் பங்கு பெறுவோரின் உடல் நலக்குறைவுகள் களையப் பெற்று, ஆரோக்யம் அடைந்து ஸ்வஸ்தமாக வாழ்கின்றனர். வேத மாதாவாகிய ஸ்ரீ லலிதா பரமேஷ்வரியின் இன்னொரு உருவமாகிய இந்திராக்ஷி தேவி இந்த யாகத்தின் மூலம் பக்தர்களுக்கு உடல் நலம் மற்றும் ஐஸ்வர்யம் போன்ற நன்மை தரும் பலன்களை அளிக்கிறாள்.

இந்த யாகத்தில் பங்கு கொள்ள விரும்புவர்கள் **ரூ.251/- M.O** அல்லது பணமாக செலுத்த வேண்டிய முகவரி :

55-c, A.Lakshmanaswamy salai, K.K.Nagar, Chennai - 78.

பணம் அனுப்புபவர்கள் தங்கள் உடல் நலக் குறைகளையும், பெயர், முகவரி, கோத்திரம், ராசி முதலியவற்றைக் குறித்து அனுப்பினால், அன்னாருக்கு யாகம் முடிந்த பின் அம்பாளின் ஸர்வா பீஷ்ட வெள்ளி டாலரும், ப்ரஸாதமும், ரசீதும் வைத்து அனுப்பப்படும்.

சொல்ல விரும்புகிறோம்!



✉ 'அந்த ஒரு கணநேரம் கட்டுரை மிகுந்த சாரமுள்ள கருத்துக்களை ஆழமான வார்த்தைகளால் எடுத்துரைத்தது. தற்காலக் குடும்பச் சூழ்நிலையே 'ஒரு கண' முடிவிற்கு அடிப்படையான காரணமென்பதை எவரும் மறுக்க இயலாது. கூட்டுக் குடும்பத்தில் இருந்த மிகப் பெரிய பலன்களான விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, பொறுமை, பகிர்ந்து கொள்ளும் தன்மை, சுயநலமின்மை போன்ற உணர்வுகள் தற்போது வெகுவாகக் குறைந்துவிட்டது. இரண்டே பிள்ளைகள் என்ற இக்கால குடும்பங்களின் எதிர்காலத்தை நினைத்தால், இறைவன்தான் கருணை காட்ட வேண்டும்.

பாண்டிச்சேரி, பூங்கோதை கிருஷ்ணராஜ்.

✉ மங்கையர் மலரில் வரும் சின்னச் சின்ன துணுக்குச் செய்திகள் அனைத்தும் எனக்குப் பெரும் உதவியாக இருக்கிறது.

பவித்திரமாணிக்கம், தி. கமலாதியாகராஜன்.

✉ ஒருவர் தெரிந்தவரோ, தெரியாதவரோ நண்பரோ, பகைவரோ, அவருடைய எதிர்பாராத அவசரத்துக்கு உதவும் போது, அவருக்கு மனித சமுதாயத்தின் மேல் அசாத்திய பிடிப்பும் நம்பிக்கையும் ஏற்பட்டு, அவர் மற்றவருக்கு உதவும் எண்ணத்தை வளர்த்துக் கொள்வார் என்பது நூற்றுக்கு நூறு சத்தியமான வார்த்தை.

திருப்பரங்குன்றம், டி.எஸ். பார்வதி.

✉ 'கிராஃபிக்ஸுக்கு வெளிநாடு போக வேண்டாம்' மிகுந்த மனநிறைவைக் கொடுத்தது. சுதந்திரம் பெற்று ஐம்பது ஆண்டுகளில் என்ன சாதித்தோம் என்று அலுப்பதைவிட எத்தனையோ சாதித்திருக்கிறோமே என்று பெருமை கொள்ள வைக்கிறது. ஜானகி ரவிச்சந்திரனுக்கு எங்கள் பாராட்டுக்கள்.

சென்னை - 41, பூ. ஈஸ்வரி, மாலதி.

✉ வறுமை தாங்காமல் தற்கொலை செய்து கொண்ட ஒரு கோயில் பூசாரியுடைய மனைவியின் செயலை மன உறுத்தலோடு ஆய்வு செய்து- "அமைதியாக இருக்கும்போது எடுக்கின்ற முடிவுகளே சரியாக இருக்கும். எனவே 'ஒருகண' நேரத்தில் எந்த முடிவையும் எடுக்க வேண்டாம்" என்று சகல தரப்பினருக்கும் அட்வைஸ் செய்து மஞ்சுளா ரமேஷ் எழுதியிருந்த கட்டுரை படிக்கும் பலருக்கும் பயன்தரும் என்பது உறுதி!

மதுரை - 9, பி.எல். பரமசிவம்.

✉ "சென்ற கோடை விடுமுறையில்தான் கூத்தனூர் மஹாசரஸ்வதியைத் தரிசித்து வந்தோம். நேரில் சென்ற போதும் அறிய முடியாத பல செய்திகளை கட்டுரை மூலம் தெரிந்து கொண்டோம். உச்சி வேளையின்போது நாங்கள் சென்ற போது தாமரை மலர்களை ஒருவர் சைக்கிளில் கொண்டு வந்து விற்றார். அப்போது முன் மண்டப திருப்பணி நடைபெற்று கொண்டிருந்தது. நீங்கள் முகவரி கொடுத்ததின்மூலம் பள்ளி துவங்கும் இவ்வேளையில் மாணவர்களிடமிருந்து ஏராளமான கோரிக்கைகளுடன் மனுக்கள் வந்து சேரும் என்பதில் ஐயமில்லை."

மன்னார்குடி, த. சாந்தி.

✉ "பெண்களைத் தாக்கும் எலும்புருக்கி நோய்" கட்டுரை படித்தேன். என்னை போன்ற பல காப்பி பிரியர்களுக்கு பயத்தையும், எச்சரிக்கையையும் இக்கட்டுரை ஏற்படுத்தினாலும், தினமும் உணவில் கால்ஷியம் நிறைந்த பாலை அருந்துவதன் மூலம் இந்நோய் வருவதைத் தடுக்கலாம் என்ற செய்தியினையும் தந்து எங்கள் பயத்தைப் போக்கியது. பெண்களுக்கு இந்நோய் வருமுன் காப்பது எப்படி என்று தருந்த மருத்துவரின் ஆலோசனைப்படி இக்கட்டுரையை வெளியிட்டு எங்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதற்குப் பாராட்டுக்கள்.

தருமபுரி - 2, சாந்தி கந்தசாமி.

✉ சரவணா ஸ்டோர்ஸ் 'அண்ணாச்சி'யின் சக்ஸஸ் பக்கங்களை வெளியிட்டுப் பெருமை சேர்த்து விட்டீர்கள். ஆனால் செய்திப் பத்திரிகையில் அடிபட்ட சம்பவம் நடந்தது துணிக்கடையிலேதானே? பாத்திரக்கடையில் அல்லவே?!

பொன்மலை, ஹிமயா.

✉ நோய்கள் தீர பச்சைக் காய்கறிகளை அதிகமாக சேர்த்துக் கொள்ளச் சொல்லும் 'இயற்கை உணவு' முறை தற்போது எங்கும் பரவிக் கொண்டிருக்கும் சமயத்தில், 'அதனால் ஆபத்தும் உண்டு' என எச்சரிக்கை விடுத்திருக்கிறது 'சாப்பிடுங்கள் (வெகு) ஜாக்கிரதையாக' என்ற கட்டுரை!

நெய்வேலி, சந்திரமாலா உத்தண்டராமன்.

✉ நியூஸ் சாலட்டில் யானா நோவோட்னா புகைப்படத்தைப் போட்டுவிட்டு, மார்டினா ஹிங்கிஸ் எனத் தவறாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

கொட்டாரக்கரா, ராஜகோபாலன்.

பெயர் மாறிப் போச்சு!

✉ கூத்தனூர் ஸ்ரீ மகா ஸரஸ்வதி அம்மன் பற்றிய கட்டுரை சிறப்பாக உள்ளது. நான் அந்த ஊரில் பிறந்தவன் என்பதில் பெருமை கொள்கிறேன். கூத்தனூரில் உள்ள வீடுகளில் வீட்டுக்கு ஒரு சரஸ்வதி என்ற பெயர் நிச்சயம் இருக்கும். மேலும் கட்டுரையில் ஒரு சிறு தவறு உள்ளது. வயதான அர்ச்சகரின் பெயர்தான் ராமநாதகுருக்கள். அவர் பையனின் பெயர்தான் ரத்னகிரீஸ்வரன்.

தஞ்சாவூர்-6, வி. வெங்கட்ராமன்.

வாஸ்து எனும் பூஜையல்


பி.ஜே. ரவிராஜ்



மனிதன் "வீடு பேறு" பெற வேண்டும் என்ற சொல்லை நாம் அனைவரும் அறிவோம். வீடு பேறு என்பதற்கு எல்லாவற்றிலும் முழு நிறைவாக பெறுதல் என்பதே பொருளாகும். மனிதனுக்கு சொர்க்கத்தில் மட்டுமே முழு நிறைவு பெற முடியும். நாம் சொர்க்கம் என்பதை கற்பனையில் மட்டுமே பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. நாம் அனுபவிக்கக் கூடிய சொர்க்கம் இந்த பூமியில் நம் வீடு மட்டும்தான். நாம் நல்ல சாத்திரத்திற்கு உட் பட்ட வீட்டைப் பெற்றால் மட்டுமே நல்ல பெயரைப் பெற முடியும். நம்மில் பலர் நம்முடைய பல கஷ்ட நஷ்டங்களுக்கு காரணமாக நாம் கட்டுகின்ற வீடு, தொழிற்சாலை மற்றும் பல கட்டுமானங்களே காரணமாக அமைகின்றது என்பதனை மறந்து நம்மை படைத்த கடவுளை, நம்முடைய கஷ்ட நேரங்களில் நொந்து கொள்கின்றோம். இது மனிதனின் இயற்கை சுபாவமாகவே மாறி விட்டது. மனிதன் பஞ்ச பூதங்களின் அங்கங்களுடன், சரீரமாக படைக்கப்பட்டுள்ளான். பஞ்ச பூத நிறைவு பெற்ற வீடுகளை அமைக்கின்ற பொழுது, இயற்கை யுடன் ஒன்றிய வாழ்க்கையில் மனிதன் சொர்க்கத்தையே காண முடியும்.

இம்மாத இதழில் பூஜை அறைகளையும் கடவுளர் சிலைகள் மற்றும் படங்களை எவ்வாறு அமைப்பது என்பதனையும் சற்று பார்ப்போம். பூஜை அறைகளை நாம் முன்பே எழுதியது போல் வடகிழக்கு மூலையாகிய வடக்கிலும், தென் மேற்கு மூலை அல்லது மேற்கிலும், மேற்குப் பகுதியிலும் அமைப்பது மிகவும் சிறந்ததாகும். இதில் நமக்குப் பல சாத்திர பூர்வமான ஆதாரங்கள் இருக்கின்றது. முதலில் இராமபிரான் தோன்றிய புண்ணிய பூமியைப் பார்த்தோமேயானால் அது நம் நாட்டின் வடகிழக்கு மூலையிலேயே இருக்கின்றது தர்மத்தை நிலை நிறுத்தி நியாயத்தின் பக்கம் சென்ற கிருஷ்ண பரமாத்மா தான் பிறந்த மதுராவில் இருந்து தென் மேற்குப் பகுதியாகிய துவாரகைக்கு வந்தார். அஹிம்சையை போதிப்பதற் காக தோன்றிய கவுதம புத்தர் இந்தியாவின் வடகிழக்கு மூலையிலேயே தோன்றினார். வட கிழக்கும், தென் மேற்கும் சரித்திர புகழ் பெற்ற இடங்கள். இராம கிருஷ்ண பரமஹம்சர் தோன்றியதும் நம் நாட்டின் வடகிழக்கில்தான். புனிதமாக போற்ற வேண்டிய மூலையாக வடகிழக்கு மூலை அமைகின்றது. இம்மூலையே பூஜை அறை அமைவதற்கும் சிறந்த தாகக் கருதப்படுகின்றது. சிவனுடன் பழத்திற்காக கோபம் கொண்டு தன் தந்தைக்கு நேர் எதிர் திசையாகிய தென் மேற்கில் மேற்கைப் பார்த்து அமர்ந்த முருகன் வாழ் பழநியும் நம் நாட்டின் தென் மேற்கில் அமைந்துள்ளது. இன்னும் பலர் தென் மேற்கு மூலையை பழநி மூலை என்று கூறுவது வழக்கத்தில் உள்ளது. இதன் காரணமாக அநேகர் தென் மேற்கு மூலையில் பூஜை அறையை அமைத்துக் கொள்கின்றனர்.

பூஜை அறைகளை எங்கு அமைப்பது என்பதனை கீழ்கண்ட படத்தின் வாயிலாக அறியலாம்.



பூஜை அறைகளை எப்பொழுதும் வடகிழக்குப் பகுதியில் வடக்கு பாகத்தில் அமைக்கின்ற பொழுது அது குபேரஸ்தானமாகிய வடக்கில் அமைவது மிக மிகச் சிறந்ததாகும். இந்தப் பகுதியில் அமைக்கின்ற பொழுது படங்களையோ, சிலைகளையோ, அந்தப் பூஜை அறையின் மேற்கில் வைத்து கிழக்கைப் பார்க்கின்றபடி செய்ய வேண்டும். கூடியவரை சூரிய ஒளி உள்ளே பிரவேசிக்கச் செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் படங்களை தெற்கு பார்த்தபடி வடக்குச் சுவற்றிலும், மேற்கு பார்த்தபடி கிழக்குச் சுவற்றிலும் அமைக்கக் கூடாது. சில சமயங்களில் அதிகப்படியான படங்கள் இருப்பின் தெற்கு சுவற்றில் மாட்டி வடக்கை பார்த்தபடி அமைக்கலாம். கூடிய வரை கணபதி சிலைகளை வடகிழக்குப் பூஜை அறையில் வைப்பதைத் தவிர்க்க வேண்டும்.


தென்மேற்கு மூலையில் பூஜை அறைகளை அமைக்கின்ற பழக்கம் கேரள மாநிலத்திலும், கேரளத்தை ஒட்டிய தமிழ் நாட்டிலும் வழக்கமாக இருக்கின்றது. இங்கு அமைப்பதில் தவறேதும் இல்லை. இந்தப் பகுதியில் அமைக்கின்ற பொழுது மேலே கூறியது போல் மேற்கில் படங்களையோ சுவாமி சிலைகளையோ வைத்துக் கொள்ளலாம். கணபதி சிலைகளை இந்த அறையின் தென் மேற்கில் வைப்பது சிறப்புடையதாகும். மேலும் கனமான பாதுகாப்புப் பெட்டிகளை இந்த அறையிலேயே வைத்தோ அல்லது அந்தப் பகுதி சுவற்றில் பதித்தோ அமைக்கலாம். இந்தப் பெட்டியின் மேல் சிலைகளை வைத்துக் கொள்ளலாம். படங்கள் எப்பொழுதும் கிழக்கைப் பார்த்தபடி செய்ய வேண்டும். கூடிய வரை சூரிய ஒளி உள்ளே பிரவேசிக்கச் செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் படங்களை தெற்கு பார்த்தபடி வடக்குச் சுவற்றிலும், மேற்கு பார்த்தபடி கிழக்குச் சுவற்றிலும் அமைக்கக் கூடாது.

தயிர் சீக்கிரம் தோய வேண்டும் என்றால் பாலில் மோராக உறை குத்தினால் சீக்கிரம் தயிர் தோயும் (அ) தயிராக உறை ஊற்றினால் ஸ்பூனால் நன்கு கலக்க வேண்டும்.

— **கலைச்செல்வி**



மேற்கில் மையப் பகுதியில் பிரம்மஸ்தான பகுதிக்கு நேர் எதிர் திசையில் அமைவதும் மிகவும் சிறப்புடையதாக இருக்கின்றது. இங்கும் மேற்கு திசையில் படங்களையோ சிலைகளையோ வைத்துக் கொள்ளலாம். இங்கும் சூரிய ஒளிபடும் படியாக அமைக்கப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் படங்களை தெற்கு பார்த்தபடி வடக்கிலும், மேற்கை பார்த்தபடி கிழக்கிலும் அமைக்கக் கூடாது. பூஜை அறைகளின் நுழைவு வாயில்களை எங்கு அமைப்பது என்பதனை கீழ்கண்ட படத்தின்



வாயிலாக அறியலாம்.

இன்று பலர் தொழிற்சாலைகளில் கோவில்களை அமைப்பதை மிகவும் பெருமையாகவும் மிகச் சிறந்த ஆன்மீக தர்மமாகவும் கருதுகின்றனர். அம்மாதிரி நினைப்பதில் தவறு ஏதும் இல்லை. ஆனால் இன்று பலர் ஆகம விதிகளை மறந்து, முக்கியமாக கணபதி சிலைகளை தொழிற்சாலையின் வடகிழக்கு ஈசான மூலையில் அமைத்துக் கோயில்களை கட்டுகின்றனர். இம்மாதிரி அமைத்த பின்னர் சில ஆண்டுகள் கழித்து அநேக பெரிய மற்றும் சிறிய தொழிற்சாலைகள் பிரச்னைக்கு உள்ளாகி இருப்பதையும், நான் மாற்றங்களைக் கொடுத்து நல்ல முன்னேற்றங்களை அடைந்திருப்பதையும் என்னுடைய அனுபவத்தில் அறிந்திருக்கிறேன். தொழிற்சாலைகளில் கோயில்களை அமைப்பதைவிட, தொழிற்சாலைக்கு அருகாமையில் உள்ள கிராமங்களில் பாழடைந்த கோயில்களை தொழிற்சாலையின் சார்பாக புதிப்பித்து அனுதின பூஜைகள் நடந்திட ஏற்பாடு செய்வது மிக மிகச் சிறந்ததாகும். தொழிற்சாலைக்குள்ளாக அவசியம் கட்ட வேண்டிய நிர்பந்தங்கள் இருப்பின், அவற்றை தென் மேற்கு மூலையாகிய கன்னி மூலையிலேயே அமைத்துக் கொள்ளலாம்.

இன்று அநேகர் வீட்டின் தெரு குத்திற்கும், கட்டடங்களின் தெரு குத்திற்கும் எந்தத்



வாழைப்பழங்களை மசித்து அரிசி மாவுடன் சேர்த்து பால் விட்டுப் பிசைந்து (கெட்டியாக), அதை சிறு தொன்னைகளைப் போல் செய்து, பின்னே வெல்லமும், துருவிய தேங்காயும் கலந்த பிழுதை அடைத்து மூடி, குக்கரில் கொழுக்கட்டைகள் போல் அல்லது அடை போல் வேக வைத்துக் கொடுத்தால் குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவார்கள். இது சத்துள்ள உணவும் கூட.

— ரா. ரம்யா

திசையாக இருப்பினும் கணபதி சிலை மற்றும் தேவியர் மற்றும் முருகனின் ஆயுதங்களாகிய சூலம் மற்றும் வேலாயுதத்தை நேர் எதிராக அமைத்து விடுகின்றனர். அப்படி அமைப்பது சிறந்த பரிகாரம் என்று மனத்தில் நினைத்துக் கொண்டு கடவுளரின் சிலைக்கும், கடவுளர்களின் சின்னத்திற்கும் அவமரியாதையை கொடுத்து வாழ்க்கையின் வறுமைக் கோட்டிற்கே சென்றுவிட்டு தெரு குத்தை பழித்துக் கொண்டிருக்கின்றனர். அதனை விடுத்து தெரு குத்துகளை நீக்கக் கூடிய பரிகாரமாகிய எந்திர, தந்திர மற்றும் சீனர்களின் கிரிஸ்டல் பந்து (Crystal Ball) முறைகளில் விடுதலை பெறலாம். இதற்காக தவறான இடத்தில் சிலைகளை அமைத்து தெய்வ குற்றங்களை நம் மீதும் நம் சந்ததிகளின் மீதும் நாம் திணிக்கக் காரணமாகி விடக்கூடாது. தெரு குத்து அல்லது தெரு தாக்கத்திற்காக நாம் நம் கடவுளர்களை நம் வீட்டிற்கு வெளியில் அமைத்து மிருகங்கள் மற்றும் மனிதர்கள் அசுத்தப்படுத்துவதற்கு நாம் முழு காரணமாகி விடுகின்றோம்.

1. பூஜை அறைகளை எப்பொழுதும் வட கிழக்கு, தென் கிழக்கு மற்றும் மேற்கு மையப் பகுதியிலேயே அமைக்க வேண்டும்.

2. பூஜை அறைகளை அக்னி வாயு மூலைகளில் அமைக்கக் கூடாது.

3. பூஜை அறைகளில் மேற்கு சுவற்றில் ஜன்னல் மற்றும் வெண்டிலேட்டர்களை அமைக்கக் கூடாது.

4. பூஜை அறையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் கழிவு அறை அமைக்கக் கூடாது.

5. இடம் பற்றாக்குறையின் காரணமாக சமையல் அறையாகிய அக்னி மூலையில் பூஜை மற்றும் அலமாரிகளை அமைக்கக் கூடாது.

6. வாயு மூலையில் அமைகின்ற சமையல் அறையின் கிழக்குப்புற வெளி சுவற்றில் அலமாரியில் பூஜை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

7. ஆஞ்சநேயர் சிலையையோ அல்லது படங்களையோ தெற்குப் புறமாக பார்க்கும்படி கண்டிப்பாக அமைக்கக் கூடாது.

8. பூஜை அறையின் தீபங்கள் தெற்கையும், மேற்கையும் பார்த்து வைக்கக் கூடாது.

9. பூஜை அறையில் வீட்டில் வேண்டாத சாமான்களை போட்டு வைக்கும் அறையாகவோ தானிய சேமிப்பு அறையாகவோ பயன்படுத்தக் கூடாது.

10. பூஜை அறையில் வைக்கப்படுகின்ற அலமாரி மற்றும் இரும்பு பாதுகாப்பு பெட்டிகள் படங்களை விட உயரத்தில் இருக்கக் கூடாது.


11. நம் வீட்டில் பூஜை அறைகளையோ, தொழிற்சாலைகளில் கோவில்களையோ தவறான இடத்தில் அமைத்துவிட்டு அவஸ்தைப் படுவதைக் காட்டிலும், வெளியில் கோவில்களுக்குச் சென்று வழிபடுதல் சிறந்ததாகும்.

12. பூஜை அறையில் சுவாமி படங்களுக்கு புஷ்பங்களை சாற்றும் பொழுது கடவுளர்களின் முகங்களையும், பாதங்களையும் எங்கிருந்து பார்த்தாலும் மறைக்காதபடி சார்த்த வேண்டும்.

மேலும் விபரங்கள் அறிய மாதத்தின் முதல் தேதி முதல் 7ந் தேதிவரை சென்னையில் 8570084 லும் மற்ற நாட்களில் கோவையில் 577907ல் தொடர்பு கொள்ளலாம்.

துவரம் பருப்பு சிறிய கிண்ணம், கடலைப் பருப்பு சிறிய கிண்ணம், பயத்தம் பருப்பு அரை கிண்ணம், மூன்றையும் கலந்து வேகவைக்கவும். பாதி வெந்தவுடன் தண்ணீரை வடியவிட்டு மிக்சியில் பொடி செய்து கொள்ளவும் மாவாக. இதில் ஒரு கிண்ணம் சர்க்கரை, தேங்காய்த் துருவல் ஒரு மூடி, ஏலப்பொடி சிட்டிகை கலந்து முந்திரி பருப்பை நெய்யில் வறுத்துப் போட்டு கலந்து சாப்பிட சுவையான புட்டு ரெடி.

— திருமதி இராமசாமி




வீட்டுக்குள் தோட்டம்

வேளாண் முதுகலை பட்டதாரியான செல்வி. தன்மதி திருவேங்கடம் சென்னையில் 'கார்டன் சப்ளைஸ் அண்ட் சர்வீசஸ்' நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பில் இருக்கிறார். இந்த நிறுவனம் விவசாயப் பண்ணைகள், நர்ஸரிகள் மற்றும் வீட்டுத் தோட்டங்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குகிறது. இயற்கை உரங்களே நாளை உலகை ஆளப்போகின்றன என்று சொல்லும் இவர், நமது மங்கையர் மலர் இல்லத்தரசிகளுக்காக வீட்டுத் தோட்டம் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கிறார்...

எங்கள் வீட்டு ரோஜாச் செடியில் 'வெண் பஞ்சு' போன்ற ஏதோ அங்கங்கே படிந்திருப்பதைப் பார்க்கிறேன். இலைகளும் அதிகமாக கொட்டுகிறது. எதனால் இது? என்ன செய்யலாம்?

நீங்கள் குறிப்பிட்டு இருக்கும் "வெண் பஞ்சு" செதில் பூச்சி (Scale insect) உங்கள் ரோஜாவை தாக்கியிருப்பதன் அடையாளம். 'பஞ்சை' லேசாக சுரண்டி அதனடியில் பார்த்தீர்களானால் சின்னஞ்சிறு ரோஸ் கலர் பூச்சிகள் ரோஜாத்தண்டின் சாற்றை உறிஞ்சிக் கொண்டிருப்பதைக் காணலாம். அதனால்தான் இலைகள் கொட்டுகின்றன. இந்தப் பூச்சித் தாக்குதலில் இருந்து உங்கள் ரோஜாவைக் காக்க இதோ ஒரு எளிதான வழி. ஒரு குச்சியால் இந்தப் பஞ்சுப் படலத்தை சுத்தமாக சுரண்டி எடுங்கள். பின்னர் கெரசினில் நனைத்த துணிச்சுருணையால் பாதிக்கப்பட்ட தண்டு முழுக்கத் துடையுங்கள். பூச்சி உங்கள் ரோஜாவை நெருங்காது. பெரிய செடியாய் இருந்தால் கெரசினுக்குப் பதிலாக ரோகார் (ROGOR) பூச்சி மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் 2 மி.லி. விட்டு ஸ்ப்ரே செய்யலாம்.

எங்கள் வீட்டுத் தோட்டத்தின் மண் கெட்டியாக, வறண்டு போய், அங்கங்கே நிறமிழந்து காணப்படுகிறது. ஆசையாகக் கொண்டு வந்து வைக்கும் செடிகள் எதுவும் கிளம்புவதில்லை. ஏன்?



உங்கள் மண்ணில், செடிகள் வேர்விட்டு வளர்வதற்கான சத்துக்கள் குறைந்து களர்தன்மை அதிகரித்து இருப்பதாக தெரிகிறது. உங்கள் வீட்டில் நிறைய மரம், செடிகள் வைக்க வேண்டுமானால், ஒன்று வெளியில் இருந்து நல்ல

ரோஜாச் செடிகளுக்கு வாழைப்பழத் தோலை நறுக்கிப் போட்டால் செடியும் நன்றாக வளரும். செழிப்பான பூக்களும் பூக்கும்.

— ஆர். தங்கம்

மண் கொண்டு வந்து உங்கள் தோட்டத்தை நிரப்பி பின் செடிகள் வைக்கலாம், அல்லது, இயற்கை எருவை (குப்பை எரு) கொண்டு வந்து கொட்டி மண்ணோடு மண்ணாக நன்றாகக் கலந்து பின்னர் செடிகள் வைக்கலாம். இயற்கை எருக்கள் மண்ணின் களர் தன்மையை நீக்கி வளமூட்டுகின்றன.

என் தோழியின் வீட்டிலிருந்து சிலவகை கள்ளிச்செடிகள் கொண்டு வந்து வைத்தேன். மற்ற செடிகளைப் பராமரிப்பது போன்ற அதே கவனத்துடன் இவற்றையும் பார்த்துக் கொண்டேன். என்றாலும் இரண்டு செடிகள் அழுகி இறந்து விட்டன. தண்ணீர் பற்றவில்லையா?

நீங்கள் செய்த பெருந்தவறு கள்ளிச் செடிகளை மற்ற செடிகளைப் போல தண்ணீர் ஊற்றி பராமரித்ததுதான். கள்ளிச் செடிகள் பாலைவனத்துச் செடிகள். தண்ணீர் எளிதில் கிடைக்காத பாலையில் கிடைக்கின்ற சிறிது நீரை சேமித்து உயிர்வாழும் செடிகள். இதைத் தவிர வேறு சூழலுக்குப் பழகாத செடிகள். இவற்றிற்கு ரெகுலராக தண்ணீர் ஊற்றுவது என்பது நீச்சல் தெரியாதவனை நடுக்கடலில் தூக்கிப் போடுவது போல. ஆகவே கள்ளிச் செடிகளுக்கு அடிக்கடி தண்ணீர் ஊற்றாதீர்கள். வாரம் ஒருமுறை போதும். தொட்டியில் தண்ணீர் வெளியேற போதுமான ஓட்டைகள் இருக்கின்றனவா என்று செக் பண்ணுங்கள். மண்ணில் மணல் அதிகமாகக் கலந்திருந்தால் நல்லது. வெயில் அதிகம் படும் இடங்களில் செடிகளை வையுங்கள். கள்ளிச் செடிகள் மிக அரிதாக பூக்கள் விடும். ஆனால் பூக்கள் ஜோராக இருக்கும் தெரியுமா?

நன்றாக பூத்து வந்த எங்கள் செம்பருத்திச் செடி இப்போது நோயடித்தாற் போல நுனி இலைகள் எல்லாம் சுருங்கி சூம்பிப் போய் காணப்படுகிறது. பார்க்கவே சகிக்கவில்லை. என்ன செய்யலாம்?

உங்கள் செம்பருத்தியின் வாட்டத்துக்குக் காரணம் நோய் இல்லை. பூச்சிகள்! செடியின் ரத்த ஓட்டம் மாதிரியான சாற்றை இவை உறிஞ்சுவதால், இலைகள் சுருங்கி, சூம்பிப் போகின்றன. வளரும் பகுதிகளான நுனி இலைகள் அதிகம் பாதிக்கப்பட்டிருக்குமே? மோனோகுரோட்டோபாஸ் (MONOCROTOPHOS) அல்லது ரோகார் வாங்கி 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மி.லி. கலந்து, இலைகளில் நன்றாகப் படுமாறு ஸ்ப்ரே செய்யுங்கள். பூச்சித் தொல்லை நீங்கும். செடிகள் ஆரோக்கியமாக வளர்ந்து பூக்கள் விடும்.

முப்பது, நாற்பது ரூபாய் கொடுத்து வாங்கி வரும் ரோஜாச் செடிகள் வீட்டுக்கு வந்ததும் பட்டுப் போகின்றனவே? ஏன்?

ரோஜாச் செடிகள் பெங்களூர், ஆந்திரா போன்ற பகுதிகளில் இருந்து லாரிகளில் கொண்டு வரப்படுகின்றன. சிறு சிறு பாலிதீன் பைகளில் நடப்பட்டு நீண்ட தூரம் பிரயாணம் செய்து வரும் இந்தச் செடிகள், அதிகம் பூக்களோடு இருந்தால் தான் மக்கள் வாங்குவார்கள் என்பதால் 'ஸ்பெஷல் ஸ்ப்ரே' செய்யப்படுகின்றன. இந்த ஸ்ப்ரேயின் வீரியம் நாளடைவில் குறைந்தவுடன் செடிகள் பொலிவிழக்கும் அபாயம் இருக்கிறது. ஆகவே வாங்கிய செடிகளை அப்படியே வைத்திராமல் வேறு தொட்டியில் மாற்றுங்கள். செம்மண், எரு, மணல் ஆகியவற்றை சமபங்கில் கலந்து தொட்டியில் நிரப்பி பின் செடிகளை நடுங்கள். புதுத் தொட்டிகளில் செடிகள் தழைத்தபின் மாதத்திற்கொருமுறை எரு அல்லது வேப்பம்புண்ணாக்கு ஒரு கைப்பிடியளவு போட்டுப் பாருங்கள். நன்றாக இலை, பூ விட்டு செடிகள் தளதளவென்று வளருவதை காண்பீர்கள்.

இயற்கை உரம், இயற்கை உரம் என்கிறார்களே அப்படி என்றால் என்ன?


நாம் உயிர் வாழ எப்படி உணவு முக்கியமோ அப்படியே செடிகள் உயிர் வாழ உணவு முக்கியம். நமக்கு சாப்பாடுதான் உணவு. செடிகளுக்கு உரம் தான் உணவு. இந்த உரத்தை செயற்கை என்றும் இயற்கை என்றும் இரு வகையாக பிரிக்கிறார்கள். செயற்கை உரம் என்பது செயற்கை முறையில் தயாரிக்கப்படும் ரசாயன உரங்களைக் குறிக்கும். யூரியா, பொட்டாஷ் இப்படி. இயற்கை உரம் என்பது இயற்கையாகக் கிடைக்கும் குப்பை எரு, சாண எரு ஆகியவற்றைக் குறிக்கும். மேலைநாடுகள் எல்லாம் ரசாயன உரங்களால் ஆபத்துதான் அதிகம் என்று போர்க்கொடி உயர்த்த ஆரம்பித்து இருக்கின்றன. இயற்கை உரம் போட்டு உற்பத்தி செய்யப்பட்ட காய்கறிகள் அங்கு ப்ரீமியம் விலையில் விற்கின்றன.

வீட்டுக்குள் வளரும் செடிகளை (Indoor Plants) பார்த்துக் கொள்வது எப்படி?

பூக்காத குரோட்டன்ஸ் வகைச் செடிகளைத் தான் வீட்டுக்குள் வளர்ப்பது வழக்கம். இவ்வகை செடிகளுக்கு இலைகள்தான் அழகு. ஆனால் ஒழுங்காக பார்த்துக் கொள்ளவில்லை என்றால் இலைகளில் தூசி படிந்து, பொலிவிழந்து டல்லாகக் காணப்படும். இலைகளில் உள்ள துளைகள் அடைபட்டு வளர்ச்சியும் குன்றிவிடும். ஆகவே வாரத்திற்கொருமுறை இலைகளை ஈரத்துணியால் துடையுங்கள். செடிகளை அடிக்கடி இடம்மாற்றி வையுங்கள். டி.வி.அருகில், ஜன்னலில், டைனிங் டேபிள் அருகில் என்று. அறை பனிச்சென்று இருக்கும். வாரத்திற்கொருமுறை செடிகளை வெய்யிலில் வையுங்கள்.

(நீங்களும் வீட்டுத் தோட்டம் அமைப்பது சம்பந்தமான உங்கள் கேள்விகளை எங்களுக்கு அனுப்பலாமே!)

உலகத் தரம் வாய்ந்த
இரண்டு சாதனையாளர்கள் -
உங்கள் வீட்டு சமையலறை மேடையில்
சாதனை படைக்கட்டும்.



ULTRA

ரொம்பப் பிரமாதம்! இந்த இரண்டு சொற்கள் போதும்...எந்தவொரு முயற்சிக்கும் ஊக்கமும் உற்சாகமும் தரும். அதுவும் ஒரு துறையிலே புதிதாகத் தொழில்முயற்சி தொடங்குவோர்க்கு இது மகத்தானது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, சமையலறையில் வேலைச் சுமையைக் குறைக்க இந்தியப் பெண்களுக்கு இணையற்ற துணையாக வந்தது அல்ட்ரா கிரைண்ட்+. இன்று, இந்திய இல்லத்தரசிகள் பாராட்டும் படைப்பாக, 'டேபிள் டாப்' ஆட்டுக்கல் புரட்சியில் இது முன்னணியில் திகழ்கிறது.

மிகச் சிறந்த வசதியை மேலும் சிறந்ததாக ஆக்க, இந்தியப் பெண்களுக்கு அல்ட்ரா வழங்கும் மற்றுமோர் அற்புதப் படைப்பு - **அல்ட்ரா மிக்ஸர்- கிரைண்டர்** கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் இதுவும் சாதனை படைக்கும் சிறந்த செயல்திறனைக் கொண்டது.


அல்ட்ரா குடும்பம் உங்களை அன்புடன் அழைக்கிறது. வாருங்கள். நல்லதையே செய்வோம், அதையும் மேலும் மேலும் சிறப்பாகச் செய்வோம் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டுவோம்.

எல்ஜி
தயாரிப்பு

எல்ஜி அல்ட்ரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
எல்ஜி ஹவுஸ், திருச்சி ரோடு, கோயம்புத்தூர் 641 045
தொலைபேசி: 0422-316132, ஃபேக்ஸ்: 0422-311740
மண்டல அலுவலகம்: 45/1, கிரி ரோடு, சென்னை-17 போன்: 8225735 / 36

Anugrah 2423/97 Tam

புதுயுக வசதி அல்ட்ரா. புதியதோர் அனுபவம் அல்ட்ரா.





கண்களுக்குத் தெரியும் சுத்தத்தைத்தான் சுத்தம் என்று நாம் நினைக்கிறோம். ஆனால், அப்பழுக்கற்ற சுத்தத்தை நாம் கண்டாலும் அதில் கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய கிருமிகள் உள்ளன என்பதுதான் உண்மை.

எனவே, நம் கண்ணுக்குத் தெரியும் சுத்தத்தை முழு சுத்தம் என்று கூறமுடியாது.

இப்போது, புதிய டோமெக்ஸ் ஆல் பர்பஸ் மூலம் உங்களுக்கு கிடைக்கிறது முழு சுத்தம். கண்ணுக்குத் தெரியும் சுத்தம் மட்டுமல்ல, கண்ணுக்குத் தெரியாத சுத்தமும் கூட!

இதன் ஒப்பற்ற ஹைப்போ ஃபார்முலா கண்ணுக்குத் தெரியாத கிருமிகளை 100% அழிக்கும் (இதை அப்படியே பயன்படுத்தினால் மட்டும்). பளிச்சிடும் சுத்தத்தை தரும்.

இது ஆல் இண்டியா இன்ஸ்டிடியூட் ஆஃப் மெடிகல் டெக்னாலஜிஸ்ட்ஸ் (AIIMT) ஆல் சான்றுரைக்கப்பட்டது. புதிய டோமெக்ஸை 100 விதங்களில் வீடு முழுவதும் பயன்படுத்தலாம். தரை, குளியலறை, சமையலறையின் மேற்புறங்கள், கண்ணாடிகளின் மேற்புறங்கள் மற்றும் இதர கருவிகளின் மீது பயன்படுத்தலாம்.

உண்மையான சுத்தத்தின் அர்த்தம் இப்போது உங்களுக்குத் தெரியும்.



Domex சுத்தம் செய்கிறது. 100% கிருமிகளை அழிக்கிறது. எல்லா இடத்திலும்.

Lintas Dmx 44 2013 Tm R

சிறைகள் திறக்கும்

அருள்மொழிவர்மன்

வாசலில் சத்தம் கேக்கு. எல்லோரும் வந்தாச்சு போலிருக்கு. நான் எந்த அதிர்ச்சியையும் தாங்கிக் கொள்ள தயாராகிறேன். பாம்படம் ஆட அம்மாதான் அலையக்குலைய ஓடி வர்றா. "அடி பாதகத்தி மோசம் போயிட்டியேடி. என் ராசாத்தி" என்று கதறியபடி என்னைக் கட்டி அழுதா. பூண் போட்ட கைத்தடி சத்தம் போட என்னைப் பெத்த ஐயா வேகமா வர்றார். கட்டிலில் பொத்தென்று உட்கார்ந்தபடி என்னத்தையோ வெறிக்கறார். கை மட்டும் மீசையை தடவிக் கொண்டிருக்கிறது. மூன்று அண்ணன்மார்களும் பேயறைந்தமாதிரி தரையில் வந்து உக்காருதாவோ. அண்ணிமார்கள் கதவுக்குப் பின்னாடி. மேலத்தெரு பெரியப்பா, சூரக்குடி சித்தி மத்த சாதி சனம் எல்லாம் பட்டாலை நிறைய வந்து நிக்கி. நிதானமா எல்லாரையும் ஒரு மட்டம் பாக்கேன். "கோர்ட்டில் என்ன தீர்ப்பு சொன்னாவோ" அப்படிங்கேன்.

"உன் மாப்பிள்ளைகாரனுக்கு ஆயுள் தண்டனைன்னு தீர்ப்பாயிடுச்சும்மா." ஐயா குரல் கம்ம சொல்லியபடி அழுகையை விழுங்குதார். நான் சுவரில் முட்டி அழப் போறேன்னு ஆறுதல் சொல்ல எல்லோரும் தயாரா நிக்கது புரியுது. எதிர்பார்த்தது நடக்கலைன்னு புரிஞ்சு போக அம்புட்டு பேரும் பைய கலைஞ்சு போறாவோ. "சரி, சரி மசமசன்னு நிக்காம புள்ளைக்கு முதலில் சாப்பாட்டை போடுத்தா." ஐயாதான் முதலில் நிதானத்துக்கு வர்றார். "ம். வயித்துப் புள்ளக்காரி பட்டினியா இருக்கக் கூடாது. எந்திம்மா" அம்மாவுடன் சாப்பிடப் போனேன்.

கல் சட்டி புளிக்குழம்பில் புளித்த பழையதை நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து உருட்டி கையில் வைக்கா. அமிர்தமாய் இருக்கு. எரிகின்ற வயிற்றுக்கு சுகமாய் இருக்கு. உள்ளே துடிக்கும் அந்தப் பாழாய்ப் போன உயிரு கொஞ்சம் அமைதியாகுது. இந்த மானங்கெட்ட பசிக்கு இனிமே எப்படிப் பதில் சொல்லப் போறேன்? பெத்தவர் பண்ணையாரா இருந்தாலும் ஒருத்தனுக்குக் கழுத்தை நீட்டின நான் எத்தனை நாள் இங்கே இருக்க முடியும்? இந்த அண்ணன்மாரும், அண்ணிமாரும் என்ன சொல்வார்கள்? எப்படி பொறுப்பார்கள்? நடந்து போன இரண்டு வருசத்தில் என்னவெல்லாம் நடந்து விட்டது. நினைச்சுப் பாக்கேன்....


சவுக்குக் கம்புகள் தாங்கும் வாழை மரங்கள். அதில் தேனீ மொய்க்கும் வாழைக் குலைகள். சந்தோசமாய் தலையாட்டும் பிரம்மாண்ட வாழையிலைகள். அடிக்கடி எங்களின் வாழைத்தோட்டத்தில் போய் உட்கார்ந்து விடுவேன். அந்த மாதிரி ஒருநாளில்தான் வாழைக்குலைகளை வாங்க வந்த ஒரு வியாபாரியுடன் வந்து சேர்ந்தார் ராசப்பா. லாரியிலிருந்து வேகமாய் குதித்து தோட்டத்தில் நுழைந்தார். கருகருவென்று உடம்பு. பளீர் கண்கள். வெள்ளைச் சிரிப்பு. முதல் பார்வையிலேயே இனம்புரியாத பிரியம் விழுந்து விட்டது. அவரும் என்னை வைத்த கண் வாங்காது பார்க்கவே நான் ஓடியே போய்விட்டேன்.

அப்புறம் அடிக்கடி ராசப்பா வந்தார். பக்கத்து கிராமம்தான். பெரிய வாழைக்காய் வியாபாரிகளுக்கு வாழைத் தோட்டத்தைக் காட்டி குலைகள் மரத்தில்




வைத்தே விலைபேசி கமிஷன் வாங்கு கிறவராம். வாழைக்குலைகளுக்கு நல்ல விலை வாங்கிக் கொடுத்ததினால் ஐயா வுக்கும் அவரை ரொம்பப் பிடித்துப் போய் விட்டது. தோட்டத்து இளநீரும், வீட்டில் நீர்மோரும் தாராளமாய் கொடுத்தார். பல வான் அப்படிங்கார். அதனாலேயே இந்த அண்ணன்மாருக்கு ராசப்பா மேல ஒரு வெறுப்பு வந்துட்டு. தத்துப்புத்திரன்னுட்டு அவருக்கு பேரே வச்சுட்டாவோ. அப் பப்போ எதிரில் வர்றப்ப நாங்க சிரிச் சுப்போம். வேற வாய் வார்த்தை ஒண்ணும் இடையாதாக்கும்.

''ஏத்தா. இந்த புள்ளக்கி கல்யாணம் மூச்சிரலாம்னு பாக்கேன்'' ஐயா அம்மையிடம் சொல்லவும் எனக்கு



சமயங்களில் சாப் பாடும். "நல்ல திறமை யான பையன்; பொழைச்சிக்கிடுவான் புத்தியோடு'' என்று ஐயா சொல்வாராக்கும். ஐயாவுக்கு எப்பவுமே தன் பையன்களுக்கு, ''அவ்வளவா கூறு'' இடையாதுங்கிற நினைப்பு உண்டும். ராசப்பாவ பாரேன். வாயடி கையடி அடிச்சு வெறும் கட்டையக் கூட வாழைக்குலைன்னு வித்துப் போடு திக்குங்கு. ''மகராசனா முடிங்க. ஆரு வேண்டாங் காவோ. மாப்பிள்ளையை எங்ஙன பார்த்திருக் கிய?''

''என் கயத்தார் சொ[illegible]



டில் பெரிய பய சரியா வருவான்னு நினைக்கேன்.''

''ஆரு வேலுச்சாமியா நல்ல கூறுள்ள பையன். இப்பமே ஆள் அனுப்பி சாரிச்சு முடிக்க வழிய பாருங்க'' - அம்மை சொல்லி விட்டாள்.

ஐயா என்னைப் பாக்கார். ''என்னட்டி. ஆடு களவாண்ட கள்ளன் கணக்கா முளிக்க. மனசில் உள்ளதைச் சொல்லு. எங்களுக்கு நீ ஒரே பொட்டைப் புள்ளல்லா. உன் நினைப்பையும்தான் கேப்பமே''ங்கார்.

இப்பம் விட்டா பொறவு நினைப்பை சொல்ல ஏலுமோ என்னவோ. தேங்காய் பத்தை கணக்கா பளிச்சினு சொல்லிப் போட்டேன்.

''எ சவத்து மூதி என்ன எளவை சொல்லுத'' அம்மை எப்பவும் போல கத்துதாள். ஐயா ரோசனையோட என்னைப் பாக்கார். ''ஏ புள்ள அவன் நம்ம சாதியில்ல புள்ள. ஆளு பாக்க வெள்ளையும் சள்ளையுமா இருக்காம். சரியான முரட்டு அடியாள். அனாதைப் பையன். நீ செல்லமா வளர்ந்தவ. உனக்குச் சரிப்படுமா?''

''இல்லய்யா. கட்டுனா அவரைத்தான் கட்டுவேன்.'' அம்மை ஏதோ சொல்ல வந்தவள் ஐயா முளிச்சதும் அடங்கிட்டா.

அண்ணன்மாரெல்லாம் ஆராதனை வந்தாக்கல குதிக்காவோ, அண்ணிமாரு மாப் பிள்ளைகளை இருக்கி விடுதாளுக. சாதி சனம் கூட திகைச்சுத்தான் போச்சு. ஆனாலும் ஐயா முன்னால நின்னு மறுத்துப் பேசறதுக்கு ஆருக்கும் வாய் வரலை. ராசப்பா சந்தோசமா சம்மதிச்சிட்டரார். ஐயா போர்சா கல்யாணம் முடிச்சார். நாலு நாளா எனக்குக் கால் பூமியிலே பாவலை. அஞ்சாம் நாள் ராசப்பா, ''ஏட்டி இசக்கியம்மை. நம்ம வீட்டுக்கு போவோம்னா''ன்னு ஆரம்பிக்கார். ''என்ன... என்ன சொல்லுதியோ''

''ஆமாம்ட்டி. நாலு நாளா மாமனார் வீட்டில் சடவாரியாச்சு. இன்னம் என்ன? நம்ம பொழைப்பை பாக்க வேண்டாமா?''

''ஐயா, உங்க மருமகப் பிள்ளை என்னவோ சொல்லுதாவோ. வந்து கேட்டுக்கிடுங்க'' ஐயா கூட எதிர்பார்க்கலை.

''என்ன மாப்பிள்ளை இது. நமக்கு தோப்பு, தொரவு, காடு, கரைன்னு ஏகப்பட்டது கிடக்கு. மாடு கன்னை பாக்கவே பத்து பேர் இருக்காம். பேசாம



உ. பருப்பு, மி. வற்றல், பெருங் காயம் சிறிது எண்ணை விட்டு வறுத்துக் கொண்டு, வதக்கிய கேரட் துண்டு களோடு உப்பு, புளி சேர்த்து அரைத்தால் புதுவித துவையல் ரெடி.

— ஜானகி தர்மராஜன்

இதுகளைப் பாத்துக்கிடுங்க. இந்த கமிசன் தரகு எல்லாத்தையும் தலை முழுகுங்க'' அப்படிங்கார்.

''இல்லை மாமா. வீட்டோடு மாப் பிள்ளையா இருக்கது எனக்குப் பிடிக்கலை. நான் என் கிராமத்துக்குப் புறப்படுதேன். இசக்கியம்மை விருப்பப் பட்டா வரட்டும்'' பாவி மனுசன் சடக்குன்னு புறப்பட்டுப் போட்டார். இவருக்கு முன்கோபம் அதிகம் என்கிறதை இதற்குள் எனக்குப் புரிஞ் சுட்டுதாக்கும்.

''சரிய்யா. நான் கூட இவ்வொ கூட புறப்படுதேன்'' ஐயா என்னை நிமிந்து பாக்கார். பிறவு ஒண்ணுமே சொல்லலை. மூணு வண்டி சீரும் செனத்தியுமா குறை இல்லாம அனுப்பி வச்சார். ''உங்கப்பன் என்னை ஏமாந்த சோணகிரின்னு நினைச் சானா? இவன்கிட்ட பணம் இருந்தா இவனோட. தொலைச்சு தலைமுழுகணு மாயில்லே என் தொழிலை? கமிசன் வியாபாரம் அவ்வளவு கேவலமாக்கும்? இவ்வளவு கௌரதை பாக்க மனுசன் பண்ணையார் மருமவனா பாத்திருக் கணும்?'' ராசப்பாவின் மறுபக்கம் இதுதான் போலிருக்கு. என் சந்தோசத்தில் அரைப்படி குறைஞ்சது மாதிரி இருக்கு. ''இதான் என் வீடு'' என்றபடி ஒரு பெரிய ஓலைப்பரை வீட்டு முன்னால வந்து நிக்கார். நம் வீடுன்னு கூட வாயில் வரலை. ''சாமான் லாம் வச்சு சமையல் பண்ணி வை. என் சிநேகிதன் கடலைன்னுட்டு ஒருத்தன் இருக்கான். அவனையும், அவஞ் சம்சாரத் தையும் அழைச்சிட்டு வரேன்.''

அரைமணியில அந்த சேக்காளி மனுச ரோடு வந்து நிக்கார் அவர் சம்சாரம்... அந்த பொம்பளையை எங்ஙனயோ பாத்த நினைப்பு போட்டு அடிக்கி. ''நீ... நீங்க... அட... நீ செம்பகம்லா...'' ''ஆமா. நீ வேம்பு பண்ணையார் மவ இசக்கியம்மையில்லா, அடி ஆத்தி. எம் புட்டு அழகா இருக்க கிளுவை கன்னு மாதிரி.'' செம்பகம் என் கூட மூணாம் வகுப்பு படிச்சவளாக்கும். நல்ல மாதிரி. கலகலப்பா பேசுவா. தைரி யமா மரத்து மேல ஏறி மாங்கா பறிப்பா. பட்டுப்போன தென்னை மரம், ஆல மரத்துப் பொந்து இதுகளில் தைரியமா கைய விட்டு கிளிக்குஞ்சு புடிப்பா.

பொறவு சோறாக்கி ரெண்டு ஆம் பளைகளுக்கும் போட்டோம். பண்டைய கதை, பழைய கதையெல்லாம் பேசினோம். ''இசக்கி, இந்த ராசப்பன் இருக்கே. அதுக்கு முன்கோபம் சாஸ்திடி. எடுக்க முன்ன அரி வாளை தூக்கும். என் வீட்டு ஆம்பளைக்கு வாய் சாஸ்தி. எக்குத் தப்பா கோவம் வர்ற மாதிரி பேசி ராசப்பனை சதா சீண்டு மாக்கும். எப்படியோ எங்க கிராமத்துக்கே வந்து சேர்ந்துட்டே. ம். உன் வசதிக்கும் பவுசிக்கும் இந்த ஆளையா புடிப்பே. ம். எல்லாம் தலைவிதி'' செம்பகம் பேசிட்டே போனாள்.

எப்படியோ நாள் போவுது. இந்த மனு சனுக்கு எங்க ஐயா ஆவியே ஆகலை. ஐயா இவர் இல்லாத சமயமா வந்து எட்டிப் பார்த்துட்டு போவார். சில நேரம் அம்மை வரும். கண்ணாலே தண்ணிவிட்டு அழு துட்டு போகும். வர வர காக கொஞ்சம் அதிகமா புரள ஆரம்பிச்சிருக்கு இவரிடம். டவுனுக்குப் போயி சேலை அது இதுன்னு வாங்கிட்டு வர்றார். ''சீக்கிரமா ஒரு லாரி வாங்கணும். வாழைக்குலைகளை நாமளே வாங்கி நல்ல லாபத்துக்கு விக்கலாம்'' அப் படிங்கார். மாமனாருக்கு மேல வசதியாக இருக்கணும் என்று வெறியே வந்துட்டு. எனக்கும் சந் தோசம்தான். ஆனா இந்த மனுசனை எதுத்தே பேசிரக்கூடாது. உடனே அடிதான். உதைதான். என்ன எளவுக்குத்தான் இப்படி கோபம் வருதோ? இப்பம் காக ஏற ஏற கோபமும் ஏறிப் போயிடுது. ஊரில் எல்லாரிடமும் கோபப் படுதாம். பட்டுன்னு அடிச்சிடுதாம்.

கடலையண்ணனும், இந்த மனுசனும் சேர்ந்து தண்ணி போடுதாவளாம். சீட்டு ஆடு தாவளாம். செம்பகம் சொல்லிச் சொல்லி வருத்தப்படுதா. இவரிடம் வேண்

டாம்னு சொன்னதுக்கு சோத்துப் பானையை தூக்கி எம்மேல வீசிப் போட்டார். நெத்தியில் வெட்டி ரத்தம் கொட்டுச்சு. சாணியை எடுத்து அப்பினதில் கொஞ்சம் பரவாயில்லை. அதுக்குப் பொறவு பேச்சையே குறைச்சிட்டேன். அண்ணன்மாரெல்லாம் இந்த ஊரில் கோயில் கொடைக்கு வர்றாவோ. என் வீட்டுக்கு வர்றதில்லை. குடிகார மட்டையை யார்தான் மதிப்பாவோ? இதுக்கு இடையில் நான் உண்டாயிட்டேன்.

ஒருநாள் உதயத்திலேயே சுடலையண்ணன் வந்துட்டு, "ஏ இவளே. ராசப்பா. வா வெளியே போவோம்" அப்படிங்கு. ஆள் நிதானத்தில் இல்லை. இந்த மனுசனும் பெட்டியைத் திறந்து கைக்கு அகப்பட்ட ரூபாய் தாளை அள்ளி இடுப்பு பெல்ட்டில் சொருகுதாவோ. அரி வாளை எப்பவும் போல கழுத்து பின்பக்கம் போட்டுக்கிட்டு கிளம்பியாச்சு. அன்னைக்கு அந்திக்கருக்கில் ஒரே கூப்பாடு. "இசக்கியம்மை உம் புருசன், சுடலையை வெட்டிகொன்னு போட்டானாம். போலீசு வந்து உம்புருசனை இளுத்துட்டு போயிடுச்சாம்" யாரோ கத்தினார்கள். உலகம் தலைகிழா சுத்த மண்டைக்குள் ஏதோ வெடிக்க கீழே சாய்ஞ்சதுதான் தெரியும்.

பொறவு கோர்ட்டு, கேசுன்னு ஐயாதான் அலைஞ்சாவோ. ஒருநாளு ஒரு யுகமா கழிஞ்சுது. இதோ இப்பம் சேதி வந்திடுச்சு. ஆயுள் தண்டனையாம். ஐயா என்னைக் கூப்பிட்டு "செயில்ல போயி ராசப்பனைப் பார்த் கலாம். வான்னாவோ" "வேண்டாய்யா. என்னை நிம்மதியா இருக்க விடுங்க"ன்னுட்டேன். காதலுக்குக் கண்ணில்லைங்கிற சொலவடை எனக்கு ரொம்பப் பொருத்தமா போச்சி. எம்மேல உசிரையே வச்சிருந்த அண்ணன்மாரெல்லாம் இப்பம் என்கூட பேசறதேயில்லை. "எடாத எடுப்பெடுத்தா படாதபாடுதான். ஒழுங்கா மரியாதையா பெரியவங்க பார்த்த பையனைக் கட்டியிருந்தா இப்படி சீப்பட வேணாமே. அந்த திருவாத்தானை போயி கட்டுனா. இப்போ என்னாச்சு?" அண்ணி மாரு காதுபடவே பேசுதாவோ.

ஊரில் உலகத்தில் இல்லாத அருமை தங்கச்சி உண்டாயிருக்காளே. அஞ்சாம் மாசம் அரிபழம் போட வேண்டாமா? ஏழாம் மாசம் கருப்பு சேலை எடுக்க வேண்டாமா. "இவ வயித்தில் வளர்றது பேயா எமனா? வெளிய வர்றதுக்கு முன்னாடியே அப்பன்காரனை செயிலுக்கு அனுப்பிட்டுப் பாரேன்" பெரியண்ணி நெருப்பாய் அள்ளி வீசுதா. "என்ன எழவோ போ. வெளிய வந்து தாய் மாமன்மாரை பொழைச்சிருக்க விடணுமே. சனியன்." சின்ன அண்ணி உறுமுதா. "பொட்டைப்புள்ள வேணும்னு கோயில் கோயிலா சுத்தி, நெய் விளக்கு போட்டு உன்னைப் பெத்தேண்டி. லட்சக்கணக்கில் சொத்து சுகம் இருக்கு நமக்கு; எம்மவ ராசா மக கணக்கா இருப்பான்னு நினைச்சேனே. அந்த நாசமாப் போற தறுதலை எம்மவளை இப்படி பேச்சுக் கேக்க வச்சுப் போட்டானே"ன்னு அம்மை ஒரு பக்கம் ரத்தக்கண்ணீர் வடிக்கா.

எப்பவும் நிமிர்ந்தே நடந்து பார்த்த எங்கய்யா இப்போ கிழடுதட்டி குனிஞ்சே போயிட்டாவோ. "நான் திடீர்னு மண்டையப் போட்டா எம் மக கதி என்ன. யாரு அவளைப் பாப்பா"ன்னு அம்மையிடம் சொல்லி மருகுதாவளாம். சோத்தைப் பிசைஞ்சு வாயில் வைக்கையில் எம்மனசு முள்ளா குத்துது. அரை வயித்து கஞ்சின்னாலும் கட்டின புருசன் வீட்டில் குடிச்சா தான் கௌரதை. கட்டிக் கொடுத்த பொறவு பெத்த அப்பன் வீடுன்னாலும் அது அடுத்த வீடுதானே? திங்கறதும் இடியுண்ட சோறுதானே "எட்டி எந்தாயி. வயித்துப் புள்ளக்காரி பட்டினியா இருக்காதம்மா" அம்மை கத்துறா.

"எந்தப் பய பொண்டாட்டி மவனாவது நாக்கு மேல பல்லைப் போட்டு எம்மவளை



வீட்டில் எந்த ஊறுகாய் போட்டாலும் வெந்தயம் வறுத்துப் பொடி பண்ணும்போது கூடவே ½ டீ ஸ்பூன் கடுகு வெறும் வாணலியில் வறுத்துப் பொடி செய்து போட ஊறுகாயின் மணமும் குணமும் கூட. சீக்கிரத்தில் பழைய வாசனை வராமலும் இருக்கும்.

— ஜானகி தர்மராஜன்



மினி சமையலறைத் தோட்டம்

வீட்டில் தோட்டத்திற்கென சிறிது இடம் இருந்தாலே போதும். அல்லது 2, 3 பூந்தொட்டிகள் வாங்கி, பொன்னாங்கண்ணி கீரை, புதினா இலைகளின் இலைகளை எடுத்து சமைத்தது போக மீதி இருக்கும் கீரையின் காம்புகளை நட்டு வைக்கலாம். (வேர் இருக்க வேண்டிய அவசியமில்லை) அத் தொட்டிகளில் சிறிது கொத்தமல்லி விதை தூவலாம். அன்றாடம் சாம்பார், ரசம், சாலட் இவற்றில் போட ஃப்ரெஷ் ஆக மல்லிச் செடி கிடைக்கும். சத்தான சட்னியும் செய்து சாப்பிடலாமே. மணத்தக்காளி கீரை வாங்கும்போது அதிலுள்ள பழுத்த பழங்களை உலரவிட்டு விதைக்கலாம். சமைப்பதற்குக் கீரையும் கிடைத்தது. உடல் நலத்தைப் பேண நல்ல ஒருவழியும் கிடைத்தது.

— சுந்தரி

பேசட்டும். நான் சுயமா சம்பாதிச்ச இத்தனை சொத்தையும் அவ பேருக்கே எழுதி வச்சப் புடுவேன். அவனவனும் மாமனார் வீட்டில் பிச்சை எடுத்துத் திங்கட்டும்'' ஐயா பொறுக்க முடியாமல் ஒரு நாள் அத்தனை பேரையும் ஏசிப் போட்டார்.

தீபாவளி வருது. புதுத்துணி எடுக்கணும் னுட்டு அண்ணிமாரெல்லாம் திணறுதாவோ. என்னைப் பாத்து முளிக்காவோ. கொலைகார புருசன் செயில்ல கிடக்கையில் இவ தீபாவளி கொண்டாட மாட்டா. புதுத் துணி உடுத்த மாட்டா. சரி. அதுக்காக நாமளும் நல்ல நாளும் அதுவுமா துக்கம் கொண்டாடணுமா அப்படின்னு கூடிக் கூடிப்பேசுதாவோ. பூ வைக்கவும், மாப் பிள்ளைமாரோடு சிரிச்சுப் பேசவும் அவவோ யோசிக்காவோ. நான் தாலியறுத்தவ கணக்கா ஒத்தை மரமா நிக்கையில யாருக்குமே கூசத்தானே செய்யும்?

தீவாளிக்கு ரெண்டு நாள் முன்னாடியே அண்ணன்மாரெல்லாம் மாமனார் வீட்டுக்குப் போயாச்சு. பண்ணையாட்களுக்கெல்லாம் வழக்கப்படி ஐயா துணி எடுத்துக் கொடுத்தாச்சு. மருமவனுக்கும், எனக்கும் புதுத் துணியைக் கொண்டு வந்து என் கையில் கொடுத்த பொறவு ஐயா ரொம்ப கதறிட்டார். அம்மா சுவரில் முட்டி அழுதா. அப்பம்தான் நான் ஒரு முடிவுக்கு வந்தேன். இப்பமே இப்படின்னா நாளைக்கு எனக்குக் குழந்தை பிறந்து அது கொலைகாரன் பிள்ளைன்னு பேர் வாங்கி, எங்க அப்பா எங்கேம்மான்னு என் னிடம் கேட்டு ரணமாகி, இதை பெத்தவங்க பாத்து அரை உயிராகி... கடவுளே... வேணாம். இது எதுவுமே நடக்கக் கூடாது. அதுக்கு நான் உயிரோடு இருக்கக்கூடாது. ஆமாம். எங்கேயாவது போய் செத்துத் தொலைய வேணும். எங்க மாந்தோப்புக் கிணறு ரொம்ப ஆழமாக்கும். அதில் கல்லைக் கட்டிக் கொண்டு இறங்கி விட வேண்டியதுதான்.


அம்மன் கோயிலுக்குப் போறதா சொல்லிட்டு கிளம்பிட்டேன். அம்மனை மனசார வேண்டிக்கிட்டு திரும்புதேன். அட அந்தப் பாவி மவ செம்பகம் மூணு பிள்ளைகளோட,நிக்கா. பூவும் பொட்டும் இல்லாம அழுக்குச் சேலையோட... மனசு குத்த தலையைக் குனிஞ்சுகிடுதேன். செம்பகம் ஓடியே வந்து என்னை ஆவி சேர்த்து கட்டிக் கிடுதா.

''என்னட்டி சும்மா இருக்கியா. எட்டாம் மாசமா. ஒம்பதாம் மாசமா. சீ ஏம்ட்டி அளுதே. எம் புருசன் வாய்த்துடுக்கே அவருக்கு எமனாயிடுச்சு. போறாம் போ. அதுக்காகவ நாமளும் சாகவா முடியும். இதோ மூணு பிள்ளைகளை நல்லபடியா வளர்த்து ஆளாக்கணும். உலகத்தில் இதுக்கெல்லாம் பயந்தா முடியுமாட்டி. தைரியமா எதுத்து நின்னு சமாளிக்க வேண்டியதுதான். கையும் காலும் திடமா இருக்கு. மனசில் தெம்பு இருக்கு. அப்புறம் என்ன போவியா? சரி. வரட்டுமா. வேலை கிடக்கு'' என்றபடி வேகமாய் போகிறாள்.

அப்போ... என் புருசனும் ஒருநாள் விடுதலையாகி வர மாட்டாரா. அவரை திருத்தி நல்லவராக்க முடியாதா? என் குழந்தையை நல்லபடியா வளர்த்து ஆளாக்க முடியாதா? இந்த சோதனைகளையெல்லாம் ஜெயிக்க முடியாதா? புருசனை பறிகொடுத்த செம்பகத்துக்கு இருக்கும் தைரியத்தில் பாதியாவது எனக்கு இருக்கக் கூடாதா?

கிணத்தில் தண்ணீர் இறைத்து முகத்தை சுத்தமாக கழுவுதேன். தைரியமாக இந்த உலகத்தைத் திரும்பிப் பார்த்து நடக்க ஆரம்பிக்கேன்.

இடமறிந்து இதமாகப் பேசுவோம்



இடம் அறிந்து பேசுதல் இதமாகப் பேசுதல் என்பது பெரிய கலை. யதார்த்தமாக எந்த விகல்பமும் இல்லாமல் நாம் பேசும் சில வார்த்தைகள் பல சந்தர்ப்பங்களில் விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தி விடுவதை நாம் அன்றாட வாழ்க்கையில் நிறைய பார்க்கிறோம்.

எனக்குத் தெரிந்த ஒருவர் "நாசமாப் போச்சு" என்ற சொற்றொடரை பேச்சில் அடிக்கடி பயன்படுத்துவார். அவர் ஒரு சமயம் தன் நெருங்கிய நண்பர் ஒருவரின் பெண் கல்யாணத்திற்கு லேட்டாக வந்தார். பெண்ணின் அப்பா உரிமையுடன், "ஏண்டா, நீயெல்லாம் லேட்டா வந்தா எப்படி" என்று உரிமையுடன் கேட்க,


"நாசமாப் போன உன் கல்யாணமும் நீயும். நான் வராமல் இருப்பேனாடா, எவனோ ஒரு நாசமாய்ப் போன ரிக்‌ஷாக்காரனால் வந்த வினை" என்று வந்தவர் பேசிக் கொண்டே போக, 'கல்யாண வீட்டில் பேசும் வார்த்தைகளா இவை' என்ற மாதிரியாக பக்கத்தில் நின்ற பிள்ளையைப் பெற்றவர் பெண்ணின் தந்தையைப் பார்க்க அவர் தர்மசங்கடத்தில் நெளிய அதற்குள் வந்தவர் அந்த அருமையான வார்த்தைகளை மேலும் நான்கு தடவை பயன்படுத்தி விட்டார். நம் சுபாவத்தை நம் பேச்சுப் பழக்கத்தைப் பற்றி நமக்கு நெருங்கியவர்களுக்கு மட்டுமே தெரியும். அதனால் இந்த மாதிரி மனிதர்கள் முன்னெச்சரிக்கையுடன் திட்டமிட்டுத்தான் பொது இடங்களில் பேச வேண்டும். நம் பலவீனத்தை உணர்ந்து பேசும்போது நிதானம் தானாக வருகிறது. நிதானிக்கும் நிமிடங்களில் நம் புத்தி பாதுகாப்பாக நிற்கும். விளைவு விபரீதங்களைத் தடுக்கும். பலவீனமும் நாளடைவில் போய்விடும்.

சில வீடுகளில் குழந்தைகளைத் திட்டும்போது, ஏன் கொஞ்சும் போது கூட, 'கடன்காரா', 'நாசாய்ப் போனவனே', 'உன்னைப் பலி போடணும்', 'வெட்டிப் புதைக்க' - எழுதவே கஷ்டமாக உள்ளது. இன்னும் இதுபோன்ற எத்தனையோ நாராசமான வார்த்தைகளைப் பெரியவர்கள் சிந்திக்காமல் மிகச் சாதாரணமாகப் பயன்படுத்துகிறார்கள்.

எதை நாம் எண்ணுகிறோமோ அதாகவே ஆகிவிடுகிறோம். யத் பாவம் தத் பவதி. நல்ல வார்த்தைகளுக்கா நமக்குப் பஞ்சம். பெரியவர்கள் என்ன செய்கிறோமோ, பேசுகிறோமோ, அதைத்தான் குழந்தைகளும் பிரதிபலிக்கும். நல்லது கெட்டது பாகுபாடு அறியாத குழந்தைகள் தகாத வார்த்தைகளை வந்தவர்கள் எதிரில் பேசிவிட்டு,

"குழந்தையா இது, பிஞ்சிலே பழுத்தது, இதெல்லாம் பெரிசானா எப்படியிருக்கும்" என்ற அபவாதத்தை வாங்கிக் கட்டிக் கொள்ளும்.

ஊரிலிருந்து வந்திருக்கும் நண்பரிடமோ அல்லது உறவுக்காரரிடமோ வந்தவுடனேயே சிலர் "ரிடர்ன் எப்போ கோடைக்காலம் ரிசர்வேஷன் ப்ராப்ளம்" என்று முன்னெச்சரிக்கை முனிசாமியாகக் கேட்பார்கள். உங்களின் விசாரிப்பு எந்த விகல்பமும் இல்லாத ஆதங்கமான கேள்விதான். கோடை லீவுதானே கூடுதலாகத் தங்கிப் போகலாமே என்கிற எண்ணத்தில்தான் கேட்கிறீர்



கள். ஆனால் வந்தவர் மனநிலை எப்படியிருக்கும் என்று நீங்கள் ஒரு நிமிஷம் யோசிக்க வேண்டும். வெய்யில் காலத்தில் நீண்ட தூரப் பயணம். நீங்கள் போட்டிருந்த லெட்டரில் கேட்டிருந்து - நீங்கள் இருக்கும் ஊரில் கிடைக்காதவை சாமான்கள் வாங்குவதற்காக அலைந்த அலைச்சல்; அதிக கால இடைவெளிக்குப் பிறகு சந்திக்கப் போகிறோம் என்ற இனிய எதிர்பார்ப்புகள். போர்ட்டர் ஆட்டோக்காரர் இவர்களுடன் சண்டை. எல்லாவற்றிற்கும் மேலாக ரயில் பத்து மணி நேரம் லேட். ஆகியவற்றால் ஏற்பட்டிருக்கும் அயர் வில் உங்கள் கேள்வி எந்தவிதமான பாதிப்பை ஏற்படுத்தும் என்று யோசியுங்கள். ஏமாற்றம் ஏண்டா வந்தோம் என்று நினைக்கத் தோன்றும்.

முகம் மலர்ந்த வரவேற்பு. இதமான சொற்களால் நலம் விசாரிப்பு. அவர்கள் வருகைக்காகக் காத்திருந்தீர்கள் என்பது புலப்படும்படியாக அன்பான வார்த்தைகளை குளிர்பானத்துடன் சேர்த்துப் பரிமாறுங்கள். வந்தவரின் வயிறு குளிர்வதுடன் மனமும் குளிரும்.

கல்யாணம், பார்ட்டி போன்ற இடங்களில் யாரையும் பற்றி விமரிசிக்காதீர்கள். சுற்றியிருப்பவர் உங்களுக்கு அறிமுகமில்லாதவராக இருக்கலாம். ஆனால் உங்களால் விமரிசிக்கப்படுபவருக்கு வேண்டியவராக அல்லது வேண்டாதவராக இருக்கக்கூடும். அதனால் விஷயம் வதந்தி என்ற அரக்கனாக கண் மூக்கு காது என்று மேக்-அப் செய்யப்பட்டு சம்பந்தப்பட்டவர் வாழ்க்கையே பாதிக்கப்படும் அளவுக்குப் போய்விடும். பொது இடங்களில் பொதுவான விஷயங்களைத்தான் பேச வேண்டும்.

பஸ், ரயில் நிலையம், பேங்க் போன்ற இடங்களில் தான் காஷ்மீர் போகும் பெருமையை, கல் அட்டிகை வாங்கும் பணக்காரத்தனத்தை, பெண்ணின் கல்யாணத்திற்குச் செய்யப் போகும் சீர்வரிசைகளைப் பற்றிப் பேசாதீர்கள். மறுநாள் கல்கத்தா துர்கா பூஜைக்கு குடும்பத்தோடு போகப் போகும் விஷயத்தை பஸ் ஸ்டாண்டில் உரக்கப் பேசிய ஒரு பெண்ணின் வீட்டில் அவர்கள் புறப்பட்டுச் சென்ற மறுநாளே திருடன் புகுந்து வீட்டை ஒட்டு மொத்தமாகக் காலி செய்து விட்டான். ஊருக்குக் கிளம்புவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு பக்கத்து வீடுகளில் பாதுகாப்புக்காகச் சொல்லி விட்டுக் கிளம்புங்கள். எதையும் விளம்பரப் படுத்தாமல் நடத்துவது மிகவும் நல்லது.

கணவன், மனைவி, தந்தை, மகன், தாயார், மகள், உடன்பிறப்புக்கள் இவர்களுக்குள் மோதல் ஏற்பட்டு உங்களிடம் வந்தால் மிக மிக எச்சரிக்கையாகப் பேசுங்கள். பாசப் பிணைப்பில் உரிமையின் ஆதிக்கத்தில் ஏற்படும் நெருடல்கள் இவை. உணர்ச்சி வேகத்தில் எழுந்த மோதல்கள் அறிவுபூர்வமாக செயல்படும்போது சமரசமாகிவிடும். இடையில் மூக்கை நீட்டி நீங்கள் ஒரு பக்கமாக சப்போர்ட் செய்து பேசினால் அது உறவின் நெருக்கத்தையே பாதிக்கும். அந்தப் பாவம் நமக்கெதற்கு. "குடும்பம் என்றால் அப்படித்தான் இருக்கும். தயிர் சாதத்திற்கு சுவை கூட்டுவது ஊறுகாய்தானே. அது மாதிரிதான் இந்தப் பிணக்கெல்லாம்" என்கிற மாதிரி இளையவருக்கும், "நாம் பெற்ற குழந்தைகள்தானே உங்களுக்குத் தெரியாததையா நான் சொல்லப் போகிறேன். குழந்தை நம் மேல் அசிங்கம் செய்து விட்டால் காலையா வெட்டி விடுகிறோம். கழுவித்தானே சுத்தம் செய்கிறோம்" என்று பெரியவர்களுக்கும் பொதுவாக ஆறுதல் வார்த்தைகள் சொல்லி சிந்திக்க வையுங்கள்.

"கடைசியாக எதிலும் நான் சொல்வது தான் சரி" என்று வாதாடும் விதண்டாவாதப் பேர்வழிகளிடம் கூடியவரை அவசியம் ஏற்பட்டால் மட்டும் யோசித்து சிக்கனமாகப் பேசுங்கள். ஏனென்றால் பேச்சுத்தான் வளருமே ஒழிய பயன் ஒன்றும் இராது.



எச்சரிக்கை! சிந்திய வார்த்தைகள் நமக்கு எஜமானர்களாகி விடுகின்றன. கவனம் தேவை.

- சி. அலமேலு



எல்.கே.ஜி. முதல்

சுதந்திரப் பொன்விழா ஆண்டில் அமைதியாக மிகப் பெரும் சாதனைகளைப் படைத்து வரும் பெண்மணிகளைப் பாராட்ட வேண்டியது நம் கடமை. நாட்டிலே லஞ்சம், மதம், அரசியல் என வருத்தப்பட எத் தனையோ விஷயங்கள் இருந்தாலும், இன்றும் நாட்டுக்காக அமைதியாக உழைத்து வருபவர் களால்தான் நமது தாய்நாடு தலைநிமிர்ந்து நிற்கிறது. அப்படிப்பட்ட வர்களுள் ஒருவர் கல்வியாளர் திருமதி. சந்திரகாந்தி கோவிந்த ராஜுலு.

பல்லாயிரக்கணக்கான மாணவிகளுக்கு கல்வியோடு நுண்ணறிவையும், ஒழுக்கத்தையும், தேசப்பற்றையும் போதித்து வருகின்றன அவர் ஆலமரமென தழைத்துச் செழிக்கச் செய்திருக் கும் கல்வி நிறுவனங்கள். கோயமுத்தூரில் அவ ரைச் சந்தித்தபோது, 'எப்பேர்ப்பட்ட சாத னையாளர் இவ்வளவு எளிமையாகவா' என வியக்காமல் இருக்க முடியவில்லை...

தொழிலதிபர் ஜி. ஆர். கோவிந்த ராஜுலுவின் மிகப் பெரிய படம் மாட்டப் பட்டிருந்த அந்த வரவேற்பறையில் ஐந்து நிமிடத்திற்கு மேல் காத்திருக்க விடாமல் திருமதி. சந்திரகாந்தி உள்ளே நுழைந்தார். "மன்னிச்சுக்குங்கம்மா, உங்களை காக்க வச்சுட்டேன்" என்றவாறே அருகில் அமர்ந்தார். "என்ன சாப்பிடறீங்கம்மா? நீங்க காப்பி சாப்பிடுங்க சாமீ!" என இப்படி



• சந்திரகாந்தி கோவிந்தராஜுலு

ஆரம்பித்த உபசரிப்பு நாங்கள் அவருடன் இருந்த மூன்று மணி நேரமும் தொடர்ந்தது.

'வெள்'ளென நரைத்த தலை, கண்களில் கண்டிப்பும் கனிவும் ஒன்று சேர்ந்த பார்வை, 'விடுவிடு'வென ஒடிசலாக, விரிந்து கிடக்கும் கல்லூரி காம்பௌண்ட் முழுக்க வேகமாக செல்லும் நடை. எழுபது வயதான இந்த முதிய பெண்மணியின் சாதனைகளும், சமூகத் தொண்டும் மிகப் பல...

"கல்யாணமாகி குழந்தைகளோட வீட்டைப் பார்த்துக்கிட்டு சாதாரணமாகத் தான் இருந்தேன். என்னோட அப்பா, அம்மா ரெண்டு பேரும் ஒரே சமயம் இறந்துட்டது என்னை ரொம்பப் பாதிச்சது. பைத்தியம் பிடிக்கற அளவுக்குப் போயிட்டேன். சாப்



• மயூரி • சந்திரகாந்தி



பிடாம, குளிக்காம, தூங்காம... இப்படியே என்னைய விட்டா நான் பைத்தியமா போயிடுவேன்னு பயந்து போன ஐயா என்னிய ஏதாவது ஒரு வேலைல ஈடுபடுத்தணும்னு தீர்மானிச்சாரு.


அப்பதான் சந்திரா டெக்ஸ்டைல்ஸ் ஆரம்பிச்சு அது முழுக்க உன்னோட பொறுப்புன்னு எங்கிட்டே கொடுத்துட்டாரு. எனக்கென்ன தெரியும்? ஏதாச்சும் சந்தேகம் கேட்டா, சொல்ல மாட்டாரு. படி, தெரிஞ்சுக்க, கத்துக்க அப்படிம்பாரு. ஐயோ, நம்பகிட்டே ஒப்படைச்ச ஒன்னை நல்லபடியா பனக்கணுமே அப்படிங்கற ஆதங்கத்துல கண்ணும் கருத்துமா ஃபேக்டரிய பத்தி தெரிஞ்சுக்கிட்டேன். நிர்வாகம் புரிஞ்சுகிட்டேன்.

ஐயா எனக்கு ரொம்ப உறுதுணையா இருப்பாரு. இந்த இடத்துல ஒன்னு சொல்லணும். அவரு மாதிரி பொண்ணுக்கு சுதந்திரம் கொடுத்தவங்க வேறு யாரும் இல்லைன்னுதான் சொல்லணும். காலையில 'இங்க என்ன செய்யறே. வேலைக்குப் போ' அப்படின்னு துரத்துவாரு. வீட்டு வேலைக்கு ஆள் இருக்கறப்ப உன் திறமைய வேஸ்ட் பண்ணாதேம்பாரு. எம் புள்ளைங்க கூட அவங்க பொண்டாட்டிங்களுக்கு அவ்வளவு சுதந்திரம் கொடுக்கலைன்னுதான் சொல்லுவேன். ஐயாவால நிறைய படிச்சு, நிறைய தெரிஞ்சுக்கிட்டு நிர்வாகம் பண்ண ஆரம்பிச்சேன்.



• கல்லூரி வளாகத்தில்

அப்ப்தான் சமூகநல



• திருமணமான புதிதில்....


போர்டு சார்பாக கோயம்புத்தூர் டிஸ்ட்ரிக்டுக்கு என்னை சேர்மனா இருக்கச் சொல்லி கலெக்டர், ஊப்வாலா ஜாதவ், துர்காபாய் தேஷ்முக் எல்லாம் ரொம்ப வற்புறுத்தினாங்க. அப்ப ஒரே ஒரு கண்டிஷன்தான் போட்டேன். 'நான் எடுத்துக் கிராமங்களுக்குச் சேவை செய்யறேன். ஆனா நீங்க கொடுக்கற பணத்தை விட ஜாஸ்தி செலவு பண்ணுவோம். அதைக் கேக்கக் கூடாது!' என்றேன். அவர்களும் சம்மதித்தார்கள்.

அப்போது சமூகநல வாரியம் சேவை செய்துகிட்டிருந்த கிராமங்களுக்குப் போனப்போ கிராம மக்கள் எல்லாம் ஒன்னா சேர்ந்து மறியல் செய்ய ஆரம்பிச்சுட்டாங்க. காரணம், அதுக்கு முன்னாடி இருந்தவங்க இந்தத் திட்டம் அந்தத் திட்டம்னு நிறைய பணத்தைச் சாப்ட்டதுதான். சாயங்காலம் வரை அங்கேயே இருந்து அவங்களுக்குப் புரிய வச்சு, ராத்திரி அவர்கள்ல சில பேரை வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு வந்தோம். என்னடா போனவள காணோமேன்னு பயந்து போயிருந்த ஐயா அவர்களுக்குப் பல திட்டங்களுக்குப் பணத்தக் கொடுத்தாரு. அதற்கப்புறம் அவர்கள் புரிஞ்சுக்கிட்டாங்க.

அரசாங்கத்தின் பல நலத் திட்டங்களை நாங்க

எம்.பி.ஏ. வரை





• கல்லூரி

மேற்கொண்டு பணம் போட்டு நடத்தினோம்.

கிராம மக்களைப் பத்தியும், அவர்களின் பிரச்னைகளைப் பத்தியும் அந்தச் சமயத்தில் நான் நிறைய தெரிஞ்சுகிட்டேன்" என்கிறார் சந்திர காந்தி.

செஞ்சிலுவைச் சங்கத்தின் சேர்மன், கில்ட் ஆஃப் சர்வீஸின் கௌரவச் செயலாளர் என பல பதவிகள் இவரைத் தேடி வந்தன. திருமதி. அம்புஜம்மாள், ஜோதி வெங்கடாஜலம், துர்காபாய் தேஷ்முக், கிளப்வாலா ஜாதவ் என பெரும் சமூக சேவகிகளுடன் இணைந்து பல சமூகநலப் பணிகளை கோவையைச் சுற்றியுள்ள கிராமங்களிலும், மலைவாழ் மக்களுக்காகவும் நிறைவேற்றி இருக்கிறார். கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாகவும் சில காலம் பணியாற்றி இருக்கிறார். இன்றைக்கும் மிகவும் நலிவுற்றோர் பகுதியாக இருக்கும் மயிலாடும்பாறையிலும், வாழைத் தோட்டம் பகுதியிலும் ஏழை எளிய மக்களுக்காகப் பள்ளிகளை நடத்திக் கொண்டு இருக்கிறார்.

"இப்படி பல வேலைகள் என் மீது வந்து குவிஞ்சப்ப நானும் செஞ்சுகிட்டு இருந்தேன். அப்பதான் பள்ளி தொடங்கணும், நம்முடைய நிறுவனமாக ஆரம்பிக்கணும்னு ஐயா ஆரம்பிச்சதுதான் 1956-ல் ஜி.ஆர்.ஜி. பள்ளிகள். அது இன்னிக்கு ஆலமரமா வளர்ந்து ஜி.ஆர்.ஜி. காலேஜ் வரை வந்தாச்சு."

என முகத்தில் பெருமைபொங்கக் கூறுகிறார். அவர் பெருமைப்படுவதில் எந்தவித ஆச்சர்யமும் இல்லை என்பதை நாம் அந்தப் பள்ளிகளையும், கல்லூரியையும் சுற்றிப் பார்த்தபோது தெரிந்தது!

ஒரு பெண் குழந்தை ஜி.ஆர்.ஜி. பிரிபரேட்டரி ஸ்கூலில் எல்கேஜியில் சேர்ந்தால் எம்பிஏவோ, எம்சிஏவோ படிக்கும் அளவிற்கு ஒரே கூரையின் கீழ், ஒரே இடத்தில் உயர் கல்லூரி படிப்பு வரை அமைந்திருப்பது பிரமிக்கத்தக்கது.

மாபெரும் இடத்தில் விரிந்து கிடக்கும் அந்த வளாகத்தினுள் நுழைந்தால் எங்கு பார்த்தாலும் ஒரே சுத்தம், ஒழுக்கம், கட்டுப்பாடுதான். ஹாஸ்டலில் கைமணக்கும் சாம்பாரும்; பொரியலும் அற்புதமாக இருந்தது.

"காலையில் அம்மா வந்து நாங்க பண்ற ஒவ்வொரு அயிட்டமும் எப்படி இருக்குன்னு ருசி பாப்பாங்க அதனால. எப்பவும் ஒரு ஸ்பூனும், தட்டும் ரெடியா வச்சிருப்போம்" என்கிறார்கள்.

வண்ணத்துப் பூச்சிகளாக மலர்ந்திருக்கும் பள்ளி மாணவிகளைத் தாண்டி கல்லூரி வளாகத்தில் நுழைகிறோம். உறுதியாக எழுந்து நிற்கும் மாடிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு துறை வகுப்பறை. சமீபத்தில் தென்னிந்தியாவிலேயே முதலாவதாக பெண்களுக்காக எம்பிஏவும், எம்சிஏ வகுப்பும் ஆரம்பித்து இருக்கிறார்கள். வகுப்புத் துறை தலைவர்களான பேராசிரியர்கள் ஒவ்வொருவரும் பல்வேறு துறையில் சிறப்பு அவார்ட் வாங்கியவர்கள். தரத்திற்குக் கேட்பானேன்! கல்வித்தரம் மட்டுமில்லை, கட்டிடத் தரமும் அவ்வளவு ஸ்ட்ராங்கானது என்கிறார் இவருடைய மருமகள் நந்தினி.

"இப்போ இன்னும் ஒரு மாடி போட்டுக் கிட்டிருக்காங்க. அதுக்கு உபயோகப்படுத்தற கம்பிகளைப் போய்ப் பாருங்க. அவ்வளவு ஸ்ட்ராங்கா கம்பிகளும், கற்களும் இருக்கும் என்று சொல்லியிருந்தார். மேல் மாடிக்குப் போன போது அதை உணர முடிந்தது. அவ்வளவு கனமான கம்பிகள்! அப்படி ஒரு ஸ்ட்ராங்காக அமைக்கப்பட்டு வருகிறது அதைப் பற்றிப் பின்னர் குறிப்பிட்டபோது,

"ஆமாம்மா, இதோ நான் இருக்கேன் கொஞ்ச நாள்ல இருக்க மாட்டேன். ஆனா இன்ஸ்டிடியூஷன் நூத்துக் கணக்கான வருஷங்களுக்கு நிலைக்கணும் இல்ல!" என்கிறார். பல்லாயிரக்கணக்கான மாணவிகள் ஆரம்பக் கல்வியிலிருந்து முதுநிலைக் கல்வி வரை அங்கு படிக்கிறார்கள் என்று சொன்னால் அதற்குப் பின்னணியில் எத்தனை பாடுபட வேண்டும். கடந்த வருடம் இக் கல்லூரி சார்ந்த பாரதியார் பல்கலைக் கழகத்தின் 129 ரேங்கு

• எம்பிஏ துறைத் தலைவர்களுடன்



ஜாதிக் கற்கள் வாங்கி அணிவதுதான் முக்கியம் (சாதரண கற்கள் பயன் தராது) ஜாதிக் கற்கள் எந்த அளவு பலன் கொடுக்கிறது என்பது எங்களுக்கும், எங்கள் வாடிக்கையாளர்களுக்கும் தெரியும். நீங்களும் பயன் பெறுங்கள்!

உங்கள் ஜாதகப்படி அதிர்ஷ்டக் கல் அணிந்து வளமோடு வாழுங்கள்

1,திருமணம் நடைபெற தாமதமா? 2. திருமணம் ஆனபின் குடும்பத்தில் குழப்பமா? 3. குழந்தை இன்னும் பிறக்கவில்லையே என்ற வருத்தமா? 4. குழந்தைகளின் கல்வியில் தடங்கலா? 5. உத்தியோகம் கிடைப்பதில் தாமதமா? 6. செய்யும் தொழில், வியாபாரத்தில் நஷ்டமா? 7. உத்தியோகத்தில் முறைப்படி உயர்வு கிடைக்கவில்லையே என்ற வருத்தமா? 8. வசதிகள் இருந்தும் குடும்பத்தில் பிரச்சினைகள் இருக்கிறதா? 9. சொத்து, சுகம், வீடு, வாசல், பாகப் பிரிவினை போன்ற வழக்குகளில் தாமதமா? 10. வெகுகாலமாக பழைய சொத்துக்கள் விலை போகவில்லையே என்ற கவலையா? 11. உடல் நலம் ஆரோக்கியம் சரியாக அமையவில்லையா? 12. வெளிநாடு சென்று வியாபாரம், தொழில், செய்யலாமா?

மற்றும் (இதர) குறிப்பிட்ட பிரச்னைகளுக்கு தீர்வு காண... எங்கள் ஜோதிட வல்லுனரிடம் ஆலோசனை பெற்றுக்கொண்டு உங்கள் ஜாதகத்தில் உள்ள குறைகளை அறிந்து அவற்றை நிவர்த்தி செய் வதற்கு அதிர்ஷ்டக் கற்களை அணிந்து பயன்பெறுங்கள்.

இதோ எங்களது வாடிக்கையாளர் ஒருவர் கருத்து:

திரு. மகிந்திரகுமார், மெஜஸ்டிக் பார்க், சாலிகிராமம், சென்னை.

கைராசியான பத்மஸ்ரீ பேர்ல்ஸ் அவர்களின் ஆலோசனைப்படி நான் அவர்கள் கொடுத்த அதிர்ஷ்டக் கற்களை அணிந்தேன். எனக்கு நல்ல வேலையும், இந்த வருட இறுதியில் திருமணமும் நடைபெற உள்ளது. இந்த யோகத்திற்கு காரணமான பத்மஸ்ரீ பேர்ல்ஸ்க்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆயிரக்கணக்கான வாசகர்கள் எங்களை நாடி பல பிரச்னைகளுக்கு அவர்களுடைய ஜாதகத்தை துல்லியமாக ஆராய்ந்து சரியான ராசிக் கற்களை அணிந்து அவர்களுடைய ஜாதகத்தில் உள்ள பல தோஷங்களை நிவர்த்தி செய்து, இப்பொழுது சந்தோஷமாக இருக்கிறார்கள்.

எங்களிடம் ஆலோசனை பெற்று கற்களை அணிபவர்கள் ஆறு மாதத்திற்குள்ளேயே அதற்குண்டான முழு பலனை அடையலாம். (மற்றவர்கள் கூறுவது போல 1 வருடத்திற்கு காத்திருக்க தேவையில்லை) ஆறு மாதத்திற்குள் உங்கள் பிரச்னை தீர்க்கப்படாவிட்டால், எங்களிடமிருந்து பெற்ற கற்களை சிறிய தள்ளுபடியுடன் நாங்களே திரும்பப் பெறுகிறோம். ஏனென்றால் எங்களது ராசிக் கற்களின் தரத்தையும், ஆலோசனையையும் நாங்கள் முழுவதுமாக நம்புகிறோம்.

ஏன்? நீங்களும் தானே?

ஒருவர் எந்த கற்களை அணியவேண்டும் என்று கூறுவதற்கு ரூ. 151/- (மூன்று கேள்விகளுக்கும் பதில் அளிக்கப்படும்) வெளியூர் நபர்களுக்கு ரூ. 151/- மற்றும் கூடுதலாக ரூ. 30/- தபால் கட்டணம் செலுத்த வேண்டும். ஜாதகத்துடன் நேரிலோ (அ) ஜாதகத்தின் நகலையோ (அ) பிறந்த தேதி, நேரம், இடம் போன்ற விவரங்களை உங்கள் பிரச்னையுடன் *D.D/M.O.*வை *Padmashri Pearls*என்ற பெயரில் எடுத்து அனுப்பவும். **வியாபார முன்னேற்றத்துக்கும், குழந்தைபேறு இல்லாதவர்களுக்கும் சிறப்பு ஆலோசனை வழங்கப்படும். இதற்கான கட்டணம் ரூ. 300/-**

வெளிநாட்டில் வசிப்பவர்கள் US$ 15 பத்மஸ்ரீ பேர்ல்ஸ் என்ற பெயரில் டிமாண்ட் டிராஃப்ட் எடுத்து அனுப்பினால் கற்களுக்கான பலன்கள், ஆலோசனை மற்றும் கேள்விகளுக்கு பதில் பெற்றுக் கொள்ளலாம்.

E-mail: dynasoft @ md2. vsnl.net.in

தரமான Hyderabad முத்துக்கள் ஜாதி நவரத்தினக் கற்களின் விற்பனையாளர்கள்

PADMASHRI PEARLS

Jewellers & Gem Merchants

53, North Usman Road, T. Nagar, Madras - 17,

Ph: 8234060, 8226128, pager: 9632-756314

We Serve

1917-1992

75 Years

வேலை நேரம் : காலை 10.30 முதல் மாலை 8.30 வரை ஞாயிறு விடுமுறை

HYDERABAD SHOW ROOM: 2-4-47, M.G.ROAD, SECUNDERABAD - 3. PH: 841936

களில் 60 ரேங்க்குகள் இக்கல்லூரி மாணவிகள் வாங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் எவ்வளவு உழைப்பு அதன் பின்புறம்' இருக்க வேண்டும்!

ஆங்காங்கே கோயில்கள். பிள்ளையார் தலைப்பாகை அணிந்து கம்பீரமாக அமர்ந்திருக்கிறார். தலைப்பாகையைப் பற்றிக் கேட்ட போது அப்போதுதான் ராஜ கம்பீரமாக இருக்குமாம்!

ராஜ கம்பீரம் பிள்ளையாரிடம் மட்டுமல்ல அந்த மூதாட்டியிடமும் குடிகொண்டிருந்தது. இந்த முதிய வயதிலும் அயராத உழைப்பு. காலையிலேயே எழுந்து கல்லூரி வளாகத்திற்கு வந்து மதியம் வரை மேற்பார்வை, மீண்டும் மாலையில் ஒரு ரவுண்ட். இப்படி பதினைந்துக்கும் மேற்பட்ட தங்களுடைய கல்வி நிறுவனங்கள் தலைசிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக இதையே தியானமாகக் கொண்டு இருக்கிறார்.

"இத்தனை வேலைகளையும் வைத்துக் கொண்டு எப்படி உங்களால் பதறாமல் சிதறாமல் இருக்க முடிகிறது" என்று கேட்டதற்கு,

"ஆன்மீக உணர்வுதான் காரணம். சுவாமி சித்பவானந்தா சுவாமிகளிடம் எங்களுக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. அவரைக் குருவாகக் கொண்டு இருக்கிறோம். அவருடைய ஆன்மீக வழிகாட்டுதலில் நான் எப்பேர்ப்பட்ட பிரச்னைகளையும் பதறாமல் எடுத்துக் கொள்கிறேன்.

இந்த ஆழ்ந்த ஆன்மிக உணர்வு இருப்பதால்தான் வாழ்க்கை, தலைவிதி, கிரகங்கள் இதிலெல்லாமும் எனக்கு நம்பிக்கை வந்தது. அவனின்றி ஓரணுவும் அசையாது. அதே போல சரியாகக் கணிக்கப்படும் ஜாதகப் பலன் நமக்கு நன்றாக வழிகாட்டும் என்பதில் சந்தேகமில்லை" என்கிறார்.

இவருக்கு முதல் குழந்தை பிறந்தபோது இரண்டாவது மகன் இத்தனை வருடம் கழித்துப் பிறப்பான் என்று சொன்னதையும், அப்போது குடும்பத் தலைவியாக இருந்த இவர் எதிர்காலத்தில் பல நிறுவனங்களை நடத்துவார் என்று சொன்னதையுமே அதற்கு உதாரணங்களாகக் கூறுகிறார்.

நம்முடன் வந்திருந்த பிறந்த நேர அடிப்படையில் ஜோதிடம் சொல்வதில் வல்லுநரான வி.எஸ். மயூரியிடம் நீண்ட நேரம் இதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். அவருக்கிருந்த ஆழ்ந்த ஜோதிட ஞானத்தைப் பற்றி மயூரி அப்புறம் வியந்து பேசிக் கொண்டிருந்தார்.

அவர்களுடைய சுவாரஸ்யமான உரையாடலில் நடுவில் நாம் புகுந்து மயூரியிடம் கேட்டோம் –

"நீங்க என்னவோ கட்டத்துக்குள்ள செவ்வாய், சந்திரன்னு போடறீங்க. ஆனால் மனுஷன் செவ்வாய்க் கிரகத்திலேயே போய் இறங்கிட்டானே."

"இருக்கலாம். கிரகங்களின் 'பிஸிகல் பாடி' யில்தான் அவர்கள் ஆராய்ச்சி செய்கிறார்கள். சந்திரன் கூட அப்படித்தான். ஆனால் அதன் ஆன்மாவை அவர்களால் ஆராய்ச்சி செய்ய முடியாது. செவ்வாய் சிவப்புக் கிரகம் என இப்போதுதான் சொல்கிறார்கள். ஆனால் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே நம்முடைய முன்னோர்கள் ஞானத்தினால், அதனைக் கண்டுகொண்டு சொல்லி இருக்கிறார்கள். விஞ்ஞானம் பார்ப்பது கிரகங்களை வெளிப்புறம்தான் பார்க்கிறது. ஆனால் நம்மவர்கள் கிரகங்களின் ஆன்மாவைக் கண்டிருக்கிறார்கள்.

உதாரணத்திற்குச் சொல்லப் போனால் சந்திரன் மனது சம்பந்தப்பட்ட கிரகம். அங்கே நேரே சென்று இறங்கி விட்டு வந்தவர்கள் மிகுந்த மனநிலை பாதிக்கப்பட்டார்கள் என்று செய்திகள் எல்லாம் அப்புறம் வந்ததே!"

என்றார் மயூரி. சந்திரகாந்தி, "நம் முன்னோர்கள் ஒரு வழிகாட்டியாக இந்த ஜோதிடத்தை அமைத்திருக்கிறார்கள். காரில் போகும் போது கடினமான பாதையென்றால் மெதுவாகப் போவதில்லையா? அது மாதிரிதான், கஷ்டம் என்று வரும்போது நிதானமாக சென்றால் அதிக துன்பம் நம்மைப் பாதிக்காது இல்லையா?" என்றார்.

ஒரு சாதனைப் பெண்ணாக இத்தனை நிறுவனங்களையும் நடத்துகிறார் என்றால் அந்தத் தலைமைக்குரிய அத்தனை பண்புகளும் திருமதி. சந்திரகாந்தியிடம் கொட்டிக் கிடக்கிறது. ஆழ்ந்த தெய்வபக்தி, வாழ்வைப் புரிந்து கொண்ட ஞானம், கனிவு, கண்டிப்பு, எளிமை, உயர்ந்த இலட்சியம், தொலைநோக்குப் பார்வை... இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். பல்லாயிரக்கணக்கான மாணவிகளின் கல்விக் கண்களைத் திறந்து தானே அவர்களுக்கு முன்னுதாரணமாகவும் திகழுகிறார் திருமதி. சந்திரகாந்தி கோவிந்தராஜுலு.

– மஞ்சுளா ரமேஷ்

நல்ல வேப்பிலையை எடுத்து அத்துடன் கடுக்காயையும் வசம்பையும் சேர்த்து நன்றாக அரைத்து தேங்காய் எண்ணெயுடன் கலந்து வெய்யிலில் வைத்து பிறகு தலைக்கு தடவி வந்தால் பேன் இல்லாமல் போய் விடுகிறது. எங்கள் வீட்டில் குழந்தைகள், பெரியவர்கள் யாவருக்கும் தலையில் உள்ள பேன் பொடுகு அறவே போய் விட்டது.

– வி. கே. ராஜலக்ஷ்மி



தேர்ந்தெடுக்கப்பட்ட எழுத்துக்களுக்கு

ரூபாய் ஐந்து லட்சம் மதிப்புள்ள உஜாலா பரிசுகள்



உங்களுடைய கருத்துக்களை எங்களுக்கு எழுதவும்

இப்போது உஜாலாவின் டாம்பர் - ப்ரூஃப் மூடியும், ஃபில்ஃபர் - ப்ரூஃப் டிராப்பரும் ஜோதி ஆய்வுக்கூடத்தில் டிசைன் செய்யப்படுகின்றன. உங்களைப் பாதுகாக்க அவை எவ்வாறு வேலை செய்கின்றன ?

இன்று, தின் லேயர் க்ரோமெடோகிராஃபி (TLC) மற்றும் காஸ் க்ரோமெடோகிராஃபி மாஸ் ஸ்பெக்ட்ரோமெட்ரி (GCMS) பரிசோதனைகளில் முன்னேற்ற நாடான ஜெர்மனியில் தடை செய்யப்பட்டுள்ள அமின்ஸ் இல்லாத ஒயிட்னர் உஜாலா-வுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. சருமத்தில் எரிச்சல் மற்றும் வாயில் பட்டால் விஷத் தீங்கு இல்லை என்று பரிசோதனையில் தெரிகிறது. மேலும் விஷத்தன்மையற்றது. அதோடு, உஜாலா பல இதர தனித்தன்மை வாய்ந்த குணங்களைக் கொண்டுள்ளது. அவை என்ன ?

உஜாலாவை உபயோகிப்பதற்கு சரியான முறை என்ன ?

விஞ்ஞான ரீதியற்ற ஒயிட்னர்களை நீண்ட நாட்களுக்கு உபயோகிப்பது ஆரோக்கியத்திற்கும், உடைகளுக்கும் நல்லதல்ல. ஆகவே அதுபோன்ற தயாரிப்புகளை உபயோகிக்கத் துவங்கியவர்கள் மீண்டும் உஜாலாவையே உபயோகிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

Write to : **Jyothy Laboratories (UJALA)**, 2- A, Singarayar Mansion, Abhirami Avenue, Meenambal Salai, K. Kannadasan Nagar, Madras - 600 118.

சூரியன் ஒருநாள்


நமது பூமியின் ஆதார சக்தியான சூரியன் சுமார் 1200000 கிலோ மீட்டர் விட்டம் உடைய தாகும். சூரியனிலிருந்து கிளம்பும் ஒளிக்கற்றை சுமார் 8 நிமிட நேரத்தில் பூமியை வந்து அடைகிறது. நாம் ஒரு விமானத்தில் மணிக்கு 600 கிலோ மீட்டர் வேகத்தில் சென்றால் சூரியனை சுமார் 30 வருடத்தில் சென்று அடைவோம்! சூரியனை சென்று அடையும்முன்பே வெப்பத்தினாலும், மின்காந்த அலைகளாலும் எரிந்து சாம்பலாகி விடுவோம் என்பது வேறு விஷயம்!

நமது சூரிய உலகத்தில் சூரியன் மட்டுமேதான் தானே ஒளிரும் தன்மை கொண்டது. மற்ற அனைத்து 9 கிரஹங்களும் சூரியனின் ஒளியைப் பிரதிபலிக்கின்றன. சூரியனும் ஒரு சிறிய நட்சத்திரமே. சூரியனை நாம் நேராகவோ அல்லது டெலஸ்கோப் மூலமாகவோ பார்க்கக் கூடாது. கண்ணாடியின் மூலம் சூரியனின் பிம்பத்தை ஒரு வெள்ளைத் திரையில் விழச் செய்து பின்பு அதைப் பார்க்கலாம் அல்லது நமது முன்னோர்கள் சொல்லிக் கொடுத்தபடி இரு கைகளை கோர்த்துக் கொண்டு விரல்களின் இடைவெளி மூலம் பார்க்கலாம். அஸ்தமன சூரியனையும், உதயசூரியனையும் நேராக பார்ப்பதால் கெடுதல் வராது. கன்யாகுமரியில் சூரிய உதயத்தையும், மாலை வேளைகளில் சந்திரன் உதயத்தையும் சூரிய அஸ்தமனத்தையும் காண கண் கோடி வேண்டும். கடலின் ஒருபுறத்தில் சூரிய அஸ்தமனம். மறுபுறத்தில் சந்திரனின் புறப்பாடு காணக்கிடைக்காத காட்சி.

நம்மால் தொலைநோக்கி (Telescope) இல்லாமல் பார்க்க முடியும் கிரகங்கள் காலையில் வெள்ளி, மற்றும் செவ்வாய். சில மாதங்களில் வெள்ளி சந்திரனுக்கு அருகே உதயமாகும் இவை தோன்றி மறையும் காலங்கள் Almanal என்று சொல்லக்கூடிய பஞ்சாங்கத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நமது Galaxy ஆன 'மில்கிவே'யில் மட்டுமே பல கோடி நட்சத்திரங்கள் உள்ளன. ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் சூரியனுக்கு இருப்பதைப் போன்று கிரகங்கள் இருக்கக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது. இவ்வளவு பெரிய அண்டத்தில் நமது பூமி கீழே விழாமல் இருக்கக் காரணம் புவிசார்ப்பு விசையே என்பது உங்களுக்குத் தெரியும். இதைக் கண்டுபிடித்துக் கூறியவர் ஐசக் நியூட்டன்.

முன்பு, பூமி ஒரு தட்டையான பலகை போன்றது என்றும் ஆமை, யானை, மனிதன் (Atlas) போன்றவர்கள் தாங்கிப் பிடித்திருந்தார்கள் என்றும் நினைத்தார்கள். சூரியன்தான் பூமியைச் சுற்றி வருகிறது என்று நினைத்தார்கள். அவ்வாறு இல்லை




பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது என்று சொன்ன கலீலியோவிற்கு பெருத்த எதிர்ப்பு இருந்தது. அண்டத்தில் நான்கு விதமான விசைகள் இருக்கின்றன. அவைகளாவன :

புவிசார்ப்பு விசை : அண்டத்தில் உள்ள ஒவ்வொரு பொருளும் மற்ற பொருள்களை தன்னிடம் ஈர்க்கின்றன. பொருள் பெரியதாக இருந்தால் விசையும் பெரிதாக இருக்கும். பூமியைச் சந்திரன் இழுக்கப் பார்க்கிறது. சந்திரனை பூமியை இழுக்கப்

பார்க்கிறது. இவை இரண்டையும் சூரிய செவ்வாய் மற்றும் மற்ற கிரகங்கள் இழுக்கப் பார்க்கின்றன. இந்த விசைகளின் விளையாட்டுதான் நமது பூமி சூரிய மண்டலத்திலிருந்து பிரிந்து செல்லாமல் பார்த்துக் கொள்கிறது. இதை 'G' constant என்று கூறுவர்.

பூமியும் தன்னைத்தானே சுற்றிக் கொள்ளும்போது பூமியின் மேற்பரப்பில் உள்ள நாம் பறந்து செல்லாமல் இருப்பதற்குக் காரணம் பூமியின் புவிசார்ப்பு



விசையே. அதனால்தான் மரத்திலிருந்து விழுந்த தேங்காய் மேலே பறக்காமல் பூமியை வந்து அடைகிறது. சந்திரனுக்குப் புவிசார்ப்பு விசை குறைவு. நமது பூமியில் 5 அடி தாண்டும் மனிதன் சந்திரனில் 25 அடி சுலபமாக தாண்ட முடியும்.

அணு விசை : (நியூக்கிளியர்போர்ஸ்) அணுவின் உட்கருவில் புரோட்டான்கள் எனப்படும் (+vely) நேர்சக்தி கொண்ட துகள்கள் உள்ளன.

எலக்ரோட்ஸ்டாடிக் (Electrostatic) வரிசையின் விதிப்படி நேர்திசை கொண்ட துகள்கள் ஒன்றையொன்று எதிர்க்கும். எதிர்திசை கொண்டவை ஈர்க்கும். புரோட்டான்கள் அனைத்தையும் தன்னுள்ளே அடக்கி வைத்திருப்பது அணுவிசை ஆகும். அணுவிசை மிகக் குறைந்த தூரத்திற்கு மட்டும் (10^{-13}Cm) வெளிப்படுத்தக்கூடியது.

சூரியனின் மேற்புறத்தில் சுமார் 6000°C (டிகிரி) உஷ்ணம் உள்ளது. இந்த வெப்பமானது சில காலங்களில் அதிகரிக்கிறது. சூரியன் இவ்வளவு வெப்பத்தை எப்படி ஒரே சீராகத் தருகிறது என்பது வெகு காலமாக புரியாமல் இருந்தது. அதைப் புரியவைத்த பெருமை ஆல்பர்ட் ஐன்ஸ்டினையே சாரும்.

$E = Mc^2$ என்பது ஐன்ஸ்டைனின் தத்துவங்களுள் தலையான ஒன்று. அதாவது ஒரு பொருளிலிருந்து வெளிப்படும் சக்தியானது ஒளியின் வேகத்தைப் போல இருமடங்கு உடையதாக இருக்கும்.

E = Energy (சக்தி)
M = Mass (எடை)
C = ஒளியின் வேகம் ($3X10^{10}$ cm/sec)

மறைந்து போகுமா?

சூரியனில் 75% ஹைட்ரஜனும் 25% ஹீலியமும் உள்ளன. நான்கு ஹைட்ரஜன் அணுக்கள் சேரும்போது ஒரு ஹீலியம் அணு உருவாகிறது. ஆனால் நான்கு ஹைட்ரஜன் அணுக்களின் எடை ஒரு ஹீலியம் அணு எடையை விட சிறிதளவு அதிகமாக உள்ளது. அந்த சிறிதளவு அதிகமான எடை ஒளியின் வேகத்தின் இரு மடங்காக பெருக்கப்படும் போது மிகப் பெரிய சக்தி வெளிப்படுகிறது! இதுவே சூரியனின் வெப்ப வெளிப்பாடு.

இதை (Fusion) அணுச் சேர்க்கை சக்தி என்று கூறுவர்.

நமது அண்டத்தில் சூரியனின் கதிதான் என்ன? எத்தனை நாட்களுக்கு அல்லது வருடங்களுக்கு இவ்வாறு ஒளியையும் சக்தியையும் தர முடியும். கவலையே பட வேண்டாம். இன்னும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகுதான் சூரியனின் சக்தி தீரும். பிறகு ஒரு சமயம் சூரியன் உண்மையிலேயே அஸ்தமித்துப் போகும். அதற்குள் நமது விஞ்ஞானம் வேறொரு மாற்று சக்தியை தர முடியும் என நம்புவோம்.


ஒவ்வொரு கிரிஜா
சேலையும், தரச்
சோதனைக்குட்பட்டது.
ஒவ்வொரு தாமான கிரிஜா
சேலைக்கும் ஒரு
ஹோலோகிராம் முத்திரை
உண்டு.
Enchanté

விண்வெளியில் பல நட்சத்திரங்கள் சூரியனைவிட பல மடங்கு பெரியவை. நமது சென்னையைச் சேர்ந்த விஞ்ஞானி திரு சுப்பிரமணிய சந்திரசேகர் 1935ல் சூரியனைப் போல் மூன்று மடங்கு பெரிய நட்சத்திரங்கள் தன் சக்தியை இழந்தபின் சூப்பர் கிராவிட்டி என்று சொல்லக்கூடிய புவி ஈர்ப்பு விசையில் ஈர்க்கப்பட்டு 'கருங் குழிகளாக' (Black hole) மாறி விடும் என்று கூறினார். இதற்காக அவருக்கு சுமார் 50 வருடங்கள் கழித்து நோபல் பரிசு வழங்கப்பட்டது.

கருங் குழிகள் கருப்பான நிறம் உடையவையா என்பது தெரியாது. அதன் மீது செலுத்தப்படும் ஒளி அல்லது ரேடியோ அலைகள் திருப்பி அனுப்பப்படுவதில்லை. வேனிற்கால இரவில் வானத்தின் தென்கிழக்கு மூலையில் 'பளிச்'சென்று தெரியும். சிரியஸ் என்ற நட்சத்திரம் கருங் குழியாகத்தான் மாறும் என்பது அதன் விதி. கருங் குழிகள் தன்னுள் மற்ற பொருட்களை ஈர்த்துக் கொள்ளும்போது அவற்றுக்கு நேரம் நின்று விடுகிறது என்கிறார் ஸ்டீவன் ஹாகிஸ். அந்த நேரம் என்பது என்ன?

நமது பூமியை 9 கிலோமீட்டர் விட்டத்திற்கு அழுத்த முடியுமானால் நமது

விழுந்தால் அவன் நம்மூர் சேமியா போல பிழியப்படுவான். ஏன் என்றால் அவன் கால் பகுதியில் புவி ஈர்ப்பு விசை அதிகமாகவும் தலைப்பகுதியில் புவிஈர்ப்பு விசை வேறு அளவுகளாகவும் இருக்கும். அவனுக்கு நேரம் நின்று விடுகிறது.

கருங்குழிகள் இருப்பது 1973ல்தான் நிருபணம் ஆகியது.


சரி, சூரியனின் கதி என்னவாகும்? அது தன்னுள் உள்ள நியூக்ளியர் பொருள் தீர்ந்தவுடன் எல்லா நியூட்ரான்களும் ஒன்று சேர்ந்து நியூட்ரான் ஸ்டாராக மாறும். ஒளிரும் தன்மை விலகிவிடும். நியூட்ரான் நட்சத்திரம் மிகவும் அடர்த்தி மிகுந்தது. கற்பனைக்கெட்டாத கனத்த பொருளாக மாறி விடும். ஒரு தேக்கரண்டி நியூட்ரான் ஸ்டாரின் மணல் சுமார் 2000 கிலோ எடை இருக்கும்!

நமது அண்டத்தின் பிறப்பு மிக ஆச்சரியமான ஒன்றாகும் 15 மில்லியன் (10^9) வருடங்களுக்கு முன்பு என்னதான் இருந்திருக்கும். நமது அண்டத்தின் தலைவிதிதான் என்ன? விரிந்து கொண்டே இருக்கும் இது என்றாவது சுருங்க ஆரம்பிக்குமோ? பல கேள்விகளுக்கு விடைகள் கண்டுபிடிக்க வேண்டியுள்ளன. நமது புதிய தலை



ஆஸ்துமாவா! ஈஸ்னோபீலியாவா! சைனஸா! காசநோயா!

இனி கவலையே வேண்டாம்!



அறிகுறிகள் :

மூக்கில் நீர்வடிதல், சளி, தும்மல், இருமல், கபம், மூக்கடைப்பு, மூச்சுத் திணறல், ஒவ்வாமை, பலஹீனம், உடல் மெலிதல், பசியின்மை, உடல் நடுக்கம், மலச்சிக்கல் போன்றவைகள் இருப்பின் ஆஸ்துமா, ஈஸ்னோபீலியா, காசநோய், சைனஸ் போன்றவைகளாக இருக்கலாம்.

தவிர்க்க வேண்டியவை

டீ, காபி போன்ற பானங்கள், சர்க்கரை உபயோகித்த உணவுப் பொருட்கள், உடலில் குளிர்ச்சி தன்மை ஏற்படுத்தக் கூடிய காய்கறி, பழவகைகள், அடிக்கடி ஆங்கில மாத்திரையின் உபயோகம் முதலானவை களை அறவே தவிர்த்தல் மிகவும் அவசியமாகும். புகை காற்று படும்படியாக தொழிற்சாலை களில் வேலை பார்ப்பது போன்ற சூழ்நிலைகளையும் தொழிற்சாலை புகை அதிகமிருக்கும் இடங்களில் வசிப்பதையும் முடிந்த மட்டும் தவிர்த்தல் வேண்டும். புகை பிடித்தல், மது அருந்துதல் தவிர்க்கவும்.

மூலிகை மருத்துவம் :

வேப்பிலை, ஆடாதோடை, அருகம்புல், வில்வம், கீழாநெல்லி, ஓமவல்லி, தூதுவளை, துளசி, தும்பை முதலானவைகளை உலர்த்தி பொடி செய்து சம அளவில் கலந்து வைத்துக் கொள்ளவும். இக்கலவையிலிருந்து 1 டீ ஸ்பூன் பவுடரை 1 டம்ளர் தண்ணீரில் கலந்து காலை உணவுக்கு அரை மணி நேரம் முன்னதாகவும் பின் அதே அளவு கலவை தயார் செய்து மதியம், இரவு உணவுகளுக்கு முன்பாக குடிக்கவும்.

உணவு :

சாதாரண சைவ உணவு சாப்பிடுவதில் ஆஸ்துமா நோயாளிகளுக்கு எவ்வித கெடுதலும் கிடையாது. இரவு நேர உணவை முடிந்த மட்டும் அரைவயிறு உணவாக உண்பது நலம். அதிக கார வகை உணவுகளையும் தவிர்த்தல் நல்லது. அதிக காரவகை உணவுகளை உண்ணும்போது மலச்சிக்கல் ஏற்பட்டு அதனாலும் ஆஸ்துமா தீவிரமடைய வழிவகுக்கும். அசைவ உணவுகளை குறைப்பது மிகவும் நல்லது. மற்றபடி பச்சை தண்ணீர் நிறைய குடிப்பது மிகவும் சிறந்தது.

காரணம் :

சிறுநீரகங்களால் பிரித்தனுப்ப முடியாத இத்தகைய அழுக்குகள் அதிகப்படியான நாட்கள் தொடர்ந்து இரத்தத்தில் தங்க நேர்ந்தால் உடலின் வெப்பநிலையில் மாறுதல் ஏற்பட்டு உடல் குளிர்ச்சி தன்மையடையும். இத்தகைய நேரத்தில் இரத்தத்தில் தண்ணீரின் அளவும் அதிகரித்து முகம் வீங்கிக் காணப்படும். தலை, கழுத்து, முகம் போன்ற பாகங்களில் வலி தோன்றக்கூடும். இதனை சைனஸ் என்றழைக்கின்றனர்.

நுரையீரல் தசைப்பகுதிகளுக்கு போதிய சக்தி கிடைக்காததால் அவைகள் சரியான திறனோடு இயங்க முடியாமல் இருக்கும்போதும், நரம்பு மண்டல இயக்கம் சரியாக நுரையீரலின் இயக்கத்தில் ஈடுபடாமலும் இருக்கும் சமயத்தில் மூச்சு வாங்குதல் ஏற்படும். இதனை ஆஸ்துமா என்றழைக்கின்றனர். நரம்பு மண்டல இயக்கத்தில் ஏற்படும் மாற்றத்தினாலோ, சிறுநீரகப் பகுதிகளில் ஏற்படும் கோளாறுகளாலோ, மூச்சுத்திணறல், மூக்கடைப்பு, மூக்கில் நீர் வடிதல், தும்மல், இருமல், கபம், பீனிசம் போன்றவை ஏற்படுகின்றன. இரத்தத்தில் அசுத்தம் ஏற்படும்போது உடலின் எதிர்ப்பு திறன் படிப்படியாக குறைவடையும். உடலில் எதிர்ப்பு சக்தி குறைவடையும் போது நுரையீரல் தசைகளும் வலுவிழந்து காணப்படும். அசுத்தக் காற்று, புகை, தூசி போன்றவைகள் காற்றின் மூலம் நுரையீரலுக்குள் செல்லும் போது மூச்சுத் திணறல், தொடர் தும்மல் ஆகியவை உடனடியாக ஏற்படும். இதையே (Dust Allergy) அலர்ஜி என்கின்றனர்.

பயிற்சிகள் : தினமும் காலையில் மூச்சுப் பயிற்சி செய்தல், தினமும் குறைந்தது ஒரு மணி நேரமாகிலும் சூரிய ஒளியில் இருப்பது, மாலை நேரங்களில் பூங்காக்கள், பயிர்கள் நிறைந்த வயல்வெளிகள் போன்ற இடங்களில் அமர்ந்து ஆக்ஸிஜன் நிறைந்த காற்றினை சுவாசிப்பதும் மூச்சுத்திணறலை குறைக்க வழி வகுக்கும்.

குறிப்பு : தற்போது ஆங்கில மாத்திரைகளை உபயோகித்து கொண்டிருக்கும் நோயாளிகள், மூலிகை மருந்துகளை உபயோகப்படுத்தத் தொடங்கி குறைந்தது 1 மாதம் வரை பாதி அளவு ஆங்கில மாத்திரைகளை உபயோகித்துக் கொள்ளவும். ஏனெனில் மூலிகை மருந்துகள் உடலில் சேர குறைந்தது 20 நாட்களாவது தேவைப்படும். இரண்டாம் மாதம் முதலாக அலோபதி மருந்துகளை முழுவதுமாக நிறுத்திவிட்டு மூலிகை மருந்துகளை மட்டும் உபயோகிக்கலாம்.



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : Dr.C.K.M.**குருபரன்** & Dr.C.K.M.**சபாபதி**, S/o.Dr.C.K. **மாணிக்கவாசகம்**

P.B. No:30, No:3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர்(N.A.A.) 635 601 ✆: 04179-20469, 22769.

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை-10.

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1 மாலை 6 to 8 ✆ : 6424285, 6427638

குறிப்பு : சென்னை, வேலூர், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, பெங்களூர் ஓசூர், கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு, கோவை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, நாமக்கல், ஆம்பூர், காஞ்சிபுரம், தர்மபுரி, திருப்பூர், உடுமலைபேட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில், விருதுநகர், கரூர் போன்ற நகரங்களில் வைத்தியரை நேரில் சந்திக்க முகாம்-விவரம் தெரிந்து கொள்ள மேலே உள்ள முகவரிக்கு கடிதம் (அ) போன் மூலம் தொடர்பு கொள்ளவும்.

தகவல் : டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 22 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய 'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்' என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ.60/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய 'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்' என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.55/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.45/-ம் தலைமை முகவரிக்கு D.D. அனுப்பவும்.



①

அழகு ஒன்றும் புதிதல்ல!




②



③



④



“நம்முடைய பழைய சிறப்பான அழகு சிகிச்சை முறைகளைத்தான் நாங்கள் நவீன வடிவத்தில் கொடுக்கிறோம்...” என்கிறார் ‘தி விஸிபிள் டிஃபரன்ஸ்’ (தொ - 8254079) எனும் பெயரில் அழகுக் கலை நிலையம் வைத்திருக்கும் திருமதி. வசுந்தரா.

பியூட்டி பார்லர் என்றாலே ஏதோ நாகரீகமான பெண்களும், வசதி உள்ளவர்களும்தான் செல்லுமிடம் என்ற எண்ணம் இன்றுகூட பலருக்கும் உண்டு. பார்லர்களில் இரசாயனக் கலவைகளைக் கொண்டு அழகு செய்கிறோம் என்று எண்ண வேண்டாம். அந்தக் காலத்தில் நம் வீடுகளிலேயே அழகுக்காக செய்து கொண்ட பல வித சிகிச்சைகள்தான் இந்தக் காலத்தில் பார்லர்களில் செய்கிறோம், ஆனால் சில மாற்றங்களோடு. அப்பொழுதெல்லாம் சமையலுக்குப் பயன்பட்ட மஞ்சள், பயறு போன்றவைகளை உபயோகித்தார்கள் - இப்பொழுது கொலோஜன், ஃபேஸ்பேக் என்ற பெயர்களில் நாம் நவீன அழகு சாதனங்களை உபயோகிக்கிறோம். அவ்வளவுதான்.

முன் காலத்தில் எண்ணெய் தேய்த்து வாரம் இருமுறை நீராடுவார்கள். அதைத்தான் இப்பொழுது "pressure point" massage என்று கொடுக்கிறோம். முகத்தில், நெற்றியில் இப்படி (படம் 1 & 2ல் காண்பித்துள்ளபடி) சில முக்கிய புள்ளிகளில் அழுத்தம் கொடுத்து மஸாஜ் செய்யும்போது மன வலிமை கூடும். தலைவலி தீரும். சிறு நீரகங்கள், கல்லீரல், மண்ணீரல் போன்ற எல்லா உள்ளுறுப்புகளும் நன்கு இயங்கும். மலச்சிக்கல் தீரும். முகம் பளபளக்கும். கண்களின்

⑧



கிழும் கருவளையத்தை நீக்க இது போன்று activator (படம் 3) என்ற கருவியால், ஜெல் தடவி அதை இயக்கினால், கோடுகள் விரைவில் மறைய வாய்ப்புகள் உண்டு.

'மஸாஜ்' இல் குறிப்பிட்டுள்ள புள்ளிகள் (படம் 9)



⑦

1. மனவலிமை/ தலைவலி 2. தலைவலிக்கான புள்ளி, 3. ஜீரணம், 4. சிறுநீரகங்கள், 5. மலக்குடல், 6. பாலின உறுப்புகள், 7. மண்ணீரல். 8. கணையம், 9. ப்ளேடர், 10. நுரையீரல், 12. வலது பக்கக் கல்லீரல், 13. நரம்பு மண்டலம், நம்பிக்கை, 14. ஜீரணம், சுவாசம், பாலியல் - இவைகளில் நல்ல சக்தி உண்டாகுதல், 15. மலச்சிக்கல், 16 வயிற்றுப் பகுதி.



⑥

இப்படி உள்ள முக்கிய புள்ளிகளில் மஸாஜ் செய்வதுதான் பிரஷர் பாயிண்ட் facial. Vit A,D,E சேர்ந்த உயர்ந்த ரக க்ரீம் பயன்படுத்தி இது போன்ற மஸாஜ் செய்யப்படுகிறது. இதை நம் இரு கைகளின் 2, 3-ஆவது விரல்களால் அழுத்தி 10 வினாடிகள் வரை வைத்து செய்யும் பொழுது முகத்திற்குப் பொலிவும் நல்ல மன நிம்மதியும் கிடைக்கிறது. அழகுடன் ஆரோக்கியமும் தரும் இந்தக் கலைக்கு 'ரிஃப்ளெக்ஸாலஜி' என்று பெயர். இது போன்ற pressure point மஸாஜை பார்லர்களில் 'மேனிக்யூர்' 'பெடிக்யூர்' முறைகளிலும் செய்கிறோம்.



⑤

வயது ஏற ஏற முகத்தில் உள்ள சருமத்தில் துவாரங்கள் மிகவும் பெரியதாகி விடும். இவைகளில் கறும்புள்ளிகள் தோன்றும். இதனால் சருமம் மிகவும் 'டல்'லாகக் காணப்படும். திறந்திருக்கும் இந்தத் துவாரங்களை மூட பயன்படும் நவீன கருவிதான் 'அக்ஸிலேஷன்' (படம் 4) என்பது. அடர்ந்த புருவம்தான் முகத்தின் அழகைக் கூட்டும் சிலருக்கு அப்படி அமைவதில்லை. அவர்களின்

குறையையும் இப்பொழுது நிவர்த்தி செய்யலாம். Pigment implant செய்து புருவத்திற்கு (படம் 6) அடர்த்தியான தோற்றத்தைத் தர முடியும். அதேபோல முகத்தில் விரும்பும் இடத்தில் நிரந்தரமாக அதிர்ஷ்ட மச்சங்களைப் பதித்துக் கொள்ளலாம். அந்தக் காலத்தில் தினமும் மையினால் தாற்காலிகமாக வைத்துக் கொள்வார்கள்.


அடுத்து முடிப் பராமரிப்பு. இதில் அந்தக் காலமுறைதான் திரும்பியுள்ளது எனலாம். எண்ணையைக் காய்ச்சி வாரம் இருமுறை தேய்த்துக் குளிப்பார்கள் அப்பொழுதெல்லாம். ஆனால் இடையில் அந்தப் பழக்கம் விட்டுப் போய்விட்டது. இந்த எண்ணெய் பராமரிப்பின் பெருமைகள், பயன்கள் பற்றிய விழிப்புணர்வு நம்மிடையே ஏற்பட்டதன் விளைவுதான் இன்றைய 'Hot-oil Massage'. நம் பாட்டி காலத்தில் உபயோகித்த கீரை எண்ணைகள், மேலும் சூட்டைத் தணிக்க உபயோகித்த வெந்தயம், வெற்றிலை, மிளகு, சீரகம் கலந்த எண்ணெகளை இப்பவும் உபயோகிக்கிறோம். அதனுடன் இப்பொழுது வைட்டமின்கள், B-Complex, இரும்புச் சத்து அடங்கிய 'fortified oil' என்று அழைக்கப்படும் நல்லதொரு எண்ணையைப் பயன்படுத்துகிறோம்.

அந்தக் காலத்தில் வெந்தியம், வடித்த கஞ்சி, செம்பருத்தி இலை, கறிவேப்பிலை போன்றவற்றைத் தலையில் தடவி ஊறி அலசுவர். இப்பொழுது நெல்லிக்காய், பிரம்மி, திருபலா, பிருங்கராஜ் போன்ற மூலிகைகளினால் ஆன 'hair food' தடவி ஊறிய பிறகு அலசுகிறோம். எண்ணை தேய்த்த பிறகு Head steamer (படம்7) இனால் முடிக்கு moisture அளிக்கிறோம். அதன்பின்தான் hair pack.

இவ்வாறெல்லாம் செய்வதினால் முடி நல்ல உறுதியாகிறது, தலைக்கும் இதனால் குளிர்ச்சி உண்டாகிறது. ஒருபுறம் இவை கூந்தலின் அழகைக் காப்பதுடன மறறொரு பக்கம் மூளைக்கு நல்ல மருந்தாக, நினைவாற்றலையும் அதிகரிக்கிறது. பழங் காலத்தில் சாம்பிராணி புகை போட்டுத் தலையைக் காட்டி, கையி னால் மெதுவாக சிக்கெடுப்பார்கள். இந்த இரண்டு வேலைகளையும் அழகாக செய்ய இப்பொழுது volumizer ஐ (படம் 8) பயன் படுத்துகிறோம். நம் விருப்பத்திற்கு ஏற்ப முடியை நாம் 'set' செய்தும் கொள்ளலாம். Crimper (படம் 5)

அதனால் இப்படி ஒவ்வொன்றுமே நாம் தொன்றுதொட்டு செய்த வந்த அழகு குறிப்புகள்தான்

⑨




எங்கும் பிளாஸ்டிக் எதிலும் பிளாஸ்டிக்

தொடர்ந்து செய்தித்தாள் படிப்பவர்களுக்கு, சமீபத்தில் வந்த ஒரு செய்தி நிச்சயமாக அதிர்ச்சியை தந்திருக்கும். திருவனந்தபுரம் மிருகக் காட்சி சாலையில் இறந்து போன ஒரு வெள்ளை மானின் வயிற்றில் 4.அரை கிலோ கட்டியான பிளாஸ்டிக் பொருட்கள் இருந்தது. போஸ்ட் மார்ட்டத்தின் போது தெரிய வந்துள்ளது. இயற்கைக்கு எதிரான செயல்தானே இது. காரணம்? நாம்தான். இதுபோல நாம் எவ்வளவு பெரிய துரோகத்தில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதை யாரும் நினைப்பதில்லை.

ஆமாம். உலகம் இயற்கையின் பரிசு. இப்படியே நமது பிளாஸ்டிக் மோகம் தொடருமானால் நாளைய உலகம் எப்படி வாழும்? சமீபத்திய கணக்கெடுப்பின்படி கேரள மாநிலத்தில் மட்டும் சுமார் 65 இலட்சம் குடும்பங்கள் 1 நாளில் 1 முதல் 20 carry bag cover உட்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை உபயோகித்து தூக்கி எறிகிறார்களாம். இது 1 மாநில கணக்கெடுப்பு. மொத்தமாக நம் நாட்டை, ஏன் இந்த உலகை கணக்கெடுத்தால், 1 நிமிடம் மூச்சே நின்று விடும்.



தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக்குகளில் மிகக் குறைந்த சதவீதம் மட்டுமே மறு உபயோகத்துக்கு உருமாறி வருகின்றன. மற்றவை பூமியிலேயே தங்கி உச்சகட்ட கேடுகளை உண்டாக்குகின்றன என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? ஒரு ஆய்வின்படி, பிளாஸ்டிக் பொருட்கள் மக்கி முழுவதுமாக அழிவதற்கு குறைந்த பட்சம் 400 ஆண்டுகள் ஆகுமாம். இந்த கால கட்டத்தில் அவை பூமியில் கிடக்கும் போது ஏற்படுத்தும் அழிவுகள் எத்தனை? இயற்கையான நீரோட்டத்தை பாதித்து, செடி, கொடி மரங்களின் கண்ணுக்குத் தெரியாத எத்தனை இழப்புகளோ, யாரறிவார்? கால வேகத்துக்காக போட்டி மனப்பான்மையுடன் நாம் நம் தேவைகளையும் மாற்றிக் கொள்கிறோம். ஆனால் நம் தலைமுறைக்குப் பின்னால் வரும் சந்ததியினருக்கு, இப்போது நம் வீடுகளில் தொட்டிலில் ஒரு பாவமுமறியாமல் கையை காலை உதறிக் கொண்டு இருக்கும் பாப்பாவுக்கும், நடை பழகும் குட்டிப் பையனுக்கும்



ஆப்பிள் பை

ஆப்பிளைச் சிறு துண்டுகளாக நறுக்கி சிறிது எலுமிச்சம் பழம் பிழியவும். இல்லாவிடில் கறுத்து விடும். அதில் 1 கரண்டி சர்க்கரை, 1 கரண்டி மைதாமாவும் போட்டுக் கொண்டு ஏலக்காய்ப்பொடி, இலவங்கப் பட்டைப்பொடி தூவிவிடவும். அடுப்பில் வாணலியில் 1 கரண்டி நெய்விட்டு, ஆப்பிள் துண்டுகளைப் போட்டு நன்றாகக் கிளறி பூரணம் போல் செய்து கொள்ளவும்.

மைதாமாவைச் சிறிது சோடா உப்புப் போட்டு 1 கரண்டி நெய் விட்டு, நன்றாகப் பிசைந்து கொள்ளவும். 10 நிமிடங்கள் ஊற வைக்கவும். பிறகு எடுத்துச் சிறு அப்பளம் போல் இட்டு நடுவில் பூரணத்தை வைத்து சோமாஸி செய்வது போல மடித்து மூடிக் கொள்ளவும். குக்கரை அடுப்பில் வைத்து நிதானமாக அடுப்பை எரிய விட்டு குக்கரில் தண்ணீர் விடாமல் பாத்திரம் சூடு வந்ததும் ஒரு தட்டில் சோமாஸ்களை நான்கு வைத்துக் குக்கரை மூடி விடவும். வெயிட் போட வேண்டாம். பத்து நிமிடங்கள் கழித்து எடுத்தால் சோமாஸ்கள் மொறுமொறு வென்று இருக்கும். தோசைக் கல்லிலும் போட்டு மேலே ஒரு மூடியை மூடி வேக வைத்தும் எடுக்கலாம். பிஸ்கெட் செய்வது போல நன்றாக இருக்கும்.

– ஆர். தங்கம்

வேரோட்டத்தை திசைமாற்றி சமயங்களில் அழித்து, நீரின் போக்கையும், கழிவு நீரோட்டத்தையும் பாதித்து இயற்கையை சோதிக்கும் போது எதிர்காலம் கேள்விகுறியாகாதா?

இந்த பிளாஸ்டிக்குகளை எரித்தும் அழிக்க முடியாது. எரிக்கும் போது முற்றிலும் உருகும், தவிர அப்போது வெளிப்படும் புகை மேலும் கெடுதலாகும். நம்மை சுற்றி எத்தனை செருப்புகள், உடைசல்கள், கேன்கள், நாகரீக பிளாஸ்டிக் உடைசல்கள், தாற்காலிகமாக இவை நம் கண்ணை விட்டகன்றாலும் புரையோடிய புண் தானே மண்ணுக்குள் கலவாமல் இருக்கும் வரை?

காட்டன் பைகளை எடுத்துச் செல்வது நாகரீகக் குறைச்சல். பால், மோர், தயிர், தேன், மருந்து, எண்ணெய், ஏன் சாராயம் உட்பட எல்லாம் பிளாஸ்டிக் பொருட்கள். packing பணத்தை மட்டும் எடுத்துக் கொண்டு சூப்பர் மார்க்கெட்டோ, காய்கறி மார்க்கெட்டோ போனால் வண்ண வண்ண carry bagகளுடன் வருகிறோமே, இது தாற்காலிக சுகம் தான் என்பதை உணர வேண்டும். இத்தகைய Bio-Non-degradable பொருட்களால் நதியின் ஓட்டம் கூட தடைபடுகிறது என்கிறார்கள்.

இயற்கை அறிவியலார்களும், சமூக வல்லுனர்களும் கரடியாகக் கத்தினாலும், ஆய்வரங்கள் நடத்தினாலும் கூட, நாம் ஒவ்வொருவரும் முன்வராமல் மாற்றம் கொண்டு வர இயலாது. அழியக் கூடிய பொருளில்/மாற்று ஏற்பாடு காணும் வரை ஓயக் கூடாது. கூடியவரையில் பேப்பர் பேக்கிங்களையோ சணல் பொருட்களாலான பைகளையோ உபயோகிப்போம். இல்லையெனில் இயற்கை தந்த இந்த மண் முழுவதும் செயற்கையாகி, நீர்வளம் குறைந்து, பசுமை மறைந்து சக்கை உலகமாகிவிடும் அல்லவா? நமக்கு உண்மை தெரியும். தெரிந்துதான் இத்தகைய தவறுகளை செய்து வருகிறோம். தேவை இல்லாத இடங்களில் பிளாஸ்டிக் உபயோகத்தை குறைப்போம். முழுவதுமாக அவை மக்கி போகுமளவுக்கு, மாற்றுவழி காணும் வரை நம்மைச் சுற்றிய சூழலைப் பற்றி கொஞ்சம் கவலைப் படுவோமே ப்ளீஸ்!

— கமலாசுந்தர்





கருவிலேயே குழந்தைகளுக்குப் பல் பாதுகாப்பு

"மருத்துவத்துறையில் - பல் மருத்துவமும் வேகமாக வளர்ந்து, பல துறைகளாகப் பிரிந்து விட்டன. குழந்தை கருவில் இருக்கும்போது தாய்நலம் எவ்வாறு பேணப்படுகிறதோ அதே போன்றே உறுதியான, வாய், பற்கள் நலம் பேணுதல் (Prenatal Care for Better Dental Health) கருவுற்ற காலத்திலேயே ஆரம்பித்து விடுகிறது. குழந்தைகளின் பற்களின் அமைப் பிற்கும், பாதுகாப்பிற்கும் பொறுப்பு வகிப்பதில் முக்கியமான பங்கு



கருவுற்ற தாய்மார்களிடம் தான் உள்ளது"

என்கிறார் பல் மருத்துவம் பற்றி பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியவரும், பல் மருத்துவ மேற்பட்ட படிப்பு மாணவர்களுக்கு ஆராய்ச்சி செய்வதற்கு 'கைடாக'வும் பணிபுரியும் டாக்டர் மைதிலி சுவாமிநாதன். அண்ணாமலை பல் மருத்துவக் கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றி வரும் இவர் கேள்வி - பதிலாக விளக்கங்களைத் தருகிறார்...

குழந்தைக்கு நல்ல ஆரோக்கியமான, உறுதியான பற்கள் வளர கர்ப்ப காலத்தில் தாய் என்னென்ன செய்ய வேண்டும்?

தாய்மார்கள் பிறக்கப் போகும் குழந்தையின் பற்கள் நன்றாக, உறுதியாக ஆரோக்கியமாக முளைக்க கருவுற்றிருக்கும் போதே புரதச்சத்து, சுண்ணாம்புச்சத்து ஆகியவை உள்ள உணவினை உண்ண வேண்டும். தாயின் வயிற்றில் கரு 4-5 வார வளர்ச்சியடையும் போதே கீழ்த்தாடையிலும் மேல்தாடையிலும் சேர்ந்து மொத்தம் 20 பற்கள் முளைப்பதற்கு ஏதுவாக முளைகள் தோன்ற ஆரம்பித்து விடுகின்றன. தாடை, பற்களின் வளர்ச்சிக்கு புரதச் சத்தும், சுண்ணாம்புச் சத்தும் அவசியம். இவை முட்டை, பால், கீரை மற்றும் பழவகைகளில் அதிகம் உள்ளன. இவற்றைக் கருவுற்றிருக்கும் தாய்மார்கள் சாப்பிட்டால் சிசுவின் பற்களின் முளைகள் நன்கு வளர வாய்ப்புண்டு. நோய் வாய்ப்பட்டும் மற்றும் உடல் நலிவுற்று பலவீனமடைந்திருக்கும் தாய்மார்களின் குழந்தைகளுக்குப் பற்களின் வளர்ச்சி பாதிக்கப்படக்கூடும். ஆகவே குழந்தைகளின் பற்கள் நன்கு அமைந்து வளரச் செய்ய வேண்டிய பொறுப்பு தாய்மார்களைச் சார்ந்ததாகும்.

கர்ப்ப காலத்தில் கூடுதல் கால்சியம் எடுத்துக் கொள்ள வேண்டுமா?

கூடுதல் கால்சியம் என்பது நிரம்பவும் சத்துக் குறைந்து பலவீனப்பட்ட தாய்மார்களுக்கே பொருந்தும். ஆனால் சாதாரண ஆரோக்கியமான பெண்மணி கருவுற்றால் சரிவிகித உணவு உட்கொள்வதே போதுமானது. தாய்க்கும், சேய்க்கும் தேவையான கார்போஹைட்ரேட், புரதச் சத்து, உயிர்ச்சத்துக்கள், மினரல்கள் அடங்கிய சரிவிகித உணவே போதுமானது.

நாம் தினசரி உண்ணும் எந்தெந்த உணவு வகைகளில் மேற்கூறிய சத்துக்கள் அடங்கியுள்ளன?

பால், பழவகைகள் (அந்தந்த ஸீஸனில்

கிடைக்கும் பழங்களே போதுமானது), முட்டை, மீன், பச்சைக்காய்கறிகள் (சாலட்கள்), கோஸ், கரும்பு, கீரை வகைகள், முளை கட்டிய தானிய வகைகள், பருப்பு வகைகள் முதலியவைகளிலேயே மேற்கூறிய எல்லா சத்துக்களும் அடங்கி விடுகின்றன. இவைகளை தினசரி உணவு வகைகளில் சேர்த்துக் கொள்ளுதல் அவசியம்.

ஒவ்வொரு கருவுற்ற பெண்ணும் தன்னை பல் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமா?

மிக அவசியம் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் இக்காலத்தில் பற்களிலும் குறிப்பாக ஈறுகளிலும் நாளமில்லாச் சுரப்பிகளில் ஏற்படும் மாற்றங்களால் ஈறுகளில் கட்டி, ஈறு களில் வலி, பல் துலக்கும்போது இரத்தம் வடிதல், ஈறுவீங்குதல் போன்ற உபாதைகள் தோன்றலாம். இவ்வாறு வந்தால் தகுந்த முறையில் பற்களைச் சுத்தம் செய்து கொண்டு, ஈறுகளுக்கு சிகிச்சையும் அளித்தால் இவ்வுபாதைகள் அதிகமாகாமல் தடுக்கலாம்.

மேற்கூறிய பிரச்சினைகள் ஒரு பெண் வயதுக்கு வரும்போதும், சிலருக்கு மாதவிலக்கின் போதும் ஏற்படுகின்றதே!

ஆம். ஹார்மோன்களின் மாற்றங்களால் இத்தகைய தொல்லைகள் சில பெண்களுக்கு ஏற்படுகின்றன. சரியான முறையில் பல் விளக்குவதை பல் மருத்துவரிடம் கற்றுக் கொண்டு, பற்களையும், ஈறுகளையும் சுத்தம் செய்து கொண்ட பின், சுத்தமாகவும் வைத்துப் பேணினால் இத்தகைய தொல்லைகளைத் தடுக்கலாம்.

கருவுற்ற காலத்தில் எந்தெந்த மாதங்களில் என்னென்ன பல் வைத்தியங்களை செய்து கொள்ளலாம்?

முதல் மூன்று மாதங்கள்

(First trimester)

1) பல் வலி என்றால் முதல் உதவி மட்டுமே செய்து கொள்ள வேண்டும்.

2) பற்களைப் பராமரிக்கும் முறைகள் பற்களின் சுத்தம் பேணுதல் - இவை பற்றி பல் மருத்துவரிடம் இருந்து அறிதல்.

3. பற்களை சுத்தம் செய்து கொள்ளுதல்

4) பல் எடுத்தலை தவிர்த்தல்

இரண்டாவது மும்மாதங்கள்

(Second trimester) :

1) பல் எடுத்தல்,

2) பல் சுத்தம் செய்தல்

3) ப்ரக்னன்சி tumor என்னும் ஈறு கட்டிகளை அகற்றுதல்

4) பற்களை அடைத்தல்

5) பற்கள் நலம் பேணுதல்

6. சீழ்பிடித்த ஈறுகட்டிகளை அகற்றுதல்



எனது குழந்தைகளின் வெள்ளைச் சீருடையின் பின்புறம் செம்மண் கலராக பிடித்து விடுகிறது. அதை சக்தி வாய்ந்த பவுடரில் போட்டு ஊற வைத்தும் அந்த செம்மண் பகுதி விடவில்லை. ஒரு எலுமிச்சை பழத்தை அரிந்து அந்த செம்மண் போல் இருந்த இடத்தில் தேய்க்க சீருடை சுத்தமாகி விட்டது.

\- யசோதா பழனிசாமி

மூன்றாவது மும்மாதங்கள்

(Third trimester)

1) பற்கள் சுத்தம் செய்தல்

2) பற்கள் நலம் பேணுதல்

கருவுற்ற தாய்மார்கள் எல்லாவிதமான பல் வைத்தியமும் 5 முதல் 8 மாதம் வரை - அதாவது Second trimesterஇல்தான் செய்ய வேண்டும் என்று ஏன் சொல்கிறார்கள்? அதன் முன்னரோ, பின்னரோ பிரச்சினைகள் வந்தால் என்ன செய்வது?

பல், ஈறுகளில் பிரச்சினைகள் முதல் மூன்று மாதங்களுக்குள் வந்தால் 4 மாதங்களுக்குப் பின்னரும், 8 மாதங்களுக்குப் பின்னர் வந்தால், குழந்தை பிறந்த பின் 3-4 மாதங்களுக்குப் பின்னரும் தள்ளிப் போடுவது நல்லது. ஆனால் முதல் உதவி செய்து கொள்ளலாம். முதல் மூன்று மாதங்களில் 'லோகல் அனஸ்தீஷியா' போன்றவையும், பல் வைத்தியத்தினால் உண்டாகும் மன அழுத்தமும், Foetal Anoxia எனப்படும் கருவின் மூச்சுத் திணறலும் உண்டாவதற்கு வாய்ப்பு உள்ளதால் முதல் மூன்று மாதங்களில் பல் வைத்தியம் எதுவும் செய்வதில்லை. கருவுறுதலின் கடைசி மாதங்களில் தாயார் பல் வைத்தியம் செய்யும் நாற்காலியில் அதிக நேரம் உட்கார்ந்தால் இன்

வீரியர் வினா கேவா எனப்படும் சிரை, பெரிதாக விரிவடைந்த கருப்பையால் அழுத்தப்பட்டு, இதயத்திற்குச் செல்லும் இரத்தம் குறைந்து, 'Supine Hypotensive syndrome' எனப்படும் மயக்க நிலை உருவாகும். எனவே இச்சமயங்களில் முதலுதவி மட்டும் செய்து குழந்தை பிறந்த பின் மற்ற வைத்தியங்களைச் செய்து கொள்ளலாம்.

கருவுற்ற காலங்களில் இம்மாதிரி நெடுநேரம் பல் வைத்தியம் செய்தல் தாய்க்கும் சேய்க்கும் கெடுதல் விளைவிப்பதில்லையா?

இல்லை. இது தவறான கருத்து. கர்ப்ப காலங்களில் ஈறுகளில் ஏற்படும் கட்டியை பிரக்னன்சி டியூமர் என்று சொல்கிறோம். டியூமர் கட்டிகளுக்கும், இதற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. கருவுறும் போது ஏற்படும் ஹார்மோன்களின் விகல்பத்தால் இவை வரு கின்றன. மகப்பேறு மருத்துவர் ஆலோசனை யின் பேரில் 5 முதல் 8 மாதம் வரை இது போன்ற கட்டிகளை அகற்றுதல், பல் எடுத்தல், பல் சுத்தம் செய்தல், பல் அடைத்தல் போன்ற பல் வைத்தியங்களை மிகுந்த பாதுகாப்பான முறையில் செய்யலாம். ஆனால் கர்ப்பிணிப் பெண்களுக்கு இரத்தக் கொதிப்பு, நீரிழிவு நோய் போன்றவை இருந்தால் மேற்கண்ட வைத்திய முறைகளைத் தள்ளிப் போடுவது நல்லது.

இம்மாதிரியான சிகிச்சை முறைகள் செய்யும்போது 'ஆன்டிபயாட்டிக்' போன்ற மருந்துகள் கர்ப்பிணிப் பெண்களுக்குக் கொடுக்க நேரிடுமே, அது கெடுதல் இல்லையா?

கர்ப்பிணியாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் சில சிகிச்சை முறைகளுக்கு ஆன்டிபயாடிக் போன்ற மருந்துகள் கொடுத்தே ஆக வேண்டும். 'டெட்ராசைக்ளின் எனப்படும் ஒருவகை 'ஆன்டிபயாட்டிக்' கருவில் இருக்கும் குழந்தைக்கு உருவாகும் பற்களில் பழுப்பு நிறம் கலந்த மஞ்சள் கறையை உண்டாக்க அதிகமாக வாய்ப்பு உள்ளதால் இவற்றைத் தவிர்க்க வேண்டும்.

எந்தெந்த வகை மாத்திரைகளை கருவுற்ற தாய்மார்கள் உட்கொள்ளக் கூடாது?

தாயின் இரத்தம் மூலம் கருவிற்குச் செல்லும் சில மருந்துகள் உள்ளன. இவைகளைத் தவிர்த்தல் வேண்டும். அவையாவன: தாலிடோமைடு, சைக்ளோபாஸ்பைடு மீதோடிரக்ஸேட், அதிக அளவில் வைட்டமின் டி, டெட்ராசைக்ளின், வலிப்புக்காகக் கொடுக்கும் மாத்திரைகள் ஆகியவை.

வளரும் சிறிய குழந்தைகள் கூட டெட்ராசைக்ளின் மாத்திரைகளைத் தவிர்த்தல் வேண்டுமா?

பற்கள் வளரும் காலமான 10 வயது வரையிலும் டெட்ராசைக்ளின் மாத்திரைகளைத் தவிர்த்து மற்ற ஆன்டிபயாடிக் மாத்திரைகளே சிறு குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

வெளிநாடுகளிலெல்லாம் கர்ப்பிணிப் பெண்களுக்கு ப்ளூரைடு மாத்திரைகள் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறதே, நம் இந்தியாவில் ஏன் இப்பழக்கம் இல்லை?

நமக்குத் தேவையான ப்ளூரைடு நாம் உட்கொள்ளும் தண்ணீரிலேயே நமக்குக் கிடைத்து விடுகிறது. வாஸ்த்தவமாகச் சொல்லப் போனால் இந்தியாவில் சிற்சில இடங்களில் ப்ளூரைடு அதிக அளவில் இருந்து ஒருவித மஞ் சள் கறைகளைப் பற்களில் ஏற்படுத்தி விடு கின்றன. எனவே இந்தியப் பெண்மணிக்கு ப்ளூரைடு கலந்த தண்ணீர் கிடைத்தாலே போதுமானது. மேலும் முட்டைகோஸ், காலி ப்ளவர், பால் போன்றவற்றிலும் ப்ளூரைடு உள்ளதால் இவைகளை உணவில் சேர்த்துக் கொண்டாலே போதுமானது.

சில குழந்தைகள் வாயில் பற்களுடனேயே பிறக்கின்றனவே? இவற்றை என்ன செய்ய வேண்டும்?


சில குழந்தைகள் பிறக்கும்போதே கீழ்த் தாடையில் இரண்டு பற்களுடன் பிறக்கும். இப்பற்களினால் குழந்தைக்குப் பாலூட்டுவது தாய்க்கு இடைஞ்சலாக இருக்கும். இப்பற்களுடனே பாலூட்டினால் மார்பகங்களில்



தென்னை ஓலை குறுத்தில் தோரணம் செய்தால் அது சீக்கிரம் வாடி விடும். பனை ஓலையில் தோரணம் செய்தால் ஒரு நீண்ட நாட்களுக்கு வாடவே வாடாது. விசேஷம் முடிந்தபின் அதை எடுத்துக் கவரில் போட்டு வைத்துக் கொண்டால் விசேஷ தினங்களில் பயன்படுத்தலாம்.

— என். விஜயலட்சுமி







புண்கள் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே இப்பற்களை பல் மருத்துவரிடம் காண்பித்து எடுத்துக் கொள்வதே தாய்க் கும், சேய்க்கும் நலம். இவை பால் பற்கள் வகையைச் சார்ந்தவையாதலால் இப்பற்கள் இருந்த இடத்தில் வேறு பற்கள் முளைத்து விடும்.

கருவுற்ற தாய்மார்கள் வாய், பற்கள் நலம் பேணுவதற்கும் அவர்களுக்கு பல் வலி வராமல் இருப்பதற்கும் தாங்கள் கூறும் ஆலோசனைகள் என்னென்ன?

- பற்களை நன்கு இரண்டு வேளையும் பிரஷ் கொண்டு துலக்கி, சுத்தமாக வைத்து, வாயில் அழுக்கும், காரையும் படியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆறு மாதத் திற்கு ஒருமுறை பல் மருத்துவரிடம் சென்று பல் சுத்தம் செய்து கொள்ளல் வேண்டும்.

- பற்சொத்தை இருந்தால், மணமாகும் தறுவாயில் இருக்கும் பெண்கள் அப்போதே சரி செய்து கொள்ளுதல் நல்லது. வலி வந்த பின் பல் டாக்டரைப் பார்க்கலாம் என்று விட்டுவிட்டால், மணமானதும் கருவுற்று முதல் மூன்று மாதங்களுக்கு பல் வைத்தியம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு விடும்.

- பல், ஈறுகளிலிருந்து இரத்தம் வந்தால் உடனடியாக பல் மருத்துவரிடம் சென்று பற் களைச் சுத்தம் செய்து கொள்ளுதல் அவசியம்.

- ப்ரக்னன்சி டியூமர் போன்ற கட்டி களைச் சிறியதாக இருக்கும்போதே அகற்றி விடுவது நல்லது. பெரும்பாலும் பலர், அது பெரிதாகி சாப்பிடுவதற்கு இடைஞ்சலாகி பற் களிடையே வளர்ந்து கடிபடும் நிலைக்கு வந்த பின்னர்தான் அவற்றை அகற்ற வரு கின்றனர். குழந்தை பிறந்ததும், சிலருக்கு இக் கட்டிகள் தானே சிறியதாக மாற வாய்ப்புகள் உள்ளன.

- எந்த வைத்திய முறையானாலும், மகப் பேறு மருத்துவர் ஆலோசனைக்குட்பட்ட பின்னரே பல் வைத்தியம் செய்து கொள் ளுதல் நலம். குறிப்பாக இரத்த அழுத்தம். அனீமியா, நீரிழிவு நோய் ஆகியவை இருக்கிறதா என்று அறிந்து கொண்டு பின்னரே பல் வைத்தியம் செய்ய வேண்டும்.

பொதுவாக, ஒரு பெண் கருவுற்றால் நல்ல சந்தோஷமான, ஆரோக்யமான மனோ நிலையிலும் உடல் நிலையிலும் வாழ்ந்து கொண்டு, சரிவிகித உணவு உண்டு பற்களை யும், ஈறுகளையும் உறுதியாகவும் ஆரோக் கியமாகவும் வைத்துக் கொண்டால் பிறக்கப் போகும் குழந்தை நல்ல உடல் நலத்துடனும் உறுதியான பற்களுடனும் பிறக்கும் என்பது உறுதி.


இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள்: தீபாவளி பட்சணம் கடைசி தேதி: 15.9.97

என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச்சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்


அன்னையின் அரவணைப்பு
பாதுகாப்பின் பரிமளிப்பு
கிரைண்டருக்குப் பாதுகாப்பு
கிரைண்டர் கேர் இணைப்பு
லோ-வோல்டேஜ்
'கிரைண்டர் கேர்'
கிரைண்டர் மோட்டார்
IS : 996
MOTOR ONLY
TM
GCE
GRINDER CARE
3
வருட
உத்திரவாதம்
உங்கள் கிரைண்டர் மோட்டாரில்
நீங்கள் என்னவெல்லாம் எதிர்பார்க்கிறீர்களோ, அதற்கும் மேலாகவே...

ANUBHAV.M/97

ஜோடி பொருத்தம்


பெற்றோர்களுக்கும், திருமண வயதினர்களுக்கும் ஒரு நற்செய்தி. நீங்கள் அனாவசியமாக, பழைய, முழுமையற்ற செய்திகளையும், ஜாதகங்களையும் மட்டும் வைத்துக் கொண்டு மணமகன்/மணமகள் தேடி அலைய வேண்டியதில்லை. உங்கள் ஏமாற்றங்களை தவிர்க்க, உங்களுடைய விவரங்களையும், எதிர்பார்ப்புகளையும், எங்களுடைய படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்பினால், அதற்கு ஏற்றார்போல் பொருத்தமானவர்களின் சரியான விவரங்கள் மட்டுமே உங்களுக்கு அனுப்பப்படும். எல்லா இனம், சாதி, சமயம் மற்றும் எந்த நாட்டினருக்கும் இந்த திட்டம் பொருந்தும். தேவையான விபரங்களை பொருந்தும் ஜோடிகள் தவிர மற்ற எவருக்கும் தெரிவிக்கமாட்டோம். இச்சேவையை பெற்று பயனடைந்தோர் பலர்.

விண்ணப்ப படிவங்களை பெற்றிட சுய விலாசமிட்ட ரூ.2/- தபால் தலை ஒட்டிய கவர் இரண்டை கீழ்கண்ட முகவரிக்கு உடனே அனுப்பவும் :
POST BAG No. 383, மைலாப்பூர் P.O., CHENNAI 600 004.

இந்த சேவைக்கு எந்த வித கட்டணமும் கிடையாது.

நமது இதழில் 'வழிகாட்டிகள்' போட்டியை அறிவித்தது பற்றிப் பெருமிதப்படும் வகையில் நிறைய வாசகிகள் மிகப் பயனுள்ள கல்வி வகுப்புக்களைப் பற்றி எழுதி வருகிறார்கள். இவற்றைப் பத்திரப்படுத்திக் கொண்டே வாருங்கள். கல்வியாண்டில் பயனுள்ளதாக இருக்கும். மற்றவர்களுக்கும் தரலாமே, வழிகாட்டலாமே! (வாசகர்களுக்கு ஒரு வார்த்தை) இது ஒரு வழிகாட்டும் தகவல் பகுதி மட்டுமே. கோர்ஸ் அல்லது கோர்ஸ் நடத்தும் நிறுவனங்களின் நிறைகுறைகளை அவரவர்கள்தான் ஆராய்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம். நம் நிறுவனம் அதற்குப் பொறுப்பாகாது.

— ஆர்.



என்ன கோர்ஸ், எங்கு படிக்கலாம்?

அறிவுரையாளர் (COUNSELLING)

வாழ்க்கையில் பல சிக்கல்கள் - கணவன்-மனைவி - குடும்பத்திலுள்ள மற்ற நபர்களிடம் உறவில் விரிசல். நாளுக்கு நாள் இடைவெளி அதிகமாகிக் கொண்டே வருகிறது.

வேலை கிடைக்காதவர்கள், தேர்வுகளில் தோல்வி, தீராத வியாதி எதிர்பாராத ஒரு நிகழ்ச்சியில் ஏற்பட்ட ஏமாற்றம் -

இப்படிப்பட்டவர்களின் நிலைமையை அன்புடன் அணுகி உரியவாறு அறிவுரை கூறினால் அவர்கள் வாழ்க்கையில் மலர்ச்சி ஏற்பட உரிய முறையில் பயின்ற அறிவுரையாளர்கள் (COUNSELLOR) வேண்டும். அதற்கான பயிற்சி மதுரை வள்ளியம்மாள் நிறுவனம் அளிக்கிறது.

அஞ்சல் வழி பயிற்சி சான்றிதழ் முறை. கட்டணம் ரூ. 10+150+90. சமூக த் தொண்டில் நாட்டமுள்ள மகளிர் நன்கு பயிற்சி பெறுவதுடன் அவர்களுடைய களப்பணிகளுக்கு (Field work) - உதவக்கூடிய ஒரு பாடம்.

அனுப்பவும்: வள்ளியம்மாள் நிறுவனம் காந்தி மியூசியம், மதுரை - 625 020.

விருப்பமுள்ளவர்கள் முதலில் ரூ.10/- மணியார்டர் மூலமாக அனுப்பி வைத்தால் போதும். முழு விவரங்களும் கிடைக்கப் பெறுவர்.

சீனி. மகாலிங்கம், மதுரை-16

இந்த நூற்றாண்டில் நிதி (Finance) இல்லாத துறைகளே இல்லை என்ற நிலை உருவாகி விட்டது. தற்பொழுது Finance-க்காக பல courseகள் உள்ளன. அவற்றுள் - M.F.C அதாவது MASTER OF FINANCE AND CONTROL. இது முக்கிய நகரங்களான டெல்லி, மதுரை, கோவை போன்ற நகரில் அமைந்துள்ள பல்கலைக் கழகங்களில்தான் உள்ளது. இந்த Course in duration - 2 வருடங்கள் அதாவது 4 semesters (செமஸ்டர்கள்). இந்த course-ல் ஒவ்வொரு Financial professional -களும் தெரிந்து வைத்திருக்க வேண்டிய முக்கியமான பல விஷயங்கள் அடங்கி உள்ளன. இந்தக் கோர்ஸ் கோவையில் SHRI NEHRU MAHA VIDYALAYA COLLEGE OF ARTS AND SCIENCE COIMBATORE - 641 021 - என்ற கல்லூரியில் 1995-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்தக் கல்லூரி

கில் அமைக்கின்ற பொழுது வடக்குச் சுவரை தொடாமலும் அமைக்க வேண்டும். குளியல் மற்றும் கழிவு அறைகளுக்கு நுழைவு வாயில் களை வடக்குப் பகுதியில் வடகிழக்கு மூலையி லும், கிழக்குப் பகுதியில் வடகிழக்கு மூலையி லும், தெற்குப் பகுதியில் தென்கிழக்கு மூலையி லும், மேற்குப் பகுதியில் வடமேற்கு மூலையிலும் அமைக்கப்படவேண்டும். இதில் பதிக்கின்ற கற்களையும் ஓடுகளையும் கூடிய வரை இளம் நிறத்திலேயே அமைக்க வேண்டும். கறுப்பு, பிரவுன் மற்றும் சிவப்பு நிறங்களை பயன்படுத் தாமல் இருப்பது நல்லது. பச்சை நிறத்தை குளியல் அறையில் பயன்படுத்தினால் பூச்சிகள் அதிகம் சேர்ந்து விடும். குளியல் அறையிலும் கழிவு அறையிலும் தண்ணீர் தேங்காமல் வடகிழக்கு மூலையில் வழிந்து ஓடும்படியாக தரை தளத்தை அமைக்க வேண் டும்.

பலமுறை நான் முன்பே எழுதியது போல் எக்காரணம் கொண்டும் கழிவு அறைகளை வடக்கு சார்ந்த வடகிழக்கிலும், கிழக்குச் சார்ந்த வடகிழக்கு மூலையில் வீட்டினுள்ளோ அல்லது வெளிப்புற சுற்றுச் சுவரிலோ அமைக்கக் கூடாது. வடக்குப்புற சுவற்றில் அமைகின்ற பொழுது பெண் வாரிசுகளாகிய நம் பெண் குழந்தைகளை பெரிதும் பாதித்துவிடும். நம் பெண் குழந்தைகளின் கல்வி, கேள்வி ஞானங் கள் கெட்டுப் போவதுடன், கல்வியில் கவன மற்றுப் போய்விடும். உடல் நிலையில் பாதிப்பு களும் அதிகம் ஏற்பட்டுவிடும். சரியான வாழ்க் கைத் துணை அமையாமல், வரதட்சிணை கொடுமைகளை சந்திக்கின்ற பெண்கள் வீடு இப்படியாக இருப்பது பல ஆராய்ச்சிகள் நமக்கு ஆதாரமாக விளக்குகின்றது. கண் நோய், நரம்புத் தளர்ச்சி போன்றவற்றால் வீட்டில் தலைவியும் அவதியுறுகின்றனர்.

கிழக்கைச் சார்ந்த வடகிழக்கில் கழிவு அறை அமைந்தால் நம் ஆண் வாரிசுகளான ஆண் குழந்தைகளை பெரிதும் பாதித்து விடுகின்றது. படிப்பு அறிவு இல்லாமை, முரட்டுச் சுபாவம், அடங்காத பிள்ளை, வீண் சண்டை சச்சரவு, பொய் சொல்லுதல், வீணாக பணம் செலவு செய்தல், மற்றும் சமூக விரோதிகளுடன் தொடர்பு கொண்டு வீணாக தன்னை சீர்கேட் டில் இணித்து கொள்கின்ற நிலை ஏற்படும். வீட்டின் தலைவனுக்கு தொழிலில் நஷ்டம், குறைந்த வருமானம், அதிக செலவு, விரக்தி, சோகம், பசி, நிம்மதி இன்மை, அடிக்கடி கோபம், வீண் சண்டை, போதை மற்றும் மங்கைக்கு அடிமை ஆகுதல் ஏற்பட்டு விடுகின்றது.

படிக்கும் அறை எப்பொழுதும் அமைதி யுள்ள இடமாகவும் ஒரு நிம்மதியைக் கொடுக் கக் கூடிய இடமாகவும் இருக்க வேண்டும். அதுவும் அல்லாமல் மனித மூளையைத் தூண்டு பவையாக இருக்க வேண்டும். அதிக ஓய்வு எடுக் கும் அறையைத் தேர்ந்தெடுத்தால் படிப்பைக் கெடுக்கக் கூடிய தூக்கத்தைக் கொடுத்து விடும். பூமியின் நல் அதிர்வுகள் தடைபடும் இடங்களை தேர்ந்தெடுக்கும் பொழுது படிக்கும் ஆர்வமே இல்லாமல் போய் விடும். பூமியின் நல் அதிர்வு கள் படிக்கும் பிள்ளைகளுக்கு வடகிழக்கு மூலை யிலேயே சரியாக அமைந்துள்ளது. இந்த அறையை அதிகம் நிரப்பப்படாமல் தென் மேற்கில் மட்டும் புத்தக அலமாரிகளை வைத்து வடக்குப் புற சுவற்றில் உள்ள ஜன்னல்களுக்கு அருகாமையில் படிக்கும் மேஜைகளை அமைத் துக் கொள்ள வேண்டும். வடக்குத் திசையைப் பார்த்து அமர்ந்து படிக்க வேண்டும். படிக்கும் அறைகளின் குறுக்கே விட்டங்கள் பீம்கள் இருக் கக் கூடாது. அப்படி இருந்தால் அதன் அடியில் அமர்ந்து படிக்கக் கூடாது.

வடக்கு திசையைப் பார்த்து படிக்க வேண் டும் என்பதற்குக் காரணம் இருக்கின்றது. வடக்கு திசை நீர் சம்பந்தப்பட்ட திசை. இந்த நீர் தொடர்பு கொள்வதற்கும், கருத்துப் பரிமாற்றத் திற்கும், படிப்பிற்கும் சம்பந்தப்பட்டது என்று சீன தேசத்து ஃபென் சூயி கூறுகின்றது. படிக்கும் மேஜையில் மட்டும் அதிக வெளிச்சம் இருக் கும்படி செய்தால் மிகவும் நல்லது. மேலும் வடக்கு திசையானது வெளிச்சத்தை அதிகம் கொடுக்காமலும், உஷ்ணத்தை குறைத்தும் கொடுக்கும். கண்களை கூசச் செய்யாமலும் இருக்கச் செய்யும். படிக்கும் அறைகளில் நேரடி யாக சூரிய ஒளி படாமல் இருப்பது மிகவும் சிறந்ததாகும். படிக்கும் அறைகளில் மிகவும் குறைந்த அளவில் பொருள்களை வைத்துக் கொள்ள வேண்டும். படிப்பு தவிர மற்ற பொருட் களை தவிர்ப்பது மிகவும் சிறந்தது. கூடிய மட்டும் இயற்கைச் சூழல்களை இயற்கை யாகவோ அல்லது செயற்கையாகவோ இருக்கச் செய்வது மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். மீன்தொட்டிகளையும், முகம் பார்க்கும் கண் ணாடிகளையும் படிக்கும் அறைகளில் அமைக் கக் கூடாது. படிக்கும் அறை வடக்கு ஜன்ன லுக்கு வெளியில் மின் கம்பங்களோ, மரங்களோ குத்தாக இருந்தால் மட்டும் அந்த ஜன்னலின் நேர் எதிர்புறம், முகம் பார்க்கும் கண்ணாடி யையோ, மீன் தொட்டிகளையோ வைக்கலாம்.

மேலும் விபரங்களை அறிந்து கொள்ள சென்னையில் மாதத்தின் முதல் தேதி முதல் ஏழாம் தேதிவரை 044 8540084-லும் மற்ற நாட்களில் கோவையில் 0422-577907லும் தொடர்பு கொள்ளலாம்.

- தொடரும்

(SC/ST ஆக இருப்பின் ரூ. 60/-) டிமாண்ட் டிராஃப்ட்டு எடுத்து அனுப் பவும்."CENTRAL TOOL ROOM & TRAINING CENTRE", BHUBANESWAR - என்ற பெயரில் D.D எடுத்து அனுப்பவும். (IT SHOULD BE DRAWN ON ANY NATIONALISED BANK PAYABLE AT BHUBANESHWAR) இதனுடன் 30cm X 20 cm என் வெலப்பில் ரூ. 18/-க்கான அஞ்சல் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட கவர் ஒன்றும் இணைத்து அனுப்ப வேண்டும். எல்லா விண்ணப்பங்களும் THE GENERAL MANAGER, CENTRAL TOOL ROOM & TRAINING CENTRE, B-36 CHANDKA INDUSTRIAL AREA, BHUBANESHWAR - 751 031 என்ற முகவரிக்கு அனுப் பப்பட வேண்டும். கவரின் மேல் "APPLICATION FOR DIPLOMA IN TOOL & DIE MAKING" என்று மறக் காமல் எழுத வேண்டும்.

அடுத்து "ONE YEAR POST DIPLOMA IN INDUSTRIAL SAFETY"

தகுதி: எந்த வகையான என்ஜினியரிங்கோ அல்லது டெக்னாலஜியில் பட்டம் பெற்று இரு வருட அனுபவம் தேவை அல்லது Physics அல் லது Chemistry-யில் பட்டம் அல்லது எந்த வகையான என்ஜினியரிங்கானாலும் பரவா யில்லை. அதில் டிப்ளமோவுடன் 5 வருட அனுப வமும் தேவை. இந்த டிப்ளமா நல்ல வேலை கிடைக்க வழி செய்கிறது.

விண்ணப்பிக்க வேண்டிய முறை: குறிப்பேட் டுடன் கூடிய விண்ணப்பப் படிவம் பெற ரூ.75/-க்கான டிமாண்ட் டிராஃப்ட் எடுத்து "Delhi productivity council, New Delhi" க்கு அனுப்பவும். இது All India council for Technical education, govt of India's Approve ஆனது. இது INDIAN INSTITUTE OF MANAGEMENT SCIENCES & PRODUCTIVE RESEARCH" என்றும் அழைக்கப்படும்.

முகவரி: Delhi Productivity Council,
1E/10, Jhandewalan extension, New Delhi - 55
Ph. 523828, 527803, 522216 Fax 91-11-3553605

ஜவ்வரிசி சேமியா போன்ற பாயசங்கள் ஆறி யதும் ரொம்பவுமே இறுகிவிடும். அதனால் இறக்கும்போது சற்று கெட்டியாகவே இறக்கி ஒரு டம்ளர் குளிர்ந்த நீரை விட்டு கலக்கி விட் டால் இறுகாது.

மேலும், துணிகளுக்குப் போட கஞ்சி காய்ச்சி வைத்து விட்டு, மற்ற வேலைகளை முடித்துவிட்டு, வருவதற்குள் ஒரு தட்டி கெட்டியாகி விடும். அதற்குக்கூட இதே போல இறக்கியதும் குளிர்ந்த நீர் விட்டு கலக்க வைத் தால் எத்தனை நேரமானாலும் இறுகாது.

— எஸ். பட்டம்மா



இதையடுத்து வரும் கோர்ஸ்

AIRCRAFT MAINTENANCE ENGINEERING

இது "INDIAN INSTITUE OF AERONAUTICAL SCIENCE" - JAMSHEDPUR ஆல் நடத்தப் படுகிறது. இது மூன்று வருட கோர்ஸ் ஆகும்.

தகுதி: 10 +2 (physics, chemistry, Mathematics) படித்து இருத்தல் வேண்டும் அல்லது அதற்கு இணையான படிப்பு. வயது 17 - ½ல் இருந்து 23 வரை (as on 31st Dec . 97) மேலும் விவரங்களுக்கு ரூ. 125/- செலுத்தி (Demand draft/ Mo மூலம்) குறிப் பேட்டைப் பெறலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி:
Accounts Officer,
Indian Institute of Aeronautical Science,
Payable at Jamshedpur.

ஹாஸ்டலில் தங்கிப் படிக்கும் வசதியும் உண்டு. இந்த Institute-ன் முழு விலாசம் பின் வருமாறு:-

இந்த கோர்ஸ் Director general of civil Aviation-ல் approve ஆனதாகும்.

முகவரி: INDIAN INSTITUTE OF
AERONAUTICAL SCIENCE,
SONARI AERODROME, SONARI,
JAMSHEDPUR,
PH: 426110.

இதே கோர்ஸ் பாட்னாவிலும் உள்ளது. அந்த இன்ஸ்டிட்யூட்டின் பெயர் மற்றும் முகவரி.
Indian Institue of Aeronautics,
patna Airport, Patna - 800 014. Ph. 224160.

-C.K. வனிதா, பெங்களூர்.

தமிழக அரசாங்கத்தாரால் ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதங்களில் ஒவ்வொரு வட்டார வளர்ச்சி அலுவலரால் (கூடுதல்) 70 முதல் 100 வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மாணவ மாண விகள் 10வது தேர்ச்சி (அ) தோல்வி மற்றும் +2 தேர்ச்சி (அ) தோல்வி பெற்றவர்களுக்கு உதவித் தொகையுடன் 3 மாதம் முதல் 6 மாதம் வரை பயிற்சி அளிக்கப்படுகிறது.

வயது 18 முதல் 35க்குள்
வருமானம் - வருடத்திற்கு : 12000/-க்குள்
உதவித் தொகை- ரூ 150 முதல் ரூ.300க்குள்

T.V.Mechanisam, Palm leaf Try - Leather goods making Toy making, corpenter, typewriting, tailoring, Auto electrician, welding etc.

நேர்முகத் தேர்வில் தேர்ச்சி பெற்று பயிற்சி முடித்தால் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி மூலம் கடன் பெற்று (IRDP திட்டம்) சுயமாக சம்பாதிக் கலாம். நாலைந்து பேர்கள் சேர்ந்தும் சுய தொழில் தொடங்கலாம். வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள படித்த இளைஞர்கள் நல்ல பலன் பெறலாம். அவர்கள் வட்டார வளர்ச்சி அலுவலரை அணுகி பயன் பெறலாம்.

- தங்கம் சந்தானம், சென்னை-15.

கடைசியாக ஒரு கேள்வி

காதல் கவிதைத் தொகுப்பு. ஆசிரியர் எஸ்.கே. விஜயன்.

பக்-96, விலை ரூ. 24.00.

(ஸ்ரீ துர்க்கை பப்ளிகேஷன், 21. மதுரை வீரன் கோயில் தெரு, தி. நகர், சென்னை - 17)

மகிழ வைக்கும் மந்திரக் கதைகள்

சிறுவர்களுக்கான சுவையான கதைகள். ஆசிரியர் பேராசிரியர் எ. சோதி.

பக்- 140, விலை ரூ.30.00.

சாமார்த்தியக் கதைகள்

அறிவுக் கூர்மையை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளவை. ஆசிரியர் - எ. சோதி.

பக்.80, விலை ரூ. 15.00.

(நன்மொழிப் பதிப்பகம், 41. கங்கை வீதி, வசந்த் நகர், புதுச்சேரி- 605 003)

இலக்கியம் காட்டும் இணையற்ற நண்பர்கள்

கபிலர் - பாரி, அதிகமான் - ஔவையார் போன்றோரின் நட்புச் சிறப்பைக் கூறுபவர் வி. கலைமணி.

பக்.120, விலை ரூ. 25.00.

வரம் தரும் விநாயகர்

விநாயகரைப் பற்றி எத்தனை விதமானவர், எங்கு விசேஷம், விநாயக சதுர்த்தி பூஜை என் நிறைய செய்திகளைத் தருபவர் பாலமுருகன்.

பக்.250, விலை ரூ. 50.00.

(இரண்டும் சங்கர் பதிப்பகம், 21. ஆசிரியர் சங்கக் குடியிருப்பு, வில்லிவாக்கம், சென்னை - 49)

வராஹ மிஹிரரின் நஷ்ட ஜாதகம்

ஜாதகம் கணிக்கத் தேவையான குறிப்புகள் இல்லாதவருக்கும் ஜாதகம் தயாரிக்க உதவும் நூல்.

பக். 48, விலை. ரூ.10.00.



அஷ்டக வர்க்கம்

கபப் பலன்களைத் தெரிந்து கொள்ள அஷ்டகவர்க்கம் போடும் முறை, மற்றும் அஷ்டகவர்க்க பலனும் கொண்டது.

பக்-48, விலை. ரூ.12.00.

இரண்டும் தமிழ் உரை - கடலங்குடி நடேச சாஸ்திரிகள். தொகுப்பு- கே.என். சரஸ்வதி.

பக்.48, விலை ரூ. 10.00.

(இரண்டும் கடலங்குடி பப்ளிகேஷன்ஸ், 38, நடேச அய்யர் தெரு, தி. நகர், சென்னை- 17)

பிரார்த்தனை

சுவாரஸ்யமான நடையில், பிரார்த்தனையால் ஏற்படும் பலன்களையும் பல அறிஞர்களின் மொழிகளையும் கூறுபவர் திருவரசு.

பக். 87, விலை. ரூ. 20.00.

அமெரிக்க அறிஞர்களின் அறிவுரைகள்

மௌனம்

எறும்பைப் போல் உபதேசிப்பவர் யாருமிலர்;
ஆனால் எறும்போ பேசுவதே இல்லை

இப்படி பல கருத்துக்களைத் தொகுத்துத் தந்திருப்பவர் திருவரசு.

பக். 86, விலை ரூ. 18.00.

(இரண்டும் - திருவரசு புத்தக நிலையம், 13. தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை-17)

வெற்றி உங்களிடமே

மனதை உற்சாகம் கொள்ள வைத்து சாதனை படைக்கக் கூறுபவர் மெர்வின்.

பக். 224, விலை ரூ. 40.00.

ஸ்ரீ ராமானுஜர்

ஸ்ரீ ராமானுஜரின் முழுமையான வரலாறு. ஆசிரியர் நாகர்கோவில் கிருஷ்ணன்.

பக். 384, விலை ரூ.60.00.

(இரண்டும் - குமரன் பதிப்பகம், 2. முத்துகிருஷ்ணன் தெரு, த.பெ.எண். 6124, தி.நகர், சென்னை - 17)

வினை தீர்க்கும் வேல் பூஜை.

வேல் பூஜை மகிமை, செய்யும் முறைகள் தொகுப்பு இரா. இளையபெருமாள்.

பக். 32, விலை ரூ.3.00.

(கையடக்கப் பதிப்பு)

கந்தரலங்காரம்

அருணகிரிநாதர் அருளியது.

பக். 30, விலை ரூ.3.00.

கந்தர் அனுபூதி - மூலமும் உரையும்

ஸ்ரீ அருணகிரிநாதர் அருளியது.

பக்.32, விலை ரூ.3.00.

(மூன்றும் - கையடக்கப் பதிப்பு - சகுந்தலை நிலையம், 58. ஐயப்ப செட்டித் தெரு, மண்ணடி, சென்னை - 1)

குபேர சம்பத்து தரும் சக்கரங்கள்

ஸ்ரீ சக்கரம் முதலான பல சக்கரங்களின் மகிமை, வணங்கும் முறை போன்றவை. ஆசிரியர் ஆபஸ்தம்பன்.

பக். 80, விலை ரூ.14.00.

திருஷ்டிகளும் பரிகாரங்களும்

எந்த மாதிரியான திருஷ்டிகள் படும், பரிகாரம் என்ன என விளக்குபவர் ராஜமோகன்.

பக்.96, விலை. ரூ. 18.00

(இரண்டும் - யமுனா பிரசுரம், 18/1, ராஜாபாதர் தெரு, தி.நகர், சென்னை - 17)

பண்பு மலர்

நிறைய எளிமையான கதைகளின் மூலம் நல்ல பண்புகளை விளக்குபவர் முனிசுக்லால். மொழி பெயர்ப்பு - ந. பார்த்தசாரதி, மா. இரமணன்.

பக்.168, விலை ரூ.30.00.

(துளசி மகாபிரக்ய சாகித்ய அகாடமி, 34-மணகப்பன் தெரு, சென்னை -79)

பம்பாய், கல்கத்தா, டில்லி சமையல்

பூரண் போளி, அம்ருத் அல்வா போன்றவை. ஆசிரியர் - ராஜம் அனந்தராமன்

பக்.112, விலை ரூ.20.00.

உங்கள் ஜாதகப்படி வீடு கட்டுங்கள் (அல்லது) மனையடி சாஸ்திரம் பார்ப்பது எப்படி?

ஆசிரியர் பிரகஸ்பதி

பக். 112, விலை ரூ. 20.00.

(இரண்டும் நர்மதா பதிப்பகம், 16/7 ராஜா பாதர் தெரு, பாண்டிபஜார், தி.நகர், சென்னை -17)

ஓடைப்புல்

கிராமிய மணம் கமழும் நாவல். ஆசிரியர் சி.ஆர். ரவீந்திரன்

பக். 168, விலை ரூ.32.00.

உயர்ந்த மனம்

சிறுவர்களுக்கான சிறுகதைகள். ஆசிரியர் வி.ர. வசந்தன்

பக். 132, விலை ரூ. 25.00.

(இரண்டும் - கங்கை புத்தக நிலையம், 13. தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17)

உங்கள் பிள்ளைகளைப் புரிந்து கொள்வது எப்படி?

தங்கள் குழந்தைகளை நல்வழிப்படுத்த பெற்றோருக்கு ஆலோசனைகள் தருபவர் டேவிட் சித்தையா.

பக். 144, விலை ரூ. 27.00.

நவீன அதிரடி தற்காப்புக் கலை

அகில இந்திய குங்ஃபூ தலைமைப் பயிற்சியாளர் எம்.பி. செல்வா படங்களுடன் விளக்குகிறார்.

பக். 202, விலை ரூ. 55.00.

(இரண்டும் - மணிமேகலைப் பிரசுரம், த.பெ. எண். 1447, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 17.)

கேசட்

எக்ஸ்கியூஸ் மி

அஸ்லாம் முஸ்தபாவின் தமிழ் பாப் - HMV வெளியீடு.

பாடல்கள் - என். வெங்கடேஷ்

விலை ரூ. 40.00.



உங்கள் அன்பு
மனைவிக்கு

எத்தனையோ பரிசுகள் தந்திருக்கிறீர்கள்.

நகை, பூக்கள், புடவைகள்.

எல்லாவற்றிக்கும் மேலாக

உங்கள் அன்பு.

இப்போது உங்கள் மனைவிக்கு

எய்ட்ஸ் என்னும் உயிர்க்கொல்லி

நோயைத் தரப் போகிறீர்களா?

யோசித்துப் பாருங்கள்.

இன்பமான வாழ்க்கைக்கு இல்லறமே நல்லறம்.

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பு,
417, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை - 600 008.
போன் : 8255467 / 8255261 / 8254917
மேலும் எங்களை அணுக: 24 மணிநேர ஹாட்லைன்
தொலைபேசி எண்: 8256882 / 8256864

TNSACS/2001/97/ET

கல்யாண வேளைகள்

உஷா சுப்ரமணியன்


தலையை இரு கைகளாலும் ஏந்தியவாறு கவிழ்ந்து விம்மினாள் சீதா. வாழ்க்கையில் நாம் நிரந்தரம் என்று நினைக்கும் ஒவ்வொன்றுமாகக் கை நழுவிப் போய்க் கொண்டிருக்கிறது. வாழ்வில் கஷ்டம், நஷ்டம், துக்கம், சந்தோஷம் அத்தனையிலும் அம்மா என்னும் பின்பலம் எப்படித் தாங்கியிருக்கிறது. அம்மா மட்டுமில்லை, அவளும்தான் அம்மாவை ஒரு சதை, ரத்தமுடைய சாதாரண மனுஷப் பிறவியாய் நினைத்துக் கூடப் பார்த்ததில்லையே. அம்மாவுக்கு நோய் வரும் என்று தோன்றியது கூடக் கிடையாது. இன்று அம்மாவின் உடம்பு எரிமலைக் குழம்பு. ஒருமுறை தோற்றம் காட்டிவிட்டு உள்ளுக்குள் பொங்கிக் கொண்டிருக்கும் தீ நாக்குகள், எந்த நேரத்திலும் அவளை முழுமையாக அழிக்கும் வல்லமை படைத்தவை.

மரணபயம் என்பார்களே, அப்படிப்பட்ட எந்தவித பயமும் அம்மாவை ஆட்கொள்ளவில்லை. "பொறந்த மனுசன் என்னிக்கும் செத்துத்தான் ஆகணும். எனக்கென்ன கைக்குழந்தையா இல்லை கட்டிக் குடுக்கப் பொண்ணுங்களா... நா வந்த காரியம் முடிஞ்சாயிடிச்சு. நோவுகாணாம போனா நல்லாயிருந்திருக்கும். போன ஜன்மத்து வினை இது. மருந்தும் வேணாம், மாயமும் வேணாம்." என்று கண்டிப்பாக மருந்து சாப்பிட மறுத்தாள். தன்னுடைய வழக்கத்திலிருந்து மாறாமல் உடம்பு முடிந்த போது பூஜை, புனஸ்காரம் என்று தொடர்ந்தாள்.

அம்மாவுக்குப் புற்று நோய் முற்றிய நிலை என்று அறிந்தவுடன், கானடாவிலிருந்த சீதா துடித்துப் போய்விட்டாள்.

சீதாவின் கணவன் லோகநாதன், சாம்பசிவத்துடன் பேசினார். அம்மாவின் மருத்துவ விவரங்கள் அனைத்தையும் கானடாவுக்கும் அனுப்பி வைத்து, அங்குள்ள டாக்டர்களும் எதுவும் செய்ய முடியாது என்று கைவிரித்த நிலையில் "அம்மாவை அவள் வாழும் போதே ஒருமுறை பார்த்து விட வேண்டும்" என்ற ஒரு ஆசை மட்டுமே சீதாவிடம் இருந்தது. கானடாவிலிருந்து இந்தியாவுக்கு நினைத்த மாத்திரத்தில் பறந்து வரக்கூடிய பொருளாதார நிலையில் அந்தக் குடும்பம் இல்லை. "சீதா, கூடிய சீக்கிரம் வந்து விடுகிறேன்" என்று முயன்று கொண்டிருந்தாள்.

அம்மா சாம்பசிவத்திடம் கை கூப்பினாள். "தம்பி, ஒரு மாசம் முந்தி வரை உங்களை யாருன்னு கூட எங்களுக்குத் தெரியாது. ஆபத்து வரும்போது கடவுளே வந்தாப்ல நீங்க எங்க குடும்பத்துக்கு வந்து சேர்ந்தீங்க. என் பொண்ணுங்களை வெவரமே தெரியாம வளர்த்துட்டேன். நீங்க மட்டும் இல்லாம இருந்தா, ஆஸ்பத்ரி, வீடுன்னு அலைய சீதா ரொம்பக் கஷ்டப்பட்டிருப்பா.



அந்தப் பொண்ணு புருஷனோட சேர்ந்து வாழ்ந்திருந்தா எவ்வளவோ மனநிம்மதியோட போயிடுவேன்."

"விடுங்கம்மா, அந்த முடிஞ்சு போன கதையை நாம இப்போ பேச வேணாம்." சீதா குறுக்கிட்டாள்.

"பேசாம எப்படியம்மா இருக்க... எனக்கப்புறம் உன் கதி என்னவாகும் என்று நினைக்கறச்சே..."

"நாம யாரும் இன்னொருத்தரை நம்பிப் பொறக்கறதில்லை... எப்படியோ பொழச்சுப்பேன்..." சீதா 'சூள்' கொட்டினாள்.

"தம்பி, என் தம்பி



மகன் வரதராசு வடக்கே மிலிடரியிலே வேலை செய்யறான். விலாசம் தர்றேன். அவனுக்கு என் உடம்பு பற்றி விவரமாகக் கடிதாசி எழுதிடுங்க. அவனை சின்னப் போதிலே முழுசுமாத் தூக்கி வளர்த்திருக்கேன். கொஞ்சமா அழும்பு செய்வானா, அஞ்சு வயசு வரை இடுப்பிலயிருந்து இறங்க மாட்டான். என் ஆசையெல்லாம், நான் பெத்தது ரெண்டும் பொட்டையாப் போனாலும், நான் வளர்த்த ஆண்பிள்ளை எனக்குக் கொள்ளி போட்டு, காரியம் செய்யணுங்கறது தான்.. வரதராசுக்கு வெவரம் தெரிவிக்கிறீங்களா தம்பி?"

சாம்பசிவன் அந்த மூதாட்டியின் வற்றிய உடம்பையும், சோர்ந்த கண்களையும் பார்த்தார். இறந்த பின் மண்ணோடு மக்கிப் போகப் போகிற உடம்பு. மூச்சு பிரிந்த பின் மண்ணெண்ணையோ, சந்தனக்கட்டையோ, எலெக்ட்ரிக் க்ரிமடோரியமோ ஏதோ ஒன்று சாம்பலாக்கப் போகிறது. இப்போது இருக்கும் வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படவில்லை. பல வருடங்களாகப் பார்க்காத மகனைப் பார்க்க வேண்டும் என்று ஆசை தெரிவிக்கவில்லை. ஆனால் இறந்தபின் சொர்க்கத்துக்குப் போக ஒரு ஆண்பிள்ளை கொள்ளி போட வேண்டும் என்று ஆசைப்படுகிறார். அவர் ஆசையையும் கெடுப்பானேன்.

"நான் உங்க மருமகனுக்கு கடிதம் போட்டு விட்டு, விவரமாகத் தந்தியும் அடிக்கறேம்மா..." சாம்பசிவன் விலாசம் பெற்றுக் கொண்டு கிளம்பினார்.

"எங்க வரதராசு அத்தையைப் பார்க்கணும்னு உடனே கட்டாயம் வருவான்" என்றாள் அம்மா.

"பாட்டி.. யாரு வரதராசு?" என்று தீபா பாட்டியின் கட்டிலில் ஏறி அருகில் உட்கார்ந்து கொண்டாள்.

"உங்க மாமாடீ கண்ணு... பாட்டியை மோட்சத்துக்கு அனுப்ப வர்றான்...."

"பாட்டி நானே உன்னை மோட்சத்துக்கு அனுப்பறேன் பாட்டி..."

பாட்டி தீபாவின் கையைத் தன் கைக்குள் பற்றிக் கொண்டாள். "அது முடியாதுடீ கண்ணு... அதுக்குத்தான் நம்ம குடும்பமே குடுத்து வக்கல்லையே...."

சீதா பெருமூச்சு விட்டாள்... அவர்கள் குடும்பம் பல விஷயங்களில் கொடுத்து வைக்கவில்லைதான். மாமா பிள்ளை வரதராசனை அவள் பார்த்தே பத்து வருஷமாகியிருக்கும். சின்ன வயசில் அவனையும் சீதாவையும் கொஞ்சமாகவா படுத்தியிருக்கிறான். பள்ளி நாட்களில் பள்ளிக் கூடத்துக்குப் போகாமல் ஊர் சுற்றிவிட்டு தாத்தாவிடம் பெல்டால் அடி வாங்குவான். பலமுறை அவனைப் பார்த்து சீதா பரிதாபப்பட்டிருக்கிறாள். சீதாவை வரதராசுவுக்குக் கட்டி வைக்க வேண்டும் என்ற பேச்சுக் கூட எழுந்ததுண்டு. ஆனால் அந்தக் குடும்பத்தில் உறவுக்குள் திருமணங்கள் பல தலைமுறையாக ஆகி வராததால் வரதராசுக்கு வெளியே பெண் எடுத்தார்கள். இப்போது மூன்று குழந்தைகளுடன் வடக்கே வேலை.

வரதராசு இப்போது எப்படி இருப்பானோ.. ஆனால் கட்டாயம் ஒரு அண்ணனாக அவளுக்கு வழிகாட்டுவான் என்ற நம்பிக்கையிருந்தது.

"சீதாக்கா, ஒங்களுக்கு மாமி வீட்லே போன் வந்திருக்காம். வரச் சொன்னாங்க" வாசலிலிருந்து கத்திவிட்டு ஓடினாள் எதிர்வீட்டு கோபு...

சீதாதான் அழைக்கிறாள்.... "அம்மா, நான் கதவை மூடிக்கிட்டு மாமி வீடுவரை போயிட்டு வர்றேன். தீபா பாட்டியைப் பாத்துக்கோ" ஓட்டமும் நடையுமாகக் கிளம்பினாள்.

பர்வதம் மாமி வீட்டில் சில நிமிஷங்கள் கதவைத் தட்டிய பிறகே மாமி வந்து கதவைத் திறந்தாள். வழக்கமாக வா என்று அழைத்துக் கல, கலன்னு பேசும் மாமியின் முகம் கலைந்து கிடந்தது. அழுது முகம் வீங்கினாற் போலிருந்தது. நெற்றிக் குங்குமம் கரைந்து நெற்றியிலும், மூக்கிலும் பரவியிருந்தது. சீதாவின் முகத்தைக் கூட நிமிர்ந்து பார்க்காமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"மாமி, என்ன ஆச்சு உங்களுக்கு, உடம்பு சரியில்லையா?"


மாமி குனிட்டாள்.. "ம்... போன் வரும் பேசிட்டு வா...." சட்டென்று உள்ளே போய் விட்டாள். வழக்கமாக நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் மாமாவையும் காணவில்லை. இந்நேரத்தில் டீ.வி. முன் அமர்ந்து உலகத்தையே வெறுப்புடன் பார்க்கும் லலிதாவையும் காணோம். ஏதாவது நெருங்கிய உறவினர் மரணம் என்பது போல் ஏதாவது ஆகியிருக்குமா?

போன் அடித்தது. சீதாதான் அம்மாவின் உடல் நிலை பற்றி விசாரித்தாள். "சீதா, நான் பத்து நாளில் அங்கே வருகிறேன்... ப்ளை நௌ, பே லேடர் டிக்கெட் ஒன்று மிகவும் கஷ்டப்பட்டு வாங்கி விட்டேன். எனக்கு சதா அம்மா

"நல்லவராய் இருப்பது நல்லதுதான் - ஆனால் நல்லது, கெட்டது தெரியாத நல்லவராய் இருப்பது ஆபத்தானது" - பெர்னாட்ஷா

— த. சாந்தி

எங்கள் பொன்விழா ஆண்டில்
உங்கள் கனவை நனவாக்கும்
நவீன பிரஷர் குக்கர்



8 லிட்டர்
ரூ 1199/-
மட்டும்

ஏறத்தாழ அலுமினியம் பிரஷர் குக்கரின் விலையில் காளி காப்பர் பாட்டம் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பிரஷர் குக்கர்

காளி

காப்பர் பாட்டம்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பிரஷர் குக்கர்

- குறைவான விலை
- அதிக சிக்கனம்
- நிறைவான அமைப்பு
- உயர்வான மதிப்பு
- விரைவான செயல்திறன்
- எளிதான பராமரிப்பு

kali

COPPER-BOTTOM
STAINLESS STEEL
PRESSURE COOKER

kali 50
GOLDEN YEARS

காளி : விலையில் குறைவு - மதிப்பில் உயர்வு - மனதில் நிறைவு.

நினைவுதான். குழந்தைகளைத் தனியே விட்டு விட்டு வருவதால் பத்து நாள்தான் தங்க முடியும். உனக்கு என்ன வாங்கி வரட்டும் சொல்லு?"

"இதா, நீ வர்றே என்பதே எனக்கு எவ்வளவு பெரிய தெம்பாய் இருக்கு தெரியுமா. எனக்கு எதுவும் வேணாம்... நீ சீக்கிரம் வா போதும்." பொதுவான பேச்சுக்குப் பிறகு போன் துண்டிக்கப்பட்டது.

"மாமீ..." சீதா மாமியைக் குரலெடுத்துக் கூப்பிட்டாள். "கதவைத் தாள் போட்டுக்கறீங்களா?"

மாமி தளர்ந்த நடையுடன் வெளியே வந்தாள். என்ன கேட்பது, எங்கே தொடங்குவது? "என்ன மாமி, மாமா, லலிதா எல்லாம் எங்கே?"

மாமி வாயைப் பொத்திக் கொண்டு விம்மினாள். "லலிதா கடிதாசி எழுதி வச்சிட்டுப் போயிட்டா... கடிதாசியைப் படிச்ச மாமா எங்கியோ போனவர்தான். இதுவரை காணோம்..." மாமி மேலும் விம்மினாள்.

"லலிதா எங்கே போயிட்டா?"

"யாரோ ஆபீஸிலே கூட வேலை பண்றவனாம், முருகானந்தமாம், கலியாணம் பண்ணிக்கப் போறாளாம்."

முருகானந்தம்... கட்டாயம் மாமியின் ஜாதிக்காரனா இருக்க முடியாது, அதுதான் ஓடி விட்டாளோ... "உங்களுக்கு இது முன்னாலேயே தெரியாதா மாமி. நீங்க தடை செய்யல்லையா?"

"தோளுக்கு மேல வளர்ந்த பொண்ணு, படிச்சவ... பட்டம் வாங்கினவ. வேலைக்குப் போய் நாலு ஆம்பிள்ளைகளோட பழகற பொண்ணு. தட்டிக் கேட்க முடியுமா? அப்படிக் கேட்டாலும், 'வரன் பாத்து எனக்கு சுய ஜாதியிலே கலியாணம் பண்ணி வைக்க உங்களுக்கு வக்கு இருக்கான்னு அவ எதிர்த்துக் கேட்டா நாங்க என்ன பதில் சொல்ல முடியும்?"

"நீங்களும் வரன் பார்த்துக்கிட்டுத்தானே இருந்தீங்க, மாமி...."

"ஆமா, அனா பார்த்தவன் ஒவ்வொருத்தனும் செவ்வாய் தோஷம்... ஏழுலே சனி, எட்டுலே வியாழன்னு எதையாவது சொல்லி ஒதுக்கினா... அதையும் தாண்டி வந்தவா இந்த சனி, செவ்வாய், ஒண்ணொண்ணையும் வெரட்டத் தனித்தனியா ரூபாய்க் கணக்குப் போட்டா. ஜாதகத்தை மாத்தி எழுதர தைரியம் எங்களை மாதிரி மனுஷாளுக்குக் கெடையாது. அதனால அவ தலையெழுத்தை அவளே மாத்தி எழுதிண்டுட்டா... நம்மளை மாதிரி நடுத்தர வர்க்கத்தோட சாபக்கேடு... ஜாதி, ஜாதகம், பழக்கம் எதையும் மாத்த நம்மால முடியாது. மாத்த தைரியம் இடையாது. இதெல்லாம் நம்மளை நாமே மறைச்சுக்கப் போட்டுக்கர முக்காடு... சில விஷயங்கள்ல முக்காடு சௌகரியம். நெஜ முகம் தெரியாது பாரு..." மாமி தரையில் உட்கார்ந்தாள்.

"என்னவோ பேசினாலும், சொந்தப் பொண்ணு நாம கலியாணம் கார்த்தி பண்ணாம அவளாப் போயிட்டான்னு நெனைக்கிறப்ப வயிற்றப் பெசயறது சீதா. 'நம்ம குலமென்ன, கோத்திரமென்ன எவனோ ஒருத்தனோடு எம்பொண்ண வாழ விடுவேனா' என்று மாமா ஆகாசத்துக்கும், பூமிக்கும் குதிச்சார். எங்க குலமும், கோத்திரமும் எம் பொண்ணுக்கு மாப்பிள்ளையா பார்த்துத் தந்தது? இவ இந்த மாதிரிப் போகல்லைன்னா, தலை நரைத்து, முதுகு கூனிப் போற வரைக்கும் இங்கே உக்காந்து டீ.வி. பார்க்க வேண்டியதுதான்..."

மாமி பெருமூச்சு விட்டாள்... "நெஞ்சு எங்க கையாலாகாத தனத்தை நினைச்சுப் பொங்கறதே தவிர, எம் பொண் எங்கேயும் போயிட மாட்டாள்னு தைரியம் இருக்கும். உள்ளூர்லை வேலை செய்யறவ, ஒரு மாசமோ, ஒரு வருஷமோ... வீட்டுக்கு வராம இருப்பாளா என்ன; மொதல் தடவை மூஞ்சியைத் திருப்பிண்டு சுத்துவோம்... ரெண்டாம் தடவை 'இந்தா உன் கலியாணத்துக்குனு வாங்கி வச்ச பாத்திரம், எடுத்துண்டு தொலை' என்போம். அப்புறம் பேரன், பேத்தின்னு வந்து போக சரியாகிவிடும். அந்த முருகானந்தத்தைக் குடும்பத்தைக் குட்டிச் சுவராக்கிய சண்டாளான்னு வெளியே திட்டினாலும், அவன் எம் பொண்ணை நன்னா வச்சிண்டான்னா எனக்கென்ன குறையிருக்கும்? பிறந்ததிலிருந்து கூடப் பழகிட்ட இந்த மடி, ஆசாரம் கூடக் கொஞ்ச நாளைக்குத்தான் கஷ்டப்படுத்தும்... சரிதானே சீதா?"

"ஆமாம் மாமி... அப்பா, அம்மா பார்த்து செஞ்ச எல்லா சுய ஜாதிக் கலியாணமுமா வாழுது? என்னையே பாருங்களேன்... லலிதாவை ஆசைப்பட்டுக் கட்டிக்கிட்டவன் நல்லாவே வச்சுப்பான். கவலைப்படாதீங்க..."

"கவலை எம் பொண்ணைப் பத்தியில்ல. அவ விவரம் புரிஞ்சவ. இந்த ஊர், நாக்கை என்ன செய்யறதுன்னுதான். அதோட முறைச்சிட்டு நிக்கிறாரே மாமா. அவரை எப்படி சரிக்கட்டறது. லலிதா ஆபீஸெல்லாம் போயி நாற அடிக்கப் போறாரே இவர்னு பயமா இருக்கு."

"மாமி, கவலைப்படாதீங்க. நாலு நாள் யார் கிட்டயும் இந்த விஷயம் சொல்லாதீங்க. ஒரு வாரம் கழிச்சு நீங்களே அவங்களை ஆபீஸ்லை பார்த்துப் பேசுங்க."

"எம் பொண்ணுன்னா எங்களை விரோதியா நெனைக்கிறா..." மாமி விம்மினாள். "தாங்க என்ன செய்ய முடியும். ஜாதகம். நெறம்னு எத்தனையோ குறுக்கீடுகள். சீதா

இப்போ, யார் கிட்டயும் சொல்லாதே. அம்மா வீட்லே தனியா இருப்பா... நீ கௌம்பு."

சீதா யோசித்தபடியே படியிறங்கினான். பெண்ணாய்ப் பிறந்தால் எத்தனை பிரச்னைகள். கலியாணம் ஆகாவிட்டால் பிரச்னை... கலியாணம் ஆனாலும் பிரச்னை. ஜாதி, குடும்பப் பழக்கங்களை மீறினாலும் பிரச்னை, மீறாவிட்டாலும் பிரச்னை. மாமி தத்துவமெல்லாம் பேசுகிறாள். ஆனால் தீபா வளர்ந்தபின், இப்படிக் கடிதம் எழுதிவிட்டு, வேற ஜாதிக்காரனோட ஓடிப் போனா நான் ஏத்துப்பேனா... கட்டாயம் மாட்டேன். மாமிக்குத் துக்கத்தை விடவும் மனப்பக்குவம் நிறையவே இருக்கு. லலிதாவைப் பற்றிய சிந்தனையில் கீதா ஊருக்கு வரும் சந்தோஷம் கூட அமுங்கி விட்டது.

கடந்த நாலு தினங்களாக அம்மாவால் திட உணவு உண்ண முடியவில்லை. வாயில் விட்ட திரவப் பொருளும் பல சமயங்களில் தங்காமல் வெளிவந்தது. சுவாசம் கனத்தது. அம்மா தன்னை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகக் கூடாது என்பதில் மிகவும் திடமாக இருந்தாள். இது முடிவின் ஆரம்பம் என்று புரிந்த நிலை யில், என்ன செய்வது என்று புரியவில்லை. அக்கம் பக்கத்தினர் அடிக்கடி எட்டிப் பார்த் தனர். அம்மாவுக்கு சுயநினைவு இருக்கும் வேளைகளில், கண் திறந்து "வரதராக வந் தானா' என்று கேட்டாள். தான் பெத்த மக னைப் பார்க்காமல் இறந்து விடுவோமோ என்ற கவலை தெரியவில்லை. கொள்ளி போட மரு மகன் வருவானா என்ற பதட்டம்தான் தெரிந்தது.

அம்மாவின் முடிவு நெருங்க, நெருங்க கோரட் வனாகத்தில் தான் தனியே நின்றபோது தாக்கிய பயம் சீதாவை மறுபடியும் தாக்க ஆரம்பித்தது. தனிமை... எதுவுமே செய்ய முடியாமல் செயலிழந்து நிற்கும் இயலாமை.

கீதா பதை, பதைப்புடன் ஏர்போர்டிலிருந்து வந்தாள்... அம்மாவின் நிலையைக் கண்டவள் பொறுக்காமல் குமுறி அழுதாள். அம்மா மெல் லக் கண்ணைத் திறந்தபோது கீதாவை ஒரு வெற்றுப் பார்வை பார்த்தாள். "வரதராக கொள்ளி போட வந்தானா" என்றாள். அவள் உடம்பு பத்து நிமிடம் தூக்கித் தூக்கிப் போட் டது. மூச்சு இழுத்தது. பின் அடங்கியது.

"ஐயோ அம்மா, எத்தனை வருஷம் கழிச்சு உங்களைப் பார்க்க ஆசை ஆசையாக ஓடி வந் திருக்கிறேன். என் கூட ஒரு வார்த்தை கூடப் பேசாமல் இப்படிப் போயிட்டீங்களே" என்று கதறி அழுதாள் கீதா. "எத்தனை பேருக்கு நீங்க எவ்வளவு செஞ்சிருக்கீங்க, உடம்ப ஓடாத் தேய்ச்சுருக்கீங்க... உங்களை சந்தோஷமா வச்சுக் கணும்னு நான் நினைச்ச போது, போயிட் டீங்களேம்மா..." என்று புலம்பினாள்.

சாம்பமூர்த்திதான் பொறுப்பேற்று உள் ளூரிலிருந்த தூரத்து உறவினர்களுக்கு சொல்லி விட்டார். அம்மா போய்ச் சேர்ந்த ஆறு மணி நேரத்திற்குள் நல்ல வேளை, வரதராக மனை வியுடன் வந்து தன் அத்தையை மோட்சத்திற்கு அனுப்பி வைத்தார்.

மயானத்தில் அம்மாவைச் சாம்பலாக்கிக் கடலில் குளித்துவிட்டு வெற்று உடம்புடன் வரதராக வீடு திரும்பினார். கொள்ளி வைக்க மட்டுமின்றி மயானத்துக்குப் போகவும் அனு மதியற்ற பெண்கள் வீட்டில் அழுது புரண் டனர். அடுத்த வீட்டுக்காரர் சமைத்து அனுப்பியிருந்த உணவு ஒருவர் தொண்டை யிலும் இறங்கவில்லை. கிரியைக்கு வந்தவர்கள் ஒவ்வொருவராக நகர, அம்மா செங்கோல் ஓச்சிய அந்த சாம்ராஜ்யத்தில் தலைமையின்றி, ஆளுக்கொருபுறம் கீதா, சீதா இருவரும் சரிந்து கிடக்க, வரதராகவும், அவர் மனைவி மங்கையர்க்கரசியும் ஊஞ்சலில் உட்கார்ந்தனர்.

வரதராக மெல்லக் கனைத்தார். "அத்தையைப் பார்க்க வரணும்னு நானும் நாலு வருஷமா நினைச்சிட்டிருந்தேன்... ம்... என்னா செய்யறது. நாங்க தெற்குப் பக்கம் வந்தே ஆறு வருஷமாவுறது. நம்ம பொழப்பு அப்படி..."

"ஆமா. நம்ம பக்கத்திலே தண்ணியில்லாத காடும்பாங்க. நாங்க இருக்கறதெல்லாம் பாதையே இல்லாத காடு, பொட்டல் வெளி, ஜவா உறையற பாறைன்னு மிலிடரி காரங்க மட்டும் வாழற எடம். எங்களுக்கும் மூணு பசங் களாச்சு. இனிமே அவங்க படிப்பை கவனிக் கணம்ல... அதுதான் இனிமே நான் தெற்குப் பக்கம் குடித்தனம் போட்டுடலாம்னு இருக்



"ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதம் 11ம் தேதியை உலக மக்கள் தொகை தினமாக நாம் கொண்டாடுகிறோம். அந்த தினத்தை தேர்ந்தெடுத்ததற்கான காரணம் என்ன தெரியுமா? 1987ம் ஆண்டின் ஜூலை 11ம் தேதிதான் உலகின் '500 கோடி' யான குழந்தை பிறந்தது. 1996ல் ஐ.நா. கணக்குப்படி இந்தியாவின் ஜனத்தொகை 95 கோடியே 30 லட்சமாகும். உலக ஜனத் தொகையில் இது 16 சதவிகிதமாகும். அதாவது சீனாவுக்கு அடுத்தபடியாக"

— த. சாந்தி



STOCKIST ENQUIRIES SOLICITED IN UNREPRESENTED AREAS

RECLAMATION

கேன். இவர் வருஷத்துக்கொருதரம் வந்து போக வேண்டியதுதான். இங்கே ஸ்கூல் அட்மிஷன் எல்லாம் எப்படி? பசங்களுக்குத் தமிழ் தெரியணும்பாங்களோ... எங்க பசங்களுக்கு இந்தி தவிர எதுவும் தெரியாது'' என்றாள் மங்கையர்க்கரசி.

''ஸ்கூல் அட்மிஷன் உங்களுக்கெல்லாம் கஷ்டமா இருக்காது. கேந்திரிய வித்யாலயாவிலே சேர்த்துடலாம். மிலிடரிகாரங்க குழந்தைகளுக்கு சலுகையிருக்கே....'' என்றாள் சீதா.

"இங்கே பக்கத்திலே கேந்திரிய வித்யாலயா இருக்கா?"

"ஓ. அடையாறிலேயே ரெண்டு இருக்கு. மங்கை அக்கா பக்கத்திலேயே வந்திட்டாங்கன்னா எனக்கும் நிம்மதியா இருக்கும். கீதா வெளிநாட்டுக்குப் போன பிறகு நான் இங்க எப்படித் தனியா இருக்கறதுன்னு பயந்துட்டு இருந்தேன்'' என்றாள் சீதா.

வரதராசு கீதாவை கானடா நாட்டைப் பற்றி, அவள் கணவன், குழந்தைகளைப் பற்றி விசாரித்தார். "ஏதோ கீதா, நீ வாழ்க்கையிலே செட்டிலாயிட்டே. சீதா வாழ்க்கை பற்றிக் கேள்விப்பட்டுத்தான் மனசு கஷ்டமாக இருக்கு.... என்னதான் விவாகரத்தானாலும், சொல்லிவிட்டும் மாமியார் சாவுக்கு மரியாதைக்குக் கூட சீதா புருஷன் வரல்லியே...."

"அவன் வந்து என்ன ஆகப் போகிறது வரதராஜ். அவன்தான் நெஞ்சிலே இரக்கமில்லாம இவளை வெட்டி விட்டதோட, ஜீவனாம்சப் பணமும் தராம இழுத்தடிக்கிறானே....'' என்றாள் கீதா.

"அது சரி... சீதாவுக்கு என்ன ப்ளான் வச்சிருக்கே... உன் கூட அவளைக் கூட்டிட்டுப் போய் விடுவாயா?"

"அதெல்லாம் முடியாது வரதராஜ். முதல்ல அவளுக்கு 'விசா' கொடுக்க மாட்டாங்க. அப்படியே அவ வந்தாலும் மூணுமாசத்துக்கு மேல தங்க முடியாது...''

வரதராஜ், மனைவியின் முகத்தைக் கேள்விக் குறியுடன் பார்த்தார். "கீதா, சீதா சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. சீதா ஏதோ ஒரு நாலைஞ்சு மாசம் தனக்கு ஒரு வழி பார்த்துக்கற வரைக்கும் இங்கே தங்கியிருக்கறதிலே எங்களுக்கு ஒண்ணுமில்லை. ஆனாலும் பர்மனெண்டா ஏதாவது வழி பார்க்கணும்ல...''

கீதாவும், சீதாவும் குழப்பத்துடன் பார்த்தார்கள். "ஏன் வரதராஜ், ஏன் அப்படிப் பேசறீங்க. அம்மா வீடு இருக்கு... அம்மா பணமும் கொஞ்சம் அரை வயிறுக்காவது சோறு போட இருக்கு.. எனக்கு அதிலே ஒரு பைசா வேணாம்... நீங்க இருக்கற போதே நாம போயி சீதா புருஷனோட பேசி அவ செட்டில்மெண்டுக்கும் ஏதாவது செய்யலாம். அவ பாட்டுக்குக் குழந்தையுடன் இங்கே இருக்கட்டும்...'' என்றாள் கீதா.

மூக்குக்கண்ணாடியை போடும் போதும் சரி, எடுக்கும்போதும் சரி பிரேமின் இருபுறமும் கைகளால் பிடித்தே எடுக்க வேண்டும். இதனால் பிரேம் விரிவடைந்து, தளர்வதைத் தடுக்கலாம். கண்ணாடி சரியாக முகத்தில் பொருந்தும். சரியான பார்வை கிடைப்பதற்கு இது மிகவும் முக்கியம்.

— பூங்கோதை கிருஷ்ணராஜ்



வரதராஜ் தயங்கினார். "கீதா, நானும் ஒண்ணும் பெரிய பணக்காரன் இல்லை. உங்க கூட அதிகம் நெருக்கமாப் பழகியதில்லைன்னாலும், அன்பும், பாசமும் உள்ளவன்தான். நான் வடக்கேயே இருப்பது என்றால் சீதா வசிக்கட்டும் என்று வீட்டை விட்டுக் கொடுப்பேன்... இப்போ...."

"பட், திஸ் ஈஸ் மை மதர்ஸ் ஹவுஸ்... சீதா இங்கதான் வசிப்பாள்'' கீதா கோபத்துடன் குறுக்கிட்டாள்.

"ஆமாம்... அத்தை வீடுதான். அவங்க உசிரோட இருக்கும் வரை இங்கே வாழும் முழு உரிமையும் அவங்களுக்குத் தாத்தா எழுதிக் கொடுத்தது உண்மைதான். என்கிட்ட எல்லா டாகுமெண்டும் இருக்கு... இதோட காபி அத்தையிடமும் இருக்கும் பாருங்க. அத்தைக்கு ஆண் பிள்ளைகள் இல்லாததால அத்தை காலத்துக்குப் பிறகு 'இந்த வீடு என் மகனுடைய மகனான வரதராஜுக்குச் சேரும்' என்று தாத்தா எவ்வளவு க்ளியரா எழுதியிருக்கார். அத்தை இருந்தவரை நான் என்றைக்குமே உரிமை கேட்டு வரல்லையே.... இனிமே என் குடும்பத்தை இங்கே இருக்க வைக்கிறது தப்பா சொல்லுங்க. என் புறம் நியாயமில்லையா?"

கீதாவுக்கு உண்மை புரிந்தது. அம்மா வீட்டுப் பத்திரத்தைப் பிரித்துப் படித்தது கூடக் கிடையாது. அந்த அளவு படிப்பறிவு கிடையாது. தாத்தா 'இது உன் வீடு' என்று சொல்லியதை நம்பினாளே தவிர, தனக்குப் பிறகு இது யாருக்கு என்று கூடக் கேட்கவில்லை. வரதராஜ் மேல் எந்தத் தவறுமில்லை.

"ஒரு ஆறுமாசம்... மே, ஜூன்ல ஸ்கூல் தொறக்கறதுக்குள்ள வீட்டைக் காலி செய்திடலாம்... அதுக்குள்ள சீதாவுக்கும் வேற வழி பார்க்கலாம்...'' என்றார் வரதராஜ்.

தன் தலைக்கு மேல் இருக்கும் கூரையும் களையப்படுகிறது என்கிற உண்மையின் தாக்கத்தில் சீதா உறைந்தாள்.


(தொடரும்)

கருவிலேயே ஆரோக்கியம் ஆரம்பமாகிறது

டாக்டர் எஸ். ஜெயராம்

'அறிவு, ஆரோக்கியம், செல்வம், பிணி, மூப்பு, சாக்காடு என்ற இவை ஆறுமே நம் கருவிலேயே அமைந்தவாறு' என்பார்கள். கருப்பையின் ஆரோக்கியம்தான் ஒரு குழந்தையின் எதிர்கால வாழ்க்கைக்கு 90% உதவி செய்கிறது.

ஆரோக்கியம் அதிர்ஷ்டம் இவைகளுடன் ஒரு ஆரோக்கியமான வாரிசை உண்டாக்க ஆரோக்கியமான கருப்பை நிச்சயம் வேண்டும். முற்காலத்தில் ஆண் - பெண் இருபாலருமே தங்களின் ஆரோக்கியம் பேணுவதில் தனி கவனம் செலுத்தினர். எண்ணெய்க் குளியல், சுகபேதி முறைகள் போன்றவை ஒழுங்காகக் கடைபிடித்தனர். அந்த நாளைய இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறை, உணவுப் பழக்கங்கள், உழைப்பு இவை அனைத்துமே ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உறுதுணையாக இருந்தன. ஆனால் இன்றோ எதற்கெடுத்தாலும் வேகம் – அவசரம் செயற்கையானதொரு வாழ்க்கை. தற்போதைய வாழ்க்கை முறையில் அன்றாடம் குடும்பத் தேவைகளுக்கு தேவையான பொருள் ஈட்டுவது ஒன்றுதான் நம் முக்கிய நோக்கமாகிறது.



• டாக்டர் எஸ். ஜெயராம்


கருப்பை அமைப்பைப் பற்றி சுருக்கமாக முன்பே கூறியதுதான் இனி ஒவ்வொரு பெண்ணும் அறிய வேண்டிய கருப்பை நோய்களைப் பற்றிச் சில உண்மைகளைப் பார்க்கலாம். சிறுநீர்ப் பையின் சற்று மேலாக மலக்குடல் முன்புறம் முன்னோக்கி (ANTIVERTED) கவிழ்ந்தபடி கருப்பை அமைந்துள்ளது. கர்ப்பம் அடையும்போது கருப்பை பெரிதாக விரிந்து கொடுக்கத் தக்கபடி வலுவான சுவர்களை உடையது.

கருக்குழல்தான் ஆண் உயிரணுவுடன் கருமுட்டை இணைந்து கரு உருவாகும் ஆரம்ப இடம். இக் கருக்குழல் 3 பகுதிகளாக பிரிக்கப்படுகிறது. கருக்கோளத்தை ஒட்டியுள்ள விரல் போன்ற அமைப்புதான் மாதவிடாய் தொடங்கியது முதல் 15-ம் நாள் உருவாகி வரும் கருமுட்டையை வாங்கி கருக்குழலில் செலுத்துகிறது. கருமுட்டை பயணம் செய்யும் வகையில் அமைந்துள்ளது இந்த கருக்குழல் இதன் நடுவில் அமைந்துள்ள மிக நுண்ணிய துவாரத்தின் வழியாகத்தான் கருமுட்டை பயணமாகிறது. இது உட்புறம் நகர்ந்து செல்லும் வகையில் அலை அலையாக போன்ற அமைப்புகள் அதனுள் உண்டு. கருமுட்டை நகர்வதை எளிதாக்கும் வண்ணம் வழுவழுப்பான நீர் இதனுள் சுரக்கிறது. கருக்குழல் கருப்பையோடு இணையும் இடத்தில் துவாரத்தின் அளவு ஒரே ஒரு மயிரிழைதான் என்பதைக் கேட்கும் போது வியப்பாக இல்லையா? இந்தக் குழாயில் தான் ஆண் விந்தணுக்கள் பல, கருமுட்டையை சூழ்கிறது. ஆனால் ஒன்று மட்டும்தான் உள்ளே செல்லும். பின்பு அது கருவாக உருவாகி கருப்பையினுள் நகர்ந்து சூல் மெத்தையில் தங்குகிறது.

கருக்குழாயின் அமைப்பும் செயல்பாடுகளும் கூட முக்கியத்துவம் வாய்ந்தவையே! முட்டைகளின் உற்பத்தி ஒழுங்காக நிகழ கருக்குழல் ஆரோக்கியமாக இருத்தல் வேண்டும். சிலருக்கு டி.பி. போன்ற நோய்களினால் இதில் சிதைவு ஏற்படலாம். அடைப்பும் ஏற்படுவதுண்டு. இந்த நிலையில் கருக்குழாயின் வெளிப்புறங்கள் கூட முழுதும் பாதிக்கப்படும். அசுத்த நீர்த் தேக்கம் ஏற்படும். தவிரவும் மாதவிடாயின் போதும் சிதைந்த துணுக்குகள் கருக்குழலினுள் சென்று நோய் ஏற்படக் காரணமாகிறது

என்று ஆங்கில மருந்துவ நூல்களில் கூறப்பட்டுள்ளது. இன்னும் சிலருக்குக் கருக்குழல் அமைப்பு ஒரே சீராக இல்லாமல் நெளிவுடன் மணிகோர்த்தது போல (BEADED) இருக்கும். வேறு சிலருக்கு இது வளைந்து திருகி காணப்படும். இன்னும் சிலருக்கு வயிற்றின் உட்பகுதியின் அருகில் ஏகமான சவ்வுப் பகுதிகள் (ADHESIONS) வற்றி இருக்கும். கருக்குழலின் மற்ற பகுதிகள் ஆரோக்கியமாக இருந்தும் கருக்குழலில் துவாரம் அடைபட்டுப் போவதும் (TUBE BLOCK) உண்டு. இதுபோன்ற அடைப்பு குழலின் எந்த இடத்திலும் ஏற்படலாம். பெரும்பாலும் கருப்பையை ஒட்டிய பகுதியில்தான் ஏற்படுகிறது. இதைச் சித்த மருத்துவத்தில் "கர்ப்பந்த ரோகம்" என்று கூறுவர். அதற்கு மருந்துகளும் உண்டு.

முன்பு சொன்ன உருக்கி நோய் பாதிப்பு மற்றும் கருக்குழலுக்கு உரிய இயற்கையான துடிப்பு - இயக்கம் (MOTILITY) போதுமான படி இல்லாமையால் பிசுபிசுப்பான சுரப்பி நீர் தேங்கி கெட்டிப்பட்டு இறுகிப் போதல், தசை வளர்ச்சி, தொற்றுகள் போன்ற பல காரணங்களினால் இதுபோன்ற அடைப்புகள் ஏற்படும். காரணம் எதுவானாலும் கரு முட்டை கருக்குழலின் வழியாக பயணிப்பது தடுக்கப்படுகிறது. ஆண் உயிரணுவும் கரு முட்டையும் இணையும் வாய்ப்பு இல்லாமல் போகிறது. சில சமயம் கருக்குழல் முழுவதுமே கூட நீர் கோர்த்து அடைப்பதும் உண்டு. கருத்தரிப்பு பிரச்னைகளில் இந்த அடைப்புகள் மிக முக்கிய இடம்பெறும். இவ்வித அடைப்புகளில் சதை அடைப்பு நீர் அடைப்பு என இருவகை உண்டு. கருக்குழல்கள் இரண்டிலும் அடைப்பு ஏற்பட்ட ஒரு பெண்ணுக்கு இயற்கையான முறையில் கருத்தரிக்கும் வாய்ப்பே கிடையாது.



நவீன மருத்துவத்தில் அறுவை சிகிச்சை முறை இன்று அபார வளர்ச்சி பெற்றுள்ளதை யாரும் மறுக்க முடியாது. வேறு சில நவீன யுக்திகளைக் கையாண்டு கருப்பை வழியாக கருவிகளை உட்செலுத்தி, காற்றழுத்தம் அல்லது நீரழுத்த முறையில் அடைப்பை அகற்றுகின்றனர். இப்படி நீக்குவது எளிதல்ல. மிக மிக நுணுக்கமான பகுதி இது.

செயற்கை முறையில் நீக்கப்படுவதால் சில மாதங்கள் கழித்து சிலருக்கு அடைப்பு மீண்டும் வரும் வாய்ப்பு உண்டு. அடைப்பு நீக்கப்பட்ட இடத்தில் பலருக்கு 'பல்பு' போல உப்பி விடுவதும் உண்டு. ஆனால் இந்த அடைப்புக்கான காரணங்களைத் தெளிவாக விளக்கி இதற்கு முழுமையான தீர்வு தரும் சிகிச்சைகளும் சித்த மருத்துவத்தில் உண்டு. கருப்பை மற்றும் அதைச் சார்ந்த உறுப்புகள் அனைத்துக்கும் ஒரு இயற்கையான துடிப்பும் இயக்கமும் (ACTIVITY & MOTILITY) உண்டு. சித்த மருத்துவ நாடி நூல் விதிப்படி கருப்பையில் ஏற்படும் கொழுமை, குளிர்ச்சி காரணமாக இதை இயக்கும் நரம்புகளின் மந்தத்தன்மை ஏற்படுகிறது. இயல்பான இதன் துடிப்பு குறையும். இதனால் கருக்குழலில் சுரப்பி நீர் தேங்கி பின்பு தொற்றுகளும் ஏற்பட்டு கெட்டியாகி அடைப்பாக மாறும்.

திருமணம் ஆகாத பெண்களுக்கு கருக்குழல் அடைப்பு இருந்தாலும் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை. மாதப் போக்கு தவறாமல் வந்து கொண்டு இருக்கும் வரை இந்த எண்ணமே எழ வாய்ப்பு இல்லை. திருமணம் ஆகி குழந்தை உருவாகுவதை எதிர்பார்க்கும்போது அது தாமதமானால் இந்த சந்தேகம் வருகிறது. கருக்குழல் அடைப்பு கண்டறிய டியூப் டெஸ்ட் முறைகள் உள்ளன. இந்த அடைப்பு ஏற்படாமலேயே தடுக்க வழியுண்டா? என்று கேட்கிறீர்களா முன் கட்டுரைகளில் கூறி வந்துள்ள உணவு பழக்க வழக்கங்கள் உடற்பயிற்சி (உழைப்பு) மற்றும் சுகபேதி முறைகளை ஆரம்பத்திலிருந்தே கடைபிடித்து வரும் பெண்களுக்கு இந்த நிலைமை ஏற்படுவது மிகவும் அரிது. அப்படி வந்தாலும் இயற்கையான சித்தர் மருந்துகள் மூலம் மேற்சொன்ன பாதிப்புகள் இன்றி அடைப்புக்களை நீக்க முடியும்.

சித்த மருத்துவத்தில் சூரணம் என்கிற மூலிகைகள் கூட்டுப் பொடி, கஷாயம், மாத்திரைகள், மெழுகு, பற்பம், சிந்தூரம் என்ணெய்கள், பேதி மருந்துகள், லேகியம் என்று பல வகையில் மருந்துகள் உண்டு. இவை ஒவ்வொன்றும் வேலைச் செய்யும் விதமும் வீரியமும், பலன்களும் கூட வேறு வேறு

எந்தச் சந்தர்ப்பத்தில் எந்தவிதமான கோளாறுகளுக்கு எதைக் கொடுத்தால் மிகச் சிறந்த பலன் கிடைக்கும் என்று வரையறையும் கூட உண்டு. ஒன்று செய்யும் வேலையை மற்றொன்று செய்யாது.

லேகியம் மாத்திரை போன்றவைகளை விட எண்ணெய் வடிவ மருந்துகள் இந்நோய்க்கு நல்ல பலன்தரும். முக்கியமாக சார மெழுகு, சார எண்ணெய், கலிங்காதி எண்ணெய், நாயுருவி, கருடன் கிழங்கு இவை சேர்ந்த எண்ணெய்கள், பிரண்டை உப்பு, வச்சிரவல்லி மெழுகு போன்றவையும் நல்ல பலன்தரும். மந்தமான நரம்புகளை இயக்க வல்லவை குரு மருந்துகள்! இது சேர்த்து கொடுக்கும்போது சேதம் எதுவுமின்றி நீரடைப்புகளை எளிதாக நீக்கிவிடும். கருப்பையைச் சுற்றி நிற்கும் கொழுப்பு, வீக்கம் இவைகள் குணமாவதையும் எம் மருத்துவ அனுபவத்தில் கண்டறிந்துள்ளோம். இவை எமது 178 வருட குரு பரம்பரையில் கையாண்டவை. பரம்பரை அனுபவம் பெற்ற சிலரிடமும் இருக்கிறது.

கருப்பை வளர்ச்சி குறைவு (small uterus) மிகவும் சிக்கலான ஒன்று. ஆரம்பத்திலேயே கண்டறிந்து நீடித்த சிகிச்சை செய்தால் 10 முதல் 15 சதவிகிதமே வெற்றி வாய்ப்பு! கருப்பை கோளாறுகள் பலவிதங்கள் என்றாலும் இதில் பொதுவான அம்சமாவது தாறுமாறான இரத்தப் போக்குதான். இவ்விதமான ரத்தப்போக்கு கோளாறுகளுடன் முழுக்க முழுக்க தொடர்பு உடையது கருப்பையின் உட்புற படலமே! 10 – 15 நாட்கள் தொடர்ந்த ரத்தப்போக்கு, கருப்பாகவும் கட்டி கட்டியாகவும் வெளியாவது எனப் பலவகை உண்டு. சொல்லும் விதத்தைக் கொண்டே சில நோய்களை ஊகித்து உணரவும் முடியும்! இந்த மாதிரி குற்றங்கள் இல்லாத மாதவிடாய் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற விளக்கமும் சித்தமருத்துவத்தில் உண்டு. நல்ல சிவப்பு நிறத்துடன், நாற்றமின்றி இருக்க வேண்டும். வெளியாகும்போது வலி இருக்கக் கூடாது. பருத்தித் துணியில் பட்டால் கறைபிடித்தல் ஆகாது. சீராக போகத் தொடங்கி சீராக நிற்க வேண்டும். 3 முதல் 5 நாட்கள் வரை இருக்கும். இது உடலின் ஆரோக்கியம், ரத்தப் பெருக்கம், இவைகளைப் பொறுத்தது.

ஓவரியில் உருவாகி வளரும் கருமுட்டை 15-ம் நாள் முழுவளர்ச்சி அடைவதை அமாவாசை முதல் பௌர்ணமி அல்லது பௌர்ணமி முதல் அமாவாசை இதிவரை 15 நாட் கணக்குடன் ஒப்பிடுகிறது இந்து முறை வான சாத்திரம். சோதிட சாத்திரத்தின்படி கருப்பை என்கிற இந்த "கர்ப்ப சஞ்சி" பிரபஞ்சத்தின் சகல கதிர்வீச்சும் (COSMIC RAYS) எளிதில் ஊடுருவ முடியாத ஒன்றாகக் கூறுகிறது. அதாவது குழந்தை இதில் வளரும்போது அல்ல; அது பிரசவமாகி வெளிவரத் துவங்கும் அந்த வேளை – பிறப்புறுப்பு வாய்திறந்து தலையின் உச்சிப்பகுதி வெளியாகும் போதுதான் நவக்கிரகங்கள், நட்சத்திரங்களின் சக்தி உள்ளுக்குள் புகுவதாகக் கூறுகிறது. ஜாதகம் துல்லியமாக அமைய வேண்டுமானால் இந்த வேளைதான் 'சிரசு உதயம்' என்ற பெயரால் கணக்கிடப்படுகிறது. இது சரியாக அமையாததாலேயே ஜாதகம் கூறும் கால பலன்கள் மாறுபடுவது உண்டு. நவீன விஞ்ஞான ஆய்வின்படியும் கருப்பை அமைந்துள்ள அடிவயிற்றுக் கூபக எலும்பு அறைப்பகுதி எக்ஸ் கதிர்வீச்சு எளிதில் ஊடுருவக்கூடியதாக இல்லை என்பதே! அதனால் இங்கு புற்றுநோய் போன்ற பாதிப்புகளில் சிகிச்சைக்கான "கதிர்வீச்சு அதிகமாகக் கொடுக்க வேண்டி உள்ளது.

“கருப்பையில் இவ்வளவு விஷயம் உள்ளதா? இவ்வளவு பாதுகாப்பாக கருப்பையும் அதன் உறுப்புக்களும் வைக்கப்பட்டு உள்ளதா? என்று வியப்பு தோன்றுகிறது அல்லவா? அப்படியானால் இந்த கருப்பையை பேணிவர வேண்டியது எவ்வளவு முக்கியம்? ஆரோக்கியமான நாளைய வாரிசுகளை உருவாக்கும் இடமே இதுவல்லவா?

தைராய்டு சுரப்பி கோளாறுகளினாலும் இரத்தப்போக்கு கட்டுப்படாமல் சிரமம் ஏற்படுவதுண்டு. இன்னும் தொடர்ந்து எடுத்துக் கொள்ளும் கருத்தடை மருந்துகள் வீட்டில் விசேஷம், பிரயாணம் என்று மாதவிடாயைத்

சாம்பார் சாதம் (பிசிபேளாபாத்) செய்ய ப. அரிசியும், துவரம் பருப்பும் சேர்த்து செய்கிறோம். ஒரு மாறுதலுக்கு அரிசிக்குப் பதிலாக அவலையும் து. பருப்பிற்குப் பதில் பாசிப் பருப்பையும் கலந்தும் செய்யலாம். அவல் சீக்கிரம் வெந்து விடுமாகையால் பாசிப் பருப்பு பாதி வெந்தபிறகு அத்துடன் அவலை சேர்த்து வெந்ததும் மற்றபடி அரிசி சாதத்திற்கு (சாம்பார்) வழக்கமாக செய்வது போல் தயாரிக்கலாம். சுவையிலும் வித்தியாசம் இருக்காது. அடிகனமான பாத்திரத்தில் இதைச் செய்யலாம். பிரஷர் குக்கர் தேவையில்லை.

— ரமா நாராயண்




தன்னி வைக்க சாப்பிடும் மாத்திரைகள், அடிக்கடி செய்து கொள்ளும் கருச்சிதைவு அல்லது குறைபிரசவம் போன்றவையும் கருப்பையை பாதிக்கக்கூடிய மற்ற காரணங்களாகும்.

"ENDOMETRIOSIS" என்கிற "கருப்பைகாரிக நோய்" கருப்பை சுவர்களை சீர்குலைக்கும் நோய்களில் நம்பர் ஒன் எனலாம்! இதனால் கருக்கோளங்களும், கருக்குழலும் (OVARY, FALLOPIAN TUBE) கூட பாதிக்கப்படுவதுண்டு. இது எப்படி உருவாகிறது என்பதைப் பற்றி 4 – 5 விதமான கொள்கைகள் உள்ளன. மாதவிலக்கு வெளியேறாமல் அல்லது வெளியேற சிரமத்துடன் தடைப்பட்டு பின்னர் வெளியாகும்போது அதில் கலந்துள்ள கருப்பையில், உள்படலத்தின் சுரப்பிகள் மற்றும் திசுத் துணுக்குகள் கருப்பையின் உள்ளேயே மேல்புறமாக நகர்ந்து கருக்குழலினுள்ளும் புகுந்து மறுவழியாக கருப்பைக்கு வெளியேயும் ஓவரியின் மேலும் ஒட்டிக் கொள்வதால் இது ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. மேலும் சில சமயங்களில் பிரசவத்தில் குழந்தையை வெளியே எடுக்க கருப்பையில் அறுவை சிகிச்சை செய்யும்போதும் கருப்பையின் சூல் மெத்தை நன்கு சுருங்காதிருக்கும் வேளையில் தவறாகச் செய்யப்படும் டி அண்ட் சி காரணமாகவும் இப்படி திசு துணுக்குகள் சிதறி - இடம் பெயர்ந்து இம்மாதிரியான நோய் ஏற்படுவதுண்டு என்கிறார்கள். இது ஒருவகையான சதை வளர்ச்சி. இது மலக்குடல், மூத்திரப்பை, இடுப்பு எலும்பு சுவர் (PELVIC WALL) மலத்துவாரம் எங்கு வேண்டுமானாலும் வளரக்கூடும். முட்டை உருவாகும் நிகழ்ச்சியில் ஈஸ்ட்ரோஜன் போன்ற ஆர்மோன்கள் சுரப்பு அதிகரித்துக் கொண்டே போகும் போது இதுவும் வளர்ந்து கொண்டே இருக்கும். தீட்டு வெளியானதும் சுருங்கும். கர்ப்ப காலத்தில் வளர்ச்சி இருக்காது. இதற்கு CAUTERISATION முறையில் அல்லது லேசர் முறையில் ஓர் அளவுக்குத்தான் அகற்ற முடிகிறது. கருப்பையை சுற்றி கருப்பை "பாசி" (ADHESIONS) வளர்வதற்கும் இதுவும் காரணம் என்று கருதப்படுகிறது.

மருந்து சிகிச்சையைப் பொறுத்த அளவில் ஆர்மோன் கலவை மருந்துகள் மூலம் (கருத்தடைக்குப் பயன்படுபவை) 50 – 60 சதவீதம் வரை இந்த சதை வளர்ச்சியை கட்டுப்படுத்தத்தான் முடிகிறது. நோய் தீவிரமான நிலையில் சில மாதங்கள் வரை முட்டையே உருவாகாமலும் மாதவிடாய் ஏற்படாமலும் ஆர்மோன்களால் கட்டுப்படுத்தி வைப்பதுண்டு. இதற்குப் பக்கவிளைவு இல்லாத நல்ல மருத்துவம் பழமையான சித்த மருத்துவ சுவடிகளில் கூறப்பட்டுள்ளன. இம்மாதிரி நோய்களுக்கென்றே சில சிறப்பான மூலிகைகள், உப்பு வகைகள் கலந்த எண்ணெய்கள் உண்டு. கலிங்காதி எண்ணெய் சித்தாதி எண்ணெய் கருடன் கிழங்கு எண்ணெய் பூவரசங்காய் எண்ணெய் காங்கேயர் எண்ணெய் மற்றும் குரு மருந்துகள் சேர்ந்த திருபலாதி லேகியம், மூதண்ட லேகியம், நவச்சார மெழுகு, கடகரோக மாத்திரை என்று அநேக அற்புதமான மருந்துகள் உள்ளன.

சிதேவி எண்ணெய் என்ற ஒரு தயாரிப்பு கருப்பை நோய்கள் அத்தனைக்குமே பயன்படுபவை. இவ்விதமான எண்ணெய் மருந்துகள் வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு சற்று கடினம்தான். ஏனென்றால் 4 – 5 முறை பேதியாவதுண்டு. ஆனால் இவ்வகை நோய்களுக்கு எண்ணெய் மருந்துகள்தான் மிகச் சிறந்தது என்பது சித்தர்கள் மற்றும் பழுத்த அனுபவமிக்க மருத்துவர்களின் கருத்து. இதனால் கருப்பையே நோய்கள் தீர்ந்து சுத்தமாகி ஆரோக்கியம் பெருகுகிறது. இது எமது மருத்துவ அனுபவத்தில் கண்ட உண்மை.

கருப்பை நோய்களுக்கு வயது வரம்பு எதுவும் கிடையாது. வயதுக்கு வந்தது முதல் எப்பொழுது வேண்டுமானாலும், திருமணத்துக்கு முன்-பின் ஏன், மாதவிடாய் ஓய்வு காலத்திலும் (MENOPAUSE) அதன் பிறகும் கூட வரலாம். இளம்வயதில் அலட்சியப்படுத்தும் பல கோளாறுகளால் பின்னர் குழந்தை இல்லாமல் போவதுதான் பெருத்த பாதிப்



விநாயகர் சதுர்த்திக்கு கொழுக்கட்டைக்கு மாவு கிளறும் போது கொதிக்கும் வெந்நீரை கீழே இறக்கி வைத்து அதில் 1 கல் உப்பும், 2 ஸ்பூன் ந. எண்ணெயும் விட்டு மாவு கிளறினால் கட்டியே தட்டாது. சொப்பும் மெல்லியதாக வரும். அடுப்பில் வைத்துக் கிளறினால் கட்டி தட்டும்.

- என். விஜயலட்சுமி

பாகும். மாதவிடாய் கோளாறுக்காக அவ்வப் போது மாத்திரை மருந்து சாப்பிட்டுத் தற் காலிக சுகத்தில் திருப்தி அடைந்து வரும் பெண்களில் 60% பேர் வரை பிற்காலத்தில் ஒரு கட்டத்தில் கருப்பை அகற்ற வேண்டிய நிலை ஏற்படும் என்பதை நினைவில் வைக் கவும். பாரம்பரியமாக கருப்பை நோய் உள்ள பெண்களும் ஆரம்பத்திலேயே சரிசெய்து கொள்ள வேண்டும்.

நெல்லையைச் சார்ந்த 23 வயது திருமணம் ஆகாத ஒரு இளம்பெண்ணுக்கு மூன்று மாதம் நிற்காத இரத்தப்போக்கு. மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. 13 முறை இரத்தமும் செலுத்தப்பட்டது. ஆனால் இரத்தப்போக்கு தொடர்ந்தது. திருமணம் ஆகாத பெண் என்றபோதிலும் டி அன் சியும் செய்யப்பட்டது. முடிவில் உயிர்காக்கும் முயற்சியாக கருப்பையை அல்லது மன்ணிரலை அகற்றினால் இரத்தப் போக்கை நிறுத்தலாம் என்று கூறப்பட்டது. ஆனால் திருமணம் ஆகாத பெண்ணாயிற்றே? எமது குரு மருந்து கலந்த ஒரு மருந்து எண்ணெய் கொடுத்ததில் ஐந்து நாளில் இரத்தப் போக்கு நின்றது. தொடர்ந்து இரண்டு மாத சிகிச் சைக்குப் பின் முழு குணம் பெற்றார். இது 7 ஆண்டுகளுக்கு முன் நடந்தது. இப்பொழுது திருமணம் ஆகி 2 குழந்தைகளுக்குத் தாய் அவர். சாதாரண இரத்தப்போக்குகளை கட்டுப்படுத்த அநேக பாட்டி வைத்திய முறைகள் உண்டு. சாதாரண மருந்துகள் அநேகம் உண்டு. ஆனால் இம்மாதிரி ஆபத்தான இரத்தப் போக்கை நிறுத்த குரு மருந்துகள் இல்லாமல் ஒன்றும் செய்ய முடியாது. அதுதான் சித்தர் களின் பெருமை.


முத்து போல் பிள்ளை பிறக்க வேண்டும் அதுவும் மூன்று கிலோ எடை இருக்க வேண்டும்" என்ற வசனம் நாம் எல்லாம் கேள்விப்படுகின்ற ஒன்று. ஆனாலும் கர்ப்ப மான ஒரு பெண் மருத்துவரின் தொடர்ந்து ஆலோசனையின்படி ஊட்டமிக்க சத்தான உணவுகளை தேர்ந்தெடுத்து உண்டபோதிலும் பிறக்கும் பிள்ளைகள் குறைந்த எடை உள்ள வையாகவும் (UNDER WEIGHT) பிறந்தவை 12 வயது வரை சளி, இழுப்பு, வலிப்பு, வளர்ச்சி யின்மை அடிக்கடி ஜுரம் போன்ற பல நோய் களால் நோய் எதிர்ப்பு சக்தியின்றி துன்பப் படுகின்றன. இதற்குக் காரணம் என்ன? இதை ஓரளவாவது தடுக்க முடியாதா? என்பதற்கும் சித்தமருத்துவத்தில் பதில் உண்டு.

பெண் கர்ப்பம் உற்றிருக்கும்போதே கடை பிடித்து வர வேண்டிய பாட்டி வைத்திய முறைகள் அநேகம் உண்டு. இவைகளை கடை பிடிப்பதன் மூலம் கர்ப்பம் - பிரசவம் என் பதே பெண்களுக்கு ஆபத்தான கண்டம் போல் நினைக்கத் தேவையில்லை. ஆரோக்கிய மான குழந்தையை சுகமாக பிரசவிப்பதுடன் "பிரசவம் ஒரு சுகமான அனுபவம்" என்று நினைக்கத் தோன்றும்!

இக்கட்டுரையை எழுதிய டாக்டர். ஜெயராம் பெண்களின் கருப்பை நோய்கள் மற்றும் குழந்தைப்பேறு இன்மை குறை பாடுகளுக்கும் சிறப்பு சித்த மருத்துவமும் செய்து வருவதுடன் இதற்காகவே நவோ தயா சித்தர் மருத்துவமனை எனும் (20, ஆற்காடு ரோடு, சென்னை - 24. போன் : 4810752) பெயரில் ஆராய்ச்சி மையம் நிறுவி இருக்கிறார்.

பச்சைக் கலரில் கிடைக்கும் ஆப்பிள் இரண்டு எடுத்துப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். உப்பு 2 ஸ்பூன், 1 ஸ்பூன் மஞ்சள் பொடி, மிளகாய்ப் பொடி 1 சிறு கரண்டி அதில் போட்டு நன்றாகக் குலுக் கவும். வாணலியில் ஒரு கரண்டி எண் ணெய் விட்டுக் காய்ந்ததும் 1 ஸ்பூன் கடுகு. சிறு ஸ்பூன் பெருங்காயம் போட்டு வெடித்ததும் ஆப்பிளில் போட்டுத் தொட்டுக் கொண்டு பாருங்கள். சுவையாய் மாங் காய் ஊறுகாய் போலவே இருக்கும்.

— ஆர். தங்கம்





அணுகுமுறை

மாலை நேரங்களில் அமர்ந்து பேச, காற்று வாங்க வசதியாய் அபார்ட்மெண்ட்டின் முன்பு சிமெண்ட் மேடைகள் கட்டப்பட்டிருந்தன.

அம்புஜம் மாமி முன்பே வந்து விட்டார். மாமிக்கு ஆறு மணிக்கே இரவுச் சாப்பாடு ஆகிவிடும். கூடவே மைதிலியும். கணவன் ஏழு மணிக்குத்தான் வருவான். அதுவரை அரட்டைக் கச்சேரி.

"எங்கே ரெண்டு நாளா ஸ்வப்னாவைக் காணோம்."

"தெரியலியே. பேங்க்ல லேட் ஆகறதோ என்னவோ..."

"முந்தாநாளே, பத்து நிமிஷம் கூட உட்காரலே. சரியாவும் பேசலே."

மாமி குறைப்பட்டுக் கொள்கிற தொனியில் சொன்னபோது ஸ்வப்னா வந்தாள்.

"நூறு ஆயுசுடிம்மா உனக்கு. ரெண்டு நாளா ஆளைக் காணலேன்னு இப்பத்தான் சொன்னேன்."

மைதிலி நகர்ந்து கொள்ள ஸ்வப்னா நடுவில் அமர்ந்தாள். முகம் வாடியிருந்தது.

"உங்க மச்சினருக்கு ஏதோ வரன் பார்க்கப் போகணும்னு சொன்னியே. எப்ப பார்க்கப் போறீங்க..."

ஸ்வப்னாவிடம் எதிர்பார்த்த உற்சாகம் இல்லை.

"என்னடி... கலகலப்பா பேசவே. இன்னிக்கு என்ன ஆச்சு உனக்கு"

மாமி நிஜமான அக்கறையுடன் கேட்க ஸ்வப்னா பெருமூச்செறிந்தாள்.

"என்ன இருந்தாலும் நான் வேற வீட்டுலேர்ந்து வந்தவ. என்னை யாரு மதிக்கிறாங்க. எது செஞ்சாலும் தப்பு. செய்யாவிட்டாலும் தப்பு."

"ஒடைச்சு சொல்லு. பூர்ணத்தை மறைச்சு வச்ச மாதிரி என்ன பேச்சு."

"மச்சினருக்கு என்னை மாதிரி வேலை பார்க்கிற பெண்ணாவே பார்க்கலாம். அது தான் நல்லதுன்னு சொன்னா... ப்ச்..."

"உங்க மச்சினருக்கு வேலை பார்க்கிற பெண் பிடிக்கலேன்னு சொன்னியே.."

மாமி ஞாபகமாய்க் கேட்டார். முன்பே ஸ்வப்னா தெரிவித்த தகவல்.



"அவர் தெரியாம சொல்றார். பிரைவேட் கம்பெனில வேலை. இந்தச் சம்பளத்தை வச்சிண்டு... இந்த விலைவாசில எப்படி குடும்பம் நடத்தறது..."

"சரி. நீ உன்னோட ஒபினியன் சொல்லியாச்சு. கேட்டா கேட்கட்டும். இல்லேன்னா விடேன். நீயேன் அப்செட் ஆகறே."

மாமி அழுத்தமாய்ப் பேசினார்.

"இல்லே மாமி. உங்களுக்குத் தெரியாது. நாம என்னதான் செஞ்சாலும்... எவ்வளவுதான் அக்கறை எடுத்துகிட்டாலும்... உள்ளூர நான் ஒரு அன்னியப் பெண்ணுன்னுதான் பார்க்கிறா... பழகறா..."

ஸ்வப்னா லேசாய்த் தேம்பினாள்.

மைதிலி குறுக்கிடாமல் கவனித்துக் கொண்



ரிஷபன்

டிருந்தான். ஸ்வப்னாவுக்கு ஒரு மாதிரி பிரச்னை என்றால் அவளுக்கு இன்னொரு ரகம்.

காலை எட்டு மணிக்கு ரெண்டு பசங்களை ஸ்கூலுக்கு அனுப்ப... கணவரை ஆபீசுக்கு அனுப்ப என்று அல்லாடுகிற தருணத்தில் மாமனார் 'எனக்கு டிபன் வேண்டும்' என் கிறார். 'சமையலோ ஆகிவிட்டது. சாப்பிடுங் களேன்' என்றால் அந்தளவு சீக்கிரமாய் சாப் பிடப் பிடிக்கவில்லையாம். ஒரு மனுஷி எதற் கென்று அல்லாடுவது. சாப்பாடு, டிபன் என்று ஹோட்டலா நடத்த முடியும். வேலைக்கு ஆள் வைத்தால் 'யம்மாடி... உங்க வூட்டுல இவ்னோ துணி போட்டா எப்படி தோய்க்கறது' என்று இரண்டே நாளில் நின்று விடுகிறாள். பாத்திரம் கழுவ மட்டும் வருவாளாம். அதற்கே இருநூறு கொடு என்று மிரட்டல். என்ன வாழ்க் கையோ.

மாமி வசதியான போஸில் சரிந்து உட்கார்ந்து கொண்டாள்.

"உன் கதையை சொன்னே. என் கதையைக் கேளு. வேடிக்கையா இருக்கும். அப்போ நான் கல்யாணமாகி வந்த புதுசுல... எங்க புக்ககத்துல நாய் வேற வச்சிருந்தா. என்னோட மாமி யாருக்கு நாய்னா அவ்வளவு பாசம். இவர் ஆபீசுக்குக் கிளம்பினா... ஸ்டேஷன் வரைக்கும் பின்னாலேயே போகும். சாயங்காலம் அதுக்கு எப்படித்தான் டயம் தெரியுமோ... கரெக்டா போய் நின்னுரும். இவர் வந்ததும் பின்னால ஓடி வரும்."

மாமியின் ஸ்பெஷாலிட்டி நிதானம். அணுகுமுறை. எந்த நிமிடமும் சுழிவிரக்கம் கலக்காத குரலில் பேசுகிற தன்மை.

"வீட்டுக்குள்ளே வந்தாரோ இல்லையோ இது ஓடிவந்து எங்க மாமியார் மடியில படுத் துக்கும். வேளாவேளைக்கு தவறாம அதைக் கவனிச்சுக்கணும். ஆகாரம் வைக்கணும். மாமியார் என்ன சொல்லுவார் தெரியுமா..."

கண்சிமிட்டியபடி மாமி பேசினார்.


"இவனும் உனக்கு ஒரு மச்சினன்தான்டி. எத்தனை வருஷமா வளர்க்கறோம்னாளே பாரு."

வரிகளின் அர்த்தம் புலப்படும்முன் மூவரி டமும் பலத்த சிரிப்பு தொற்றிக் கொண்டது.

"உங்களுக்கு இப்படி ஒரு மச்சினனா..."

"யப்பா... எப்படிக் கோவம் வரும் தெரி யுமா... தெரியாம ஒரு தடவை 'நாய்'னு சொல்லிட்டு அவஸ்தைப்பட்டுட்டேன். அது மேல எவ்வளவு பிரியம் வச்சிருந்தா... அப் புறம்... தாங்க முடியாம உண்ணி வந்து வீட்டுல வச்சுக்க முடியாம... விரட்டி விட வேண்டி யதாப் போச்சு."

மாமி நிறுத்தினார். ஸ்வப்னாவைப் பார்த்தார்





"எதுக்கு சொல்றேன்னா... அவா மனசு புரிஞ்சதும் நானும் அதுக்கு அனுசரணையா என்னை மாத்திக்கிட்டேன். என் மாமியார் சாகும் போது என்னைத்தான் பக்கத்துல அழைச்சு வீட்டுப் பத்திரம், நகைப் பொட்டி, எல்லாம் கொடுத்தார். உன் புருஷனுக்கு சாமர்த்தியம் பத்தாது. நீதான் பொறுப்பா கவனிச்சுக்கணும். இத்தனை நாள் உன்னை விரட்டின மாதிரி உனக்கு தோணியிருக்கும். நீ இந்தக் காலத்துப் பொண்ணு. உனக்குப் புரியாதது இல்லே... ஒரு ஆபீஸ்ல கீழே வேலைக்கு சேர்ந்தா... நாலு விதமாத் தான் தயார் பண்ணுவா. பின்னால மேலே ஒசந்த பதவிக்கு வரப்ப தெளிவா, திடமா நிக்க முடியும் பாரு... அதுக்காக அப்படின்னார்."

மாமி மீண்டும் முன்னுக்கு நகர்ந்து அமர்ந்தார். அபார்ட்மெண்ட்ஸ் பொது மின் விளக்குகள் ஒளிரத் துவங்கின.

''நீயும் ஸ்போர்ட்டிவா எடுத்துக்கோ. மனசுல வச்சு புழுங்கிண்டு... எதையாவது கற்பனை பண்ணி உன்னையும் கஷ்டப்படுத்திக்காதே... உன்னோட மாமியாரும் எங்க மாமியார் மாதிரி உன்னைத் தயார் பண்றாளோ என்னவோ. நல்லதுன்னு மனசுல பட்டதை தைர்யமா எடுத்துச் சொல்லு. அப்புறம் அவா பாடு சரியா..." என்றார் ஸ்வப்னாவிடம்.

மைதிலி மாமியை வியப்புடன் பார்த்தாள். எதற்குமே ஒரு தீர்வு இருக்கிறது. மனசுதான் வேண்டும். இணங்காணு. செயல்படுத்த.

''தேங்க்ஸ் மாமி'' என்றாள் ஸ்வப்னாவை முந்திக்கொண்டு.

சுவையான சமோசா

கடையில் வாங்குவது போல் சமோசா மொறு மொறுவென்று இல்லையே என்று குழந்தைகள் கேலி செய்கிறார்களா? வீட்டிலேயே மொறு மொறுவென்று சமோசா செய்ய இதோ ஒரு புதிய பாணி.

மைதா - 2 கப்
டால்டா - 2 டீ. ஸ்பூன்
உப்பு - தேவையான அளவு
சோடா உப்பு - 1 சிட்டிகை

மைதா மாவை சலித்து அதனுடன் உருகிய சூடான டால்டா, உப்பு, சோடாப்பு போட்டு நன்றாகக் கலந்து பிறகு தண்ணீர் விட்டு சப்பாத்தி மாவு பிசைவது போல் பிசைந்து வைக்கவும்.

1 உருளைக்கிழங்கு - 3 (பெரியது)
பட்டாணி - 100 கிராம்
இஞ்சி - 1 துண்டு
பூண்டு - 4 பல்
பச்சை மிளகாய் - 4
வெங்காயம் - 1 பெரியது (சிறிதாக நறுக்கிக் கொள்ளவும்)
புதினா - 1 கைப்பிடி அளவு
மசாலா பவுடர் - 2 ஸ்பூன்
மாங்காய்ப் பவுடர் (ஆம்சூர்) - 1 ஸ்பூன்
எண்ணெய் - ½ லிட்டர்
தாளிக்க - சீரகம்
கொத்த மல்லி விதை + ஜீரகப் பொடி - 2 டீ. ஸ்பூன்
புதினா இலையை பொடி செய்து வைத்துக் கொள்ளவும்.

செய்முறை

உருளைக்கிழங்கு + பட்டாணியை வேக வைத்து எடுத்துக் கொள்ளவும். முக்கால் பதத்திற்கு வெந்தால் போதுமானது. உருளைக்கிழங்கை சிறிது சிறிதாக பொடி செய்து கொள்ளவும். இஞ்சியையும் + பூண்டுபல், இரண்டையும் மிக்ஸியில் அரைத்துக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய் விட்டு சீரகம் தாளித்ததும், பூண்டு + இஞ்சி விழுதை முதலில் போட்டு வதக்கவும். பிறகு பட்டாணி, பச்சைமிளகாய் (சிறிதாக நறுக்கியது) + வெங்காயத்தையும் போட்டு வதக்கவும். பிறகு அதில் கொத்தமல்லி விதை பொடி + ஜீரகப் பொடி, புதினா இலை + உப்பு சேர்த்து கலந்து இரண்டு நிமிடம் வதக்கவும். பிறகு மசாலா பொடி, மாங்காய் பொடி கலந்து மேலும் 2 நிமிடம் வதக்கி இறக்கவும். இந்தக் கலவையை மசித்த உருளைக்கிழங்குடன் சேர்த்து நன்றாகக் கலக்கவும். (உருளைக்கிழங்கை வதக்க வேண்டாம்) இப்பொழுது கிரேவி நன்றாகக் கெட்டியாக இருக்கும்.

மைதா மாவை சிறு சிறு உருண்டைகளாக பிரித்துக் கொள்ளவும். சப்பாத்தி இடுவது போல் பெரிதாக இட்டுக் கொள்ளவும். இந்த மைதா சப்பாத்தியை வெறும் தோசைக் கல்லில் சூடான பிறகு போடவும். இரண்டு பக்கமும் சூடு பட வேண்டும். இப்பொழுது மைதா சப்பாத்தியை எடுத்து ⊘ அரை வட்டமாக கட் செய்து கொள்ளவும். தோசை கல்லில் போடுவதால் மைதாவில் உள்ள பசை போய் சிறிது கெட்டியாக மாறும். சப்பாத்தியை மெலிதாக இட்டுக் கொள்ள வேண்டும். ஒரு அரை வட்டத்தை எடுத்து 'கடலை' பாக்கெட் செய்வது போல மடித்து ▽ உள்ளே உருளைக்கிழங்கு கறியை வைத்து ஓரங்களை 'பச்சை மைதா' மாவு கரைசலை வைத்து ஒட்டவும். (மைதா மாவில் சிறிது தண்ணீர் விட்டுக் கரைக்கவும்). பிறகு எண்ணெயில் போட்டுப் பொன்னிறமாக பொரித்து எடுத்தால், 'மொற மொற' சமோசா!

இதில் எல்லா சப் பாத்திகளையும் இட்டு, சூடாக்கி கறி வைத்து மூடி, சமோசா செய்து வைத்துக் கொண்ட பிறகு எல்லா சமோசாக்களையும் எண்ணெயில் போட்டு எடுக்கலாம். தொட்டுக் கொள்ள இருக்கவே இருக்கு தக்காளி சாஸ் அல்லது புதினா சட்னி.

— சியாமளா



கிளியோபாட்ராவின் கடைசி நாட்கள்

10


கிளியோபாட்ரா... புராதன எகிப்து நாட்டின் ராணி. மகத்தான அழகி. ஏன் உலகின் பேரழகி. தன் காலத்துப் பேரரசர்களை சக்கரவர்த்திகளை சர்வாதிகாரிகளை மாவீரர்களைத் தன் அழகினால் நிலைகுலைய வைத்தவள். ஓர் ஆண்மகனின் தீரத்தோடு, மனோதிடத்தோடு எகிப்து நாட்டை ஆண்ட அதிசயப் பெண் பண்டைய நாகரிகங்களை விளக்கும் சரித்திரச் சான்றுகளில் க்ளியோபாட்ராவைப் பற்றி எத்தனை எத்தனையோ வியப்பூட்டும் கதைகள், காட்சிகள்!

இத்தகைய ஆற்றலும் அழகும் மிக்க க்ளியோபாட்ரா, தனது கொடிக் கப்பலான 'அண்டோனியா'டின் தளத்தில் நின்றபடி, தனது மாபெரும் போர்க்கப்பல்கள் போருக்குக் கிளம்ப ஆயத்தமாக நிற்பதைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தாள். அப்போது அவள் தனது நாற்பதாவது வயதை நெருங்கிக் கொண்டிருந்தாள். அந்தப் பேரழகிக்கு வயது என்பது ரோஜா மலரின் இதழ்களைப் போல் அந்த அழகு மலரின் இதழ்கள் ஒவ்வொன்றும் விரியும் போது அவள் உடலில் புதிய சோபையை உருவாக்கின.

ரோம சாம்ராஜ்யத்தின் ஈடு இணையற்ற தளபதியாக விளங்கிய மார்க் ஆந்தனியின் இதயத்தைக் குடைந்து க்ளியோபாட்ராவின் எழில் இடம் கொண்டதில் வியப்பில்லை.

அது ஒரு மகத்தான நாள். கிறிஸ்து பிறப்பதற்கு முப்பத்தியோரு ஆண்டுகளுக்கு முன்னால்; எகிப்திய போர்க்கப்பல்களுக்குத் தலைமை தாங்கி, இயோனியன் (Ionian) கடலில் கிரேக்க நகரான ஆக்டியத்துக்கு அப்பால், ரோமானியர்களை எதிர்த்துத் தனது கப்பல்களைச் செலுத்திக் கொண்டிருந்தான் மார்க் ஆந்தனி. தன் தாயகத்தையே எதிர்த்துப் போரிடுமளவுக்கு ஆந்தனியைப் பித்தனாக்கி இருந்தது எகிப்திய ராணியின் அழகு!


இதே போல, பல வருடங்களுக்கு முன்னால், க்ளியோபாட்ரா, அலெக்சாந்திரியாவிலுள்ள தனது அரண்மனைச் சாளரத்தின் வழியே, மற்றொரு ரோமானிய மாவீரன் - மகாசீஸர் - தனக்காகப் போர் முகம் நோக்கிப் போவதைப் பார்த்துக் கொண்டு நின்றாள். அந்த மாவீரன் சீஸரோடு, எகிப்திய கலாசாரப்படி, திருமணத்தின் அடையாளமாக



ஓட் என்ற தானிய (மாவு)த்தினால் செய்யப்பட்ட கேக்கை வெட்டி, மகத்தானதோர் கனவைக் கண்டவள் இதே க்ளியோபாட்ரா. என்ன கனவு? சீஸரும் க்ளியோபாட்ராவும் அலெக்சாந்திரியாவில், மன்னரும் மகாராணியுமாக முடிசூடிக் கொள்ள வேண்டும். உலகம் முழுதும் பரந்துள்ள எகிப்திய சாம்ராஜ்யத்தை ஆள வேண்டும் இருவருமாக! ஆனால் ' அவளுடைய அந்தக் கனவு நினைவாக சீசர் உயிரோடிருக்கவில்லை.

சீஸரின் தளபதியான ஆண்டனியுடன் கூட அவள் இதே திருமண சபதத்தை எடுத்துக் கொண்டாள். சீஸரைவிட அதிகமாக ஆண்டனியைக் காத





வித்தாள் க்ளியோபாட்ரா. பல விஷயங்களில் சீஸரைத் தன் கூட்டாளியாகக் கருதினாளேயொழிய கணவனாக, காதலனாகக் கருதியதே இல்லை. தனக்குச் சமமான பங்காளியாகவே எண்ணினாள் சீஸரை. ஆனால் ஆந்தனியையோ, தன்னுடைய அதிகாரத்துக்குப் பக்கபலமாக - துணையாகக் கருதினாள். ஆந்தனியை அவள் தன் கணவனாக ஆங்கீகரித்தாலும் எகிப்தின் மன்னர் என்ற தகுதியை அவனுக்கு அவள் வழங்கவில்லை. தன் அதிகாரத்தை பதவியை - ஆண்டனியுடன் ஏன், யாருடனுமே பங்கு போட்டுக் கொள்ள அவள் விரும்பவில்லை.

ரோமாபுரியில் சீஸருடைய உறவினனான ஆக்டேவியஸ் ஒருநாள், சீஸரின் பலத்தை ஒன்று திரட்டி, அகஸ்டஸ் என்ற பெயரோடு அரியணை ஏறக்கூடும். ஆனால் இப்போது அவன் இருபத்தி ஒன்பது வயது இளைஞன் - வெளிர் முகம். வருங்காலக் கனவுகளில் மிதந்தன அவனுடைய பேராசை மிக்க விழிகள். ரோமானியர்களே உலகை ஆளப் பிறந்தவர்கள் என்று ஜபித்துக் கொண்டிருந்தன அவனது உதடுகள்.

சாந்தாமூர்த்தி

ஒருநாள் ஆக்டேவியஸ், போர்க் கடவுளான பெல்லோனாவின் ஆலயக் கதவுகளை அகலத் திறந்தபடி உள்ளே நுழைந்தான். தேவதையின் வெண்கல ஈட்டியை அவன் கையிலிருந்து பறித்தான். அதை ஆலயத்தின் வாயில் வழியே வெளியே வீசினான். க்ளியோபாட்ராவுடன் சீஸர் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு முடிவு கட்டினான். எகிப்தின் மீது படையெடுத்து அதை ரோமின் வசப்படுத்துவேன் என்று சபதமிட்டான். போர் ஆயத்தங்களில் ஈடுபட்டான். போர்க் கப்பல்களைக் கட்டுவதில் கவனம் செலுத்தினான்.

திட்டமிட்டபடி ஆக்டேவியஸ் எகிப்தின் மீது தாக்குதல் நடத்த கிளம்பி விட்டான். க்ளியோபாட்ரா, தனது போர்க் கப்பல்களுக்குத் தலைமை தாங்கி, ஆண்டனி, அம்ரேஷ்யா ஜல சந்தியிலிருந்து ரோமானியர்களைத் தாக்கி விரட்டக் கிளம்புவதைப் பார்த்துக் கொண்டு நின்றான். க்ளியோபாட்ராவிடம் விடை பெறும் போது மார்க் ஆண்டனி கூறினான்.

“ஆக்டேவியஸின் அந்த பொம்மைக் கப்பல்கள்

விரைவில் ஊர்க் குருவிகளைப்போல ஓட்டம் பிடிக்கப் போகின்றன பார்!"

ஜலசந்தியின் இரு கரைகளிலும் - வடக்கிலும் தெற்கிலும் -ஆக்டேவியஸின் காலாட் படைகள் குவிக்கப்பட்டிருபபதை க்ளியோபாட்ரா பார்த்தாள். ஆண்டனியும் பார்த்தான். அந்த வாட் போர் வீரர்கள் அவனுக்குப் புதுமையாகக் காட்சியளித்தார்கள். இதுவரை ரோமானிய வீரர்களிடம் காணப்படாத ஏதோ ஒன்றை அவன் அவர்களிடம் கண்டான்.

அவர்கள் கண்ட மற்றோர் புதுமை, ரோமானியர்களின் சிறிய கப்பல்களின் சாகசங்களை. மெலிதான, ஆனால் வேகமாகச் செயல்படும் கப்பலின் முன் பகுதியில் வெண்கலத்தினால் ஆன கூரான தாக்குகலம் (RAW) ஆகியவை ஊர்க்குருவிகள் அல்ல! பிரம்மாண்டமானதும், மெதுவாக நகரக் கூடியதுமான திமிங்கிலங்களை, வாள் மூக்கு (sword fish), மீன்கள் தாக்குவதுபோல- ரோமானியக் கப்பல்கள் எகிப்தியக் கப்பல்களை ஆக்ரோஷமுடன் தாக்கின. தங்களுடைய வெண்கலத்தினால் ஆன தாக்கு கலத்தை எகிப்தியக் கப்பல்களின் மரத்தினால் ஆன பக்கச் சுவரை முட்டச் செய்து வேடிக்கை காட்டின. எகிப்தியர்கள் ரோமானியக் கப்பல்கள் மீது கொக்கிகளை வீசமுன் அவை விரைந்து விலகிப் போயின. எட்டப் போய் எரிகுண்டுகளையும், தழல் ஈட்டிகளையும் எகிப்தியக் கப்பல்களின் தளத்தில் வீசின. காய்ந்த மரப்பலகைகளின் தளத்தில் விரைவாகத் தீப்பற்றிக் கொண்டன.

எகிப்தின் ராட்சதக் கப்பல்கள் இது போன்ற காயங்களை முன்பு சந்தித்துச் சமாளித்திருக்கின்றன. ஆனால், இந்தப் போரில்? தன் கப்பல்களில் பல சீர் செய்ய முடியாதபடிக்குப் படுகாயமடைவதைக் கண்டாள் க்ளியோபாட்ரா, சில கப்பல்களின் பக்கங்கள் சின்னாபின்னப்பட்டன. பல கப்பல்களை பெரும் தீ கொழுந்து விட்டு எரிந்து நிலை குலைந்து திசைமாறிப் போய் தன் தோழமைக் கப்பல்களிலும் தீ பரவக் காரணமாயின. ரோமானியர்களின் தாக்குதலை எதிர்த்து நிற்க முடியாமல் தம் படைகளின் முன்னணி பிளவுபட்டு எதிரிகள், உள்ளே புக இடமளித்து விட்டதைக் கண்டாள் எகிப்தின் ராணி.


தன் கொடிக் கப்பலிலிருந்தவாறு இதைப் பார்த்துக் கொண்டிருந்த க்ளியோபாட்ரா போர்க்கப்பல்களின் அழிபாடுகளுக்கு இடையே தான் சிக்கிக் கொண்டால் - தலைநகரான அலக்சாந்திரியாவைக் காக்கத் தான் போக முடியாத நிலை ஏற்பட்டு விடும் என்பதை உணர்ந்தாள். ஏற்பட்டுள்ள அபாயத்திலிருந்து தப்ப இன்னும் அவகாசமிருந்தது. தன் கடற்படைகளுக்கு ஆணை பிறப்பித்தாள் -

"பாய் மரங்களை ஏற்றிப் பறக்க விடுங்கள் - கப்பல்களை நடுக் கடலுக்குச் செலுத்துங்கள்!" எகிப்து ராணியின் ஆணையைத் தொடர்ந்து வீசிய கடல் காற்றில் அண்டோனியாட் கப்பல் படை, கிரேக்க கடற்கரையின் கிழக்குக் கரை ஓரமாகத் தென் திசையில் எகிப்தையும் மத்திய தரைக் கடலையும் நோக்கிப் பயணப்பட்டன. இந்நிலையில் ஒரு சிறு கப்பல் வேகமாகத் தன்னை நோக்கி வருவதைக் கண்டாள் க்ளியோபாட்ரா. தன்னிடமிருந்து விடைபெற ஒரு தூதுவனை ஆந்தனி அனுப்பி இருக்கிறான் போலும் என்று நினைத்தாள் க்ளியோபாட்ரா,

ஆனால் அந்தச் சின்னக் கப்பலில் வந்தது. தூதுவன் அல்ல - மார்க் ஆண்டனியே தான். பின்னால் போர் உச்ச நிலையை எட்டிக் கொண்டிருக்கும் வேளையில் தன் கணவனை - காதலனை அங்கு கண்டவள் - "ஆந்தனி...!" என்று மட்டுமே கூறினாள். உடனே முகம் திருப்பிக் கொண்டாள். கிரேக்கத்தின் மலை முகடுகளில் காத்திருந்த ஆந்தனியின் போர் வீரர்கள், கிழே ஓர் புதுமையைக் கண்டார்கள். மகாசீஸரின் மகத்தான தளபதியான ஆண்டனி, முடிவு தெரியாத போர்க்களத்தை உதறித் தள்ளிவிட்டு - இன்னும் போரிலே ஈடுபடாத காலாட்படை வீரர்களையும் கைவிட்டுப் போவதைக் கண்டு ஆண்டனியின் வீரர்கள் தங்களுக்குள் இப்படிப்

காயவைத்து டப்பாவில் அடைந்து கிடக்கும் வேப்பம்பூ வெறும் ரசத்துக்கும் துவையலுக்கும் மட்டும்தானா? தலைகுளித்ததும் சாம்பிராணி போடும்போது அதில் அரை ஸ்பூன் வேப்பம்பூவையும் போட்டு வைத்தால் அந்தப் புகையில் தலையிலிருக்கும் பேன்கள் ஓடி விடும். சரும நோய் வராது.

— 'ஐஸ்'



பேசிக் கொண்டார்கள்: "தன்னை ஆட்டிப் படைக்கும்படி தன் சுதந்திரத்தை ஒரு பெண்ணிடம் பறி கொடுத்த ஒருவரிடமிருந்து நாம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?" ஆனாலும் மார்க் ஆந்தனி ஆளுமைக்கு உட்படக் கூடிய ஒரு மனிதன் - ஓர் அற்புதமான வாளைப் போல - வீராவேசத்தோடு தாக்கி அல்லது மனந்தளராது எதிர்த்து நிற்க, அந்த வாளை, ஒரு வலுவான கரம் வழி நடத்திச் செல்ல வேண்டும்! அந்தக் கரம் சீஸருடையதா - க்ளியோபாட்ராவுடையதா என் பதில்தான் அந்த வாளின் பெருமையே இருக்கிறது.

க்ளியோபாட்ரா எவ்வித எச்சரிக்கையுமின்றித் தன் கையை விடுவித்துக் கொண்டு விட்டாள் - தன் எதிர்பார்ப்பில் அவன் தோல்வி அடைந்து விட்டான் என்பதினால், தலைநகர் அலக்சாந்திரியா திரும்பிய அவள், மீண்டும் தன் உதவிக்கரத்தை அவனுக்கு நீட்ட விரும்பவில்லை. மார்க் ஆண்டனி அவமானப்பட்டுத் தன் அரண்மனையில் அடைந்து கிடந்தான், கனத்த மனத்துடன் - புறக்கணிக்கப்பட்ட ஆயுதத்தைப் போல.

இந்த இடத்தில் எகிப்திய சரித்திரத்தின் ஏடுகளைப் புரட்டி சில காட்சிகளை நீங்கள் காணும்படி செய்ய வேண்டி இருக்கிறது.

ரோம சாம்ராஜ்யத்தின் முடிசூடா மன்னராக - மாபெரும் தலைவராக விளங்கினார் ஜூலியஸ் சீஸர். அதேபோல எகிப்தில் தன்னிகரற்று விளங்கினாள் பேரழகியான ராணி க்ளியோபாட்ரா. அவள் அழகு ரோமாபுரிக்கும் எட்டியது. எகிப்தின் மீது படையெடுத்தார் சீஸர். ரோமானியப் பெரும்படையை சமாளிக்க முடியாமல் க்ளியோபாட்ரா தோல்வியுற்றாள். ஆனாலும் தன் வனப்பினால் மகாசீஸரைத் தன் வயமாக்கிக் கொண்டாள். எகிப்தை வெற்றி கொண்டவர் - ஏந்திழையாளிடம் தோல்வி கண்டார். ரோமுக்கு திரும்ப வேண்டும் என்பதையே மறந்தார். க்ளியோபாட்ராவின் அழகிலே - அணைப்பிலே - சாகஸங்களிலே மயங்கி எகிப்திலேயே காலங்கழித்தார். எகிப்தை ரோம சாம்ராஜ்யத்தின் நட்பு நாடாகப் பிரகடனப்படுத்தி பிணைப் பேற்படுத்திக் கொண்டார். சீஸரும் தானுமே கூட்டாக இவ்வுலகை ஆளப் போவதாகக் கனவு கண்டாள் க்ளியோபாட்ரா.

மக்களின், மக்கள் பிரதிநிதிகளின் வற்புறுத்தலின் மீது சீஸர் ரோம் திரும்பினார். ரோமானிய சக்கரவர்த்தியாக முடிசூடப் போகும் தருணத்தில் படுகொலை செய்யப்பட்டார். பிரதம தளபதி மார்க் ஆண்டனி ரோம சாம்ராஜ்யத்தை நிர்வகிக்கும் தலைவனாகப் பொறுப்பேற்றான். மக்கள் செல்வாக்கும் ஆண்டனிக்கு இருந்தது. ரோமின் சர்வாதிகாரியான ஆண்டனி எகிப்துக்குச் சென்றான் - அழகு க்ளியோபாட்ராவைக் காண, அவள் அழகில் மயங்கினான். தன் மையலால் மாவீரன் ஆண்டனியைத் தன் காலடியில் விழுந்து கிடக்கும்படி செய்தாள். எகிப்தியப் பேரழகி சீஸரை அவள் காதலனாகத்தான் கருதினாள். அதுவும் அரசியல் காரணங்களுக்காக. கிழவரான சீஸரிடம் அவள் மனம் முழு ஈடுபாடு காட்டவில்லை. ஆனால் ஆண்டனி வாலிப வயதினன். காளை வீரரார்ந்த தோற்றம். ஆகவே ஆண்டனியைக் கணவனாகவே ஏற்றுக் கொண்டாள் க்ளியோபாட்ரா. எகிப்திய ராணியின் எழில் சுடரில் விட்டில் பூச்சியானான் ஆண்டனி.

இந்நிலையில் ரோமாபுரியில் ஆண்டனி க்ளியோபாட்ராவிடம் அடிமைப் பட்டுக் கிடப்பதைப் பற்றிக் கண்டனங்கள் கிளம்பின. எகிப்தின் உறவைத் துண்டித்துக் கொள்ள வேண்டுமென்ற கோரிக்கைகள் எழுந்தன. ஆக்டேவியஸ் என்ற வீரன் - சீஸரின் உறவினன் கொதித்தெழுந்தான். 'எகிப்தை அடிமை

கொப்பரை, இரண்டு அச்சு வெல்லம் இவற்றை சிறு சிறு பற்களாக நறுக்கிக் கொள்ளவும். சுத்தம் செய்த பொட்டுக்கடலை, வறுத்த கடலை எல்லாவற்றையும் கலந்து மிதமான வெய்யிலில் காயவைத்து எடுத்து வைத்துக் கொள்ளவும். ஸ்கூலில் இருந்து வரும் குழந்தைக்கும், நொறுக்குத் தீனி தின்பவர்களுக்கும் சத்தான தின்பண்டம் இது. ஒரு வருடம் ஆனாலும் கெடுவதில்லை.

- மங்களா சாய்ராம்



A UNIT OF
HARI
AGENCIES

ஷொப்பிங்னா சும்மாவா ?



ஷாப்பிங்னா நிறைய அலையணும். நாலு கடைகள் ஏறிப் பார்த்து தரமானதா வாங்கணும். ஆனா, நான் புகழ் பெற்ற ஹரி ஏஜென்சியோட அங்கமான ஹரிப்பிரியாவுக்கு போனேன். அது பெண்களுக்கான பிரத்யேக ஆடை உலகம். அங்கே சுரிதார்கள், பெட்டிகோட்டுகள், பேன்டீஸ், பிராக்கள், நைட்டீஸ், மாக்ஸிகள், கைக்குட்டைகள் அனைத்தும் கிடைக்குது.

சில கடைகளில் டிசைன் நல்லாயிருந்தா, நமக்கு பிடிச்ச கலர் இருக்காது. கலர் இருந்தா, தரமானதா இருக்காது. ஆனா, ஹரிப்பிரியாவுல எண்ணற்ற வண்ண வண்ண ஆடைகள் தரமாகவும், அதே சமயம் நியாயமான விலையிலும் இருக்கிறதால விட்டு வரவே மனசில்ல.

HARI PRIYA

ஹரிப்பிரியா

பெண்களுக்கான பிரத்யேக ஆடை உலகம்

111, முதல் மாடி, கச்சேரி சாலை,
சென்னை - 600 004. போன் : 4942368

IMAGEADS



சம்சா என்றாலே உருளை, கேரட், பட்டாணி இத்யாதிதானா? பொடிப் பொடியாய் நறுக்கிய வெள்ளரிக்காய், சமபங்கு வெங்காயம், இஞ்சித் துண்டுகள், மிளகுப் பொடி, உப்பு சேர்த்து பாதி வேக்காடு செய்து சமோசா செய்யுங்கள்.

– 'ஐஸ்'

யாக்கி வருவேன்' என்று சபதமிட்டுப் போருக்குக் கிளம்பினான்.

மார்க் ஆண்டனி எகிப்துக்கு வரும்போது பெரும் ரோமானியப் படையுடன்தான் வந்

யிட்டான். ஆனால் அக்கப்பல்களை, நாடோடி அராபியர்கள் கொள்ளையிட்டும் கொளுத்தியும் நாசமாக்கி விட்டார்கள்.

ஆக்டேவியஸ் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருந்தான். கடற்கரைச் சாலை வழியாக, வழியிலுள்ள நகரங்களும் - ஊர்களும் தங்கள் கதவுகளை அகலத் திறந்து ரோமானியப் படைகளுக்கு வழி விட்டு வர வேற்றன. எகிப்திய நகரங்கள் மட்டுமே எதிர்ப்புக் காட்டின. அவற்றாலும் அதிகநாள் தாக்குப் பிடிக்க முடியவில்லை. பாரடோனியம் வீழ்ந்தது. பெலூஸியம் மண்டியிட்டது.... அடுத்து... அடுத்து....

க்ளியோபாட்ராவின் ஏற்ற மிக்க எகிப்திய ஆட்சி முடிவுக்கு வரும் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. வெற்றி வாய்ப்புக்கான நம்பிக்கை இல்லை. எஞ்சி இருப்பது காதல் ஒன்றுதான்! அடைந்து கிடக்கும் ஆண்டனியை இருகரம் நீட்டி அழைத்தாள். ரோமானிய வீரனாக சிலிர்த்துக் கொண்டு மீண்டும் எழுந்தான் ஆண்டனி. அவளுடைய ஒரு கரத்தைத் தன் ஒரு கரத்திற்குள் புதைத்துக் கொண்டு, அவளை மறுகையினால் தழுவியணைத்தபடி நின்றான் மார்க் ஆண்டனி.


நம்பிக்கையில்லாப் போருக்கு தன் குதிரைப் படைக்குத் தலைமை தாங்கிப் போனான் ஆண்டனி. க்ளியோபாட்ரா, அவளுடைய எகிப்திய நாகரிகப்படி தன் வாழ் நாளிலேயே தனக்காக கட்டிக் கொண்ட சமாதிக்குள் (பிரமிட்) போய் அதன் கல் கதவை மூடித் தாளிட்டுக் கொண்டாள். அக்கதவு ஒரு முறை சாத்தப்பட்டால் பிறகு அதை வெளியிலிருந்து யாராலும் திறக்க முடியாது.

அங்கு - வழி அடைப்புச் செய்துகொண்டு, தன் இரு பணிப்பெண்களுடன், விரோதி ஆக்டேவியஸிடம் அடிமைப்படும் அவமானத்திலிருந்து தப்பக் கல்லறைக்குள் முடங்கிக் கிடந்தாள். கம்பித் தடுப்புகள் இல்லாத சிறு சாளரத்தின் வழியே, ஆண்டனி தன் கடைசிப் போருக்குப் போவதைப் பார்த்துக் கொண்டு நின்றாள் அவளுடைய ரோமானிய வீரர்கள் அவனைக் கைவிட்டுப் போய், அவன் தன்னந்தனியனாக தலைகுனிவோடு நகரை நோக்கி வருவதையும் கண்டாள்.

அந்த ஜன்னலுக்குக் கீழே - வெளியே - தகவல்களை அறிவிக்க நின்று கொண்டிருந்தவன் சற்று நேரத்தில். "ஆண்டனி ரோமானி மரபுப்படி, தன் உடைவாளினால் தன் உயிருக்கு விடுதலை அளித்து உயிர் துறந்ததை க்ளியோபாட்ராவிடம் கூறினான். ஜன்னலிலிருந்து திரும்பியவள், தன் இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு கோவென்று கதறியழுதாள்.

திடீரென்று ஒரு பணிப்பெண் அலறினாள். "ராணி! நீங்கள் கைதியாக்கப்பட்டீர்கள். உங்களை உயிரோடு பிடிக்க வந்து விட்டார்கள்!'' அடைக்க மறந்த சாளரத்தின் வழியே ஒரு ரோமானிய ராணுவ அதிகாரி தாவிக் குதித்தான் உள்ளே. தன் இடையிலுள்ள குத்துவாளை க்ளியோபாட்ரா எடுப்பதற்குள் - குத்துவாளைத் தன் மார்பில் பாய்ச்சிக் கொண்டு தன் வாழ்வை முடித்துக் கொள்ளுவதற்குள் - காலம் கடந்து விட்டது. க்ளியோபாட்ராவை எகிப்தின் இணையற்ற ராணியை, பேரழகியை ரோமானியர் உயிருடன் சிறைப்படுத்தி விட்டார்கள்.

க்ளியோபாட்ராவை, அரண்மனைக்குக் கொண்டு போய் அவளுடைய விடுதியில் சிறைவைத்து, பலத்த கட்டுக் காவலுடன் பாதுகாத்தார்கள் ரோமானியர்கள். பல நாள் அவள் படுக்கையிலேயே முடங்கிக் கிடந்தாள். தன்னை வெற்றி கொண்டதைக் கொண்டாட ரோமானியர்கள் நான்கு வெள்ளைக் குதிரை பூட்டிய ரதத்தில் அமர்ந்து ஆக்டேவியஸ் பவனி வர - அந்த ஊர்வலத்துக்கு முன்னால் தங்கச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்ட தான் நடத்திச் செல்லப்படுவதைக் கற்பனையில் கண்டு அவமானத்தினால் குன்றிப் போய்க் கிடந்தாள். ஒருநாள் - காவல்காரர்களின் தலைவனான ரோமானிய வீரன் - தினமும் அவள் அறையை பார்வையிட வருபவன் திடீரென்று தன் கைகளை அவள் முன் நீட்டி உணர்ச்சி வசப்பட்டு கூறினான் - "பேரழகியே! உங்கள் உடைமையாக என்னை என்னைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஆணையிடுங்கள், நான் அதைச் செய்கிறேன்!'' என்றான். அவன் சீஸரோ, ஆண்டனியோ அல்லது ஒரு நாட்டின் மன்னனோ இல்லாவிட்டாலும் அவனும் ஓர் ஆண்மகன்தானே. அப்பேரழகியின் அழகு அவனை சஞ்சலப்படுத்தியதில் வியப்பில்லை!



ரெக்ஸோனா போன்ற டியோடரண்ட் மேல் மூடிகளைத் தூக்கியெறியாமல், மூடியின் மேல் பகுதியில் இரண்டொரு சிறிய துளைகள் செய்து கலர்ஃபுல் ஊதுவத்தி ஸ்டேண்ட்டாக மாற்றலாம்!

— யோகாம்பாள்

அந்தக் காவல் தலைவன் சென்ற பிறகு க்ளியோபாட்ரா கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்துக் கொண்டாள். அதில் தெரிந்த தன் பிம்பத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டாள். இதயம் வெடிக்கும் இழப்பு ஏற்பட்டு, வேதனையும் மன உளைச்சலும் அவளை உலுக்கிக் கொண்டிருக்கும் இந்த நிலையிலும் தன் அழகு ஒரு மனிதனைப் பித்தனாக்குவதை எண்ணி விரக்தியாகச் சிரித்துக் கொண்டாள்.

மிக நேர்த்தியான மில்லிஸியன் (Milesian) பட்டினால் ஆன உடையணிந்து கொண்டாள். கண்களுக்கு மை தீட்டிக் கொண்டாள். விரல்களுக்கு ஹென்னா என்ற ரோஜா வண்ணச் சாயம் பூசிக் கொண்டாள். ஆக்டேவியஸுக்கு அழைப்பு விடுத்தாள். அவன் வந்தான். அடக்கமாகவும் மென்மையாகவும் கூறினான்.

"க்ளியோபாட்ரா! நான் காட்டும் கருணை

யில் முழு நம்பிக்கை கொள்ளலாம். முன்பு ஒருமுறை நீங்கள் சீஸரின் விருந்தாளியாக ரோமுக்கு விஜயம் செய்திருக்கிறீர்கள். மீண்டும் அந்த கௌரவத்தை நீங்கள் ஏன் எனக்கு அளிக்கக் கூடாது?''

அவனுடைய கண்டிப்பான புருவத்தை, குறுகலான முகவாயை மெல்லிய உதடுகளைப் பார்த்தாள். அவளுக்கு நம்பிக்கை ஏற்பட வில்லை. தன் எழிலினால்கூட அவன் இதயத் துக்குள் புகமுடியாது என்பதைத் தெரிந்து கொண்டாள். அவன் காலடியில் பணிவோடு மண்டியிட்டு வேண்டிக் கொண்டாள்-

''நான் இளம்புமுன் என் கணவனின் கல்லறையில் என் கடைசி பிரார்த்தனையைச் செலுத்த விரும்புகிறேன்'' என்றாள்.

''க்ளியோபாட்ரா! என் ஒரே ஆசை - உன்னைத் திருப்திப்படுத்துவதுதான். உன் விருப்பப்படியே செய்யலாம்'' என்று கூறி விடை பெற்றான்.

ஆக்டேவியஸ் - ரோமானிய ஆண்டனிக்கு எழுப்பி இருந்த சமாதியின் மீது மலர் மாலைகளை அணிவித்து, வாசமிக்க வண்ண மலர்களைத் தூவி 'ஹோ'வென்று வாய் விட்டுக் கதறி அழுதாள் க்ளியோபாட்ரா

''என் அன்பே ஆண்டனி! ஆருயிரே! எதனாலும் பிரிக்க முடியாத வாழ்க்கை நம்முடையது. இப்போது பிரிக்கப்பட்டு விட்டது. நீ இங்கே உறங்குகிறாய். நான் வெகு தொலைவிலுள்ள இத்தாலிக்கு வாழப் போகிறேன்!''

க்ளியோபாட்ராவின் வார்த்தைகளைக் கேட்டு ஆக்டேவியஸ் சிரித்துக் கொண்டான். எகிப்திய ராணி அவன் கருணையில் நம்பிக்கை கொண்டவளைப் போல - அவனுடைய விருந்தாளியாக ரோமுக்கு வர சம்மதித்தாள். அவன் முடிவில் திருப்தியுற்று மகிழ்ந்து போன ஆக்டேவியஸ், அவளுக்கு விதித்திருந்த கட்டுக் காவல்களைத் தளர்த்தினான்.

அடுத்தமுறை அவன அவளைச் சந்திக்க வந்தபோது, க்ளியோபாட்ரா, வரப் போகும் ஆடை அணிகலன்களைக் காட்டி அனுமதி வேண்டினாள். அவற்றை மூட்டை கட்ட தன் பணிப் பெண்களே வேண்டும் என்றாள். பயணத்தின்போது தான் ஆரோக்கியமாக தன் சொந்த மருத்துவரிடம் மருந்து வாங்கிச் சாப்பிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தாள். அனைத்துக்கும் உடனே சம்மதித்தான் ஆக்டேவியஸ்.


மருத்துவரிடம் தான் எதிர்பார்ப்பதைக் கவனமுடன் சூசகமாகக் குறிப்பிட்டாள். முதலில் அவர் அதற்கு இணங்கவில்லை. அவர் அவள் வற்புறுத்தவே தலை குனிந்தபடி ''மகாராணி ஆஸ்ப்தானே? எகிப்தின் புனிதமான ஆஸ்ப் (ASP) ஆகட்டும்'' என்று விடை பெற்றார்.

சில நாட்களுக்குப் பின் ஒரு குடியானவன் அவள் அறைக்கு வெளியே காவலிருக்கும் காவலாளியிடம் ''மகாராணிக்கு மிகவும் சுவையான புதிய அத்திப்பழங்கள் கொண்டு வந்திருக்கிறேன். அவரிடம் தர வேண்டும்'' என்று கேட்டபடி நின்றான். காவலாளி பசுமையான இலைகளால் மூடப்பட்டுள்ள கூடையை சாதாரணமாக நோட்டமிட்டு விட்டு அவனை உள்ளே போக அனுமதித்தான். குடியானவன் ராணியின் முன் மண்டியிட்டு பழக்கூடையை அவள் காலடியில் சமர்ப்பிக்க க்ளியோபாட்ரா மெதுவாக இலைகளை அகற்றிப் பார்த்தாள். அவள் உதடுகளில் முறுவல் பூத்தது. தன் பணிப்பெண்ணிடம் கூறினாள்-''அது அங்கு இருக்கிறது!''

தனக்கு ராஜ அலங்காரம் செய்விக்குமாறு தன் பணிப்பெண்களிடம் கூறினாள் க்ளியோ

பக்கோடா செய்யும்போது பெரும்பாலும் நாம் கடலை மாவைத்தான் உபயோகிக்கிறோம். அவசரத்திற்கு இது சரி. அதையே கடலைப் பருப்பை அரை மணி நேரம் தண்ணீரில் ஊற வைத்துப் பிறகு மிக்ஸியில் சற்று கரகரப்பாக அரைத்துக் கொண்டு அதனுடன் நறுக்கிய வெங்காயம்; ப. மிளகாய், உப்பு சேர்த்து பக்கோடா செய்தால் மொரமொரப்பாகவும் அதிக ருசியுடனும் இருக்கும்.

– ரமா நாராயண்



பாட்ரா. மகோன்னதமான ஆடைகளை அணிவித்து அணிகலன்களைப் பூட்டி அவளை அலங்கரித்தார்கள் பணிப்பெண்கள். எகிப்தின் மகுடமான பாம்புக் கிரீடத்தை அவள் தலையில் சூட்டினார்கள். அலங்காரம் முடிந்ததும் பழக்கூடையைக் கையிலெடுத்தாள் க்ளியோபாட்ரா. மூடியுள்ள இலைகளை அகற்றினாள். வட்டமிட்டபடி சுருண்டு படுத்திருந்த கொடிய விஷமுள்ள ஆஸ்ப் என்னும் ராஜ சர்ப்பத்தைக் கையிலெடுததாள். பணிப்பெண்கள் பதறிப் போய் பீதிக்குரல் எழுப்பினார்கள். ஆனால் க்ளியோபாட்ரா பயப்படவில்லை. பாம்பு அவள் கைகளைச் சுற்றிக் கொண்டு தலையை உயர்த்தியது. வெற்றி பெற்ற ரோமானியரிடம் எகிப்து ராணி அவமானப்படுவதிலிருந்து காப்பாற்றுவதற்காக வந்துள்ள அந்தச் சின்னஞ்சிறு பாம்பை பயங்கரத்தை - முத்தமிட்டாள். அது தன் பணியைச் செய்தது (சிலர் க்ளியோபார்ரா ஆஸ்ப் நாகத்தைத் தன் மார்பில் அழுத்திக் கொண்டு அதன் விஷத்தை ஏற்றுக் கொண்டதாகவும் கூறுவர்)

மகோன்னதமாக வாழ்ந்தது போலவே எகிப்து ராணி மரணத்தையும் மகோன்னதமாக ஏற்றுக் கொண்டாள். ரோமானியர்களின் வெற்றி ஊர்வலத்தில் பரிசுக் கோப்பையாக அவளை அவர்களால் பயன்படுத்த முடியவில்லை. தன் சாம்ராஜ்யம் ரோம சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாவதைக் காணாமலேயே கண் மூடினாள்.

செய்தி அறிந்து பதைப்புடன் ஓடோடி வந்தான் ஆக்டேவியஸ். எகிப்தின் மகாராணியாக - சர்வ அலங்காரங்களுடன் முடி சூடியபடி க்ளியோபாட்ரா படுக்கையில் படுத்திருந்தாள். மரணத்திலும்கூட அவள் அழகு மங்கவில்லை. அதற்கான ஔஷதத்தை மருத்துவர் அவளுக்கு வழங்கி இருந்தார். கல்நெஞ்சமுடைய ரோமானியர்களின் மனம் இளகாவிடினும் வியந்து பாராட்ட விருப்பமில்லாவிடினும் அவர்கள் கண்கள் குளமாயின.

ஆக்டேவியஸ் ரோமுக்குத் திரும்பும் ஏற்பாடுகளில் ஈடுபட்டான். அலக்சாந்திரயாவிலுள்ள ஆண்டனியின் சிலையை உடைத்து நாசமாக்குமாறு ஆணையிட்டான். ஆனால் க்ளியோபாட்ராவின் சிலைக்கு எந்தச் சேதமும் கூடாது என்று உத்தரவிட்டான். தன்னந்தனியே அவன் ரோமுக்குக் கிளம்பியபோது, தொலைவில் பொன்மேனியாளின் புகழ் மிக்க சிலை, கம்பீரமாக நின்று தன்னையும் நீண்ட துடுப்புக்களோடு கூடிய தன் சிறிய கப்பல்களை - மெல்லிய கால்களையுடைய கடல் வண்டுகள் ஊர்ந்து செல்வதுபோல் நகருவதையும் அலட்சியமாகப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

சுவை கூட ஒரு பொடி...!

தேவையான பொருட்கள் :



2 கிண்ணம் சுத்தமாக்கிய புழுங்கலரிசி
1 கிண்ணம் கடலை பருப்பு,
½ கிண்ணம் உளுத்தம் பருப்பு,
இரண்டு அல்லது மூன்று மிளகாய் வற்றல்.
கொஞ்சம் கறிவேப்பிலை.

செய்முறை :

இவைகளை எண்ணெய் விடாமல் வாணலியில் வறுக்கவும். அரிசி பொரிந்து வரும். உ. பருப்பு சிவக்கும். அப்போது இறக்கி ஆறினதும் மிக்ஸியில் பொடித்து வைத்துக் கொள்ளுங்கள். மாவும் ரவையுமாக இருக்கும். சலிக்க வேண்டாம். இந்தப் பொடியை முக்கியமாக வாழைத்தண்டு பொரியல், கத்தரிக்காய் வதக்கல் பலவிதமான 'கூட்டு'கள் போன்றவற்றிற்கு உபயோகிக்கலாம். காய் வெந்த பிறகு பொடி சேர்த்து சிறிது எண்ணெய் விட்டு தட்டால் மூடி 2 அல்லது 3 நிமிடம் வைத்து இறக்கலாம். தேங்காய் எண்ணெய் உபயோகிப்பவர்களும் இந்தப் பொடியையும் சேர்த்தால் ருசி கூடும். சாம்பார் நீர்த்து விட்டால் கொஞ்சம் தண்ணீரில் இந்தப் பொடியை 2 ஸ்பூன் கலக்கி சாம்பாரில் சேர்க்க கெட்டியாக ஆகும். ருசியும் கூடும். காரக் குழம்பு, வற்றல் குழம்பு செய்யும்போதும் இந்தப் பொடியை சேர்த்தால் கெட்டியாக இருக்கும். ருசி கூடும். இதுபோல் தங்கள் அவசியத்துக்கேற்ப ருசிக்கேற்ப பலவிதமாக உபயோகிக்கலாம்.

– ராதா ராமகிருஷ்ணன்

மங்கையர் மலர் & அம்மி கிச்சன் மாஸ்டர் வழங்கும்

வாழ்வின் சுவையான நேரங்கள்

வாழ்வின் சுவையான நேரங்கள் போட்டியில் ஜூலை மாதம் பரிசு பெற்ற திருமதி ஜெயலட்சுமி சுப்ரமணியன் அவர்களின் சார்பாக சென்னையிலுள்ள அவருடைய மகனுக்கு அம்மி கிச்சன் மாஸ்டர் நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் பரிசினை அளித்தார்கள்.

அடுத்த மாதம் போட்டிக்கான தலைப்பு :

மிக்ஸி

- கட்டுரைகள் ஒரு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- கட்டுரைகள் மங்கையர் மலருக்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி 20.9.97
- தேர்ந்தெடுக்கப்படும் பரிசுக்குரிய கட்டுரைக்கு ஒரு அம்மி கிச்சன் மாஸ்டர் பரிசாக வழங்கப்படும்.
- ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.



அம்மி கிச்சன் மாஸ்டர் பரிசு பெறும் கட்டுரை

சித்தப்பா முறை உறவினர் ஒரு பெரியவர். முன்பு நல்ல பதவியில் இருந்து ஓய்வு பெற்றவர். சர்க்கரை வியாதியினாலும், பலவீனத்தாலும் கண்களின் பார்வையை இழந்து விட்டவர். அன்பு மிக்கவர். சுயநலம் பாராது எல்லார்க்கும் உதவி செய்தவர்.

அப்பெரியவர் தன் கண் பார்வையை இழந்தாலும் அன்பை மறக்காதவர். என் தந்தையின் சஷ்டியப்த பூர்த்திக்கு வந்திருந்தார். அவருக்கு ஒரு மகன் உண்டு. அப்பெரியவர் தன் மகன், மகனின் மனைவி, கல்லூரி படிக்கும் மகளுடன் எங்கள் வீட்டு விருந்திற்கு வந்திருந்தார். அனைவருக்கும் மகிழ்ச்சி. வைபவ சமயம் அருகில் அமர்ந்து வைபவத்தைக் காதாலேயே கேட்டு மகிழ்ந்தார்.

எங்கள் வீட்டிலுள்ள அனைவரும் அவரிடம் மிக மிக அன்புடன் நடந்து கொண்டனர். விருந்து சமயம் அவரும் பந்தியில் எல்லாருடனும் உட்கார்ந்து விட்டார். எப்படிச் சாப்பிடுவார்? நாங்கள்கூட அமர்ந்து உதவ விரும்பினோம். அவர் மறுத்து

பொய்யல்ல நிஜம்

வேலை கிடைக்காதவர்களுக்கு

மாதம் ரூ. 3000/- சம்பளம்

(ஆண்/பெண்களுக்கு)

நிச்சயமாக வேலை தருகிறோம்

✦ உங்கள் ஊரில் உள்ள பணக்காரர்களைப் பாருங்கள். நிச்சயம் சொந்த தொழில் செய்பவர்களாகவே இருப்பார்கள்! மற்றவர்களிடம் வேலை செய்பவராக இருக்கமாட்டார்கள்.

✦ நீங்களும் ஏன் சொந்த தொழில் செய்யக் கூடாது?

✦ எந்த தொழிலை செய்வது? எப்படி ஆரம்பிப்பது? நடத்துவது? என்று பலப்பல சந்தேகங்கள் இல்லையா?

✦ தையல் தொழிலை செய்யலாமே!

✦ தையல் தொழிலில்தான் அதிக வருமான வாய்ப்புள்ளது. தினம் ஒரு பேண்ட், ஒரு சட்டை தைத்தால் ரூ. 100/- வரு

✦ தபால் மூலமாக: ஆண்/பெண்/குழந்தைகள் ஆடைகளுக்கு அளவெடுப்பது? வெட்டுவது? தைப்பது எப்படி? போன்ற பயிற்சி தருகிறோம். பயிற்சி மட்டும் இன்றி, தையல்கடை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்துவது எப்படி? என்ற பயிற்சியும் டிப்ளமோவும் தருகிறோம்.

✦ பயிற்சியின் போது வீட்டில் தையல் இயந்திரம் தேவை இல்லை. தபால் பயிற்சியில் தைக்கும் முறை வித்தயாசமாக அமைக்கப்பட்டுள்ளது.

✦ முழுமையான தையர்கலைஞராக ஆண்/பெண்களை உருவாக்குவோம்.

விட்டார்.

தனியே அமரவும் சம்மதிக்கவில்லை. எங்களுக்கோ குழப்பம். வயதிலும் பெரியவர். பார்வையும் இல்லாதவர் பண்பாளர். "மோப்பக் குழையும் அனிச்சம். முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்து" அல்லவா? யாராவது கேலி செய்து அவர் மனம் புண்பட்டு விட்டால்? அப்பொழுதுதான் அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டோம்.

அவரது மருமகள், அதாவது மகனின் மனைவி, அவரது அருகில் அமர்ந்துகொண்டு, அவருக்கு மிகமிக உதவியாக இருந்தாள். உதவி என்று சொல்லி அப்படியே நிறுத்திவிட முடியாது. சாதத்தைப் பிசைந்து, நிதானமாய், ஒவ்வொன்றாய், அவர் கையில் தந்து, அவர் உண்ணும்வரை காத்திருந்து, அடுத்துக் தந்து இப்படியே ஒரு சேவையைச் செய்தாள். நடுநடுவே கலகலப்பாய் அவரிடம் பேசினாள். அவள் தாயா? அல்லது அன்பே பூத்த அதிசய மருமகளா?

இதில் வேதனை என்ன தெரியுமா? "வர வேண்டாம் என்றால் கேட்டால்தானே! இப்படியாவது விருந்திலும் சேர்ந்து அமர வேண்டுமா? வெட்கம் பிடுங்கித் தின்கிறது. என் மன்னிக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. தியாகி" என்று கேலி செய்தாள் ஒருத்தி. வேறு யாருமில்லை - அப் பெரியவரின் கல்லூரி படிக்கும் பெண்! அந்த மகளுக்கும் மருமகளுக்கும்தான் என்ன வித்தியாசம்! "உயிரைக் காக்கும்; உயிரினைச் சேர்த்திடும்;

உயிரினுக்குயிராய் இன்பமாகிடும்

உயிரினும் இந்தப் பெண்மை இனிதடா" என்றானே பாரதி. அது வேறுயாருமில்லை. அந்த மருமகள்தான்.

- பி. பத்மா, கோயமுத்தூர்-9.

பிரசுரத்திற்கு....

நுனி இலை

இருபத்தைந்து வருடங்களுக்கு முன் ஒரு கல்யாண விருந்தில் நடந்த நிகழ்ச்சி. என் தங்கையின் கல்யாணம் காலையில் நன்றாக நடந்தேறியது. இரவு ஹோமம் நடந்தது. அதில் என் தாய், தந்தை பிஸியாக இருந்தனர். என் பெரிய அண்ணன் மாப்பிள்ளை வீட்டார் சாப்பிட உட்கார்ந்ததை கவனித்துக் கொண்டிருந்தார். 52 பேர். எல்லோருக்கும் இலை போட்டுப் பரிமாறியாகி விட்டது. எல்லோரும் சொல்லி வைத்தாற்போல் இரண்டு பருக்கை எச்சில் பண்ணிவிட்டு, (போட்ட சாதம் மற்ற அயிட்டங்கள் அப்படியே இருக்க) எழுந்து விட்டார்கள். மாப்பிள்ளையின் தாத்தா "எல்லோரும் போகலாம் வாங்க" என்று கூற அவர்கள் தங்கியிருந்த அறைக்குச் சென்று விட்டனர்.

பதறிப் போய் காரணம் விசாரிக்க, 52 இலைக்கு 50 நுனி இலையும், 2 ஏடும் போட்டிருந்ததாம். அந்த 2 ஏடில் ஏழு வயது, எட்டு வயது பையன்கள்தான் அமர்ந்திருந்தனர். இதைக் கவனித்த மாப்பிள்ளையின் தாத்தா, "கல்யாணம்தான் காலையில் ஆகிவிட்டதே. அதனால் நுனி இலை போட்டு நம்மை இரவு சரியாக கவனிக்கவில்லை" என்று சொல்ல அவர் திட்டப்படி எல்லோரும் 'பெண்ணின் பெற்றோருக்கு இது ஒரு பாடம்' என்று எண்ணி, எச்சில் பண்ணிவிட்டு இலையை விட்டு எழுந்து விட்டனர். மெல்ல இந்த விஷயம் மணமக்களைத் தவிர, மற்ற எல்லோர் காதுக்கும் எட்டியது.

உடனே என் தாய், தந்தை இருவரும் பறந்தோடி அவர்களிடம் மன்னிப்பு கேட்டு மன்றாடினர். மாப்பிள்ளையின் தாய், தந்தை நல்லவர்களாக இருந்தும் தாத்தா பேச்சிற்குக் கட்டுப்பட்டு உட்கார்ந்திருந்தனர். கடைசியில் மணப்பெண் காதுக்கு எட்டி, அவள் ஓடி வந்து அழுது மன்னிப்பு கேட்க, "சரி," கரெக்டாக மணி 12 அடிக்கட்டும். அப்புறம் வருகிறோம்" என்றனர். (அதாவது இரவு 12 மணிக்குள் என்றால் அன்றைய கணக்கு ஆகிவிடுமாம்) அதற்குள் அவர்கள் வேஸ்ட் பண்ணிய சாப்பாட்டை எல்லாம் கொட்டி, இலைகளை அப்புறப்படுத்தினர்.

சமையற்காரர் மறுபடி ஒரு வற்றல் குழம்பு, 2,3 மற்ற அயிட்டங்கள் பண்ண ஆரம்பித்தார். என் பெரிய அண்ணன் இரவு பத்து மணிக்கு மேல் பெரிய மார்க்கெட் போய் தூங்கிக் கொண்டிருந்த இலைக்கடைக்காரரை எழுப்பி



நுனி இலைகளை வாங்கி வந்தார். இரவு 12 மணி அடித்தவுடன், மாப்பிள்ளை வீட்டார் சாப்பிட்ட பின், பெண் வீட்டார் சாப்பிட்டு முடிய இரவு ஒரு மணி ஆயிற்று. இரண்டு ஏடு போட்டதற்கா இப்படி! என்று எல்லோரும் பேச ஆரம்பித்த பொழுது, மாப்பிள்ளை பக்கத்திலிருந்து உண்மை கிடைத்தது. மணமகனின் தாத்தா, என் தந்தையுடன் கீழ் ஒரு காலத்தில் பணி புரிந்தபொழுது, ஆபீஸ் வேலை சரியாக பண்ணாததால் கிடைத்த கசப்பான அனுபவத்திற்கான பழியை இப்பொழுது தீர்த்துக் கொண்டார். பெண்ணின் தந்தையை தண்டிக்க இதுவா தருணம்? இப்பொழுது காலம் மாறி வருகிறது. ஆனாலும் இன்னும் சில இடங்களில் பெண்ணைப் பெற்றவர்கள் சம்பந்தி சண்டை எப்பொழுது வெடிக்குமோ?" என்று பயந்துகொண்டுதான் இருக்க வேண்டி உள்ளது.

- சாந்தி வரதராஜன், சென்னை-82.

ஐஸ்கிரீம் செய்த பெருமை!

இருபது வருடங்களுக்கு முன்பு வெளிநாட்டவர் கம்பெனி ஒன்றில் என் கணவர் பணியாற்றி வந்தார். பெல்ஜியம் நாட்டைச் சார்ந்த அந்நிறுவன நிர்வாகியின் மனைவியிடம் நான் ஐஸ்கிரீம் செய்யக் கற்றிருந்தேன். அக்காலத்தில் இக்காலம் போல் தெருவிற்கொரு ஐஸ்கிரீம் பார்லர் எல்லாம் கிடையாது. தோழி உறவினர்களிடமெல்லாம் ஐஸ்கிரீம் தயாரிக்கும் பெருமையை பீற்றிக் கொள்வேன். அக்குவார்ட்டர்சில் என்னிடம் மட்டுமே பிரிட்ஜ் இருந்தது.

ஒருசமயம் எங்கள் நண்பரின் வீட்டிற்கு முக்கிய விருந்தினர்கள் வருவதாக இருந்தது. விருந்தின் முக்கிய அயிட்டமாக நான் தயாரிக்கும் ஐஸ்கிரீம் இருக்க வேண்டும் என நண்பரின் மனைவி விரும்பினார். (ருசி கண்ட பூனை) விருந்திற்கு முதல்நாள் ஐஸ்கிரீமிற்குத் தேவையான அனைத்துப் பொருள்களுடனும் வந்து விட்டார். இருவரும் சேர்ந்து ஐஸ்கிரீம் தயார் செய்து பிரிட்ஜிலும் வைத்தாகி விட்டது. மறுநாள் விருந்திற்கு ஒருமணி நேரத்திற்கு முன்பாக ஐஸ்கிரீம் எப்படி உறைந்துள்ளது எனப் பார்க்க பிரிட்ஜ் - ஐத் திறந்த எனக்குப் பேரதிர்ச்சி. ஐஸ்கிரீம் பாத்திரம் சுத்தமாக காலி. என் ஒரே பெண்ணும் என்னைக் கேட்காமல் எதையும் தொட மாட்டாள்.

பின் தீர விசாரித்ததில் என் தங்கையின் மகனின் (ஊரிலிருந்து வந்திருந்தான்) திருவிளையாடல் என்று புரிந்தது. விருந்தாக வந்திருக்கும் அவனை கூப்பிட்டு விசாரிக்கவோ தண்டிக்கவோ முடியாத சூழ்நிலை. தோழி வந்து கேட்டால் என்ன சொல்வது என்று நடுநடுங்கிக் கொண்டிருந்தேன். வேண்டாத தெய்வமில்லை. அப்பொழுது என் கணவர் வந்து, "நீங்க சிரமப்பட்டு செய்த ஐஸ்கிரீம் எல்லாம் வேஸ்ட். நண்பர் வீட்டில் விருந்தினர்கள் திடீரென வர இயலவில்லையாம்" எனக் கூறினாரே பார்க்கலாம். எனக்குப் போன உயிர் திரும்பி வந்தது.

பத்து பேருக்கான ஐஸ்கிரீமை எட்டு வயதுச் சிறுவன் ஒருவனே எப்படி காலி செய்தான் என்பதுதான் இன்றுவரை எனக்குப் புரியாத புதிர்.

- பி. மீனா, தஞ்சாவூர்-7.



ஊன்றுகோல் உதவியது

'ஜான்பார்னி' என்ற அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர் ஒருவர் டூரில் இந்தியா வந்திருந்த சமயம் எங்கள் வீட்டில் 'டின்னர்'க்கு இரவு சாப்பாட்டிற்கு அழைத்திருந்தோம்.

எனக்கு இரண்டு வயதில் ஒரு பையன். விஷமத்தனம் உண்டு. ரோஷமும் ஜாஸ்தி. ஏதாவது திட்டினால், உடனே முறைத்துக் கொண்டு போய் டேபிளின் கீழே ஒளிந்து கொள்வான். டேபிளின் காலை சுற்றிச் சுற்றி வந்து ஏதோ தனியே விளையாடிக் கொள்வான்.

"அவருக்குக் கீழே உட்கார்ந்து சாப்பிடத் தெரியாது. அதனால் டேபிளை சுத்தமாக துடைத்து ஹாலின் நடுவே போட்டு விடு. அதிலேயே சாப்பிடுவோம்" என்று கூறிவிட்டு என் கணவர் ஜானை அழைத்து வரச் சென்றார். வேலை எல்லாம் முடித்து விட்டு நான் என்னை அலங்கரித்துக் கொண்டு, குழந்தையின் உடுப்பை மாற்ற அவனை அழைத்தேன்.


OIL OF GOODNESS
Supreme
Double Refined
Premium-Cooking Oil
ஒவ்வொரு துளியிலும் தூய்மையின் உத்திரவாதம்
Vitamin 'E' enriched
SSD Oil Mills Co. Ltd., Chennai - 600 058.

ஒரு கண்டு விரல் பருமனுக்கு நீளமாக ஏதோ வாயில் அடக்கிக் கொண்டிருந்தான். பயந்து போய் பிடுங்கிப் பார்த்தேன். பெரிய ஆணி!

"என்னடா?" என்றவுடன் என் புடவையை இழுத்துக் கொண்டு போய் டேபிளின் அருகே நின்றான் திடுக்கென்றது! டேபிள் ஒருகால் உடைந்து நொடித்துக் கொண்டு நின்றது. அத்தனை பெரிய ஆணியை அவனால் எப்படி கழட்ட முடிந்தது என்று யோசித்தேன். பிறகு தான் புரியவந்தது. இத்தனை நாள் கோபம் தீர அந்த ஆணியை திருகியிருக்கிறான் போலிருக்கு. கொஞ்சம் கொஞ்சமாய் திருகித் திருகி இன்று வெற்றி அடைந்திருக்கிறான்.

எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இன்னும் இருபது நிமிடங்களில் அவர்கள் வந்து விடுவார்களே, என் கணவர் கொஞ்சம் முன் கோபக்காரர். டேபிளின்



மேல் பலகையை மறுபடியும் பொருத்தி அந்த ஆணியை அழுத்திப் பார்த்தேன். சரியாக நிற்கவில்லை. லொடக், லொடக்கென்று ஆடியது. மற்றொரு மரத்துண்டு அங்கே இருக்க வேண்டியதை, குழந்தை எங்கோ போட்டு விட்டான். அட்டைப் பெட்டிகளை அடியில் அடைத்து வைத்து பலகையை சமமாக்கி விடலாம் என்றால் பார்க்க அசிங்கமாக இருக்கும்.

பீரோவின் ஒரு ஓரத்தில் தொங்கிக் கொண்டிருந்த புழுதி அடைந்த அந்த ஊன்றுகோல் (என் கல்யாணத்தில், காசி யாத்திரைக்குத் தந்தது) சட்டென்று என் கண்களில் பட்டது. தெய்வத்தை வேண்டிக் கொண்டே அதை வைத்துப் பார்த்தேன். சரியாக இருந்தது. உடனே ஒரு கருப்புக் கலர் நூலை எடுத்து ஊன்றுகோலை, உடைந்த காலுடன் சேர்த்துக் கட்டி ஒரு வழியாக நாலு கால்களின் மேல் பலகையைச் சமமாக்கினேன். உட்கார்ந்து .ப்பிடுவது போல் பாவனை செய்து பார்த்தேன். கையை டேபிள் மேல் ஊன்றினால் 'டக்'கென்று லேசாக சத்தம் கேட்டது. அந்தச் சத்தம் கேட்காமல் தவிர்க்க அவர்கள் சாப்பிடும்போது "ராக் ம்யூஸிக்" ஒன்றை ஆன் செய்தேன். அந்த இடி சத்தத்தில் எல்லாம் அமுங்கி விடும் என்ற தைரியம். பரிமாறும் பொழுது பக், பக்கென்றது. எப்பொழுது நொடித்து விழுமோ என்ற கவலை. விருந்து நல்லபடியாக முடிந்து ஜான் சென்றவுடன், விஷயத்தைக் கணவரிடம் கூறினேன். தன் பிள்ளையின் விஷமத்தனத்தைக் கேட்டு சிரித்தார். நான் பட்ட அவஸ்தை எனக்குத்தானே தெரியும்.

- மங்களம், மறைமலை நகர்.

சிறுவர்கள் செய்த விருந்து!

என் நினைவுகள் பின்னோக்கிச் செல்லுகின்றன. எனக்குச் சுமார் பத்து வயது இருக்கும். பகலில் பள்ளிக்குச் செல்லுவோம். மாலை வீடு வந்ததும், அம்மாவுக்குக்கூட மாட உதவி செய்வோம். தம்பி, தங்கையைத் தூக்கி வைத்துக் கொள்ள வேண்டும். இரவானால் படிக்க வேண்டும். டெலிவிஷன் கிடையாது. ரேடியோ கேட்கக் கூடாது. கதைப் புத்தகங்கள் படிக்கக் கூடாது. மிகவும் கட்டுப்பாடான சூழ்நிலையில் வளர்ந்து வந்தோம். ஞாயிற்றுக் கிழமை மத்தியானத்திற்கு மேல் மட்டும் மாலை வரை விளையாட அனுமதி உண்டு. அதுவும் வீட்டின் அருகிலேயே.


எங்கள் வீட்டிற்கு முன்னால் ஒரு மாரியம்மன் கோவில் இருக்கிறது. அங்கு நான், என் அண்ணன், தம்பி, என் உடன் படிக்கும் தோழிகள் நால்வர், அனைவரும் சேர்ந்து சமையல் பண்ணி விளையாடுவோம். ஒவ்வொருவரும் 50 பைசா என்று கணக்குப் பண்ணி மொத்தமாகக் காசு வசூல் பண்ணிக் கொள்வோம். எங்களிடம் மண் அடுப்பு, பாத்திரம் என்று எப்போதோ வாங்கிய சிறு சட்டிகளெல்லாம் இருக்கும். எங்கள் வீட்டில் என் தம்பி அரிசி எடுத்துக் கொண்டு வருவான். தெரியாமல் தான். நாலணாவுக்கு வெல்லம் வாங்குவோம். முந்திரி, திராட்சை நாலணா. சிறிய அடுப்பில் மண் சட்டியில் தண்ணீரை ஊற்றி சிறு, சிறு குச்சிகளை அடுப்பில் வைத்து எரிப்போம்.

என் தோழி ஒருத்தி பச்சைப் பருப்பு வீட்டில் எடுத்து வருவாள். இன்னொருத்தி உளுத்தம்பருப்பு எடுத்து வருவாள். எல்லாவற்றையும் கலந்து அடுப்பில் உள்ள சட்டியில் போட்டு கொதிக்க விடுவோம். மரக்குச்சி

தான் துடுப்பு. தண்ணீர் நன்றாக வற்றியதும் வெல்லம், முந்திரி திராட்சையைப் போட்டு கொதிக்கவும், இறக்கி விடுவோம். பக்கத்திலுள்ள முருங்கை மரத்தில் கீரையைப் பறித்து, சட்டியில் போட்டு, இரண்டு உப்புக் கல்லைப் போட்டு வதக்குவோம். (கீரையைக் கழுவுவதெல்லாம் கிடையாது) வெந்து விட்டதா என்று ஆள் ஆளுக்கு எடுத்து டேஸ்ட் பண்ணுவோம். அது எங்களுக்கு மகா ருசியாகத் தெரியும்.

என் அண்ணன் தேங்காய் சுடுவதில் வல்லவர். பெரிய தேங்காய் ஒன்றை வாங்கி, அதன் நடுக் கண்ணைக் குத்தி ஓட்டை போட்டு, அதனுள் முந்திரி, உடைத்த கடலை, வெல்லம் தூள் செய்து கலந்து போட்டு, கண்ணைப் புளி வைத்து அடைத்து விடுவார். சருகு இலைகள், குச்சிகளை தேங்காயின் மேல் அடுக்கி தீ மூட்டி விடுவார். சுமார் பத்து நிமிடம் ஆகியதும் தேங்காய் வெடிக்க ஆரம்பித்து விடும். இதுதான் நன்றாக வெந்ததற்கு அடையாளம். ஆறியவுடன் மொத்தமாக பங்கு போட்டுக் கொள்வோம்.

வீடு வேண்டாமா? களி மண்ணைக் குழைத்து வீடு கட்டுவோம். இது ஆண் பிள்ளைகள் வேலை. வீடு கட்டி முடித்ததும் சமையல் பண்ணியவைகளையெல்லாம் வீட்டிற்கு முன் கொண்டு போய் வைப்போம். புளியங்காயைப் பிஞ்சாகப் பறித்து, கல்லில் வைத்து, தண்ணீர் தெளித்துத் தேய்ப்போம். அதோடு கொஞ்சம் வெல்லம் சேர்த்து




அரைப்போம். துவையலும் ரெடி. சாப்பாடு பரிமாற அரச இலை, அல்லது ஆலமரத்து இலைகளைப் பறித்து அதில் பொங்கல், பதார்த்தங்களை வரிசையாக எடுத்து வைப்போம். "விருந்து ரெடி". பிரமாதமான விருந்து சாப்பிட்டு விட்டு, வயிறு நிறைந்து விட்டதாகப் பாவனை பண்ணி, தண்ணீரைக் குடித்து ஏப்பம் விடுவோம்.

ஒருநாள் இவையெல்லாம் தயார் பண்ணி, சாப்பிடத் தயாராகும்போது எனக்கும், என் தம்பிக்கும் சண்டை வந்து விட்டது. அவன் கோபத்தில் வீட்டையெல்லாம் காலால் மிதித்து அழித்துவிட்டு, சாப்பாட்டையெல்லாம் தூக்கி எறிந்து விட்டுச் சென்று விட்டான். பிறகென்ன ஒரே அமர்க்களம்தான். நாங்கள் அழுதுகொண்டே என் பெற்றோர்களிடம் சொல்ல, அவனுக்கு அன்று நன்றாகப் 'பூசை' நடந்தது. இந்த நிகழ்ச்சியை இன்னும் நாங்கள் சொல்லிச் சொல்லி சிரிப்போம். இனி அப்படி ஒரு காலம் வருமா? இந்தக் காலப்பிள்ளைகளுக்கு இந்த மாதிரி இயற்கையுடன் ஒன்றி வாழ வாய்ப்பு ஏது? டி.வி.யும், கம்ப்யூட்டர் கேமும், வீடியோ கேமும் அல்லவா ஆட்சி செய்கிறது!

- எம். முத்துலட்சுமி, சென்னை -15.

பாசிப் பருப்பு, சேமியா, பாம்பே ரவை, கொப்பரைத் துருவல் தலா ஒரு டம்ளர், ஏலக்காய் சிறிது, முந்திரி தேவையான அளவு, நெய் தேவையானது, சர்க்கரை 4 டம்ளர், பாசிப் பருப்பு, சேமியா, ரவை, கொப்பரையை தனித்தனியாக பொன்னிறமாக வறுத்துக் கொள்ளவும். எல்லாவற்றையும் மிக்ஸியில் நைஸாக அரைத்துக் கொள்ளவும். சர்க்கரையையும் பொடி செய்து கலந்து, ஏலப்பொடி, முந்திரி வறுத்துப் போட்டு, நெய் காய்ச்சி விட்டு, சூட்டுடன் லட்டுகள் பிடிக்கவும். சாப்பிட வித்தியாசமான சுவையுடன் ஜோராக இருக்கும்.

– ராதாமூர்த்தி



அப்பாவுக்குச் செலவு!

அந்த வருடம் நாங்கள் சென்னையிலிருந்து மதுரைக்கு மாற்றலாகி வந்திருந்தோம். என் குழந்தைக்கு மூன்று வயது. அவனைப் பள்ளியில் சேர்க்க ஸ்கூல் பீஸ், புக்ஸ், யூனிபார்ம் என ஏகப்பட்ட செலவு, நானும் அதே வருடம் பி.எட். படிப்பில் சேர்ந்தேன். எனவே அந்த வருடம் ஒரே பண நெருக்கடி. அந்த வருட கிறிஸ்மஸ் பண்டிகைக்கு எங்கள்



குழந்தைக்கு மட்டும் உடை வாங்கினோம்.

திடீரென என் அக்கா குடும்பத்தோடு கிறிஸ்மஸுக்கு எங்கள் வீட்டிற்கு வந்து விட்டாள். நாங்கள் வந்தவர்களை நன்றாகக் கவனித்தோம். அக்கா ஊருக்குக் கிளம்பும் போது. "அமலி உனக்கும் விடுமுறையில் ரெஸ்ட் எடுக்க முடியாமல் வேலை. கஷ்டம்" என்றாள். உடனே என் குழந்தை "எங்க அப்பாவுக்குத்தான் கஷ்டம். ரொம்ப செலவு" என்றாள். எனக்கும் என் கணவருக்கும் பயங்கர அதிர்ச்சி. வந்தவர்கள் முன் இப்படிச் சொல்வாள் என எதிர்பார்க்கவில்லை. என் அக்காவிற்கும் அவள் கணவருக்கும் எப்படியோ ஆகி விட்டது. அவர்களை ஒருவழியாக சமாளித்து அனுப்பி விட்டோம்.

எங்கள் குழந்தையைக் கூப்பிட்டு "என்ன ஜெனி அப்பாவிற்குக் கஷ்டம் செலவு என்று யார் சொன்னது?" என்று கேட்க, அவளோ "கிறிஸ்மஸ்க்கு எனக்கு மட்டும்தானே டிரெஸ் எடுத்தீர்கள்? உங்களுக்கும் அம்மாவிற்கும் எடுக்கலையா என்று நான் கேட்டப்ப இந்த வருடம் ரொம்ப செலவு அதனால எங்களுக்கு டிரெஸ் வேண்டாம் என்று சொன்னீங்களே" என்றாள். பெரியம்மா ஊரிலிருந்து வந்துனால கடைல எவ்வளவு சாமான் வாங்கினீங்க. அதனாலதான் எங்கப்பாக்கு செலவுன்னு சொன்னேன்" என்றாள். எங்களுக்கு ஒரு பக்கம் இவ்வளவு சின்ன வயதிலேயே எங்கள் குழந்தை பெற்றோரின் கஷ்டத்தைப் புரிந்திருக்கிறாளே என்று பெருமையாக இருந்தாலும் குழந்தையிடம், 'நம்ம கஷ்டத்தை மத்தவங்க முன்னால சொல்றது நல்லது இல்லை. வந்தவர்களுக்கு வருத்தம் ஏற்பட்டிருக்கும்' என அவளுக்குப் புரியற விதத்தில் எடுத்துச் சொன்னோம்.

என் பெண்ணிற்கு இப்போது பத்து வயதாகிறது. அவள் எதையுமே இன்றுவரை அடம் பிடித்துக் கேட்டதில்லை. "உங்களுக்கு முடிந்தால் வாங்கித் தாருங்கள்" என்பாள். ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் குழந்தைகளுக்குத் தங்கள் வீட்டுப் பொருளாதார சூழ்நிலையை கண்டிப்பாக தெளிவாக்க வேண்டும்.

- அமலி எட்வார்டு, மதுரை - 19.

சென்ற இதழில் ரசப்பொடியை பலவிதமாக சமையலில் பயன்படுத்தலாம் என்று ஒரு சகோதரி எழுதியிருந்தார். அவ்வாறே இட்லி மிளகாய் பொடியும் சமய சஞ்சீவியாக பல சமயங்களில் நமக்குக் கைகொடுக்கும்.

1 பங்கு உ. பருப்பு, 1 பங்கு க. பருப்பு, 1 பிடி தனியா, 1 டேபிள் ஸ்பூன் மிளகு, சீரகம், கொட்டை பாக்களவு பெருங்காயம், கைப்பிடி கருவேப்பிலை, எள் 50 கி, பு. அரிசி ஒரு கைப்பிடி (சிவப்பாக பொரி அரிசி போல் வறுக்கவும்.) கொப்பரைத் துண்டு, தேவையான அளவு மிளகாய், உப்பு இவற்றைச் சிறிது எண்ணெய் விட்டு வறுத்து கொர கொரப்பாக பொடிக்கவும்.

இச் சுவையான இட்லி மிளகாய்ப் பொடியை சாம்பார் கொதித்து இறக்கும்போது ஒரு ஸ்பூன் போட்டால் வாசனை ஆளைத் தூக்கும். எல்லாவித கூட்டுகளிலும் இப்பொடியைப் போடலாம். புளி சாதம், எலுமிச்ச சாதம், தேங்காய்ச் சாதம், மாங்காய் சாதம், கத்தரிக்காய் சாதம் என்று எல்லாக் கலவை அன்னங்களிலும் கடைசியாக ஒரு ஸ்பூன் இப்பொடி யைப் போட்டுக் கிளறினால் மிகுந்த ருசியுடனிருக்கும். காரத்திற்கு மிளகாய் ஒன்று தாளித்தாலே போதும். எல்லாக் காய் பொரியல் களிலும் தேங்காய்க்குப் பதில் இப்பொடி சேர்க்கலாம்.

— விஜயராணி



இந்த மாதம் எப்படி?



மேஷ ராசி :

அசுவினி, பரணி, கிருத்திகை 1-ஆம் பாதம்.

மாதத்தின் முதல் வாரக் கடைசியில் புதன் சுபநிகழ்ச்சி ஒன்று நடைபெற உதவுவார். கேது மாதம் பூராவும் தனலாபத்திற்கும், உடல்நலத்திற்கும் உகந்ததைச் செய்வார். மற்ற எந்தக் கிரகமும் உதவும் நிலையில் இல்லை. குறிப்பாக சுக்கிரனின் போக்கு உதவும் நிலையில் இல்லை. எனவே இந்த ராசியில் பிறந்த கணவனோ, மனைவியோ சற்று எதிலும் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. இல்லையேல் வீடு வீடாக இருக்காது. சனீஸ்வரன் குருவுடன் பரிவர்த்தனைப் பெற்றுள்ளதால் இரண்டாவது சுற்று ஏழரை சனியின் பிடியில் உள்ளவர்களுக்கு நல்லதைச் செய்யாவிடினும் கெடுதலைச் செய்யும் நிலையில் இல்லை. சுக்கிரனால் தாம்பத்திய உறவில் சில்லறைப் பிரச்னைகள் ஏற்படலாம். சூரியன் மாதத்தின் பிற்பகுதியில் ஏதேனும் ஒருவிதத்தில் புகழையோ, எதிர்பாராத பதவி உயர்வையோ கிடைக்கச் செய்யலாம். அரசுத் துறையில் பணிபுரிபவர்களுக்கு நல்லதொரு காலகட்டம். மாதத்தின் இரண்டாவது வாரத்திலிருந்து ஆரம்பமாகலாம். சமூக சேவகிகளும், மற்றும் அரசியல்வாதிகளும் சில சோதனைகளுக்கு உள்ளானாலும் கேதுவின் அதி தேவதையான கணபதியின் உதவியால் அச்சோதனையிலிருந்து விடுபடுவார்கள்.




ரிஷப ராசி :

கிருத்திகை 2, 3, 4 -ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 - ஆம் பாதங்கள்.

குருவின் பார்வையும், அவருடன் பரிவர்த்தனை பெற்ற 11-ம் இடத்து லாப சனீஸ்வரரின் பார்வையும் பலவிதங்களில் நன்மை புரிய வேண்டும். மண்காரகன் ஆகிய செவ்வாயும் மாதத்தின் முதல் வாரத்தில் சந்திரனும் உங்களுக்கு வீடு அல்லது வீட்டு மனை வாங்கும் யோகத்தைத் தருவார்கள். சுக்கிரன் மாதத்தின் இரண்டாம் வாரத்தில் ஆறாம் இடத்தில் இருந்தாலும் ஆட்சியில் சுய வீட்டில் இருப்பதால் நன்மையே அதிகம் செய்ய வேண்டும். கேதுவும் ராகுவும் சில பிரச்னைகளை உண்டாக்கலாம். அது தொழிலிலும் ஏற்படலாம் அல்லது உடல் சம்பந்தமாகக் கூட இருக்கலாம். எனவே ராகுவுக்காக ஸ்ரீதுர்க்கைக்கும், கேதுவுக்காக வினாயகருக்கும் அர்ச்சனை செய்யலாம். வெள்ளி நாகர் ஒன்றை, நாக பூஜையை வழக்கமாகச் செய்துவரும் வேத வித்து ஒருவருக்குத் தானமாகத் தரலாம். சூரியன் உங்களது கீர்த்திக்கும், தொழில் வளர்ச்சிக்கும் ஏதேனும் சிறு தடங்கல்களை உண்டாக்கினாலும், இராசியை குரு பார்ப்

1997 September 1997

ஞாயிறு	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30				



உருளைக் கிழங்கை துண்டுகளாக நறுக்கிக் கறி செய்யும் போது தோல் சீவாமல் நறுக்கிச் செய்யுங்கள். குழையாமல் மொறுமொறுப்பு ஜாஸ்தியாகத் தெரியும்.

– பத்மினி கிருஷ்ணன்

பதினாலும் ராசிநாதனாகிய சுக்கிரன் சுய வீட்டில் இருப்பதாலும் எந்தப் பிரச்சினையும் உங்களை ஒன்றும் செய்துவிட முடியாது. உங்களது ராசி களஸ்திரகாரகனாகிய சுக்கிரனுக்கு உரியது. எனவே சனி, செவ்வாய் ஆகியவர்களின் பார்வையைப் பெறுவதால் குடும்பத்தில் சிறு சிறு பிரச்னைகள், பிரிவுகள் தோன்றுவதற்கும் காரணமாக அப்பார்வைகள் அமையலாம். இராசிக்கு ஏற்கெனவே கூறியதுபோல் குரு பார்வை இருப்பதால், எந்த இடையூறையும் உங்களுக்கே உரிய சமயோஜித புத்தியால் சமாளித்து விடுவீர்கள்.



மிதுன ராசி :

மிருகசீரிஷம் 3, 4 – ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 – ஆம் பாதங்கள்.

சூரியனால் மாதத்தின் முற்பகுதியில் அரசு சம்பந்தமான இனத்தில் வெற்றி கிடைக்கும். அது கோர்ட்டில் உள்ள வழக்கு ஒன்றில் உங்கள் பக்கம் சாதகமான தீர்ப்பாகவும் அமையலாம். அல்லது பதவி உயர்வாகக் கூட இருக்கலாம். வேலைக்கு விண்ணப்பித்துள்ளவர்களுக்குச் சாதகமான சூழ்நிலையும் கூட சூரியனால் உருவாகும். புதனால் மாதம் பூராவும் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை உருவாகும். சுக்கிரன் சுபநிகழ்ச்சிக்கு அடிகோலுவார். திருமணமோ, வீடு வாங்கும் நிகழ்ச்சியாகக் கூட அமையலாம். ஆயினும் மற்ற கிரகங்கள் ஏதேனும் ஒருவிதத்தில் தடையை உண்டாக்கலாம். பிரயாண சமயங்களிலும், இரவு நேரங்களில் கதவுகளைத் தாளிடுவதிலும் சற்று எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. கலைஞர்கள் சற்று கவனத்துடன் பணியாற்ற வேண்டிய காலகட்டம். சில சமயங்களில் வாயு பிடிப்பு, இடுப்பு வலி என ஏற்படுவதற்குச் சனி காரணமானாலும் இராசிநாதன் நல்ல நிலையில் உள்ளதால் விபரீதமாக ஏதும் நடந்திடாது. மிருத்யுஞ்சய ஜபத்தைக் கூறலாம். மற்றபடி ஆஞ்சநேயப் பெருமானை வணங்கலாம்.



கடக ராசி :

புனர்பூசம் 4-ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

மாதம் பூராவும் சுக்கிரன் உதவும் நிலை. அதனால் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிக்கு வாய்ப்பு உண்டு. தடைபட்ட திருமணமோ அல்லது வேறு எந்தவிதமான சுப நிகழ்ச்சியோ கட்டாயம் நிறைவேறும். கணவன் மனைவிக்குள் ஏற்பட்டிருந்த பிரச்சினைகள் கூட மறைந்து சுமுகமான நிலை உண்டாகும். குருவின் பார்வையால் மற்ற கிரகங்களினால் ஏற்படும் சிரமங்கள் கூட குறையலாம். எனினும் மாதத்தின் பிற்பகுதியில் சூரியன் கூட அரசுத் துறையினர்க்கும், அரசியல்வாதிகளுக்கும் உதவுவார். கூட்டுத் தொழில் செய்வோர், அரசியல்வாதிகள் மற்றும் உயர் பதவியில் உள்ள அரசுத் துறையினர் ஆகிய அனைவரும் தங்கள் எழுத்தில், பேச்சில் எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்திலும் கவனமுடன் இருத்தல் அவசியம். ராகுதிசை, சந்திரபுக்தி நடப்பவர்களுக்கு மேற்கண்ட இரண்டு கிரகங்களும் ஆட்சி உச்ச நிலையை ஜாதகத்தில் கொண்டிருந்தால் இந்த மாதத்தில் கிருத்திகை, ரோகிணி, மற்றும் புனர்பூசம், பூசம் ஆயில்ய நட்சத்திர நாட்களில் ஏதேனும் ஒரு தினத்தில் எதிர்பாராத பெருந்தொகை ஒன்றைப் பெறும் வாய்ப்பு உள்ளது. பௌர்ணமி அன்று வானில் பவனி வரும் சந்திரனை கண்குளிரத் தரிசனம் செய்யுங்கள். அதனால் உங்கள் உள்ளத்தில் அமைதியும் ஆனந்தமும் ஏற்படும். உங்கள் ராசிநாதன் சந்திரன் ஆனதால் அவனது ஒளிக்கதிர்கள் உங்கள் மீது படச் செய்வதன் மூலம் உங்களது பதட்டமும், விரக்தியும் மறைந்து விடும். பௌர்ணமியன்று அனுபவரீதியாகக் கண்டறியப்பட்ட பரிகாரம் இது. அத்துடன் பசுமாட்டிற்கு அன்னமிடுங்கள். அன்னலட்சுமி உங்கள் இல்லத்திற்கே வந்து ஆசிபுரிவாள்.



சிம்ம ராசி :

மகம், பூரம், உத்திரம் 1 – ஆம் பாதம்.

சுக்கிரனும் செவ்வாயும்


சேர்ந்தே உதவுவார்கள். எனவே வீடு கட்டவோ, அல்லது ஏற்கெனவே கட்டப்பட்ட வீடு கூட வாங்கவோ காலம் கனிந்து வந்துள்ளது. பயன்படுத்திக் கொள்ளுங்கள். சுப நிகழ்ச்சிகளுக்கு வாய்ப்பு உண்டு. எனினும் மற்ற கிரகங்கள் எதுவுமே உதவும் நிலையில் இல்லை எனலாம். ஆயினும் 10, 12, 2 ஆகிய இடங்களுக்கு குருவின் பார்வை இருப்பதால் புதுக் கடன்கள் ஏற்பட நியாயமில்லை. எனினும் 6, 7, 8 ஆகிய இடங்களில் உள்ள குரு, கேது, சனி போன்றவர்களால் பல்வேறு பிரச்சனைகள் தோன்றி சற்று மனதையும், உடலையும் கூட அலைக்கழிக்க வைக்கும். உங்கள் ஜென்ம ஜாதகத்தில் குரு சிம்மத்தில் இருப்பவர்களுக்கு எந்தப் பிரச்சனையும் ஏதும் செய்யாது. ஆயினும் பிரயாணம் செய்யும்போதும் சரி அல்லது உங்களது மேலதிகாரிகளுடன் பேசும்பொழுதும் சரி சற்றுக் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும். மறைமுக எதிரிகளும், பொறாமைக்காரர்களும் உங்களுக்குச் சில பிரச்சனைகளை உருவாக்கி, அதன் காரணமாக உங்களது மனம் பாதிக்குமளவுக்கு சூழ்நிலை உருவாகும். அந்தச் சமயங்களில் நரசிம்மரையும், ஸ்ரீசுப்ரமணியரையும் வணங்கி வழிபடுங்கள். எல்லாம் நல்லபடியாக நடக்கும். 1997 டிசம்பர் வரை சற்று எதையும் பொறுமையுடனும், ஆமையைப் போன்று அடங்கியும் சோதனைகளை எதிர்கொள்ளுவது நல்லது. அதன் பிறகு நீங்கள் சிங்கமாகச் சீறலாம். புலியைப் போலப் பாயலாம். அந்த நிலைக்கு கிரகங்கள் உங்களுக்கு வலுவைத் தர இருக்கின்றன.



கன்னி ராசி :

உத்திரம் 2, 3, 4 – ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 – ஆம் பாதங்கள்.

சுக்கிரன், கேது மற்றும் குரு ஆகிய கிரகங்கள் உங்களுக்குப் பலவிதங்களில் உதவும் நிலையில் சஞ்சரிக்கிறார்கள். அதனால் எதிர்பார்க்கும் எந்த இனங்களிலும் வெற்றி உண்டு. சுபநிகழ்ச்சிகளுக்குத் தடை ஏதும் வராது. திருமணமோ, புதுமனை புகுதலோ, உபநயனமோ எதுவானாலும் எதிர்பார்த்தபடியே சுபமாக முடியும். பதவி உயர்வும் வரலாம். வேண்டிய இடத்திற்கு மாற்றமும் வரலாம். குழந்தைகளின் நலன் திருப்தி அளிக்கும். வியாபாரத்திலும், தொழிலிலும் முன்னேற்றம் உண்டு. மாதத்தின் கடைசி வாரத்தில் காவல் துறையாளர்கள் மாபெரும் சாதனை ஒன்றை நிகழ்த்த செவ்வாய் உதவுவார். வீடு வாகன யோகமும் உண்டு. ஆயினும் விரயஸ்தானத்தில் உள்ள கிரகங்களான ராகு, மற்றும் சூரியன் சில வேண்டாத பிரச்சனைகளை உண்டாக்கலாம். அதனால், பணவிரயம், காலவிரயம் ஏற்படலாம். சனீஸ்வரன் கூட தம்பதிகளிடையே சிறு சச்சரவுகள் ஏற்பட சில சூழ்நிலைகளை உருவாக்கலாம். இராசிநாதனுக்கு குரு பார்வை இருப்பதால் எதையும் சமாளித்து விடுவீர்கள். அத்துடன் பராசக்தியையும், மகாவிஷ்ணுவையும் ஆராதியுங்கள். முடிந்தால் திருப்பதியோ, அல்லது சூரியனார் கோயிலுக்கோ சென்று வரலாம்.



துலா ராசி :

சித்திரை 3, 4 –ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 – ஆம் பாதங்கள்.

ராகுவும், இராசிநாதனாகிய சுக்கிரனும், 6ல் உள்ள சனியும் உங்களுக்கு உகந்த முறையில் உதவுவார்கள். அதனால், சுபநிகழ்ச்சி ஒன்றுக்கு இருந்த தடை நீங்கும். நன்முறையில் அது நடந்தேறும். உங்கள் தொழிலில் தனலாபமும் ஏற்படும். மாதத்தின் முதல் பகுதியில் அரசுத் துறையினரிடமிருந்து எதிர்பார்க்கும் இடத்தில் சாதகமான பதில் வரும். அது வேலை விஷயமாகவும் இருக்கலாம். அல்

அண்மையில் எங்கள் வீட்டில் நடந்த விசேஷத்தில் அடிக்கடி ஒரு கப், இரண்டு கப் என காப்பி கலக்க வேண்டியிருந்தது. மொத்தமாக இருபது கப் காப்பி கலந்து பால் குக்கரில் ஊற்றி விட்டேன். காப்பி சூடாக இருந்தது கடைசி கப் குடிக்கும் வரை. (அடியில் தண்ணீர் சூடாக இருக்கட்டும்.)

– என். கோமதி


லது வீடு வாங்க அரசின் கடனாகவும் இருக்கலாம். இதுவரை வாட்டி வந்த நோயினின்று விடுபடுவீர்கள். கோர்ட் விவகாரம் ஒன்றில் ஜெயம் ஏற்படும். அல்லது உங்களுக்கு வர வேண்டிய உங்களது பழைய பாக்கி ஒன்று அரசிடமிருந்தும் வரலாம். ஆனால் மற்ற இரகங்களின் போக்குச் சற்று எதிர்மாறாக அமையும். அதனால் மன அமைதி குறையலாம். அவசியமற்ற விஷயங்களில் தலையிடாமலும், முகஸ்துதி செய்பவர்களிடமிருந்து விலகியும் இருந்தாலே நிலையைச் சமாளிக்க முடியும். ஏனெனில் கேது அத்தகையவர்களுடன் நீங்கள் தொடர்பு கொள்ளும்படியான நிலையை உருவாக்கலாம். விநாயகரையும், காளியையும் ஆராதிப்பது நல்லது. குழந்தைகளின் முன்னேற்றங்கருதி அவர்கள் படிக்கும் கல்வி நிலையம் சென்று அவர்களின் நிலையை அறிவது, அதற்கேற்ப அக்குழந்தைகள் கல்வியில் நன்கு சிறப்புடன் விளங்க ஆவன செய்வது நல்லது.



விருச்சிக ராசி :

விசாகம் 4 - ஆம் பாதம், அனுஷம், கேட்டை.

சூரியனும், புதனும் உதவும் நிலையில் உள்ளனர். செவ்வாய் உதவாவிட்டாலும் உபத்திரவம் செய்ய மாட்டார். புத ஆதித்ய யோகத்தின் காரணமாக அரசாங்கத்தினால் நன்மை ஏற்படும். அரசுப் பதவி உயர்வாகவும் இருக்கலாம், அல்லது நிதியுதவியாகவும் இருக்கலாம். இடமொன்று வீட்டிற்காகவும் வாங்கலாம். ஆனாலும் மற்ற இரகங்களின் நில உகந்ததாகவோ உற்சாகம் தரும் நிலையிலோ இல்லை எனலாம். அதனால் பல பிரச்சனைகள் அன்றாடப் பணியில் கூட உண்டாகி மனதில் ஒருவித இறுக்கநிலை ஏற்படும். பிரயாணத்தின்போதும், பிறரிடம் பேசும்போதும், பணத்தை எண்ணித் தரும் போதும் கவனமும் எச்சரிக்கையும் தேவை. செவ்வாய் உங்கள் பிறந்த ஜாதகத்தில் ஆட்சி, உச்சம் பெற்று அவனது தசை நடப்பவர்களுக்கு நன்மை கூடுதலாக நடக்கலாம். மற்றபடி முருகனையும் சனீஸ்வரனையும் அந்தந்த கிழமைகளில் விளக்கேற்றி வழிபடுங்கள். அனைத்தும் நல்லபடியாக நடக்கும்.




தனுசு ராசி :

மூலம், பூராடம், உத்திராடம் 1 - ஆம் பாதம்.

குருவின் போக்கு உங்கள் நோக்கத்திற்கு வெற்றியைத் தரும். 3ல் உள்ள கேது தனலாபத்தையும், கோர்ட் விவகாரங்களில் வெற்றியையும் பெற அருளுவார். 11-ல் உள்ள சுக்கிரனால் பலவிதங்களில் அனுகூலம் ஏற்படும். எதிர்பாராத தனலாபமும் உண்டு. சந்திரன் உச்சமாகும் தினங்களில் அத்தகைய நிலை உண்டாகும். 10ல் உள்ள புதன் தாய் மாமன் வகையினரால் தனலாபத்தைப் பெற அருளுவார். அது தாய் வழியில் இதுவரையில் வராமலிருந்த பணமாகவோ அல்லது வீடு, நிலமாகவோ கூட இருக்கலாம். சுக்கிரன் வீடு வாங்கும் பாக்கியத்தையோ அல்லது சுபநிகழ்ச்சி நடைபெறுவதற்கான சூழ்நிலையையோ கூட உருவாக்க

ஒரு திருமணத்தில், மாங்கல்ய தாரணம் நடக்கும் முன் ஒருவர் மைக் வைத்துக் கொண்டு, "இப்பொழுது திருமங்கல்யதாரணம் நடக்கப் போகிறது. எல்லோரும் மேடைக்கு அருகில் வந்து பூ போட்டு ஆசீர்வதித்து, அவரவர் இருக்கையில் அமரவும். தம்பதிகள் சப்தபதி ஆனதும் மேடையிலிருந்து இறங்கி நிற்பார்கள். நீங்கள் அது சமயம் வரிசையாக வந்து பரிசுகள் அளிக்கலாம்" என்று சொல்ல, அதன்படி ரொம்பவும் அழகாக நடந்தது. இந்த முறையை எல்லோரும் பின்பற்றலாமே!

- எஸ்.சரஸ்வதி





"**பருவா!** எனக்கா! அது மறைஞ்சு போய்
எத்தனையோ நாளாச்சு !" என்கிறார் நளினி

தன் **சருமம் வறண்டு** போய் இருந்ததை
சங்கீதா எப்போதோ மறந்து விட்டார்.

"இப்போதெல்லாம் **வெயிலில்** போனா முகம்
கறுக்காமல் இருக்க எனக்குச் சரியான
பாதுகாப்பு கிடைச்சாச்சு" என்கிறார் விஜயா.

"என் **மென்மையான சருமத்தை** நினைச்சா எனக்கு
ரொம்ப **பெருமையா** இருக்கு" என்கிறார் மது.



பருக்களினால் அவதியா? சருமம் வறண்டு போகிறதா? முகத்தில் சுருக்கம் விழுகிறதா - வெயிலினால் முகம் கறுத்து விடுகிறதா? ∴பேஸ் டு ∴பேஸ் ஆயுர்வேத க்ரீம் இத்தகைய பிரச்னைகளை நிச்சயமாகப் போக்கி விடுகிறது. நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்றுள்ள ஆயுர்வேத மருத்துவ முறை தான் அதற்கு காரணம். அந்த மருத்துவ முறையினால் தான் ஒரே ∴பார்முலேஷனைக் கொண்டு பல்வேறு சருமப் பிரச்னைகளையும் தீர்க்க முடிகிறது. ∴பேஸ் டு ∴பேஸ் ஒரு ஆயுர்வேத க்ரீமாகவும், லோஷனாகவும் கூட இரு ரகங்களில் கிடைக்கிறது. இவற்றைப் பயன்படுத்துவது மிகவும் சுலபம். ∴பேஸ் டு ∴பேஸ் சருமத்தினுள் எளிதில் உட்புகுந்து மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. முக்கியமாக எத்தகைய பக்கவிளைவுகளும் இல்லாமல். எனவே உங்கள் சருமம் தான் முழுவதும் பளிச்சென்று மிருதுவாகத் திகழ முடிகிறது. ∴பேஸ் டு ∴பேஸ் பல்லாயிரக்கணக்கான பெண்களுக்கு பலனளித்து வரும் அழகு சாதனம். நீங்களும் பலனடையுங்களேன்.

இப்போது லோஷனாகவும் கிடைக்கிறது



ஃபேஸ் டு ஃபேஸ்

பல்வேறு சருமப் பிரச்னைகளுக்கும் ஆயுர்வேதம் அளித்திடும் நிவாரணம்.

டாலர் கம்பெனி தயாரிப்பு


O&M-1387-TM

டூ இன் ஒன் : தக்காளி நூடுல்ஸ் பண்ணும்போது ஒரு டம்ளர் தண்ணீரைக் கூடுதலாக விடவும். நூடுல்ஸ் தயாரித்த பின், நூடுல்ஸைத் தனியாக உபயோகிக்கவும். அதிகமுள்ள தண்ணீரை சின்னச் சின்ன கோப்பைகளில் விட்டு ஒரு ஸ்பூன் போட்டு குழந்தைகளுக்குக் கொடுக்கவும். இந்தத் தக்காளி சூப் குடிக்க மிகவும் சுவையாக இருக்கும்.

- விமலா தியாகராஜன்



லாம். ராகுவின் போக்கால் சிறு சிறு சஞ்சலங்கள் குடும்பத்தில் தோன்றி மறையலாம். குரு பலத்தின் காரணமாகத் திருமணம் ஆக வேண்டியவர்களுக்கு அது கைகூடி வரலாம். தாயாரின் உடல்நிலை பற்றிய கவலை ஏற்படலாம். ஆனால் 2ல் உள்ள குரு சந்திரனது வீட்டைப் பார்ப்பதால் விபரீதமாக எதுவும் நடந்திடாது. ஸ்ரீராமபிரானது சரித்திரத்தைப் படியுங்கள். அல்லது கேளுங்கள். தட்சிணா மூர்த்திக்கும் பிரகஸ்பதிக்கும் அர்ச்சனை செய்யலாம்.



மகர ராசி :

உத்திராடம் 2, 3, 4 – ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 –ஆம் பாதங்கள்.

சுக்கிரனால் சுகமில்லை. புதன் உச்சம் பெறுவதால் அவரால் பிரச்சனை ஏதும் ஏற்படாது. மாதத்தின் பிற்பகுதியில் செவ்வாய் நீங்கள் தைரியமுடன் ஒரு சாதனை நிகழ்த்த உதவ இருக்கிறார். குறிப்பாக, காவல் துறையினருக்கு மதிப்பும் மரியாதையும் பெருமளவுக்குக் கிடைக்கக்கூடிய காலகட்டம். தாய்வழி குடும்பத்தாருடன் சிறுசிறு சச்சரவுகள் ஏற்படலாம். மாத ஆரம்பத்தில் ஒரு நில விஷயமாக நீதிமன்றத்தில் உதவியைப் பெறவேண்டி இருக்கும். கேதுவும், இராகுவும் சேர்ந்து பிரச்சினைகளை உடல்நிலை சம்பந்தமாகவும் மற்றும் உத்தியோக சம்பந்தமாகவும் கூட ஏற்படுத்தலாம். சமையல் அறை விஞ்ஞான ஆய்வுக்கூடம், வெடிமருந்து தயாரிக்கும் இடம் ஆகிய இடங்களில் பணிபுரிவோர் கேதுவுக்கும் விநாயகருக்கும் அர்ச்சனை செய்வதுடன் சற்று எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். ஏற்றத்தாழ்வு மிக்க அனுபவித்துக் கழிக்க வேண்டிய மாதம். எனவே கணபதியையும், ஸ்ரீவிஷ்ணுவையும் ஆராதிப்பது நல்லது. சனீஸ்வரனது அருளால் எத்தகைய இடையூறுகளையும் சமாளிக்கும் நிலை தானாகவே உங்களுக்கு ஏற்பட்டு விடும். எனவே கவலை தேவையில்லை.



கும்ப ராசி :

அவிட்டம் 3, 4 – ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 – ஆம் பாதங்கள்.

சுக்கிரனும் புதனும் உதவும் நிலை. மற்ற கிரகங்கள் உதவும் நிலையில் இல்லை என்றே கூறலாம். சூரியன் மாத ஆரம்பத்தில் 7ல் ஆட்சியில் இருக்கும் பொழுது அரசுத் துறையில் உள்ளவர்களுக்கு ஒருசில நன்மைகளைச் செய்யலாம். புதன் பூர்வீக சொத்து சம்பந்தமானதொரு வழக்கில் உங்கள் சார்பாக வெற்றி பெற உதவலாம். திருமண நிகழ்ச்சி ஒன்று நடைபெற சுக்கிரன் அருளுவார். குரு, சனி பரிவர்த்தனை காரணமாக அன்றாட பணிகளில் பிரச்சினைகள் அதிகம் ஏற்பட நியாயமில்லை. ரோகஸ்தானத்தை குரு பார்ப்பதால் நோயிலிருந்து விடுபடும் சாத்தியம் தெரிகிறது. கண் மருத்துவரைப் பார்க்க வேண்டிய நிலை ஏற்படலாம். கலைஞர்களுக்குக் கூடச் சற்று சோதனை மிக்க காலமே. இரண்டாவது சுற்று ஏழரை சனியின் பிடியில் உள்ளவர்களுக்கும் சுப நிகழ்ச்சிகளை நடத்தவும் அல்லது பங்கேற்க

வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்யஸ்மரண ஸமிதி (Regd)
42, காமாக்ஷி ஜோஸியர் தெரு, கும்பகோணம் - 612 001.

"வேதாத்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதாத்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ஓரளவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். உயிருக்கு மேலாக நேசித்து பொருளை சம்பாதிக்கும் நாம், அதன் ஒரு பகுதியையாவது வேதாத்யயனம் செய்யும் குழந்தைகளை ரக்ஷிக்க அர்ப்பணிக்க வேண்டும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் மூதாதயர்களான ஸ்ரீ நாகமாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 455 ஆண்டுகளாக நடந்து வரும் ராஜா வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்பொழுது 130 மாணவர்களுக்கு 15 வேத சாஸ்திர அத்யாபகர்கள் வேத சாஸ்திர வித்தைகளை புராதனமான குருகுல முறைப்படி போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்கு கொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்களையும் அடைய வேண்டுகிறோம்.

வ எண்.	திட்ட விவரங்கள்	ஒரு முறைக்கான நன்கொடை துகை (Adhoc donation)	நிறந்தர வைப்பு நிதி 'Corpus Fund'
1.	ஒரு வேளை ஸமாராதனைக்கு (பகுதி துகை)	Rs. 500	Rs. 5,000
2.	ஸுமங்கலி ப்றார்தன : ஸுமங்கலி ப்றார்தனைக்கு ரூ. 1000/- வித்யார்த்தி ஸமாராதனைக்கு ரூ. 500/-	Rs. 1,500	Rs. 15,000
3.	அமாவாஸ்யை (அ) பௌர்ணமி (அ) த்வாதசி ஸமாராதனைக்கு	Rs. 1,500	Rs. 15,000
4.	பௌர்ணமி ஆயுஷ்ய, நவக்ரஹ நக்ஷத்ர ஹோமம்	Rs. 1,000	Rs. 10,000
5.	ஒரு வேதம் பயிலும் மாணவனின் பராமரிப்பு மாத செலவு ரூ. 1000/-	Rs. 12,000 P.A	Rs. 1 Lakhs

Cross செய்யப்பட்ட D.D ஐ A.V.M.S.G.D.P.S. Samithi என்ற பெயரில் அனுப்புக் கோருகிறோம்.
MAY VEDA MATHA BLESS US ALL

தினமும் ஒரு மந்திரம்


கோமாதா வணக்கம்

பசு ஸ்ரீலட்சுமி தேவியின் இருப்பிடங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அதனால் தான் புதுமனைப் புகுவிழாவின் போது முதன் முதலில் கன்றுடன் கூடிய பசுமாட்டைத் தான் வீட்டிற்குள் முறைப்படி பூசனைகள் செய்து அழைத்துச் செல்லுவதைக் காணலாம். அப்படிப்பட்ட பசு எனும் கோமாதாவை வலம் வருவதன் மூலம் அலைமகளின் பரிபூரண அருளைப் பெறலாம். அது மட்டுமல்ல. பசுவை நமஸ்கரித்து பிரதக்ஷணம் வந்தால் ஸர்வ பாபங்களும் விலகி, ஏழு திசையும் சுற்றி வந்த புண்ணியமும் நம்மை வந்தடையும். பௌர்ணமி, வெள்ளிக்கிழமைகளில் கோ பூஜை செய்வது சாலச்சிறந்ததாகும்.

கீழே தந்துள்ள ஸ்லோகத்தில் எப்படி வணங்க வேண்டும் அதனால் என்ன பயன் என்பதைக் காணலாம். அதாவது, பசுவுக்கு மிக அருகில் சென்று அதன் முகத்தைப் பார்த்து வணங்கி வலம் வந்தால் ஏழு தீவுகளுடன் கூடிய பூவுலகை வலம் வருவதால் பெறத்தக்க புண்ணியத்தைப் பெறலாம். இலக்குமி அனைத்து நதிகளில் நீராடுவதால் ஏற்படும் புண்ணியத்தைத் தரத்தக்கவள். அதன் மூலம் நம்மை பரிசுத்தம் செய்யக் கூடியவள். காமதேனுவை விடச் சிறந்தவள். 'அப்படிப்பட்ட தேவி, உன்னை வலம் வந்து வணங்குகிறேன்.' ஸ்லோகத்தை வடமொழியை நன்கு அறிந்தவர் மூலம் கேட்டுப் படிப்பது நல்லது.

காம் ச க்ருஷ்ட்வா நமஸ்க்ருத்ய க்ருத்வா
சைவ ப்ரதக்ஷிணம்
ப்ரதக்ஷிணீக்ருதா தேன ஸப்தத்வீபா வ
வஸுந்தரா
ஸர்வ காமதுகே தேவி ஸர்வ
தீர்த்தபிஷேசினி
பாவனே ஸுரபிஸ் ச்ரேஷ்டே தேவி
துப்யம் நமோஸ்துதே!

– ஜெயலட்சுமி கிருஷ்ணன்
(தொ. பே. 44 30 991)



வாழைத் தண்டை நறுக்கி உப்பு, சாம்பார் பொடி, தக்காளி, சிறிதளவு ப. பருப்பு போட்டு குக்கரில் வேகவிடுங்கள். வெந்தவுடன் துருவிய தேங்காய், பெருங்காயம், கறிவேப்பிலை போட்டு ஒரு கொதி வந்தவுடன் தாளித்து விடுங்கள். சுவையான புது மாதிரியான கூட்டு தயார்.

– கீதா கிருஷ்ணமூர்த்தி

வும் கூடிய வாய்ப்பு வரலாம். சௌந்தர்ய லஹரி, ஆனந்த லஹரி ஸ்லோகங்களைப் படியுங்கள். அல்லது சக்கரத்தாழ்வாரைச் சேவியுங்கள். வீட்டில் சனீஸ்வர ஸ்தோத்திரத்தைப் படியுங்கள்.



மீன ராசி :

பூரட்டாதி 4 – ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

ராகுவால் வழக்கு ஒன்றில் வெற்றியுண்டு. சூரியனால் மாதத்தின் ஆரம்பத்தில் தனலாபமோ அரசாங்க உதவியோ கிடைக்கும். எதிரிகளால் ஏவப்பட்டிருந்த தொல்லைகளில் இருந்து, வெற்றியுடன் மீளும் வாய்ப்பு உள்ளது. சுக்கிரனால் தாம்பத்திய உறவில் மகிழ்ச்சி ஏற்படும். மக்கள் நலன் நன்கு அமையும். வெளிநாட்டிலிருக்கும் உங்கள் உறவினராலே நன்மையுண்டு. கேதுவால் கண்கள் பாதிக்கப் படலாம். எனவே விநாயகருக்கும் சூரியனுக் கும் நந்தியாவட்டை மலர்களால் அர்ச்சனை செய்யலாம். ஒரு வெளிநாட்டுப் பிரயாணத்திற்கு வாய்ப்பு உண்டு. அதனால் பயனும் உண்டு தட்சிணா மூர்த்தி ஸ்லோகத்தைப் படிப்பது நல்லது. அத்துடன் வியாழக் கிழமைகளில் குருவுக்கு நெய்விளக்கை நவக்கிரக சன்னிதானத்தில் ஏற்றவும். குறிப்பாக மஞ்சள் நிறத்துணியால் திரிசெய்து விளக்கேற்றலாம். ஓமாம்புலியூர் சென்று வரலாம். அல்லது ஆலங்குடிக்கும் போய் வரலாம். மற்றபடி ஏற்றத்தாழ்வுமிக்க மாதமே.

மங்கையர் மலர்
திருமண மலர்

குமரன் சில்க்ஸிலும்
தனலக்ஷ்மி ஜுவெல்லர்ஸிலும்

எங்கள் படைப்பின் மூலாதாரம் இந்தியப் பாரம்பரியம்.

எங்கள் புடவைகளும், நகைகளும் இந்தியக் கலை, நாகரிகம், பாரம்பரியம் இவற்றின் சாரத்தில் உருவாவதே.

இன்று இப்பாரம்பரியத்தைப் பரப்ப, பாதுகாக்க நாங்கள் உறுதி பூணுகிறோம். எங்கள் உள்ளச் கனவின் பிரதிபலிப்பாக வேதக் கூறுகளின் அடிப்படையில் அமையும் இந்தியத் திருமணங்களில் காணும் பல்வேறு சடங்குகளுக்கான விளக்கத்தை வாசகர்களாகிய உங்களுக்கு வழங்குவதே எங்கள் முயற்சி.

சென்ற மாத தொடர்ச்சியாக மங்கையர் மலர் திருமண மலரை இத்தகு சுவைமிகு சாரத்துடன் உங்களுக்கு வழங்குவது இம்முயற்சியின் முதல் படி.

இந்தியப் பாரம்பரியம்
உங்கள் முன் கொண்டு வருபவர்கள்

குமரன் சில்க்ஸ், சென்னை

தனலக்ஷ்மி ஜுவெல்லர்ஸ், சென்னை

மணமகள் தேவை

■ Alliance invited for boy Iyer, Ashtasahasram, Koundinya, Hastham, 28 yrs, B.A., Dip. in Comp. partner in an authorised TVS Suzuki Service Centre, Rs. 5000/- p.m. from employed girls (teachers/Govt. service preferred) from decent family. Subsects acceptable. Box No. 14220

■ Vadamal Bharadwaja, Ayilyam, 30/165/6000/- studying M.A. employed Engine Valves, Chennai, seeks employed girls. Subsects acceptable. Reply with horoscope to Box No. 14221

■ கார்காத்தார் இன மணமகன் B.Sc., Dip. in Computer வயது 29, உயரம் 5.11" சிவப்பு நிறம். தனியார் நிறுவனத்தில் ரூ. 3000/- பணிபுரியும் மணமகனுக்கு படித்த வேலையில் உள்ள அதே இனத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 14222

■ Vadamal Iyer, Srivatsa, Revathi, 27 yrs. 5.8" B.Com., I.C.W.A. (Final) Bank Officer, Chennai, only son, owns house, seeks good looking graduate employed/unemployed, home loving, spiritual minded girl. Phone : 4335215. Contact Box No. 14223

■ தென்கலை, பாரத்வாஜ கோத்திரம், மகம் 4ம் பாதம், DCA/26/10,000/5.7'' சென்னையில் வங்கியில் பணிபுரியும் சிவந்த நிற பையனுக்கு அழகிய, ஆரோக்கியமான வேலைக்கு செல்ல விருப்பமுள்ள பட்டதாரி மணமகள், 22 வயதிற்குள் தேவை. பெட்டி எண் : 14224

■ Tamil Iyer, Vadama, Kousika, Uthiradam I, 29, 5.8" B.Com., Rs. 7000/-. Dy. Executive (Fin.) in reputed company in Delhi. Seeks good looking graduate girl below 25. Vadama, Brahacharanam, willing for employment at Delhi. Reply with horoscope to Box No. 14225

■ Iyer, Brahacharanam, Bharani, Bharadwajam, 26/160 graduate Rs. 3300/- employed Chennai, reputed pharmaceuticals ltd. Employment confirmed. Seeks Chennai based employed graduate girl. Subsect acceptable. Send horoscope with family details to Box No. 14226

■ தமிழ் ஐயர், வடமாள், கௌசிக கோத்திரம், 26, 5.3" மிருகசீரிஷம் 3ம் பாதம், செவ்வாய் தோஷம் 4, சிவப்பு நிறம், டிப்ளமோ (DEEE) சென்னை தனியார் நிறுவனத்தில் ரூ. 5000/- சம்பளம். சொந்த வீடு உள்ளது. 22 - 25 வயதில் படித்த வேலைக்கு செல்ல விருப்பமுள்ள/விருப்பமில்லாத மத்தியதர வர்க்கத்திலிருந்து பெண் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 14227

■ Vadama, Haritha, Uthiradam, 28/180. Maruti Udyog 1.8 lacs. Boy proficient in Japanese. Looking for talented slim, fair, attractive bride. Subsects acceptable. Horoscope/photo (returnable). To Box No. 14228 Ph : 4935831, Chennai.

■ Alliance invited for Vadama Iyer boy, Bharadwaja, Makam, 35/180/5000/- executive reputed private firm, from good looking graduate girl of respectable family. Horoscope with details to Box No. 14229

■ Iyer bachelor, Vadamal, Bharadwaja, Sathayam, November 1954, very young looking and fair, 5.8" graduate, self employed, very decent income, requires good looking girl around 35 from decent family. Box No. 14230

■ Vadamal, Kousika, B.Sc/UDC, Tamilnadu Govt. 32 years, 5.9" fair, Rohini 3rd padam, seeks fair, suitable graduate bride, Central/State reputed firm, transferable. Reply with horoscope to Box No. 14231

■ ஆத்ரேய உத்திரட்டாதி 38, வடகலை, அய்யங்கார், சொத்துள்ள நல்ல நிலைமையில் உள்ள சகோதரர்கள்/சகோதரிகள் துணையுள்ள பட்டதாரிக்கு படித்த குடும்பப்பாங்கான பண்புள்ள பையனை அன்புடன் அரவணைக்கும் திறமையுள்ள மணமகள் தேவை. வறுமை எளிமை விலக்கல்ல. பதில் பெட்டி எண் : 14232

■ ஐயர், வடமாள், 36, உத்திரம், சொந்த தொழில் (சேலம்) 4500/- தாரமிழந்தவர். நான்கு வயதில் ஒரு பையன் உண்டு. ஏழை பிராமணப் பெண் தேவை. குழந்தை இல்லாத விதவை/விவாகரத்தான/ஐயர் உட்பிரிவு/ஐயங்கார் பிராமணப் பெண் சம்மதம். பெட்டி எண் : 14233

■ பாலக்காட்டில் வசிக்கும் வெள்ளாளர் பிள்ளை, வயது 32, உயரம் 165 செ.மீ. தனியார் நிறுவனத்தில் வேலை, ரூ. 1500/- மணமகனுக்கு அதே இனத்தைச் சேர்ந்த குடும்பப்பாங்கான மணமகள் தேவை. பெட்டி எண் : 14234

■ வடமாள், கௌண்டன்யம், அவிட்டம் - 3, 29/5.11" (பி.ஏ.) ரூ. 6500/- பப்ளிக் லிமிடட் கம்பெனியில் பணிபுரியும் சொந்த வீடுள்ள வரனுக்கு பட்டதாரி/பட்டதாரியற்ற அரசு/தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கும்/வேலைக்குச் செல்ல தகுதியும் விருப்பமும் உள்ள அழகான குடும்பப் பாங்கான பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். போன் : 4336770/2364407. பெட்டி எண் : 14237

■ Nanchilnad Hindu Vellala Pillai, respected propertied wealthy family, Kanyakumari based



இந்த இதழில் பிரசுரமாகும் பெட்டி எண் விளம்பரதாரருக்கு பதில்கள் அனுப்பக் கடைசி தேதி 10.10.1997. முன்பே அறிவித்தபடி திருமண மலர் விளம்பரக் கட்டணம் செப்டம்பர் இதழிலிருந்து, முதல் 30 வார்த்தைகளுக்கு ரூ. 200/-. அதிகப்படி ஒவ்வொரு வார்த்தைக்கும் ரூ. 10/-. பதில்கள் அனுப்ப வேண்டிய முகவரி : விளம்பரதாரர், பெட்டி எண்:.................. C/o. மங்கையர் மலர், 47 ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

parents seeks alliance for son M.B.B.S./160/20,000/- Poorattathi from beautiful preferably fair girl of forward community. Respond with bio-data, photo to Box No. 14238

■ Alliance invited for Vadagalai Iyengar, bachelor, Srivatsa, Sathayam, B.Com, 43/171/7000/- Public sector undertaking (Tamilnadu) Subsect acceptable. Reply with horoscope to Box No. 14239

■ Wanted bride for Blind, fair, South Indian Brahmin, Tamilian, 38 years, with a High University Qualifications, comfortable, independent, five figure income and owns a house in Madras, seeks an educated Brahmin girl as spouse and life time companion. Horoscopes optional. Boys interests are free lance writing and Hindu religious matters. Please phone 2376535 East Tambaram. Box No. 14240

■ Hindu Mudaliar/Mukkulator, U.S. citizen, 26/185, handsome, lawyer seeks tall, fair, educated girl from respected family below 25. Reply with bio-data, horoscope to Box No. 14241

■ வடமாள், கௌண்டின்யம், புனர்பூசம், பி.எஸ்ஸி, எம்.பி.ஏ. படித்துக் கொண்டிருக்கும் 26 வயது, 6 அடி உயரம், மாதச் சம்பளம் ரூ. 6000/- கால்கேட் நிறுவனத்தில் பணிபுரியும் பையனுக்கு அழகிய 23 வயதுக்குட்பட்ட பட்டதாரி பெண் தேவை. பெண் வேலையில் இருப்பது அவசியமில்லை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 14242

■ சைவப் பிள்ளை 30/169/M.C.A./fair/smart, சென்னை 10,000/- தற்சமயம் Japan Deputation (3000 US$) இரண்டு மாதத்தில் இந்தியா வர இருக்கின்ற மணமகனுக்கு அழகான சிகப்பான பட்டதாரி மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 14243

■ வடமாள் ஐயர், வாதூல, மூலம், 162/37 வயது, 30,000/- வெளிநாட்டில் வேலையில் இருக்கும் விவாகரத்தான வரனுக்கு மணமகள் தேவை. பெட்டி எண் : 14244

■ Malaysian Tamil 33 yrs. Andipandaram caste, divorced within months, no encumbrance, soft spoken, clean habits needs vegetarian, affectionate, homely 25 - 30 years, caste no bar. Pref. poor Brahmin girls, ready to settle in Malaysia. Box No. 14245

■ Vathima, Haritha, Poosam, 29/178. B.Com., ICWA, ACS (inter) CIMA (London) 2 groups passed, well employed in Kuwait, wants good accounts/computer qualified girl from good family. Subsects acceptable. Box No. 14246

■ Wanted bride below 24 fair graduate or under graduate for Kerala Iyer, Bharadwajam, Makam graduate employed, 27, 6 feet, fair. Subsect no bar. Horoscope details to Box No. 14247

■ அவிட்ட நட்சத்திரம், ஸ்ரீவத்ஸ கோத்திரம், ஐயர், தனியார் கம்பெனியில் ரூ. 1500/- சம்பளம் வாங்கும் 37 வயதுடைய பையனுக்கு 30 லிருந்து 35 வயதிற்குள் வேலை பார்க்கும் பிராமண பெண் தேவை. எந்த உட்பிரிவும் சம்மதம். பெட்டி எண் : 14248

■ Iyer, Vathimal, Haritha, Uthirattathi, 30/170/12000/- Diploma (Electronics) boy seeks decently employed girls Bombay based or having transferable job to Bombay. Subsects no bar. Box No. 14249

■ வடமாள், விஸ்வாமித்ர கோத்திரம், உத்திரட்டாதி, வயது 29, ரூ. 3500/- மத்திய அரசு தொழிற்சாலை ஆவடியில் பிட்டராக வேலை பார்க்கும் (பி.ஏ.) பையனுக்கு வேலையிலுள்ள/இல்லாத பெண் தேவை. பள்ளி ஆசிரியையாக இருந்தாலும் நலம். பெட்டி எண் : 14250

■ Alliance invited for unmarried Vadama Iyer, Srivatsa, Aswathi highly educated well employed 45/158/10,000/- boy from educated employed/unemployed unmarried Iyer girls, boy owning flat. Box No. 14251

■ Alliance invited for unmarried Vadama Iyer, Srivatsa, Krithika B.A., incomplete Govt. employed clerk 37/160/4000/- well built fair boy owning flat from unmarried Iyer girl. Box No. 14252

■ திடகாத்திரமான உருவமும், மாநிறமும் 80 கி/5.9" உயரமும் கைத் தொழில் செய்யக்கூடிய திறமையும் கொண்ட சற்றே மன வளர்ச்சி குன்றிய, 21 வயது மணமகனுக்கு, சொந்த வீடும் மாத வருமான வசதியும் உண்டு. ஓரளவு படிப்பும் பொறுமையும் கொண்ட மணமகள் தேவை. மணமகனுக்கு சொந்தவீடும், அன்பான பாந்த மனப்பான்மையும் கொண்ட, ஆதரவற்ற உடல் ஊனமுள்ள பெண்கள், விண்ணப்பிக்கலாம். அனாதை ஆசிரமத்தில் வளரும் பெண்ணாக இருந்தால், மருமகளாக தத்தெடுத்து கொள்ளவும் சம்மதம். பெட்டி எண் : 14253

■ சைவப் பிள்ளை, கார்காத்தார், அனுஷம், 31 வயது M.Sc., P.G.D.C.A. U.S.A ல் வேலை பார்க்கும் மணமகனுக்கு M.C.A., MBE, படித்த வைதீக பாரம்பரியம் உடைய மணமகள் தேவை. பெட்டி எண் : 14254

■ Saiva Pillai, 27, 5.9" fair, MSE Computer employed California, seeks bride fair, slim, good looking below 24. Subsect student or residing states acceptable. Box No. 14255

■ Srivatsam, Pooradam, 28, Private firm, 4000/- only child (no brothers/sisters) seeks Vadagalai, graduate employed from well settled family. Box No. 14256

■ வடமாள் ஐயர், கௌண்டின்யம், மூலம் 4ம் பாதம், 34

வயது, 10 வது வரை படிப்பு, வெளுப்பு 5.7" தனியார் துறையில் ரூ. 1800/- பிக்கலில்லாத நல்ல குடும்ப பையனுக்கு தையல், மச்சிங் தெரிந்த வேலைக்கு போகும்/போகாத நல்ல குடும்ப பிராமண பெண் தேவை. ஹைதராபாத் பெண்ணுக்கு முன்னுரிமை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 14258

■ சென்னையில் தனியார் நிறுவன வேலை, மாதம் ரூ. 4000/- வடமாள், ஸ்ரீவத்ச கோத்திரம், பையனுக்கு, குடும்பப்பாங்கான பெண் தேவை. ரோகிணி, 30.7.1959, நல்ல சிவப்பு, உயரம் 5.8". வரதட்சணை இல்லை. ஜாதகம் அல்லது மனப் பொருத்தம் சம்மதம். பெட்டி எண் : 14259

■ Alliance for unencumbered Bombay based divorcee Vadamal, Bharadwaj middle class medium built and complexioned, 44/176/6500/- widowers/unemcumbered divorcees/spinsters. Subsects no bar. Reply with full details to Box No. 14260

■ Iyengar, Vadoolam, Poorattathi, 31/180, handsome BEMS greencard holder California, seeks smart, fair, tall girl holding H1 Visa studying/working. Box No. 14261

■ Wanted Iyer non-Kousika, Vadama, good looking decent family postgraduate, professional girl for 35/175/B.Com., CA, decent salary. Send horoscope family details to Box No. 14262

■ கார்காத்தார் சைவப் பிள்ளை, வயது 30, மூலம் நட்சத்திரம், பி.காம்., சி.ஏ. படித்து சிறப்பு தனியார் நிறுவனத்தில் உயர்ந்த பதவியில் வேலை பார்க்கும் மணமகனுக்கு அழகான பட்டதாரி, நல்ல குணமுள்ள, குடும்பப் பாங்கான அதே இனத்தைச் சேர்ந்த வயது 25லிருந்து 28க்குள் உள்ள மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 14263

■ Pure vegetarian Hindu, 58/5.6"/3000/- p.m. seeks same sect age above 45 to 50 broad minded, affectionate partner for companionship preferably (divorcee/widow) only. Box No. 14264

■ செட்டியார், வயது 43, பி.இ. மத்திய அரசு நிறுவனத்தில் பொறியாளராக பணிபுரியும், விவாகரத்தானவருக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்த வேலைக்கு போகாத மணமகள் தேவை. ஏழை மற்றும் ஆதரவற்றோர்க்கு முன்னுரிமை. சாதி பேதமில்லை. ஜாதகம், போட்டோவுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 14265

■ அகமுடையார் பிள்ளை/தேவர், 37 வயது பிளஸ்மி அரசு நிறுவனம் scale III Officer 5.9" உயரம். சிவப்பு, சுத்த பழக்கவழக்கங்கள், சைவமான பையனுக்கு அழகான வசீகரத்தோற்றமுடைய வேலைக்கு செல்லும்/செல்லாத பட்டதாரி பெண் தேவை. குடும்ப முழு விவரம் ஜாதகம் அனுப்பவும். பெட்டி எண் : 14266

■ Adayabalam, North Arcot, Vadamal, Bharadwajam, Moolam second padam, age 26, height 6', Elec. Engineer in NOKIA, Delhi. Salary Rs. 25,000/- handsome boy, seeks fair, slim, well qualified employed minimum height 5.4". Ph : 4819338. Box No. 14267

■ கன்னடம், மாத்வா, பாகநாடு, பாரத்வாஜம், அனுஷம், 29/165 செ.மீ. M.Sc., M.Phil., B.Ed., தனியார் கல்லூரி விரிவுரையாளர் வரனுக்கு Post graduate அல்லது அரசு பணியிலுள்ள மணமகள் தேவை. ஜாதகம், குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 14268

■ Brahacharanam, Bharadwajam, Uthiradam, aged 29, 13,000/- p.m. B.Sc., AICWA. DFM accounts executive in MNC Mumbai. Seeks employed girl from respectable family. Reply with horoscope to Box No. 14269

■ சைவப் பிள்ளை, வயது 23, உயரம் 5.6" படிப்பு பி.காம், நட்சத்திரம் பரணி, சொந்த தொழில் செய்யும் வரனுக்கு பெண் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 14270

■ Wanted unmarried home loving graduate Iyengar girl for Vadagalai, Srivatsam, Uthiradam, 33/167/20,000/- p.m. Systems Manager MNC, Bangalore, legally separated unemcumbered. Horoscope details to Box No. 14271

■ Wanted fair, slim, good looking Iyer graduate girl for a Keralite Iyer boy 32, Vadama, Koundinya, Bharani, doing own business in Chennai. Box No. 14272

■ ஐயர், பிரகசரணம், கர்க கோத்திரம், +2, சொந்த வீடு, தனியார் பணி ரூ. 3000/- வயது 33, செவ்வாய் தோஷம் (4ல் செவ்வாய்) உள்ளவருக்கு மணமகள் தேவை. பணிக்குச் செல்லுபவருக்கு முன்னுரிமை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ள பெட்டி எண் : 14273

■ Gowdama Gothram, Brahacharanam, Moolam, medium complexion, 28/5.7"/4000/- B.Sc. Comp.

Science, working as software engineer in Bangalore. Seeks fair, graduate Iyer girl employed below 24 years. Subsect no bar. Box No. 14274

■ சௌராஷ்டிரா இனம். மௌத்கல்ய ரிஷி கோத்திரம், வயது 29, மாநிறம். செவ்வாய் தோஷம் உள்ள சொந்த தொழில் புரியும் மணமகனுக்கு ஓரளவு படித்த, நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மணமகள் தேவை. ஜாதகம், போட்டோவுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 14275

■ Brahacharanam, Haritha, Uthirattathi, Electronics Diploma 29/174, Hyderabad, comfortable Five figure earning, seeks electronics or computer good looking graduate Iyer girl. Details with horoscope to Box No. 14276

■ Iyer boy, Haritham, Brahacharanam, Pooradam, double M.A., business in Kumbakonam, ~~31/170/-~~ 10,000/- seeks graduate girl, employed transferable LIC/Bank/Govt. Subsect no bar. Contact with horoscope and full details to Box No. 14277

■ தெலுங்கு யாதவ (Golla) எம்.டி. 31/5.10"/8000/- உதவிப் பேராசியருக்கு, நல்ல உயர்குடும்ப குடும்பப்பாங்கான பட்டதாரிப் பெண் தேவை. சம அல்லது உயர்ந்த ஜாதி பெண்களும் சம்மதம். ஜாதகத்துடன், மற்ற விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். வேறு எதிர்பார்ப்புகள் இல்லை. பெட்டி எண் : 14278

■ Alliance invited from Christian girls for Tamil Roman Catholic Christian Vellalar boy 28 yrs. 177 cms., 7500/- p.m. working as Scientific Officer in Nuclear Power Corporation. Apply to Box No. 14279

■ Seeking alliance for a boy M.Sc. Nuclear Chemistry, PG Diploma in Computer Science, 29/5.7" Telugu Brahmin, Bharadwaja, Kona Seema, Visakam, from Telugu Brahmin, fair complexion computer professional India/Abroad. Box No. 14280

■ ஐயர், வடமாள், ஸ்ரீவத்ஸ, மகம், எஸ்.எஸ்.எல்.சி. 35 வயது சுய தொழில் மாத வருமானம் ரூ. 10,000/- உயரம் 170 செ.மீ. வரனுக்கு தகுந்த மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ளவர்களுக்கு முன்னுரிமை. பெட்டி எண் : 14281

■ ஐயர், பிரஹசரணம், ஹரித, அசுவதி 4ம் பாதம், வயது 30, உயரம் 5 அடி 6 அங்குலம், பி.எஸ்ஸி சென்னையில் சொந்த வியாபாரம் வருமானம் ரூ. 6000/- ஒரே பிள்ளை, சொந்த ப்ளாட் உண்டு. குடும்பப்பாங்கான வேலைக்குச் செல்லும்/செல்லாத பட்டதாரி பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். போன் : 4940368. பெட்டி எண் : 14282

■ சோழிய சைவ வெள்ளாளர் (சைவம்) படிப்பு பி.இ. 28, 178 செ.மீ. விசாக நட்சத்திரம், சிங்கப்பூரில் வேலை. மணமகனுக்கு இதே இன பட்டப்படிப்பு படித்த மணமகள் தேவை. பெட்டி எண் : 14283

■ Tamil Smartha, fair and pretty, home-oriented culture-inclined bride from decent family for 38/165 postgraduate Chennai based businessman, wealthy, looking younger, healthy habits, innocent divorcee, Bharadwaja. Send horoscope with family details to Box No. 14284

■ சொந்த தொழில் செய்கின்ற இளைஞர், மாத வருமானம் பதினைந்து ஆயிரம். பி.காம் படித்தவர். 43 வயது. கார்காத்தார் இனத்தைச் சேர்ந்த திருமணமாகாத இனிய தோற்றமுடைய இளைஞர், ஓரளவு படித்த, குடும்பப்பாங்கான பிராமண குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. வரதட்சணையோ மற்ற எதிர்பார்ப்புகளோ இல்லை. அணுகவும் பெட்டி எண் : 14285

■ Alliance invited from homely, good looking educated employed/unemployed girl from respectable family within 23 - 25 yrs. for Brahacharanam, Haritha Gothram, Poosam, 27½ yrs./165 cms., DEE Engineer, self employed. Rs. 5000/-. Apply with horoscope, details to Box No. 14286

■ For Vadamal Iyer boy Kousika, Punarpoosam 31 years 5.10" fair, post graduate SBI, Chennai employed seeks, good looking graduate girl employed match. Box No. 14287

■ திருநெல்வேலி சைவ வேளாளர், மிருகசீரிஷம், தனியார் கம்பெனி மகாராஷ்டிரா, Computer Programmer, சம்பளம் ரூ. 5000/- வயது 26, உயரம் 5'.9" நல்ல நிறமான வரனுக்கு அதே இனத்தில் நல்ல நிறமான குணவதியான மணமகள் தேவை. பெட்டி எண் : 14289

■ Kousika Gothram, Kettai, Vadamal, 28 beautiful boy working in a private company, Neyveli, seeks employed girl, preferably teacher. Send horoscope and family details to Box No. 14290

■ Vadama, Kousika, Chithirai, 38/167/M.A./7000/- (Rs. 4000/- other income) bachelor, Nationalised Bank Chennai. Seeks graduate Bank/Govt. employed girls. Box No. 14291

■ Saiva Vellala, 49, bachelor, employed needs bride. Any caste vegetarians can correspond directly. Box No. 14292

■ இந்து முத்துராஜா 29/167/ரூ. 3500/- பி.எஸ்ஸி தனியார் நிறுவனத்தில் உயர் பதவி. வேலை பார்க்கும்/பார்க்க தகுதியுள்ள படிப்பு படித்த மணமகள் தேவை. குடும்ப விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 14293

